# சதகத் திரட்டு

## தொகுதி - 2


பதிப்பாசிரியர்

முனைவர் த. இராசேசுவரி



INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# சதகத் திரட்டு

தொகுதி - 2

பதிப்பாசிரியர்

முனைவர் த. இராசேசுவரி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை - 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Catakattiraṭṭu Part - II |
| Editor | : | Dr. T. Rajeswari |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai 600 113. |
| Publication No | : | 408 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2001 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xxv+230 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.55/- (Fifty five only) |
| Printed by | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Mylapore, Chennai - 4.<br>PH: 4984693, 4661807. |
| Subject | : | **Bhakthi Literature** |

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

# உள்ளே


| | |
|---|---|
| அணிந்துரை | iv |
| என்னுரை | vi |
| நன்றியுரை | viii |
| பதிப்பாய்வு | ix |
| கோகுல சதகம் | 1 |
| வடவேங்கட நாராயண சதகம் | 35 |
| அண்ணாமலை சதகம் | 75 |
| அருணாசல சதகம் | 155 |
| குருநாத சதகம் | 185 |
| செய்யுள் முதல் குறிப்பு அகர வரிசை | 213 |
| துணைநூல் பட்டியல் | 220 |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

# அணிந்துரை

சதகத்திரட்டுத் தொகுதி இரண்டில் ஐந்து சதக நூல்கள் உள்ளன. முதலில் இடம்பெறும் கோகுல சதகம், கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்துள்ளது. இந்நூலில் ஆயர் குல மக்களின் பெருமைகள் கற்பனை வளத்துடன் பாடப்பட்டிருப்பதும் ஆயர்கள் திருமாலோடும் இவ்வுலகத்தவரோடும் எல்லா நிலையிலும் தொடர்பு கொண்டவர் என்று சிறப்பித்துக் கூறியிருப்பதும் படித்து இன்புறும் வண்ணம் உள்ளது.

வடவேங்கட நாராயண சதகத்திற்கு மட்டுமே மூலத்துடன் சிறப்பான உரை அமைந்துள்ளது. இவ்வுரையில் வடசொற்கள் மிகுதி. கோகுல சதகம் ஆயர்குல மக்கள் பெருமையையும், வடவேங்கட நாராயண சதகம் திருமாலின் பெருமையையும் பேசும் வைணவ சமயத்தைச் சார்ந்த நூலாகவும், எஞ்சிய மூன்று சதக நூல்களும் சிவபெருமானை முன்னிலைப் படுத்திப் பாடும் சைவசமயச் சார்புடைய நூலாகவும் விளங்குகின்றன.

அண்ணாமலை சதகம் - அண்ணாமலைப் பெருமானுக்குச் செய்யப்படும் அபிடேக வகைகள், திருக்கோவலூர் பற்றிய செய்திகள், பழைய சாத்திர நூல்களைப் பின்பற்றி மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறிமுறைகள், சைவ மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவைகள் பற்றிக் கூறுகின்றது. அருணாசல சதகம் சிவபெருமானைப் போற்றி அவர் அருளை வேண்டும் நிலையிலும், குருநாத சதகம் இவ்வுலக வாழ்வில் பற்று வைத்து மும்மலங்களில் அமிழ்ந்து இறைவனை மறந்து வாழும் ஆன்மாவை இறைவன் ஆட்கொண்டு கடைத்தேற்ற வேண்டும் என வேண்டுவதாயும் உள்ளன. பாடல்கள் பக்திச் சுவையுடன் எளிமையாய்க் காணப்படுகின்றன.

குறுகிய காலத்தில் இந்நூல்களுக்கு அருஞ்சொற்பொருளும் பொழிப்புரையும் எழுதி நூலைப் பதிப்பித்திருப்பது பாராட்டத்தக்க வகையில் உள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கோகுல சதகம், வடவேங்கட நாராயண சதகம், அண்ணாமலை சதகம், அருணாசல சதகம், குருநாதர் சதகம் ஆகிய நூல்களுக்குப் பதிப்பாய்வும், பாடல்களுக்குப் பொழிப்புரையும் அருஞ்சொற்பொருளும் முனைவர் த. இராசேசுவரி எளிமையாகவும் சிறப்பாகவும் எழுதியுள்ளார்.

முனைவர் த. இராசேசுவரி அவர்கள் ஆய்வுத் திறனும், உழைப்பில் சலிக்காத மனத்திண்மையும் உடையவர். அவர் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத்தலைவர் மாண்புமிகு கல்விஅமைச்சர் முனைவர். மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை முன்னாள் செயலாளர் திருமிகு. சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை இந்நாள் செயலாளர் திருமிகு. பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் கூடுதல் செயலர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும், கலை - பண்பாட்டுத் துறையின் முன்னாள் ஆணையர் திரு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த யுனைட்டெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

**இயக்குநர்**

# என்னுரை

பண்டைய தமிழ் இலக்கியங்கள் சுவடிகளில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. அவை செல்லரித்துச் சிதைந்து காலத்தால் அழிந்து விடாமல் இருக்கப் பல நூல்கள் உரையின்றி மலிவுப் பதிப்பாக அச்சிடப்பட்டுள்ளன.

செய்யுள் வடிவில் உள்ள நூல்களைப் படிப்பவர் எண்ணிக்கை அருகி வருவதால் வருங்காலத் தமிழர் இந்நூல்களைப் படித்துப் பயன் அடைய வேண்டும் என்ற நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் (திரு) ச.சு. இராமர் இளங்கோ அவர்கள் இத் தொகுதியில் உள்ள சதக நூல்களுக்குப் பொருளும் பொழிப்புரையும் எழுதிப் பதிப்பிக்குமாறு பணித்தார். இப் பணியைக் குறித்த காலத்தில் என்னால் முடிக்க இயலுமா என்று மலைப்பாக இருந்தது. இயக்குநர் ஊக்கப்படுத்தியதாலும், எனக்குச் சுவடியியல் கற்பித்த ஆசிரியர் திரு. மு.கோ. இராமன் (ஓய்வு - சுவடிக் காப்பாளர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்) அவர்கள் பழைய சுவடிகளை அச்சில் வெளிக்கொணர வேண்டும், அச்சிட்ட நூல்களையும் நன்கு ஆராய்ந்து பிழையின்றிப் பதிப்பிக்க வேண்டும் என்று நேரம் கிட்டும் போதெல்லாம் கூறியதை மனம் கொண்டதாலும் இவ்வரிய பணியை ஏற்று, இயக்குநர் கூறிய வண்ணம் செய்யுள் மட்டுமே இருந்த இந்நூல்களுக்கு அருஞ்சொற்பொருள், பொழிப்புரை இவற்றுடன் இயன்ற அளவு பிழைகளைக் களைந்து நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. காலக்குறுக்கத்தின் பொருட்டு விரிவாக ஆராய இயலவில்லை. சதகத் திரட்டு என்ற நூலில் பதினொரு சதக நூல்கள் இருந்தன அவற்றுள் தொண்டைமண்டலச் சதகம் தஞ்சை சரசுவதிமகால் நூல் நிலையத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளதால் அதைத் தவிர ஏனைய பத்து நூல்களும் பதிப்புக்குரியனவாகக் கொள்ளப்பட்டன. அவற்றை இரு தொகுதிகளாகப் பிரித்து முதல் தொகுதியில்

*1.* திருத்தொண்டர் சதகம், *2.* கயிலாசநாதர் சதகம், *3.* அவையாம்பிகை சதகம், *4.* செயங்கொண்டார் சதகம், *5.* திருமுக விலாசம் ஆகிய ஐந்து நூல்களும்

இரண்டாம் தொகுதியில்

*1.* கோகுல சதகம், *2.* வடவேங்கட நாராயண சதகம், *3.* அண்ணாமலை சதகம், *4.* அருணாசல சதகம், *5.* குருநாத சதகம் ஆகிய ஐந்து நூல்களும் வைக்கப்பட்டுள்ளன.

முதல் தொகுதியில் உள்ள ஐந்து நூல்களும் சைவ சமயச் சார்புடையன. இவ்விரண்டாம் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் கோகுல சதகம் ஆயர்குல மக்களின் சிறப்பையும் பெருமையையும் கற்பனை வளத்துடன் கூறுகின்றது. ஆயர்குல மக்கள் வைணவர் என்பது இந்நூலாசிரியர் கருத்து, வடவேங்கட நாராயணசதகம் திருமலையில் எழுந்தருளி அடியவருக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீமந் நாராயணன் மீது பாடப்பட்டது. இவ்விரு நூல்களையும் வைணவ நூல்களாகக் கொள்ளலாம். ஏனைய மூன்று நூல்களான அண்ணாமலை சதகம், அருணாசல சதகம், குருநாத சதகம் ஆகியவை சைவசமயச் சார்புடையன. அண்ணாமலை சதகம் திருவண்ணாமலையையும் திருக்கோவலூரையும் பற்றிக் குறிப்பிட்டிருப்பினும் நால்வகை வருணத்தாரும் நல்வாழ்வு வாழக் கூறப்பட்டிருக்கும் செய்திகளே நூலில் மிகுதியாக உள்ளன. அருணாசல சதகம் சிவபெருமானைப் போற்றித் துதித்து அவர் அருளை வேண்டும் நிலையில் விளங்குகிறது. குருநாதர் சதகம் பசுவாகிய ஆன்மா உலக இன்பங்களில் திளைக்காமல் பதியாகிய இறைவனை அடைய முயலவேண்டும் என வற்புறுத்துகிறது. பாடல்கள் பக்திச் சுவையுடன் அமைந்துள்ளன.

என்னால் இவ்வரிய பணியைச் செய்ய இயலும் என்று கருதி இயக்குநர் அவர்கள் இந்நூல்களைப் பதிப்பிக்கும் வாய்ப்பினை எனக்கு நல்கியதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

த. இராசேசுவரி

*22-10-2001*

# நன்றியுரை

சிற்றிலக்கியங்களைப் படிப்பாரும் பாராட்டுவாரும் அருகி வரும் இக்காலத்தில் அவற்றின் அருமையைப் பலரும் அறிய வேண்டும் என்று எண்ணிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் (திரு) ச.சு. இராமர் இளங்கோ அவர்கள் விருப்பத்தை உணர்ந்து இப்பணியை மேற்கொண்டேன். செய்யுள்களுக்கு அருஞ்சொற்பொருள், பொழிப்புரை முதலியவை எழுதப்பட்டுள்ளன. இவ்வாய்ப்பை எனக்கு வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் (திரு) ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக்கடல் எனப் போற்றப்படும் கம்பராமன் (திரு) எஸ்.கே. இராமராஜன் (ஓய்வு, அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்) அவர்களால் இன்றைய உலகின் நச்சினார்க்கினியர் என்று பாராட்டப்படும் நூற்கடல் பேராசிரியர் (திரு) தி.வே. கோபாலையர் (பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், பாண்டிச்சேரி) அவர்கள் செய்யுள்களுக்கு அருஞ்சொற்பொருள், பொழிப்புரை, குறிப்புரை முதலியவற்றைக் கூறி, இந்நூல் உரையுடன் சிறப்பாக வெளிவர அனைத்து உதவிகளையும் இன்முகம் காட்டிச் சிரமம் பாராது தள்ளாதவயதிலும் இதைத் தள்ளாது மனம் கொண்டு மனமுவந்து செய்தாராக. அப்பெருந்தகையாருக்குச் சிரம் தாழ்த்தி இரு கரம் கூப்பி என் நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன்.

இந்நூலைக் கணிப்பொறியில் இட்டு நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய திருமதி இரா. வெண்ணிலா, கணிப்பொறி இயக்குபவர் அவர்களுக்கும் என் அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பதிப்பாய்வு

**முன்னுரை:**

மறுபதிப்புக்கு உரியனவாக எடுத்துக் கொள்ளப்பட்ட சதகத்திரட்டுத் தொகுதி இரண்டில்

| | | |
|---|---|---|
| 1. கோகுல சதகம் | - 103 | பாடல்கள் |
| 2. வடவேங்கட நாராயண சதகம் | - 100 | " |
| 3. அண்ணாமலை சதகம் | - 103 | " |
| 4. அருணாசல சதகம் | - 101 | " |
| 5. குருநாத சதகம் | - 103 | " |

என்னும் ஐந்து சதக நூல்கள் உள்ளன. இவற்றுள் கோகுல சதகம் ஆயர் பாடியிலிருக்கிற இடையர்களின் பெருமையையும் வடவேங்கட நாராயண சதகம் திருமாலின் பெருமையையும் கூறுகின்றன. ஏனைய மூன்று நூல்களான அண்ணாமலை சதகம், அருணாசல சதகம், குருநாத சதகம் ஆகியவை சிவபெருமானைப் போற்றும் சைவசமய நூல்கள். இவற்றுள் வடவேங்கட நாராயண சதகத்திற்கு மட்டுமே உரை அமைந்துள்ளது. நூலாசிரியரே உரை எழுதியிருக்க வேண்டும். பொழிப்புரை மிகச் சிறப்பாக உள்ளது. எனவே இங்கு அதன் உரையிலுள்ள வடசொற்கள் முதலியவற்றிற்கே பொருள் எழுதப்பட்டுள்ளது. அறிதற்கு அரிய பல அருஞ்செய்திகளைச் சொற் சுருக்கமும், பொருள் ஆழமும் கொண்ட, சற்றுத் திரிசொற்கள் விரவிய நடையமைந்த பாடல்கள் வாயிலாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

குருநாத சதகத்தின் அச்சுப் பிரதியில் பல பிழைகள் அமைந்துள்ளன. ஆதலின் பாடல்கள் பலவற்றின் உண்மைப் பொருளை உள்ளவாறு அறிய இயலவில்லை. இச்சதகம் அமைந்த வேறு பிரதிகள் கிட்டினால் அவற்றோடு ஒப்பிட்டுப் பிழையற்ற பாடல்களைக் காணலாம். அதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் தையலில் அகப்பட்டு எழுத்துக்கள் அறியப் பட வாய்ப்பு இல்லை. சில பகுதி சிதைவாக உள்ளது. அச்சிட்டதில் பிழைகள் மலிந்திருப்பதால் பாடல் பலவற்றின் கருத்துக்கள் நம் அறிவுக்கு அப்பாற் பட்டுள்ளனவாய்த் தோன்றுகின்றன. யோகம் கைவரப்பெற்ற சான்றோர்கள் உண்மை உரைகளைக் கண்டு தெளிந்து பிறருக்கு அறிவிப்பாராக. எனவே, இயன்றவரை பாடல்களின் திரண்ட கருத்து மாத்திரம் ஒவ்வொரு பாடலுக்கும் தரப்படுகிறது.

அருஞ்சொற்பொருள் அறிவதால் பெரும்பயன் கிட்டாது என்பது கருதி அருஞ்சொற்பொருள் இந்நூலின் பாடல்களுக்கு வரையப்படவில்லை.

கோகுல சதகம், அண்ணாமலை சதகம், அருணாசல சதகம் ஆகிய மூன்று நூல்களுக்கும் பொழிப்புரையும் அருஞ்சொற் பொருளும் வரையப்பட்டுள்ளன.

**1. பிழைத்திருத்தம்**

நூலைப் படியெடுக்கும்போது நேர்ந்த பிழைகள், யாப்பு அடிப்படையிலோ, பொருள் அடிப்படையிலோ ஓசை குறைவினாலோ ஏற்பட்டிருந்த பிழைகள் முதலியவை இயன்ற அளவு சீர் செய்யப்பட்டு நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. வழங்கி வரும் அச்சுப் பிரதியில் அண்ணாமலை சதகச் செய்யுள்களின் தலைப்பு முதலியவை எளிமை கருதி இப்பதிப்பில் மாற்றப்பட்டுள்ளன.

கோகுல சதகம் ஆயர்குல மக்களின் சிறப்பைக் கூறும் வகையிலும், வடவேங்கட நாராயண சதகம், அருணாசல சதகம், குருநாத சதகம் ஆகிய மூன்றும் இறைவனைப் பாடித் துதிக்கும் நிலையிலும் அமைந்திருப்பதால் பாடல்களுக்குத் தலைப்பு வழங்கப்படவில்லை.

**2. பாடல்களுக்கு எண் இட்ட முறை**

இப்பதிப்பில் இடம் பெறும் சதகப்பாடல்கள் அனைத்திற்கும் பாடல் தொடக்கத்தில் தொடர்ச்சியான எண் (அரேபிய எண்ணில்) கொடுக்கப்பட்டு, ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அந்தந்த நூலில் அது எத்தனையாவது பாடல் என்பது தமிழ் எண்ணால் சுட்டப்படுகிறது.

**3. கோகுல சதகம்**

ஆசிரியர் திருமாலை வணங்கி நூலைத் தொடங்கிக் குருவருள், கோகுலக் குடி, முல்லை நிலம், ஆய்ப்பாடி ஆகிய அனைத்தும் நாளும் வாழ்க என்ற வாழ்த்துடன் நூலை நிறைவு செய்துள்ளார்.

ஆயர்குல மக்களின் பெருமைகள் கற்பனை வளத்துடன் ஆசிரியரால் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. பசுக்களை மேய்க்கும் ஆயர், கண்ணன் பரம்பரையினர் என்று பேசப்படுகிறது. சங்ககாலத்தில் புலால் உண்ணுதலைத் தவிர்த்த ஒரே குழுவினர் ஆயர் என்பது புறநானூறு, குறுந்தொகை, பெரும்பாணாற்றுப் படை முதலியவற்றில் குறிப்பாக உள்ளது.

"கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த கனக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்" (புறநானூறு: *33)*

"பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடை மகன்" (குறுந்தொகை: *221)*

"பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்"
(பெரும்பாணாற்றுப் படை: அடி: *168)*

ஆயர்கள் யாவரும் பெரும்பாலும் வைணவர் என்பது இவ்வாசிரியர் கருத்து. கோகுல சகதம் படிக்கச் சுவையாக உள்ளது.

### 3.1 ஆசிரியர்

ஆசிரியர் பெயர் பாலூர் அமிர்த கவிராயர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கோகுல சதகத்தைப் பாடியுள்ளார். இந்நூல் *1914*-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கோகுலம், ஆய்ப்பாடி, கோகுலர் வாழ்க்கை, கோகுலர் இவற்றை இவர்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பதால் இவர் வைணவ சமயத்தவர் எனக் கொள்ளலாம்.

### 3.2 யாப்பு

காப்புச் செய்யுள் நீங்கலாக வாழ்த்துடன் நூற்றி மூன்று செய்யுள்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறையால் ஆனவை. எளிமையாகச் சொல் நயத்துடன் விளங்குகின்றன.

### 3.3 மகுடம்

'கோகுலரே*!*' என்னும் ஒற்றைச் சொல் ஈற்றடியில் மகுடமாக விளங்குகிறது. இறுதியில் வாழ்த்து உட்பட மூன்று பாடல்கள் *101, 102, 103* மகுடம் பெறாமல் முறையே 'குலக்கொடியே*!*' 'குருவருளோங்கவுமே'*!* 'வாழியவே'*!*, என அமைந்துள்ளன.

### 3.4 பாடுபொருள்

ஆயர்குல மக்களின் சிறப்புக்கள் கற்பனை வளத்துடன் பாடப்பட்டுள்ளன. பசுக்களை மேய்க்கும் இவ்வாயர் பரம்பரையினர் திருமாலுக்கு, அடியவருக்கு, உலகத்தவர்க்கு எங்ஙனம் உதவிபுரிந்தனர் என்பதைப் புராண வரலாற்றுச் செய்தியுடன் தொடர்புபடுத்திக் காட்டுகிறார் ஆசிரியர்; ஆயர் இல்லாத இடமே என்று சொல்லும் அளவு அவர்கள் தங்களைச் சமுதாயத்தோடு பிணைத்துக் கொண்டதாகப் பாடியிருக்கும் தன்மை சுவையாக உள்ளது.

பாடல்களில் கூறப்படும் புராணத் தொடர்பான சில செய்திகள் புலப்படவில்லை *(89)* சில புதுமையாக உள்ளன *(90)*. சில கதைகள் செவிவழிச் செய்திகள் அடிப்படையில் கொள்ளப்பட்டன போலும். ஆசிரியருடைய கோகுலப் பற்று அவரை அளவுக்கு மீறிக் கற்பனை செய்யத்தூண்டி விட்டது எனக் கொள்ளலாம்.

### 3.5 பிழைத்திருத்தம்

| பாடல் | அடி | |
|---|---|---|
| *9* | *1* | சூதச் சுரர் - சூதசுரர் |
| *25* | *1* | சாய்கை - சாகை |
| *35* | *2* | பாண்டின் - பாண்டியன் |
| *48* | *2* | கோத்திர மிளையாகு - கோத்திர மிணையாகு |
| *56* | *3* | தேவராயரின் - தேவராயனின் |
| *73* | *4* | குன்றிட்ட - கும்பிட்ட |
| *80* | *3* | விளாவினி - விழாவினி |
| *82* | *1* | தொட்டிரடி - தொட்டீரடி |
| *85* | *1* | உத்திரம் - உத்தரம் |
| *88* | *3* | பிரவிடை - பிரிவிடை |
| *100* | *2* | வாறறிந்து - ஆறறிந்து |

தையலில் அகப்பட்டு எழுத்துக்கள் சிதைந்திருந்ததால் *84* - ஆம் பாடலில் மூன்றாவது அடியின் முதல் சீர் ஊகித்து இடப்பட்டுள்ளது.

### 4 வடவேங்கட நாராயண சதகம்

திருவேங்கட மலையில் எழுந்தருளி அடியவருக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீமந் நாராயணன் மீது பாடப்பட்ட நூல் இது. ஆசிரியர் காப்புச் செய்யுளில் ஸ்ரீமந் நாராயணனை வழுத்தி, வாழ்த்துடன் நூலை நிறைவு செய்துள்ளார்.

### 4.1 ஆசிரியர்

இதன் ஆசிரியர் திவ்விய கவி நாராயணதாசர் என்பவர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகலாம். இந்நூலுக்கு உரையும் இந்நூலாசிரியரே இயற்றியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. உரையுடன் நூல் அமைந்திருப்பது நல்ல பயன் தரும். ஏறத்தாழ *150* ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இவ்வுரை நடை தோன்றுகிறது. இக்காலத்தில் சற்று விளங்காதனவாயுள்ளன. அக்காலப் பழக்கத்திலிருந்த சில வடசொற்கள் இதன்கண் சுவைபடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் தமிழ்மொழிப் புலமையுடன் வடமொழிப் புலமையும் உடையவர். வடமொழி சுலோகங்களுக்குப் பொருள் சொல்லும் ஆசிரியர்கள் உடைத்தாயிருக்கின்ற, கிருபை பண்ணா நின்ற, ஆடா நின்ற, ஆ நின்று என்ற நிகழ்கால வாய்பாடு முதலியவற்றை அடிக்கடிப் பயன்படுத்துவார்கள். அவற்றை இவ்வுரையில் காணலாம்.

### 4.2 பாடுபொருள்

பாடல்கள் ஸ்ரீமந் நாராயணனைப் பாடித் துதிக்கும் நிலையில் பாவியாகிய தன்னைக் கடைத்தேற்ற இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என ஆசிரியர் வேண்டுவதாய் உள்ளன. ஓமங்களாலேயும், விரதங்களாலேயும், தீர்த்த யாத்திரைகளாலேயும் கிட்டும் புண்ணியம் ஸ்ரீமந் நாராயணனின் திருநாமத்தைக் கணப்பொழுது சொல்லிய புண்ணியத்துக்கு ஒப்பாகாது *(112)* என்று கலியுகத்தில் இறைவன் நாமம் சொல்லுவதே சிறந்த பலன் அளிக்கும் என்பதைக் காட்டுகிறார். தனக்கு எவ்வித இடரும் பிணியும் ஏற்படா வண்ணம் திருவேங்கடத்து இன்னமுதன் தாம் செய்த பிழையைப் பொறுத்து அருளி நல்வழிகாட்ட வேண்டும் எனப் பாடியுள்ளார். அவர் அருளால் சனனந்தோறும் தொடரும் பிணி நீங்கியது என்று அவர் பெருமையைப் பலவாறு பாராட்டிக் கூறும் நிலையில் நூல் விளங்குகிறது.

### 4.3 யாப்பு

பாடல்கள் எளிமையானவை. இந்நூல் காப்புச் செய்யுள்கள் இரண்டு நேரிசை வெண்பாவிலும் ஏனைய நூறு பாடல்கள் கலிவிருத்தத்திலும் அமைந்துள்ளன. பாடல்கள் பிரிந்திசை வண்ணத்தாலானவை.

### 4.4 மகுடம்

பாடல்களின் ஈற்றடி 'நாராயணா*!* நாராயணா*!*' என இரட்டைச் சொல்லால் மகுடம் பெற்று விளங்குகின்றன.

### 4.5 பிழைத்திருத்தம்

| பாடல் | அடி | |
|---|---|---|
| 107 | 4 | குலசேரகன் - குலசேகரன் |
| 111 | 1 | ரெழுததளவன்றி - ரெழுத்தளவன்றி |
| 152 | 4 | ந்தாத - நந்தாத |
| 153 | 1 | தெதிபாண்டனார் - ததிபாண்டனார் |
| 159 (உரை) | | சரமதிசை - சரமதசை |
| 167 | 2 | வீரனீக்கி - விரனீக்கி |
| 171 | 4 | நசுக்கிக்கிப் - நசுக்கிப் |
| 189 (உரை) | | நரகலோக - நரலோக |
| 195 | 2 | காராண - காரண |
| 196 (உரை) | | காமலை - காமாலை |

### 5 அண்ணாமலை சதகம்

ஆசிரியர், யானை முகன் விநாயகனைத் துதித்து நூலைத் தொடங்கி வாழ்த்துடன் நிறைவு செய்துள்ளார். இந்நூல் பிறப்பறுக்கும் அண்ணாமலைப் பெருமான் மீது பாடப்பட்டுள்ளது.

### 5.1 ஆசிரியர்

இச்சதகம் மாம்பாக்க உபாத்தியாயர் என்ற பெயரில் பிரசித்தமாக இருந்த திருச்சிற்றம்பல நாவலர் அவர்களால் இயற்றப்பட்டது. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும், பிற்பகுதியிலும் வாழ்ந்தவர். இந்நூல் சாலிவாகன சகாப்தம் *1770*-க்குச் சமமான கி.பி. *1848*-இல் நிறைவு செய்யப்பட்ட செய்தி இந்நூலின் *101*-ஆம் *(304)* பாடலால் புலப்படுகிறது.

"-------நாதனே கலியில்வல் லாளபிர புடதேவ
ராமர்தரு மஞ்சகாப்த
நவிலாயி ரத்தேழு நூறுமெழு பத்துமே
னாடுபில வங்கவருட
மாதியாய் நின்றதல தருமகர்த் தாவான
வருள்பெறு வசந்தராயர்.................." *(304)*

ஒவ்வொரு பாடலும்,

"......அருள் பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிருசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணாமலைத் தேவனே!"

என்று முடிவதனால் இதனை 'அண்ணாமலை சதகம்' என்றும் 'வசந்தராயர் சதகம்' என்றும் பெயரிடலாம் என்பது ஆசிரியர் கருத்து. காப்புச் செய்யுளை அடுத்து இடம் பெற்றிருக்கும் நூற்பெயர் கூறும் பாடலில் இக்கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

"மன்னுதிரு வண்ணா மலைச்சதக மென்றும்பேர்
பின்னு மொருநாமம் பேசுவாம் - இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்குங் துதிப்பதா மே" (நூற்பெயர்)

## 5.2 பாடுபொருள்

நூலின் தொடக்கத்தில் அண்ணாமலைப் பெருமான் கடவுள் வணக்கம், அவருக்கு அபிடேகம் செய்யும் பொருள்கள், திருவண்ணாமலையில் உள்ள திருத்தொகைகள், மாதந்தோறும் அப்பெருமானுக்குச் செய்யப்படும் அபிடேக வகைகள் என்பனவே திருவண்ணாமலையைப் பற்றிய சிறப்பான செய்திகள், நூலில் திருவண்ணாமலையைப் பற்றிய வேறு செய்தி எதுவும் இடம் பெற்றிலது.

திருக்கோவலூரைப் பற்றிய செய்திகள் சற்று மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. திருக்கோவலூர் தலப்பெருமை, திருமுனைப்பாடி நாட்டின் நான்கெல்லை, தெய்விக மன்னன் பிறப்பு, அவன் வாழ்த்து, அவனுடைய நான்கு முடிகள், பன்னிரண்டு மாலைகள், முதலில் அவன் மணந்த தேவிமார்கள், பின் மணந்த ஏழு ஊர்களைச் சார்ந்த அரசரின் மகளிர், அங்கவை சங்கவை என்பவரை மணந்தமை, அவன் மரபில் வந்த மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர், குலசேகர நாயனார் பற்றிய செய்திகள் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

இவற்றைத் தவிரக் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவும் பழைய சாத்திர நூல்களை அடியொற்றிப் பொதுவாக நால்வகை வருணத்தாருக்கும் நல்வாழ்வு வாழக் கூறப்பட்ட செய்திகளே. கயிலாசநாதர் சதகம், கூறுவனவற்றை விட இந்நூலில் குதிரைகள் *(283-291-9* பாடல்கள்*)* பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. போக்குவரத்துக்குக் குதிரை வண்டிகளே மிகுதியும் பயன்பட்ட காலம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. அப்பொழுது சிற்றரசர் என்ற பெயரில் பெருநிலக்கிழார்கள் பலர் வாழ்ந்தனர். ஆதலின் குதிரை இலக்கணம் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பெரும்பான்மையினர் சைவராய் இருந்தமையின் விபூதி தரிக்கும் விதி, விபூதியைக் குழைத்து இடும் விதிகள், பெரியோர்கள்

கையிலிருந்து விபூதியை வாங்கித் தரிக்கும் விதிகள், உருத்திராக்க மணிகளை அணியும் விதிகள், பிரதோட தரிசனம், சிவபூசைக்குரிய பூக்கள், பூசைக்கு ஆகாத பூக்கள், சிவலிங்க வகை, சைவமடங்களின் வகை, அர்ச்சனை முதலிய அறச்செயல்கள், சபமாலை, சபம் செய்யும் முறைகள், ஆலயங்களில் தீபமிடல், முதலிய இம்மை மறுமைப் பயன் தரும் செய்திகள் கூறப்படுகின்றன.

நால்வகை வருணத்தவரின் தொழில்கள் விரித்துரைக்கப்படுகின்றன. பொதுவாக அறிய வேண்டிய பெண் கொள்ளும் முறை, பெண்கள் இலக்கணம், ஆண்கள் இலக்கணம், *32* அறங்கள், பல் துலக்கும் குச்சிகளை அமைத்தல், உண்ண ஏற்புடையன அல்லாத பொருள்கள், உணவு உண்ணும்போது கடைப் பிடிக்கத் தக்க சமய ஒழுகலாறுகள், நோய் வராமல் வாழும் வகை, கொக்கோக நிலை என்பன குறிப்பிடப்படுகின்றன.

சரீரம் உண்டாகும் முறை* அதன் வளர்ச்சி, புணர்ச்சிக்கு ஆகாத நாள்கள், பெண்கள் பூப்பெய்தும் நாள் பற்றிய பயன்கள், நவகிரகம் பற்றிய பல செய்திகள், தேவாரப் பாடல்கள், தேவாரத் திருத்தலங்கள், நல்லோர் தீயோர் தேடும் பொருள் செலவிடப்படும் வகை, சிற்றின்பம், பேரின்பம் அட்டாங்க யோகம் முதலிய பலவகைச் செய்திகளை இயம்பி இந்நூல் அவையடக்கம், வாழ்த்து என்பனவற்றோடு நிறைவுறுகிறது.

## 5.3 யாப்பு

இந்நூலில் காப்பு, நூற்பெயர் என்பன பற்றிய இரு நேரிசை வெண்பாக்களும், வாழ்த்துடன் நூற்றி மூன்று பன்னிருசீர் ஆசிரிய விருத்தங்களும் உள்ளன. பாடல்கள் எளிமையாக உள்ளமையால் பொருளைத் திரிபின்றி உணரப் பாடல்களின் கருத்துரைகளே தரப்படுகின்றன. ஆங்காங்கு அருஞ்சொற்பொருள் தேவைப்படுவதால் அருஞ்சொற்பொருள் வரையப் பட்டுள்ளது.

## 5.4 மகுடம்

'------ வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே'

---

* கருத்தரித்தது முதல் ஏழாம் மாதம் வரைக் குழந்தையின் உறுப்புக்கள் உருவாகும் என அக்கால மக்கள் நம்பியிருந்த செய்தி *274-276* ஆகிய பாடல்கள் வாயிலாகத் தெரியவருகின்றது. ஆனால், கருத்தரித்த நாலரை மாதத்திற்குள் குழந்தையின் அனைத்து உறுப்புகளும் உருவாகிவிடும். அதன் பின் உருப்பெருக்கம் (Increase in size) தான் நிகழும் என்பது மருத்துவ உண்மை.

என அண்ணாமலையில் இருந்து அருள் பாலிக்கும் சிவபெருமானை முன்னிலைப்படுத்தி ஈற்றடியின் ஆறுசீர்கள் மகுடமாக அமைந்துள்ளன.

### 5.5 பிழைத்திருத்தம்

| பாடல் | அடி | |
|---|---|---|
| 204 | 1 | தென்கணன் - தெண் கணன் |
| 210 | 2 | அதரசங் - அதிரசங் |
| 215 | 1 | சதுர்மாசி - சாதுர்மாசி |
| 238 | 4 | அம் பழுதிலாலிதே - அம்பழுதிலாவிதே. |
| 253 | 2 | கிரகத்த - கிருகத்த |
| 263 | 4 | செயற்கவதென்பர் - செய் மகம் தென்பர் |
| 276 | 1 | மிடைந்து - மியைந்து |
| 281 | 3 | உத்திரட்டாதி - உத்தரட்டாதி |
| 292 | 2 | கொண்ட - கொண்டே |

### 5.6 எளிமை கருதி மாற்றி அமைக்கப்பட்ட தலைப்புக்கள்:

விபூதி தரிக்கும் விதி - திருநீறு அணியும் விதி - *211*
பிராமணர் சட்ட கருமாதி விதி - பார்ப்பனர் தொழில்கள் - *212*
அஷ்ட விவாகங்களில் பிராமணர்க்கிவையென்பதும், பிராமணர் நித்திய கரும விதியும் - என் மணங்களுள் அந்தணர்க்கு உரியவை, அந்தணர் நாடோறும் செய்ய வேண்டிய செயல் - *214*
தெய்விகராஜன் சதுர்முடிச் சிறப்பு - தெய்விகராசன் நான்கு முடி - *220*
தந்தகாட்ட விதி - பல் துலக்கும் குச்சி அமைத்தல் - *245*
பூசைக்காம் புஷ்பவகை - பூசைக்கு ஆகும் பூக்கள் - *248*
பெண்கள் ருதுவாகும் நக்ஷத்திர பலன் - பெண்கள் பூப்பெய்தும் நட்சத்திர பலன் - *280*
ஆசூசமுறாத விடங்கள் - தீட்டு ஏற்படா இடங்கள் - *282*
அசுவ இலக்கணம் - குதிரை இலக்கணம் - *285*

முதலியனவாகும்.

### 6. அருணாசல சதகம்

ஆசிரியர் காப்புச் செய்யுளில் விநாயகனை வணங்கி நூலைத் தொடங்கி 'வாழி'யுடன் நூலை நிறைவு செய்துள்ளார். 'அருணாசலம்' என்னும்

சொல் 'ஒளிமலை' என்று பொருள்படும். இச்சதகம் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடப்பட்டது.

### 6.1 ஆசிரியர்

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் எனப்படும் சபாபதி நாவலர் இச்சதகத்தின் ஆசிரியர். இவர் தேவாரத்தை முதன் முதலில் அச்சேற்ற உதவிய பெருமகனார் ஆவார். செந்தமிழ்ப் புலமையும் சிவபக்தியும் புலப்பட ஒவ்வொரு பாடலும் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் எழுதப்பட்ட காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. திருவண்ணாமலைப் பெருமானிடம் இப்புலவர் கொண்ட பக்தியை ஒவ்வொரு பாடலையும் 'அருணாசலா! அருணாசலா!' என்று முடிப்பதன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

### 6.2 பாடுபொருள்

எல்லாப்பாடல்களும் சிவபெருமானைப் போற்றித் துதிக்கும் வகையிலும், இறைவன் தன்னை ஏற்று அருள்தர வேண்டும் என இறைஞ்சி வேண்டும் நிலையிலும் அமைந்துள்ளன.

அருணாசலத் திருப்பதியில் புல் பூண்டு இவற்றுள் ஒன்றாகப் பிறவி எடுக்க விரும்புவதாக ஆசிரியர் பாடியுள்ளார்.

> "வில்லார்மதி முடியண்ணலே வினையேன் பிறந்திடவைப்பையேல்
> கல்லாய்மர மாயேனுநீ கனிவோடமர் தருமிப்பதி
> யல்லாவிடந் தனில்வைத்திடேல் அருணாசலா! அருணாசலா! (352)

### 6.3 யாப்பு

காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவிலும் எஞ்சிய நூற்றி ஒரு பாடல்களும் கலிவிருத்தத்திலும் அமைந்துள்ளன. பாடல்கள் எளிமையானவை. பாராயணம் செய்யும் வகையில் பக்தி மணம் கமழத் திகழ்கின்றன.

### 6.4 மகுடம்

பாடலின் ஈற்றடி 'அருணாசலா! அருணாசலா!' என இரட்டைச் சொல்லில் மகுடம் பெற்றுச் சிவபெருமானை முன்னிலைப்படுத்தி முடிகின்றது.

### 6.5 பிழைத்திருத்தம்

| பாடல் | அடி | |
|---|---|---|
| *365* | *3* | பெருமன்பர் - பெறுமன்பர் |
| *386* | *2* | மொழிவேனலான் - மொழிவேனலேன் |

## 7. குருநாத சதகம்

காப்புச் செய்யுளில் சிவபெருமானை வணங்கி நூலைத் தொடங்கி வாழ்த்துடன், முடிபு செய்யுளான ஒரு வெண்பாவில் சத்குருவான சிவபெருமான் மீது நூற்றி ஒரு பாடல் பாடியுள்ளேன். அந்தக் குருவை விடுத்து யாமும் இல்லை இந்த உலகமும் இல்லை என ஆசிரியர் நூலை நிறைவு செய்துள்ளார். இந்நூலின் 'திருவாழ்க' என்று தொடங்கும் 413-ஆம் பாடல் 'வாழி' என்னும் தலைப்பில் உள்ள 509-ஆம் பாடலை ஒத்து அமைந்துள்ளது. 413-ஆம் பாடலின் மூன்றாவது அடியில் உள்ள 'வெண்ணுரு' என்ற சொல் 509-ஆம் பாடலில் 'வெண்ணிசை' என்று உள்ளது. வேறு எவ்வித வேறுபாடும் இல்லை.

### 7.1 ஆசிரியர்

இச்சதகத்தின் ஆசிரியர் கருணையானந்த சுவாமிகள். இவர் திருமூலர் மரபில் எழுந்தருளியவர். இந்நூல் 1913-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த தவயோகியர் என்பது தவிர வேறு எதுவும் அறியக் கூடவில்லை. நூலினை நோக்க இவர் சைவ சமயத்தவர் என்பது புலனாகும். இவ்வாசிரியர் சைவஆகம அடிப்படையில் எழுந்த திருமூலர் திருமந்திரம் பதிபசு பாடல்களின் இயல்பினை விரித்துரைக்கும் இவற்றில் தோய்ந்து வாழ்ந்தவர் என்பது நூலைப் படிக்குங்கால் புலப்படும். சதசத்தாகிய ஆன்மா உலகியல் பற்றிய ஐம்பொறி இன்பங்களில் திளைத்துத் தீவினையைப் பெருக்கிப் பிறவிக் கடலில் இடையறாது அழுந்தித் தவிப்பது கண்டு, ஆன்மா உய்வு பெற்று இறைவன் திருவடிகளில் இடையறாத பேரின்பம் நுகரப் பிறவிப் பற்றறுத்தலுக்கு முயலவேண்டும் என்பதனை வற்புறுத்தி, ஆன்மா ஈடுபடும் தீய செயல்கள், உடம்பின் தூயதல்லாத இவற்றைக் கூறி உயிர்கள் உய்வதற்குத் தாம் செய்யும் சிறிய தொண்டாக இந்நூலை அருளியுள்ளார் என்பதும் தெரிய வருகின்றன.

### 7.2 பாடுபொருள்

பசுவாகிய ஆன்மா ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களில் அழுந்தி அல்லல் படுவதிலிருந்து மீண்டு உலகப் பற்று நீங்கிப் பதியாகிய இறைவனை அடைய வேண்டும், இதுவே உலகில் வாழும் உயிர்கள் உய்வதற்குரிய வழி என ஆசிரியர் பல முறை வலியுறுத்திக் கூறுகின்றார்.

### 7.3 யாப்பு

காப்புச் செய்யுளாக அமைந்த இரு பாடல்களும் முடிபு செய்யுளாக அமைந்த இறுதிப் பாடலும் நேரிசை வெண்பாவிலும் ஏனைய நூற்றி இரண்டு பாடல்களும் கலிவிருத்தத்திலும் பாடப்பட்டுள்ளன.

"சற்குருவென் னையன் சதகமொரு நூற்றொன்றுஞ்
சற்குருவென் னையற்குச் சாற்றினேன்" - (510)

என ஆசிரியர் பாடியிருப்பது வாழ்த்து நீங்கலாக உள்ள பாடல்களைக் குறிக்கும்.

7.4 மகுடம்

பாடல்கள் குருநாதனே! குருநாதனே! என மகுடம் பெற்று முடிகின்றன.

7.5 பிழைத்திருத்தம்

| பாடல் | அடி | |
|---|---|---|
| 423 | 2 | பிறித்தறியா - பிரித்தறியா |
| 454 | 1 | இந்திய - இந்திரிய |
| 458 | 4 | கொண்டாய் ருகுந் - கொண்டாய் குருந் |
| 482 | 3 | ஆனந்தமெக்கூறாத - ஆனந்தமிக்கூறாத |
| 486 | 2 | சூராவிரா - சூராவீரா |
| 488 | 4 | தெரிபானெனுங் - தெரிபரனெனுங் |

இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கும் ஐந்து நூல்களுள்ளும் கோகுல சதகம், அண்ணாமலை சதகம் இவற்றைத் தவிர ஏனைய நூல்கள் நுவலும் பொருள் முழுமையும் பக்தியே. கோகுல சதகம் கோகுலரின் சிறப்பைக் கூறும் நிலையிலும், அண்ணாமலை சதகத்தின் மிகுதியான பாடல்கள் நான்கு வருணத்தாரும் கடைப்பிடிக்க வேண்டிய கருத்தை, நெறிமுறைகளைக் கூறும் நிலையிலும் விளங்குகின்றன. அண்ணாமலைப் பெருமானுக்குச் செய்யப்படும் அபிடேக வகைகள் பற்றி நூலின் தொடக்கத்தில் உள்ள முதல் பத்துப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

8. பாட்டுடைத் தலைவன்

சதக நூல்கள் மக்கள், இறைவன், அடியார்கள் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு விளங்குகின்றன. கோகுலசதகத்தில் பாட்டுடைத் தலைவராக விளங்குபவர் ஆயர் குலத்தவர் ஆவார்.

கார்மேகக் கண்ணனை, பரம்பொருளை வளர்த்தவர்கள் ஆயர்பாடி கோகுலர் என்று கூறுவதில் தொடங்கிக்

'குடியிற் பெரியது கோபாலர் தங்கள் குலக் குடியே' (101)

என்று முடிவதுவரைக் கோகுலரைச் சமுதாயத்தோடு இயைபுபடுத்திப் பாடப்பட்டுள்ளது. சில செய்திகள் கோகுலரோடு வலிந்து தொடர்புபடுத்திப்

பாடப்பட்டிருந்தாலும் ஆசிரியருடைய கற்பனை ஆற்றலும் ஆயர்குல மக்களிடம் அவர் கொண்ட ஈடுபாடும் படிப்பவரை வியக்க வைக்கும் வண்ணம் விளங்குகிறது.

வடவேங்கட நாராயண சதகத்தின் பாட்டுடைத் தலைவன் ஏழுமலையில் எழிலுடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணன். ஏனைய மூன்று சதங்களிலும் பாட்டுடைத் தலைவன் சிவபெருமான் ஆவார். அண்ணாமலை சதகம் சிவபெருமானை முன்னிலைப் படுத்திப் பாடப்பட்டிருப்பினும் முன்பு கூறியது போல் அந்நூலில் வாழ்வியல் கருத்துக்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

பாடல்கள் எளிமையாகக் கற்பவர் மனத்தில் பதியும் வண்ணம் சுவையாக உள்ளன. சான்றாக, கோகுல சதகத்தில்

"பழையானை யெட்டக் கரத்தானைத் தன்பதம் பற்றினருக்
கிழையானை யானைமுன் னேயெதிர் வானை யெழிற்கருணை
மழையானை ரோகணிப் பாலுதித் தானை மலிந்தவொரு
குழையானை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே". *(3)*

"பாடற் குருகிமுன் னாள்திருப் பாற்கடற் பள்ளிகொள்ளும்
தேடற் கரிய பொருளான நாரணன் தேவரை நீர்
நாடற் குரிய நாராக முல்லையி னாரணனாய்க்
கூடப் பிறக்க விளையாடல் பெற்றவர் கோகுலரே" *(57)*

வடவேங்கட நாராயண சதகத்தில்

"தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ
மென்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ திண்மைக்குநீ நாராயணா! நாராயணா!" *(127)*

"வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதுங் குன்றுக்குளே துணையாவதும்
காட்டுக்குளே துணையாவதுங் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா! நாராயணா!"

*(140)*

ஆகிய பாடல்கள் திக்கற்றவர்க்குத் தெய்வம் துணையென்பதையும் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதையும் உணர்த்துகின்றன.

"இற்கெண்ணெலா நாராயணா! வெங்கெங்கணு நாராயணா!
சொற்கண்ணெலா நாராயணா! தொழிலெங்கணு நாராயணா!
முற்கண்ணெலா நாராயணா! முகமெங்கணு நாராயணா!
நற்கண்ணெலா நாராயணா! நாராயணா! நாராயணா!" (201)

என்னும் பாடல் இறைவனைத் துதிக்கப் பாராயணம் செய்யும் வகையில் உள்ளது.

சிவபெருமான் அருவமான நிகழ்ச்சியை அருணாசல சதகம்

"வரமாமல ரவனீந்திட வானோர்களுக் கிடரே செயு
நரகாசுரன் றனைவெல்லமுன் னாராயணன் றவஞ்செய்தலின்
ஒருபாதியாங் கவனுக்களித் தொருபாதிதே விக்கீதலால்
அருவாய்மரு வினையோசொலாய் அருணாசலா! அருணாசலா!" (353)

என அழகாகக் கூறுகிறது.

குருநாத சதகத்தில்

"மெய்யன்பிலா தவர்பாலுநீ மெய்யன்பிலா தவனாகுவாய்
பொய்யன்பிலா தவர்பாலுநீ பொய்யன்பிலா தவனாகுவாய்
கையன்பிலா தவனாகுநின் கழனம்பினென் கைதாவையா
கொய்யன்பிலா மலமாசறக் குருநாதனே! குருநாதனே!" (453)

என்ற பாடல் ஓசைநயத்துடன் எளிமையாக உள்ளது.

இந்நூல்கள் எளிய நடையில் அமைந்திருப்பதால் பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. வடவேங்கடநாராயண சதகத்தில் வடசொற்கள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. ஏனைய சகதங்களிலும் வடசொற்கள் காணப்படுகின்றன.

## 9. பேச்சு வழக்குச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| முறையத்தை *(உரை)* | *144* | அவிழ்தம் | *217* |
| விடுங் கோள் *(உரை)* | *157* | மாதளை | *250* |
| அதினாலே *(உரை)* | *158* | மெழுக்கிட்டு | *338* |
| சொல்லச் சேயும் *(உரை)* | *177* | சவம் | *433* |
| நமத்தே | *195* | சாவு | *437* |
| சிங்காதனம் | *211* | துலையாமல் | *448* |

என்பனவாகும்.

10. வடசொற்கள்

| | |
|---|---|
| அஷ்டாக்ஷரமே | 118 |
| கிருபை | 122 |
| பாஷ்பம் | 129 |
| கிஷாய நீர் | 161 |
| உபேட்சை | 171 |
| சம்ரட்சனை | 173 |
| அபிஷேகம் | 210 |
| ஆருகபத்தியம் | 212 |
| தஷிணாக்கினி | 212 |
| வானப்பிரத்தன் | 212 |
| உஷக்காலம் | 213 |
| துஷ்ட | 216 |
| சத்தியாஷாட | 233 |
| பிரதிஷ்டை | 253 |
| இஷ்ட | 278 |
| பாஷை | 445 |

முதலியனவாகும்.

இந்நூல்கள் எல்லாம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருப்பதால் பாடல்கள் எளிமையாக உள்ளன.

11. பழமொழி, உலகியல் உவமை

பாடல்களில் சொல்லப்படும் செய்திகள் கற்பவர்களைப் பிணிக்கும் தகையவாய் அமையப் பழமொழிகளும், உலகியல் உவமைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை அருணாசல சதகத்திலும், குருநாத சதகத்திலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | விரல் நீக்கி மோர் நுகர்வார்களோ? | 167 |
| 2. | நிழல் கண்டபின் வெயினிற்பரோ? | 168 |
| 3. | நாழிக் குடங் கலங்கொள்ளுமோ? | 179 |
| 4. | எய்தார் இருந்திட அம்பை நோம் இழிவாளர் போல் | 185 |
| 5. | கரும்பதை வேரொடு களைகின்றது போல் | 319 |
| 6. | இடியுங்கரை மரமா மென | 323 |

| | | |
|---|---|---|
| 7. | பாம்பின் விடவாயிற்குளே படுதேரை போல் | 325 |
| 8. | காலுக்கு முள்ளிடல் போல் | 395 |
| 9. | வேலிக்கு முள்ளிட வெண்ணிலார் | |
| 10. | பெருந்தீயில் சிறுதிவலைச் சலஞ் செப்பத்தகும் | 411 |
| 11. | மனம் அம்போருகத்து இலைநீர் நிகர் | 418 |
| 12. | கொல்லற்குளூ சிகள் விற்குமோ? | 421 |
| 13. | அலைவாயினிற் சிதறுந் துரும்பினர் | 429 |
| 14. | கோட்டான் கணில் ரவி காணுமோ? | 465 |
| 15. | எட்டாதருங் கோடுடுதே னேறத்தகா முடவன் கையிற் | 491 |

அண்ணாமலை சதகம் தெய்விகராசன் பற்றிய செய்திகளை ஒன்பது பாடல்களில் *(220-228)* எடுத்தியம்புகின்றது. பெண்ணிலக்கணம் குறித்து ஒரு பாடலும் *(238)* ஆண் இலக்கணம் குறித்து மூன்று பாடல்களும் *(239-241)* இடம் பெற்றுள்ளன.

தாயின் வயிற்றிலிருக்கும் கரு ஒன்பதாம் திங்கள் எல்லா உருவங்களும் நிரம்பப் பெற்று அறிவு பெறும். அப்போது இரு கரங்களையும் கூப்பிப் படைத்த தலைவனை அருள் தருமாறு தவம் புரிந்து கொண்டே இருக்கும். பத்தாம் திங்கள் அக்குழந்தை கருப்பையை விடுத்து இவ்வுலகில் பிறக்கும்போது தலைவனை நோக்கிக் கூப்பியிருந்த கரங்களை விலக்கி விட்டுத் தன் தலைவனை வணங்குவதை மறந்து விடுகிறது இயல்பாக நிகழும் செயலைத் தற்குறிப் பேற்றமாகப் பாடியிருப்பது கற்பனை நயத்துடன் அருமையாக அமைந்துள்ளது.

தருமன் கடுகளவு பொய் சொன்னதால் நரகத்தைப் பார்க்க நேர்ந்த மகாபாரதக் கதை நிகழ்ச்சி வடவேங்கட நாராயண சதகத்திலும் *(177)*, சிவபெருமான் பாணபத்திரனுக்கு அருள் பாலித்த திருவிளையாடல் புராணச் செய்தி, *(348)* கண்ணப்பன் சிவபெருமானுக்குத் தன் கண்ணை வழங்கிய நிகழ்ச்சி *(342)* ஆகியவை அருணாசல சதகத்திலும், மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் அருள் புரிந்தது போல் தனக்கும் அருள் புரிய வேண்டும் என்று வேண்டுவதில் *(432)* மாணிக்கவாசகர் பற்றிய குறிப்புக் குருநாத சதகத்திலும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு இச்சதக நூல்கள் இவற்றைக் கற்பவர் இலக்கின்றி அலையாவண்ணம் தம் மனத்தை ஒருமைப்படுத்தி இறைவனை வழிபட்டால் உய்ய வழியுண்டு, இருவினை நீங்கி இறையுணர்வுடன் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ இயலும் என்ற எண்ணத்தை வலியுறுத்திக் கூறும் நிலையில் விளங்குகின்றன.

*****

ஸ்ரீ

கண்ணன் துணை

பாலூர்

அமிர்த கவிராயர்

பாடிய

# கோகுல சதகம்

# கோகுல சதகம்

பாலூர் அமிர்தகவிராயர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பாடிய கோகுல சதகம் *1914*-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆயர்களின் பல திறப்பட்ட சிறப்புக்கள் சிற்சில கற்பனை வளத்துடனும், வழக்காற்றில் கூறப்பட்ட புராண வரலாறுகளுடனும் ஆசிரியரால் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. பசுக்களை மேய்க்கும் ஆயர் கண்ணன் பரம்பரையினர் என்று பேசப்படுகிறது. இச்சதகம் காப்பு, வாழ்த்து இவற்றோடு *104* கட்டளைக்கலித்துறைப் பாடல்களை உடையது. ஆயர்கள் யாவரும் மிகப்பெரும்பாலும் வைணவர் என்பது இவ்வாசிரியர் கருத்து. இவ்வாசிரியரும் ஆயர் குலத்தவராக இருக்கலாம். கோகுல சதகம் படிக்கச் சுவையாக உள்ளது.

ஸ்ரீ
கண்ணன் துணை

# கோகுல சதகம்

## காப்பு

## கட்டளைக் கலித்துறை

**சீர்மேவு பாடியில் வாழண்டர் செல்வஞ் செழிப்புறவே**
**ஏர்மேவு கோகுல மேன்மைச் சதக மிசைப்பதற்கு**
**நீர்மேவு மண்ட சராசர மியாவுமோர் நீள்சுடருங்**
**கார்மேவு முந்தியிற் காத்தான் கழலிணை காப்பதுவே.**

**பொழிப்புரை:** முல்லை நிலத்துப் பாடி என்ற பெயருடைய ஊர்களில் வாழும் ஆயர்கள் செல்வம் செழிக்க, அழகு மிகுந்த பசுக்கூட்டத்தின் மேன்மையைக் குறிப்பிடும் கோகுல சதகத்தினைப் பாடுவதற்குக் கடலால் சூழப்பட்ட அண்டங்களில் வாழும் இயங்கியற் பொருள்களையும், நிலையியற் பொருள்களையும், சூரியனையும் காத்தவனும் கரிய மேனியில் பொருந்திய கொப்பூழை உடையவனும் ஆகிய திருமாலே காப்பு ஆவார்.

**அருஞ்சொற்பொருள்:** பாடி - முல்லை நிலத்து ஊர்; அண்டர் - ஆயர்; கோகுலம் - பசுக்கூட்டம்; அண்டம் - உலகத்தொகுதி; சராசரம் - இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளும்; நீள் சுடர் - சூரியன்; காத்தான் - திருமால், சராசரமும் சுடரும் காத்தான் உந்தியை உடைய திருமால்.

## நூல்

## கட்டளைக் கலித்துறை

1. **மணங்கொண்ட வேதன் முகத்திற் புயத்தில் வளர்குறங்கிற்**
**கணங்கொண்ட பாதத்திற் றோன்றிய நான்கும் கவின்பெறவே**
**பணங்கொண்ட பாம்பணை யானமிர் தூறுமிப் பார்தழைக்கக்**
**குணங்கொண்டு முன்வரு மன்பர்தங் கோத்திரர் கோகுலரே.**

**பொழிப்:** பிரமனுடைய முகம், புயம், தொடை, பாதம், இவற்றில் தோன்றிய நான்கு வருணத்தினரும், சிறப்புறுமாறு இனிமை ஊறும் இவ்வுலகம் தழைப்பப்

படம் எடுக்கும் ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்ட திருமாலுடைய குணங்களைப் புகழ்ந்து கொண்டு வரும் அன்பர் கோகுலர் கோத்திரத்தவர்.

**அ.பொ:** வேதன் - பிரமன், குறங்கு - தொடை, நான்கு - நான்கு வருணம், கோத்திரர் - மரபினர். **(க)**

2. **அண்டங்க ளாயிரம் கோடியுண் டாக்க வலர்ந்தவிதழ்**
**முண்டக னாகிப் பராபரன் பாரில் முறைநிறுத்த**
**மண்டலத் தேவகி பால்வசு தேவன்கை வாய்க்கப்பெற்ற**
**கொண்டலை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** ஆயிரம் கோடி அண்டங்களைப் படைக்க மலர்ந்த உந்தியந்தாமரையை உடையவனாகி, இவ்வுலகில் அறத்தை நிலைநிறுத்தத் தேவகி, வசுதேவர் மகனாக அவதரித்த கார்மேக வண்ணனாகிய பரம்பொருளை எடுத்து வளர்த்தவர்கள் ஆயர்பாடியிலுள்ள கோகுலரே.

**அ.பொ:** முண்டகம் - தாமரை, கொண்டல் - மேகநிறத் திருமால். **(உ)**

3. **பழையானை யெட்டக் கரத்தானைத் தன்பதம் பற்றினருக்**
**கிழையானை யானைமுன் னேயெதிர் வானை யெழிற்கருணை**
**மழையானை ரோகணிப் பாலுதித் தானை மலிந்தவொரு**
**குழையானை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** பழமையான திருமால் அவதாரம், எட்டெழுத்துடையோன், கசேந்திரனுக்கு முன் வந்து அருளினோன், கருணைமழை பொழிபவன், உரோகணியின் மகன், ஒற்றைக் காதணியை அணிந்தவன் ஆகிய பலராமனை எடுத்து வளர்த்தவர்களும் கோகுலரே.

**அ.பொ:** எட்டு அச்சரத்தான் - திருமால், இழையான் - நெருங்கி இருப்பவன், யானை - கசேந்திரன், ஒரு குழை - ஒற்றைக் காதணி. **(ஙூ)**

4. **நிலவிய வண்டம் பகிரண்ட கோடியை நேர்படைத்து**
**நலமுள தாமரை நாபியிற் காத்தவந் நாரணற்குப்**
**பலவித மாகிய பூச்சூடு நூற்றெண் பதியுரைக்கக்**
**குலவிய பாட லுரைத்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** தன் உந்தியிடத்திலிருந்து பலகோடி அண்டங்களைப் படைத்துக் காத்த திருமாலுக்குப் பலவிதமான பூக்களைச் சூட்டும் *108* திருப்பதிகளை அமைக்கப் பாடல்களைப் பாடியவர்கள் கோகுலரே.

**அ.பொ:** நாபி - கொப்பூழ். **(ச)**

5. மழவியல் பாக மடிமீ திருத்தி வனசமுகத்
தழகுந் திருவு மருந்திக்கண் ணாலன்பு மானமறைப்
பழமிது வேயெனப் போற்றிய கண்ணனைப் பாரிற்றங்கள்
குழவியைக் காப்பிடு பாடலு ரைத்தவர் கோகுலரே.

**பொழிப்:** குழந்தையை மடி மீது அமர்த்திக் கண்ணால் அதன் அழகையும் செல்வத்தையும் பருகி வேதப்பழம் என்று போற்றப்படும் பெருமானாகிய அக்குழந்தைக்குக் காப்பு அணிவதற்கு உரிய பாடல்களை உரைத்தவர் கோகுலரே.

**அ.பொ:** மழ - குழந்தை, வனசம் - தாமரை, மான - மேம்பட்ட, மறைப்பழம்- வேதத்தில் பழுத்த பழம். **(ரு)**

6. தேறப் புவியின் மறையைக் கடைந்து திரட்டமுதம்
ஏறக் கைரயினில் வைத்தது போல வெடுத்ததமிழ்
மீறப் பதின்மர்க ணாலாயி ரத்தினு மெய்ப்புகழைக்
கூறச் சிறந்து வளர்வோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** வேதத்தைக் கடைந்து திரட்டிய அமுதத்தைக் கரையில் வைத்தது போலத் தமிழில் ஆழ்வார் பதின்மர் நாலாயிரம் பாடலில் உண்மைப் புகழை எடுத்துக் கூற, அதனால் சிறந்து வளர்வோர்கள் ஆயர்பாடியிலுள்ள கோகுலரே.

**அ.பொ:** தேற - தெளியுமாறு, பதின்மர் - ஆழ்வார் பதின்மர். **(சா)**

7. பண்டா டியதழ லாடியும் பாம்பின் படத்திலன்பு
கொண்டா டியுமொன்று மாய்நின்ற மாலண்ட கோளமெல்லாம்
உண்டாடி யுங்கடு கொவ்வாத வாயிலுறி யின்வெண்ணெய்
கொண்டாடி யுண்டு தெவிட்டச்செய் தாரவர் கோகுலரே.

**பொழிப்:** காட்டுத்தீயை அவித்துக் காளியன் படத்தில் கூத்தாடி அண்ட கோளங்களை எல்லாம் கடுகு அளவு ஆக்கி விழுங்கிய வாயை உடைய கண்ணனுக்கு உறியில் வைத்த வெண்ணையை விரும்பி உண்டு தெவிட்டச் செய்தவர் கோகுலரே.

**அ.பொ:** தழலாடி - காட்டுத்தீயை அடக்கி ஆண்டவன், படம் - காளியன் என்ற பாம்பின் படம், வாயில் உறி - வாசலில் கட்டப்பட்ட உறி, தெவிட்டுதல் - போதும் என்று திருப்தி அடைதல். **(எ)**

8. முறையாக நற்றவஞ் செய்திடு வோருடன் முற்றுநின்று
மறையாமற் றேவர்க்கு மாந்தர்க்கும் வேள்வி வகுத்தருளை
நிறைவாகத் தந்து மலர்வாச முற்று நிலைத்த செல்வங்
குறையாத பின்னை யெனுந்திரு வீன்றவர் கோகுலரே.

**பொழிப்:** தவத்தோர்களுக்கும், தேவர்க்கும், மனிதருக்கும் வேள்விகளை வகுத்து அருள் செய்து மலரின் மணம் போல எங்கும் நிலைத்த செல்வமாகிய கண்ணனுக்கு ஒப்புமையில் குறையாத பின்னை என்னும் திருமகளை ஈன்றவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மலர்வாச முற்று - மலரின் மணம்போல எங்கும் நிறைந்து, செல்வம் குறையாத பின்னை - செல்வம் குறையாமைக்குக் காரணமான நப்பின்னைப் பிராட்டி. **(அ)**

9. தொடுத்தகல் யாணத் தெருதேழ் கொடுநிற்கச் சூதசுரர்
எடுத்தெறி யத்தெய்வ வுருவாகி, யோங்கிய வேற்றைவெல்ல
அடுத்துநங் கண்ணனிவரை யழைக்கவந் தகனடுங்கிக்
கொடுத்தா னுயிரைப் பிழைத்தோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** திருமணத்தின் போது வஞ்சனை அசுரர் ஏழ் எருதாக நிற்க, அவற்றை எதிர்த்த ஆயர்களை அவ்வெருதுகள் தூக்கி எறிந்து கொல்லத், தெய்வ உருவான அவர்களைக் கண்ணன் அழைக்க, யமன் நடுங்கிக் கொண்டு அவர்களை மீண்டும் வழங்க, கண்ணன் அந்த ஏழு காளைகளையும் வெல்ல, இவ்வாறு கண்ணனால் உயிர் பிழைத்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** சூது அசுரர் - வஞ்சனையை உடைய அசுரர், அந்தகன் - இயமன். **(கூ)**

10. ஞாலங்கண் டோங்கிய நான்முகன் கண்ணுநற் றேவர்கண்ணும்
ஆலங்கண் டோடிய வயிராணி கேள்வற் கலர்ந்தகண்ணும்
மூலங்கண் டோமெனுங் காண்பரி தான முகுந்தன்மணக்
கோலங்கண் டேகண் குளிர்ந்தோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** உலகைப் படைத்த நான்முகன் கண்களும், தேவர் கண்களும், விடத்தைக் கண்டு ஓடிய இந்திரன் கண்களும் காண அரிய மூலப்பொருளான முகுந்தனுடைய திருமணக்கோலத்தைக் கண்களால் கண்டு மனம் குளிர்ந்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** அயிராணி - இந்திராணி. **(௧0)**

11. நளிர்மலர் நாப னயந்தண்ட ருய்ய நடுக்கடலை
ஒளிர்மலை மத்திற் கடைந்ததிற் றோன்றிய வொண்பொருளிற்
றளிரியல் பார்ந்த திருவை மணந்துபின் றந்தமுதைக்
குளிர்ந்தன்பு கூர்ந்து கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** தாமரை போன்ற கொப்பூழை உடைய திருமால் தேவர்கள் வாழக் கடலை மலையாகிய மத்தினைக் கொண்டு கடைந்து கடலிலிருந்து தோன்றிய திருமகளை மணந்து, பின் வழங்கிய அமுதினை அன்பு கூர்ந்து கொண்டவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மலர்நாபன் - பத்மநாபனாகிய திருமால். **(கக)**

12. வானென்ற சொர்க்கப் புரந்தரன் றானு மாலயனுந்
தேனென்ற சொல்லுமை கேள்வனு மற்றுள்ள தேவர்களுந்
தானென் றுலகுக் கரசரும் பூணத் தகாவிஜயக்
கோனென்ற மேன்பட்டங் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** சுவர்க்கத்து அரசனான இந்திரன், திருமால், பிரமன், உமை கணவனாகிய சிவபெருமான், மற்ற தேவர்கள், உலகில் உள்ள அரசர்கள் ஆகிய இவர்கள் யாவரும் பெற முடியாத விஜயக்கோன் என்னும் பட்டம் பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** புரந்தரன் - இந்திரன், கோன் - அரசன், இடையன். **(கஉ)**

13. அடுக்குந் தொழிலவர்க் காகிய தேவிரு தாகப்பெற்றார்
எடுக்குந் தொறுமதி லேற்றமுண் டேயெங்க ணாரணனே
தொடுக்குங் கருணை புரிந்தே தனது சுடர்க்கரத்தாற்
கொடுக்கக் கருடக் கொடிபடைத் தாரவர் கோகுலரே.

**பொழிப்:** அவரவர் தத்தம் தொழிலுக்கு உரியதையே சிறப்பாகப் பெற்றிருப்பதில் பெருமை ஒன்றுமில்லை. திருமாலே தன் ஒளி வீசும் கைகளால் கொடுக்கக் கருடக்கொடி என்னும் சிறப்பைப் பெற்றார் கோகுலரே.

**அ.பொ:** விருது - சிறப்பு. **(கங)**

14. நற்றுஞ் சுருதியுங் காணாத நாரண னற்றுளபம்
பெற்ற திருவின் னகைபோன்ற மாரன் பிடித்தவம்பால்
முற்றுஞ் செயஞ்செய்த கால்அங்ங னேஇன் னமிர்துதவிக்
கொற்றந் தருமுல்லை மாலையைத் தாங்கினர் கோகுலரே.

**பொழிப்:** வேதமும் காண முடியாத திருமாலுடைய துளசியை அணிந்த திருமகளுடைய பற்களைப் போன்ற முல்லை மலர் அம்புகளால் மன்மதன் வெற்றி பெற்ற காலத்தில் இனிய அமுதத்தை வழங்கி வெற்றி தரும் முல்லைமாலையைச் சூடியவர்கள் கோகுலரே.

**அ.பொ:** நற்றும் - நன்மை தருகின்ற, சுருதி - வேதம். **(கச)**

15. **மண்டலந் தன்னி னிலனைந்து கூறதில் வண்மைபெறுந்**
**தண்டலை நன்னதி சார்மயி லானிரை தார்குருந்து**
**விண்டலத் தோர்மகிழ் வேய்ங்குழ லோசை விளங்குபைந்தேன்**
**கொண்ட வளந்தரு முல்லைத் தலைவர்கள் கோகுலரே.**

**பொழிப்:** பூமியில் ஐவகையாகக் கூறுபடுத்திய நிலப்பகுதியில் சோலை, நதிகள், மயில், குருந்து, மகிழ் முதலிய மரங்கள், வேய்ங்குழல் ஓசை, இனிமை பொருந்திய வளங்கள் இவற்றை உடைய முல்லை நிலத் தலைவர்கள் கோகுலரே.

**அ.பொ:** நிலன் ஐந்து - மலை, காடு, வயல், கடற்கரை, பாலை; தண்டலை - சோலை. **(கரு)**

16. **ஆவர்த் தனையுள்ள வெத்தனை யோகுடி யாய்த்தழைத்தோர்**
**மாவர்த் தனையுள்ள முல்லை நிலத்தர் மலர்நிறைந்த**
**காவர்த் தனையுள்ள யமுனையுங் காவிரி காளிந்தியுங்**
**கோவர்த் தனமலை யுள்ளோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** பசுக்களை வளர்த்துப் பெருக்கும் பல குடும்பங்களாகத் தழைத்தவர்கள் மரங்கள் மிகுந்த முல்லை நிலத்தவர். அவர்கள் மலர்கள் நிறைந்த சோலைகளை வளர்க்கும் யமுனை, காவிரி, காளிந்தி, கோவர்த்தனமலை இவற்றில் வாழும் கோகுலரே.

**அ.பொ:** வர்த்தனை - வளர்ச்சி, ஆவர்த்தனை - பசுக்களின் வளர்ச்சி, மாவர்த்தனை - செல்வ வளர்ச்சி, காவர்த்தனை - சோலை வளர்ச்சி, கோவர்த்தனம் - திருவாய்ப்பாடியை அடுத்த மலை. **(கசா)**

17. **வேலாயு தம்பிடித் தான்முரு கேசன்வெள் வெற்புறைவோன்**
**சூலாயு தம்பிடித் தான்சசி காந்தன் சுடரும்வச்சிர**
**மேலாயு தம்பிடித் தான்கஞ்ச னேவிய மேதிக்கன்றைக்**
**கோலாயு தம்பிடித் தானாயர் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** முருகன் வேலாயுதமும், சிவபெருமான் சூலாயுதமும், இந்திரன் வச்சிராயுதமும் பிடிக்கவும் கம்சன் ஏவிய கன்றைக் கொல்லக் கோல் ஆயுதம் பிடித்தவர் கோகுலரே.

**அ.பொ:** வெண்வெற்பு - கயிலாயம், சசி - இந்திராணி, மேதிக்கன்று - எருமைக் கன்று, கோல் ஆயுதம் - எறிதடி. **(கஎ)**

18. **தலஞ்சுத்தி யாகவுந் தார்வேந்தர் சென்னி தரிக்கமுடி**
**நலஞ்சுத்தி யாகவு நானிலத் தாலய நான்மறையோர்**
**பலஞ்சுத்தி யாகவும் பதினெட்டுச் சுத்தங்கள் பண்ணவுநற்**
**குலஞ்சுத்தி யாம்பஞ்ச கௌவிய மீந்தவர் கோகுலரே.**

**பொழிப்:** தல சுத்தி, கிரீடத்தின் சுத்தி, நான்மறையோன் பயன் சுத்தி ஏனைய பதினெட்டுச் சுத்தங்கள் யாவும் சுத்தி பெறப் பஞ்சகவ்வியம் வழங்கியவர் கோகுலரே.

**அ.பொ:** தலம் - தரை. **(கஅ)**

19. **சுற்றிய பாரிலுண் டாகிய தோற்றஞ் சுகம்பெறவே**
**மற்ற முயற்சியில் வருவதுண் டோவளங் கூர்சதுர்த்தர்**
**பற்றிய தங்க டொழில்கடைத் தேறிஅப் பலனுறவே**
**கொற்றநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** பல உயிர்களும் சுகம் பெற மற்றவர் முயற்சியினும் வேளாளர் முயற்சியே மேம்பட்டது. அந்த வேளாளர் பயன் பெறக் காளைகளைக் கொடுத்து உதவியவர் கோகுலரே.

**அ.பொ:** சதுர்த்தர் - வேளாளர். **(ககூ)**

20. **புழுங்கிய கோபத்தி லந்தகன் சாபம் பொறுத்தவங்கி**
**மழுங்கிய தன்னுரு வோடு மறைந்திட மன்னுயிர்கள்**
**அழுங்கிய போதினி லந்தணர் யாகமனைத் துஞ்செய்யக்**
**கொழுந்தனல் காட்டு மரணிதந் தாரவர் கோகுலரே.**

**பொழிப்:** கோபத்தால் இயமன் சாபமிட அச்சாபத்தை ஏற்ற அக்கினி மழுங்கிய தன் உருவத்தோடு மறைந்திட, அதனால் உயிர்கள் வருந்த, அப்பொழுது அந்தணர் யாகம் அனைத்தும் செய்ய, நெருப்பைத் தோற்றுவிக்கும் அரணிக் கட்டைகளைத் தந்தவர் கோகுலரே.

**அ.பொ:** அங்கி - தீக்கடவுள், கொழுந்து அனல் - ஒளி வீசி எரியும் தீ. அரணி - தீக்கடைக் கோல். **(உ0)**

21. **பிலமா மிலங்கையை வென்றுகற் பாகிய பெண்ணரசை**
**நலமாக மீட்டு வரும்போது தண்டக நன்முனிவர்**
**பலமா மிராமனைத் தழுவ நினைக்கவப் பாடியினீர்**
**குலமாத ராகப் பிறக்க வளர்த்தவர் கோகுலரே.**

**பொழிப்:** கடலிடையே அமைந்த இலங்கையை வென்று கற்பே வடிவெடுத்த பிராட்டியை நலமாக மீட்டு இராமன் வந்தபோது தண்டக முனிவர்கள் இராமனைத் தழுவ நினைக்க 'நீர் என் கிருஷ்ணாவதாரத்தில் ஆய்ப்பாடியில் மகளிராகப் பிறந்து என்னைத் தழுவுக' என்று இராமன் குறிப்பிட அவ்வாறே பிறந்த அவர்களை வளர்த்தவர் கோகுலரே.

**அ.பொ:** பிலம் - கடல். **(உக)**

22. **உண்டா கியபதி னாறா யிரம்பெண்ணை யோங்குகண்ணன்**
**கண்டான் கமலத் திருவொப்ப வேகலியா ணஞ்செய்யப்**
**பண்டான வூர்வலம் வாழ்நாக வல்லி பரிமளநீர்**
**கொண்டாடி யேழ்தினஞ் சோபனம் பாடினர் கோகுலரே.**

**பொழிப்:** பதினாறாயிரம் பெண்களைக் கண்ணன் திருமகளை ஒப்பவராகக் கருதித் திருமணம் செய்து கொண்டபோது ஊர்வலம், நாகவல்லி என்னும் சடங்கு, நறுமண நீர்தூவும் சடங்கு இவற்றை எழுநாள்கள் கொண்டாடி வாழ்த்துப் பாடியவர்கள் கோகுலரே.

**பார்க்க:** செவ்வைச்சூடுவார் பாகவதம், பத்தாம் கந்தம் அத்தியாயம்-*32*, நரகாசுரனைக் கொன்ற அத்தியாயம், பாடல்:*32*.

**அ.பொ:** நாகவல்லி - திருமணச்சடங்கினுள் ஒன்று. **(உஉ)**

23. **பண்டான வாய்மை நினைந்தே மலரயன் பாரதனில்**
**உண்டான கண்ணன் றிருவிளை யாடலுணர்த்தக் கன்றுந்**
**தொண்டான வாய ருடன்மறைத் தேகவுந் தோன்றுருவங்**
**கொண்டானை யன்புடன் கொண்டாண்ட செல்வர்கள் கோகுலரே.**

**பொழிப்:** கண்ணன் திருவிளையாடலைக் காண நினைத்துப் பிரமன் பசுக் கன்றுகளையும் ஆயர்குலச் சிறுவர்களையும் மறைக்க, பசுக்கன்றுகள் ஆயர்

சிறுவர்கள் இவர்கள் வடிவங்களை எல்லாம் கண்ணனே எடுத்துக் கொண்டு செயற்பட, அச்சிறுவர்களை அன்புடனே கொண்டு வாழ்ந்த செல்வர்கள் கோகுலரே.

**பார்க்க:** செவ்வைச்சூடுவார் பாகவதம், பத்தாம் கந்தம் அத்தியாயம்-*6*, மலரவன் சிறார்க்கன்று கவர்ந்த அத்தியாயம்.

***அ.பொ:*** மலரயன் - தாமரைமலரிலிருக்கும் பிரமன், பார் - உலகம். **(௨௩)**

24. ***பாடிக்கொள் நாரதன் எண்ணிரண் டாயிரம் பாவையரில்***
***நாடிக்கொண் டேயொன்று தாவென்ற போதினி னானின்மையைத்***
***தேடிக்கொண் டேகெனக் கண்ணினிற் றோன்றுந் திருவுருவாய்க்***
***கூடிக்கொள் செல்வப் பதிபெற்ற பேறவர் கோகுலரே.***

***பொழிப்:*** நாரதன், பதினாறாயிரம் தேவியரை உடைய கண்ணன் ஒவ்வொருவரிடமும் இருக்க முடியாமையால் அவர்களைக் கண்ணனிடம் ஊடல் கொள்ளச் செய்யக் கருதி ஒவ்வொருவர் வீட்டிற்கும் வர, அங்குக் கண்ணன் தனித்தனியே ஒவ்வொருவரிடத்தும் காணப்படக், கண்ணனிடம் நாரதன் ஒருவரம் வேண்ட, 'வெட்கம் கொண்டு செல்க' என்று கண்ணன் நாரதனிடம் கூறுமாறு அமைந்த துவாரகைப்பதியைப் பெற்றவர் கோகுலரே.

**பார்க்க:** செவ்வைச்சூடுவார் பாகவதம், பத்தாம் கந்தம், அத்தியாயம்-*40*, பதினாறாயிரம் திருவிளையாட்டுரை அத்தியாயம்.

***அ.பொ:*** நான்இன்மை - நான் இல்லாத இடம்.

"துன்று பிரமாவுநான் மன்னுயிரு நானவ் விருவரையும்
ஏவுவான் றானுநான் என்றுணர்த்தக் - கோவலர் பால்
ஆனுமா யான்கன்றுமாகி யவற்றை மேயப்
பானுமாய் நின்ற பரஞ்சோதி" - அழகர் கிள்ளை விடுதூது *(அடி 81-85.)* **(௨௪)**

25. ***நீட்டுற்ற சாகையின் சூர்மாவை வேல்கொடு நீக்கிவெற்றி***
***காட்டு முருகர்க்கு மேனடு வான கனலிறைக்குந்***
***தேட்டுக் குரிய வினைநாடி யேற்றிற் றிருகுபுரிக்***
***கோட்டுத் தகர்பெற வீந்தவர் பாடியிற் கோகுலரே.***

***பொழிப்:*** நீண்ட கிளைகளை உடைய சூரபன்மாவாகிய மாமரத்தை வேலால் அழித்த முருகனுக்கும் அக்கினிக்கும் அவர்கள் தேடிப் பெற வேண்டிய செயலை ஆராய்ந்து அவர்களுக்கு முறுக்கிய கொம்புகளை உடைய ஆண் ஆடுகளை வாகனமாகத் தந்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** சாகை-கிளை - கிளைகளை உடைய மாமரம், நடுவான கனல் இறை - சாட்சியாகும் அக்கினி தேவன், தேட்டு - செல்வம், திருகுபுரிக்கோடு-வளைந்து முறுக்கிய கொம்பு, தகர் - ஆண்ஆடு. **(உரு)**

26. **சமர்தனிற் சூரனை வேல்கொடு தாக்கிச் சயம்புரிந்தே**
**அமரரைக் காத்தவன் பன்னிரு தோண்மறைத் தௌவைதன்னைக்**
**கமரரி முல்லையிற் காத்திருந் தேபரி காசஞ்செய்யக்**
**குமரனு மேதிகண் மேய்க்கப்பெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** சூரனை வென்று தேவரைக் காத்த முருகன் தன் பன்னிரண்டு கைகளையும் மறைத்துக் காட்டுப்பகுதியில் காத்திருந்து ஔவையாரைப் பரிகசிக்குமாறு எருமைகளை மேய்க்கப் பெற்ற வாய்ப்பினைப் பெற்றவர்கள் கோகுலரே.

**அ.பொ:** கமர் - பிளப்பிடம்; அரி முல்லை - அழகிய முல்லை வனம், மேதிகள்-எருமைகள். **(உசா)**

27. **மாரியி னேர்கொடை யீந்தோர்க ளௌவை மனங்குளிரச்**
**சீரிய வாடை கொடுத்தோர்கள் போசனஞ் செய்யநல்ல**
**வூரிய பொன்னிலை யீந்தோர்கள் பாரி யெனமொழிந்த**
**கூரிய வள்ள லுதித்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** கார்மேகம் ஒத்த கொடையினர் என்று ஔவையார் போற்ற, அவருக்கு ஆடை அளித்தவரும், உணவு உண்ண நல்ல பொன்மயமான இலையை அளித்தவரும், பாரி என்ற வள்ளல் உதித்த மரபினரும் கோகுலவர்களே.

**அ.பொ:** கூரிய - மேம்பட்ட, சீரிய ஆடை - சிறந்த துணி. **(உஎ)**

28. **தணவாத நீதி புரிந்தோர் மகுடந் தரித்தனந்தன்**
**பணமாகத் தாங்கிய சேரனுஞ் சோழனும் பாண்டியனுங்**
**கணமாகச் சோபனப் பந்தலி லேநின்று கையதனாற்**
**குணமாய் மணமிடக் கலியாணம் பெற்றவர் கோகுலரே.**

**பொழிப்:** நீதி செலுத்தி முடிசூடி ஆதிசேடன் தாங்கிய உலகைத் தம் தோள் வலியால் தாங்கிய சேர சோழ பாண்டியர்கள் கலியாணப் பந்தலுக்கு வந்து வாழ்த்துக் கூறித் தம் கைகளால் திருமணம் செய்து வைக்கப்பட்டவர் கோகுலரே.

**அ.பொ:** அநந்தன் - ஆதிசேடன், சோபனம் - வாழ்த்து. **(உஅ)**

29. **வடியாய்ப் பனந்துண்டு மூன்றர சாகிய மன்னவர்க்குத்**
**துடியாக மூன்று பழந்தர லாலவர் தோத்திரஞ்செய்**

**படியார்க் கெளியரு மிச்சிக்க நான்கெனும் பாடல்பெற்ற**
**குடியார் பெரிய கொடையாற் பெரியவர் கோகுலரே.**

**பொழிப்:** ஒரு பனந்துண்டு தன் தெய்வீக ஆற்றலால் சேர சோழ பாண்டியருக்கு மூன்று பழம் தர, உலகவர் விரும்புமாறு ஔவையார் பாடல் ஒன்று பாடி நான்காவது பழம் தருமாறு செய்ய, அதனைச் சுவைத்தவர்கள் கொடையான் மிக்க கோகுலர்.

**அ.பொ:** துடியாக - விரைவாக, படியார் - உலக மக்கள், இச்சிக்க - விரும்ப.

**(உகூ)**

30. **தண்டா மரைப்பெண்ணைத் தாம்பெற்ற தாலுந் தரணிச்செல்வம்**
**உண்டான வாய்மை யுடைமையி னாலு முணர்ந்தௌவையார்**
**பண்டாங் குடியிற் பெரியோ ரெனச்சொன்ன பாடல்தனைக்**
**கொண்டே பெரும்புகழ் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** திருமகளைத் தாம் பெற்றதாலும், செல்வம் மிக உடைய உண்மையினாலும் ஔவையார் மகிழ்ந்து குடிகளில் சிறந்தவர்கள் இடையரே என்று சொன்ன பாடலைக் கொண்டு பெரும்புகழ் பெற்றோர்கள் கோகுலரே.

**அ.பொ:** தாமரைப் பெண் - திருமகள். **(௩0)**

31. **பணத்தா மிரஞ்சென்னிச் சேடனு மேத்தப் பகர்ந்தவிலக்**
**கணத்தான் மிகுந்தவ ரெளவையை யோர்சொற் கழறிவெல்ல**
**மணத்தா மரைக்கை மணிப்பொற் கடகத்தை வாங்கியவள்**
**குணத்தாற் கொடுக்கப் புனைந்தவர் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** ஆதிசேடனும் போற்றுமாறு இலக்கண அறிவால் மேம்பட்ட சான்றோர்கள் ஔவையாரை ஒரு சொல்லால் வெல்ல அவள் மகிழ்ந்து தன் கையில் அணிந்திருந்த கடகத்தைப் பரிசாக வழங்க, அதனை வாங்கி அணிந்தவர்கள் கோகுலரே. **(௩க)**

32. **பிலமா மிராகவன் காதையைக் கம்பன் பெருகச்செய்ய**
**நலமா மதிலொரு சீரிற் சமுசய நாடவிடத்**
**தலமாந் திசைசொலைச் சரஸ்வதி சாற்றத் தயிர்கடையுங்**
**குலமாது மாகப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** இராமாயணத்தைக் கம்பர் சொற்பெருக்காற்றியபோது அப்பாடல்களில் ஒரு சீரில் 'துமி' என்ற சொல்வர, அது சரியான சொல்தானா என்று அறிஞர்கள்

ஐயப்பட, அது ஒரு திசைச்சொல் என்று அவர்கள் அறியுமாறு கலைமகள் தயிர்கடையும் இடைக்குலப் பெண்ணாகத் தோன்றி ஐயத்தைப் போக்கிய வாய்ப்பினைப் பெற்றவர் கோகுலரே.

***அ.பொ:*** சமுசயம் - ஐயம், திசைச்சொல் - துமி என்பது. **(௩௨)**

33. **தொடுத்தநற் கற்புடைக் கன்னகை கேள்வன் றுயரதனாற்**
**கடுத்து வருகின்ற போதவள் கொங்கைக் கரம்பறித்து**
**விடுத்தவள் கூடற் பதியினி லாயர்பெண் வெண்ணெயப்பக்**
**கொடுத்த வரம்பெற்று வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** கற்பரசி கண்ணகி கோவலன் கொலையுண்டதால் வெகுண்டு மதுரையில் தன் கொங்கையைத் திருகி எறிய, அப்புண் தீருமாறு வெண்ணெயை மார்பில் அப்பி அவள் கொடுத்த வரம் பெற்று வாழ்பவர் கோகுலரே.

***அ.பொ:*** கன்னகை - கண்ணகி, கேள்வன் - கோவலன். **(௩௩)**

34. **ஆடற் பதிக்கு நிகர்கடம் பாடவி யானதிலே**
**தேடற் கரிய பொருளைக்கண் டேதமிழ் செப்பியவர்**
**நாடத் தயவு புரிந்தேபின் பாக நடந்துவருங்**
**கூடற் பதிச்சொக்கை யேவல்கொண் டோரவர் கோகுலரே.**

**பொழிப்:** சிதம்பரத்தை ஒத்த சிறப்புடைய மதுரையில் சிவபெருமானைத் தரிசித்துத் தமிழ்ப்பாடல்கள் பாடி அப்பெருமானே கருணை கூர்ந்து தம்மைத் தொடர்ந்து வருமாறு மதுரைச் சொக்கநாதப் பெருமானை ஏவல் கொண்டவர்கள் கோகுலரே.

***அ.பொ:*** ஆடற்பதி - சிதம்பரம், கடம்பாடவி - மதுரை, சொக்கு - சொக்கலிங்கப் பெருமான். **(௩௪)**

35. **நம்பிட வேயிடைக் காட்டூரி லீசனை நாட்டிவைத்துச்**
**சொம்பிடக் கண்டனன் பாண்டியன் பாதத் துணையில்விழ**
**அம்பிடு சென்னிய னன்பனைப் போற்றென வன்றரசன்**
**கும்பிடச் சொக்கரைக் கோவில்வைத் தாரவர் கோகுலரே.**

**பொழிப்:** இடைக்காட்டூரில் இறைவனைக் கோயிலில் பிரதிட்டை செய்து, கோயிலுக்குச் செல்வ வளங்கள் வழங்கிய பாண்டியன் அவ்விறைவனை வணங்க, அப்பெருமான் இடைக்காடன் என்ற புலவனைப் போற்றுவாயாக என்று கூறுமாறு இறைவனைக் கோயிலில் நிறுவியவர் கோகுலரே.

**அ.பொ:** சொம்பு - செல்வம், அம்பு இடு சென்னியன் - கங்கையைத் தரித்த சிவபெருமான். (௩௫)

36. நாலா கலைக்கென்றும் வல்லவர் சோதனை நற்பலகை
மேலா யிருந்தரன் கீழாகி நின்றிட மேன்மைபெற்று
நாலா நிறைகின்ற பேரெழு தாமன்முன் னற்றமிழாற்
கோலா கலச்சங்கம் வென்றோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** புலவர்கள் கலைகளில் வல்லவராய்ச் சங்கப்பலகை மீது இருந்திட, சிவபெருமான் கீழே நிற்குமாறு மேன்மை பெற்றுத் தம் பெயரை எழுதாமல் நற்றமிழால் சங்கம் வைத்து வெற்றி கண்டவர்கள் கோகுலரே.

**அ.பொ:** நாலா கலை - நான்கு திசைகளிலும் வளரும் கலைகள், நாலா நிறைகின்ற பேர் - தமிழ்ச்சங்கம் என்ற பெயர், கோலாகலம் - மகிழ்ச்சி. (௩௬)

37. சங்கத்தை வென்றவர் மங்காத நீதி தமிழுரைத்தோர்
துங்கக் கஜேந்திர மோட்சமு மாயிரஞ் சொன்னவல்லோர்
எங்கட் கிறைமகிழ் பாக வதமுமே ழாயிரமாய்க்
கொங்குற்ற வாணி கடாட்சத்திற் செய்தவர் கோகுலரே.

**பொழிப்:** சங்கத்தில் வெற்றி கண்டவரும் கசேந்திர மோட்சம் முதலிய திருமால் வரலாறுகளை உள்ளடக்கிய தமிழ்ப் பாகவதபுராணத்தை ஏழாயிரம் பாடல்களாகக் கலைமகள் கடைக்கண் பார்வையின் அருளால் பாடி வழங்கியவரும் கோகுலரே.

**அ.பொ:** கொங்கு - செல்வம், வாணி - கலைமகள், கடாட்சம் - கடைக்கண் பார்வை. (௩௭)

38. அம்போ ருகனு மறியாத மாய னவதரிக்க
உம்பரு மேற்றிட மண்டல மேற்ற வுலகமெங்குந்
தம்போல வாழ்வு தழைத்திடக் கஞ்சனைத் தாக்குபதக்
கொம்பான தூர்க்கை யெனுஞ்சத்தி யீன்றவர் கோகுலரே.

**பொழிப்:** பிரமனும் அறியாத திருமால் அவதரிக்க, தேவரும் போற்றிட உலகமெல்லாம் வாழ்வு தழைத்திடக் கம்சனைத் தாக்கிய கால்களை உடைய தூர்க்கை என்னும் சக்தியைப் பயந்தவர்களும் கோகுலரே.

**அ.பொ:** அம்போருகன் - பிரமன், ஏத்திட - புகழ. (௩௮)

39. **மதித்தே வருகின்ற பூதகி யாதி வருபகையை**
**மிதித்தேறி வென்று முனிந்தே வருகின்ற வேழத்தையும்**
**எதிர்த்தே மருப்பைப் பிடுங்கியுங் கஞ்சன்மு னேமிக்கண்ணன்**
**குதித்தே யுதைத்திடு காட்சிபெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** வெகுண்டு வந்த பூதகி முதலிய பகைவர்களை வென்று எதிர்த்து வந்த குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளைப் பிடுங்கிக் கம்சனைக் கண்ணன் உதைத்துக் கொல்லும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவர் கோகுலரே.

**அ.பொ:** பூதகி - பூதனை என்ற அரக்கி, வேழம் - குவலயாபீடம் என்ற கம்சனின் யானை, நேமி - சக்கராயுதம். **(௩௯)**

40. **மாவா யிரம்பல முள்ள பராக்கிரம மல்குகஞ்சன்**
**மேவா யமபுர மேவிய பின்னர் விளங்கவெங்குந்**
**தேவாதி தேவ னெனவுக்கிர சேனனைச் சீர்பெறவே**
**கோவாய் மௌலி தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** ஆயிரம் யானையின் பலமுடைய கம்சன் இயமனுடைய ஊரை அடைந்த பிறகு உக்கிரசேனனை மீண்டும் அரசனாக்கி, அவனுக்கு முடிசூட்டியவர் கோகுலரே.

**அ.பொ:** மா - யானை, உக்கிரசேனன் - கம்சனின் தந்தை. **(௪0)**

41. **கஞ்சனைப் பெற்ற வுக்கிர சேனனைக் காசினியின்**
**மிஞ்சிய நீதி செலுத்தர சாக்கிப்பொன் வீதிவலம்**
**நெஞ்சில் உவந்திவ ரைப்பதி னாயிரநீள்பெரியோர்**
**குஞ்சர மேற்ற வருவோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** கம்சனைப் பெற்ற உக்கிரசேனனை அரசனாக்கிப் பதினாயிரம் சான்றோர்கள் அவனை யானை மீதேற்றி வீதிவலம் செய்துவர உதவியவர் கோகுலரே.

**அ.பொ:** குஞ்சரம் - யானை. **(௪௧)**

42. **ஞானக மாயக் குரூர ரழைக்கநன் மாமதுரைத்**
**தானநல் வீதியிற் கஞ்சனற் றூசுகள் தந்தியின்மேல்**
**ஆன பொதியைப் பறித்துப்பீ தாம்பர மானவெல்லாம்**
**கோனகர் பார்க்கப் புனைந்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** அக்ரூரன் என்ற ஞானி அழைக்க அவனோடு ஆயர்பாடியிலிருந்து மதுரைக்கு வந்த கண்ணன், அவர்கள் தன்னைச் சூழ்ந்துவர, மதுரைப் பெருவீதியில் கம்சனுக்காக யானை மீது வந்த ஆடைகளைப் பறித்துப் பீதாம்பரங்களை ஆயர்களுக்கு வாரி வழங்க, மதுரை நகரார் பார்க்க அவற்றை உடுத்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** தந்தி - யானை, பீதாம்பரம் - மஞ்சள் நிற ஆடை. (சஉ)

43. **ஒலிபெறு மேகங்க ளேழையு மேவ வுவரியெல்லா**
**மலிவுடன் மாந்திப் பொழிந்து வருந்தி மகபதிபான்**
**மெலிவினைக் கூறிட மேதினிக் கோவலர் மெய்ப்புகழைக்**
**குலிசனு மேத்தப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** ஏழு மேகங்களையும் இந்திரன் ஏவ, அவை கடல்நீர் முழுவதையும் மொண்டு மழை பொழிந்து வருந்தி இந்திரனிடம் தாம் திருவாய்ப் பாடியைத் துன்புறுத்த முடியாத மெலிவினைக் கூற, கோவலர்களின் மெய்ப்புகழை இந்திரனும் புகழுமாறு வாய்ப்பினைப் பெற்றவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மாந்தி - வயிறு ஆர உண்டு, மகபதி - இந்திரன், குலிசன் - வச்சிராயுதம் உடைய இந்திரன். (சங)

44. **நடையாய் மகரத்திற் செய்கின்ற பொங்கலை நாரணன்றான்**
**தடையாக வுட்கொண்ட தென்றறி யாமற் சதமகத்தான்**
**படையாக மேகங்க ளேழையு மேவப் பரனெடுத்த**
**குடையான கோவர்த் தனநீழ னின்றவர் கோகுலரே.**

**பொழிப்:** பொங்கல் திருநாளன்று படைக்கப்பட்ட பொங்கலைத் திருமாலே உண்டான் என்பதனை அறியாமல் இந்திரன் மேகங்களைப் படையாகக் கொண்டு மழை பொழியச் செய்யக் கண்ணன் உயர்த்திய கோவர்த்தனமலையாகிய குடையின் நிழலில் நின்றவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மகரம் - பொங்கல் நாள், சதமகத்தான் - இந்திரன். (சச)

45. **மணமுற்ற முல்லை புனைவீர கோதனன் மாயவனைப்**
**பணமுற்ற சேடனு மேத்த நினைந்து பலவிதத்தால்**
**உணர்வுற்று நாணப் பதினா யிரம்விப்ர ருண்ணவன்னங்**
**குணமுற்று மாய்த்தர லாற்றிரு வீன்றவர் கோகுலரே.**

**பொழிப்:** முல்லைமாலை சூடிய வீரகோதனன் திருமாலை வழிபட நினைத்து, ஆதிசேடனும் வெட்குமாறு பதினாயிரம் அந்தணர்களுக்கு அன்னம் அளித்த செல்வத்தை வழங்கியவர்கள் கோகுலரே.

**அ.பொ:** வீரகோதனன் - கண்ணனுக்குத் தன் மகள் நப்பின்னையை மணம் செய்வித்த ஆயர் தலைவன், விப்ரார் - அந்தணர். **(சரு)**

46. **மாதனங் கோடி மணிப்பணிப் பேழை மலர்மங்கைநேர்
சாதனச் சேடியர் நூற்றெண்மர் பெண்ணினிற் சார்சிவிகை
சீதனத் தேனு பதினாயி ரம்பல சீர்சிறக்கக்
கோதனன் பெண்ணைக் கண்ணனுக் கீந்தவர் கோகுலரே.**

**பொழிப்:** அவன் சீதனமாகக் கோடி மணிகள் இழைத்த பொற்பெட்டி, திருமகளை ஒத்த பணிப்பெண்கள் *108* பேர், சிவிகை பல, பசுக்கள் பதினாயிரம் இவற்றை வழங்க, அவன் பெண்ணைக் கண்ணனுக்கு மணம் முடித்து வைத்தவர் கோகுலரே.

**அ.பொ:** பேழை - பெட்டி, சிவிகை - பல்லக்கு. **(சசா)**

47. **தளவமொப் பாமெனக் கட்டமிர் தாயர் தனையருடன்
உளமகிழ் மாயனுங் கொண்டே யமுனையி லுண்ணவக்கால்
வளமுடன் றங்க ளனமீந்து மாலுக் கவரமிர்தங்
கொளவுங் கொடுத்துண் டகமகிழ் வோரவர் கோகுலரே.**

**பொழிப்:** முல்லை மொட்டுப் போன்ற சோற்று மூட்டையை ஆயர் சிறுவருடன் கண்ணன் கொண்டு வந்து யமுனைக்கரையில் உண்ண, அப்பொழுது கண்ணனுக்குத் தாம் கொணர்ந்த உணவு, ஏனைய பொருள்கள் இவற்றைக் கொடுத்து அகம் மகிழ்ந்தவர் கோகுலரே.

**அ.பொ:** தளவம் - முல்லை, கட்டமிர்து - சோற்றுமூட்டை. **(சஎ)**

48. **துடிகோத் திரமெனச் சொல்வார்க ளொன்றைச் சுதரிசனன்
அடிகோத் திரமிணை யாகும தோவன்று நாரதனும்
படிகோத் திரமனை யைந்து நிலத்தினும் பார்த்துவந்த
குடிகோத் திரமுடன் வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** படைக்கலன்களுள் வச்சிராயுதம் வலிமையில் மேம்பட்டது என்று சொல்வார்கள். அது சுதர்சனசக்கரத்தின் கால்சுவட்டுக்கு ஒப்பாகுமோ? அன்று நாரதனும், இவ்வுலகில் மேம்பட்ட இல்லங்களை ஐந்து நிலங்களிலும் பார்த்து வந்து குடி, கோத்திரம் இவற்றின் பெருமையோடு வாழ்ந்து வருபவர் கோகுலரே என்று முடிவு செய்தான். அத்தகைய சிறப்பைப் பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** துடி - வலிமை, கோ - வச்சிராயுதம், திரம் - மேன்மை, சுதர்சனம் - திருமால் சக்கரம், படி கோத்திரம் - உலகிலுள்ள மக்கள் மரபு. **(சஅ)**

49. **அன்றுமை யூர்திரு வேங்கடன் சந்ததி யாரொருவர்**
**கன்றொடு காலியை முல்லையிற் காக்கும் கடும்பகலிற்**
**தின்றிட வந்திடுந் தேவா வமிர்தத்தைத் தினேதினமுங்**
**குன்றெடுத் தாருடன் கூடியுண் டாரவர் கோகுலரே.**

**பொழிப்:** முன் ஒருகால் மையூரைச் சார்ந்த திருவேங்கடன் என்பவன் வழித்தோன்றல் ஒருவர் பசுக்களையும் கன்றுகளையும் முல்லைநிலத்தில் மேய்த்துப் பாதுகாத்த நடுப்பகலில் நாடோறும் அவன் உண்ணுமாறு வந்த தேவாமிர்தத்தைக் கண்ணனோடு கூடி உண்டவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மை - மேகம், காலி - மாடுகள். **(சகூ)**

50. **நன்றா கவதென்ற கோடான கோடிக ணல்லமிர்தந்**
**தின்றா ரதிற்பலங் கண்டதொன் றில்லைச்சிற் றாயர்க்கன்பின்**
**ஒன்றாய்க் கவளங் கொடுத்தத னாலுட லோடவற்குக்**
**குன்றாப் பதவி கொடுக்கப்பெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** தேவர்கள் நலமுறுமாறு அமுதத்தைப் பலராக உண்டும் பயனில்லை. ஆயர்களுக்கு அன்போடு ஒரு கவளம் உணவு கொடுத்ததனால் அடியவன் ஒருவனுக்கு உடலோடு வீடுபேறு வழங்கப்பட்ட சிறப்பினை உடையவர் கோகுலரே.

**அ.பொ:** கவளம் - உணவு, குன்றாப் பதவி - மோட்சம். **(ரு0)**

51. **மாகன கந்துரு வீன்றன காளிங்கன் வாழ்தடத்தி**
**னாகன சிற்றுரு வாகிய வாயர் நலம்பருகித்**
**தாக மகற்ற மயக்கிய வல்விடந் தான்முறியக்**
**கோகன கைக்கட் கருணைபெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** கந்துருவின் மகன் காளிங்கன் என்ற பாம்பு வாழ்ந்த நீர்நிலையில் ஆயர் சிறுவர் நீர் பருகி மயக்கமுற அவ்விடம் முறியுமாறு கண்ணனுடைய தாமரைக் கைகளால் கருணை செய்யப்பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** மாகனகந்துஉம் - சிறந்த பொன்நிறம், ஈன்றன - பெறப்பட்ட மக்களோடு, விடம் முறிய - நஞ்சின் ஆற்றல் நீங்க, கோகனகம் - தாமரை. **(ருக)**

52. **பூபால னஞ்செய்வ ராகுதிப் பாலனம் போந்துசெய்வர்**
**நாபால னஞ்செய்வர் நல்லமிர் தீந்து நளினமலர்**
**மாபால னஞ்செய்யு மார்பனு மிச்சிக்க வாழ்வுதருங்**
**கோபால னஞ்செய்வர் கோபாலர் கோவலர் கோகுலரே.**

**பொழிப்:** நாடாளும் மன்னர், ஆகுதி அளித்து அக்கினியைப் பாதுகாக்கும் அந்தணர், நாவினைப் பாதுகாத்து நல்ல கவிகளைப் பொழியும் கவிஞர், நல்ல தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள், தேவருக்கு அமுதம் அளித்துத் திருமகளை மணந்து வாழும் திருமால் யாவரும் விரும்பும்படி உலகவர் எல்லோருக்கும் நல்வாழ்வு அளிக்கும் பசுக்களைப் பாதுகாப்பவர் 'கோபாலர்' என்று போற்றப்படும் கோகுலரே.

**அ.பொ:** பாலனம் - பாதுகாத்தல், ஆகுதிப் பாலனம் - வேள்வி காத்தல், நாபாலனம் - வேதம் ஓதுதல், கோபாலனம் - பசுக்களைப் பாதுகாத்தல். **(ருஉ)**

53. **துவமுள விண்டலத் துண்டான வண்டர்க்குத் தானமிர்தம்**
**உவகைய தாகவு முண்டிட வன்பி லுதவிசெய்தோர்**
**புவனமெ லாமிவர் புண்ணிய மேநலம்பொங்குதலாற்**
**குவலயத் தண்ட ரெனநிகண் டோதிய கோகுலரே.**

**பொழிப்:** தேவர்களுக்கும் மகிழ்வோடு உண்ணுமாறு அமுதத்தை வழங்கி உதவி செய்த இவர்களுடைய நல்வினையே உலகம் முழுதும் நலம் பெருக உதவுவதால் நிலவுலகத்தின் ஆயர்களே அண்டர்கள் என்று நிகண்டு ஓதும் சிறப்புற்றவர் கோகுலரே.

**அ.பொ:** அண்டர் - தேவர், இடையர்; நிகண்டு - அகராதி போல்வது. **(ருங)**

54. **உணத்தான் பிறந்த வுயிர்களுக் காரமிர் துதவிபுகழ்**
**மணத்தா லவர்க்கு வழுவாமை யாலும் வழங்குநெறிக்**
**கணத்தாலு முன்மநு வேந்த னறிந்து கனந்தந்திடுங்**
**குணத்தாற் பொதுவரென் றோதப்பெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** பிற உயிர்களுக்கு அமுதம் வழங்கிய புகழின் மணத்தாலும், தம் கடமைகளைத் தவறாமையாலும், அவர்கள் செல்லும் நெறிகளின் தொகுதியாலும் மனுவேந்தன் அறிந்து அவன் எழுதிய தரும சாத்திரத்தில் மேம்பட்ட குணத்தால் எல்லோருக்கும் பொதுவர் என்று கூறப்பட்டவர் கோகுலரே.

**அ.பொ:** உண - உண்ணுமாறு, கனம் - பெருமை. **(ருச)**

55. **பூபாரந் தீரவுந் தன்கைக் கபாலம் புனனிறைய**
**மாபா ரதமுடித் தானென்றும் வெள்ளி மலைக்கடவுள்**
**நாபாடல் செய்தது நான்முகன் றானு நலமுணர்ந்து**
**கோபல னென்று வணங்குமப் பேர்கொண்ட கோகுலரே.**

**பொழிப்:** சிவபெருமான் கையிலிருந்த மண்டை ஓட்டை நிரம்பச் செய்து பூபாரம் தீர்த்து மகாபாரதப் போரை முடித்து வைத்த பெருமானைச் சிவபெருமானும் பிரமனும் கோபாலன் என்று வணங்கும் பெருமை கொண்டவர் கோகுலரே.

**அ.பொ:** கபாலம் - மண்டை ஓடு, வெள்ளிமலைக்கடவுள் - சிவபெருமான்.
**(ருரு)**

56. தருமன் முதலியோர் தாங்கிய வேடந் தகுதியென்றே
பெருமைய தாக வறிந்தமெஞ் ஞானம் பெரிதுடையார்
இருமையுங் கண்ட சகாதேவ ராய னின்னுருவே
குருகுலங் காக்குமென் றேற்றத னாற்சேட்டங் கோகுலரே.

**பொழிப்:** தருமர் முதலோர் மேற்கொண்ட வேடம் தக்கதே என்று அறிந்த மெய்ஞ்ஞானம் உடைய சகாதேவன், 'கண்ணனே! நின் வடிவமே குருகுலத்தைப் பாதுகாக்கும்', என்று முடிவு செய்ததனால் மேன்மையுற்றவர் கோகுலரே.

**அ.பொ:** ஆயன் இன் உரு - கண்ணன்; சேட்டம் - சிரேட்டம், மேம்பாடு.
(ருசா)

57. பாடற் குருகிமுன் னாடிருப் பாற்கடற் பள்ளிகொள்ளும்
தேடற் கரிய பொருளான நாரணன் றேவரைநீர்
நாடற் குரிய நரராக முல்லையி னாரணனாய்க்
கூடப் பிறக்க விளையாடல் பெற்றவர் கோகுலரே.

**பொழிப்:** பாடலுக்கு உருகித் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் தேவர்களை நோக்கி, 'நீங்கள் பூமியில் நரராக அவதரித்திடுக நான் நாராயணனாய் உங்களுடன் பிறக்கிறேன்' என்று பிறந்து விளையாடப் பெற்ற பேறுடையவர் கோகுலரே.

**அ.பொ:** நாடற்கு உரிய - ஆராய்தலுக்கு உரிய, நரராக - மக்கள் இனத்தவராக.
(ருஎ)

58. ஆடவந் தோடுயிர் மாய்ந்திடு மூலன்ற னங்கத்திலே
நாட வுயிர்புகுந் தேயவன் செய்து நயந்தபின்பு
தேடரி தானதன் னுடலிற் புகுந்திடுஞ் சித்திகற்றுக்
கூடுவிட் டேவசி சித்தன் மரபினர் கோகுலரே.

**பொழிப்:** உயிர் மாய்ந்த மூலன் உடம்பில் உயிர் புகுந்து அன்று அவன் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தபின் மீண்டும் தன் உடம்பில் உயிர் புகுமாறு சித்தி கற்றுக் கூடு விட்டுக் கூடு பாய்ந்த சித்தனுடைய மரபினர் கோகுலரே.

**அ.பொ:** மூலன் - மூலன் என்ற ஆயன்; அங்கம் - உடல்; வசி - வசித்த, வாழ்ந்த.
(ருஅ)

59. ஆயிர நாமத் தவற்குச்செய் பூசனை யானவெல்லாம்
நேய மிவர்கடம் பேரரு ளானிறை வேற்றலல்லாற்
றாயினு நல்ல சிதம்பரந் தன்னிற் றமனியப்பொற்
கோயி லமைத்துப சாரஞ்செய் தாரவர் கோகுலரே.

**பொழிப்:** ஆயிரம் திரு நாமங்களை உடைய திருமாலுக்குச் செய்ய வேண்டிய பூசனைகளை நிறைவேற்றியதோடு சிதம்பரத்தில் சிவபெருமானுக்குப் பொற்சபை அமைத்து உபசாரம் செய்தவர் கோகுலரே.

**அ.பொ:** ஆயிரம் நாமத்தவன் - திருமால், தமனியப் பொற்கோயில் - கனகசபை.

**(ருகூ)**

60. ***நிலவிய வெள்ளிக் கிரியான கத்தி னினைந்துநிதம்***
***நலமுள வேணுவிற் கானங்கள் பாடி நயந்துருகி***
***அலமர னீங்கிய வானாயர் தோன்று மருளுருவாங்***
***குலமெனும் பேறதைப் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே.***

**பொழிப்:** கயிலை மலையானை மனத்தில் நினைந்து புல்லாங் குழலில் கானம் பாடி விரும்பி மனம் உருகி மனச்சுழற்சி நீங்கப் பெற்ற ஆனாயநாயனார் பிறந்த குலத்தவர் என்ற பேறுபெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** வெள்ளிக்கிரியான் - சிவபெருமான், வேணு - மூங்கில், கானங்கள்- பாடல்கள், அலமரல் - பிறவியில் சுழலுதல், ஆனாயர் - ஆனாயநாயனார்.

**(சுO)**

61. ***பிரதோடஞ் சேவிக்கும் பெண்மக வேந்தும் பெருமைகண்டு***
***திரமா மனையிற்சென் றேசமைத் தாளச் சிறுவனப்போ***
***மறவாமற் பூசனை மண்வீட்டிற் கோலிட மாதுமதைக்***
***குறையாற் றுடைக்க வதுலிங்க மாக்கிய கோகுலரே.***

**பொழிப்:** பிரதோஷ நேரத்தில் தன் கைக்குழந்தையோடு சிவபெருமானைச் சேவித்த பெண் வீட்டிற்கு வந்து சமையல் செய்ய முற்பட, அப்பொழுது அவள் மகன் மண்ணால் கோயில் அமைத்துச் சிவனைப் பூசித்திடக் கண்டு அம்மண் வீட்டை அழிக்க, அம்மண்ணினை இலிங்கமாகச் செய்வித்த வரும் கோகுலரே.

**அ.பொ:** பிரதோஷம் - பிரதோட நேர ஆராதனை; திரம் - ஸ்திரம், உறுதி.

**(சுக)**

62. ***முழுத்தவர் போற்று மரன்செய்த முப்புர வெஞ்சமரில்***
***வழுத்துநற் றேரொன்று வானோ ரமைக்க வதிலிருந்து***
***மழுக்கரன் வெற்றி பெறவே மகிழ்வுடன் வானந்தொடர்***
***கொழுத்தநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே.***

**பொழிப்:** சிவபெருமான் திரிபுரங்களை அழிக்கத் தேவர்கள் தேர் ஒன்றினை அமைத்துத் தர, அத்தேரில் பூட்டுதற்குக் காளையை வழங்கியவர் கோகுலரே.

**அ.பொ:** முழுத்தவர் - சிறந்த தவசிகள், மழுக்கரன் - சிவபெருமான், ஏறு - காளை. **(சாஉ)**

63. **கவலையில் லாமற் சகத்துயிர் வாழக் கடவுளருந்**
**தவறிலை யாகத் தருமங்க ளோங்கவுந் தானறிந்தே**
**உவகைய தாகவு மெங்கு நிறைந்தவ னொண்டொடியைக்**
**குவலய மாவென வாண்டோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** உலகத்து உயிர்கள் கவலையின்றி வாழ, கடவுளர்கள் ஓங்கத் திருமால் நிலமகளாகிய மாதினை மணக்க உதவியவர்கள் கோகுலரே.

**அ.பொ:** குவலய மா - பூதேவி. **(சாங)**

64. **மீறிய ஞானச் சுடர்விளக் கேற்றிய மெய்யுணர்விற்**
**றேறிய மாதர் சுவையாற் சுகித்துச் செயல்பெறவே**
**ஏறிய கோடி யுகம்போய்த் திரித யுகமதனில்**
**கூறிய மூல ரவதரித் தோங்கிய கோகுலரே.**

**பொழிப்:** மேம்பட்ட ஞானச்சுடர் விளக்கினை ஏற்றி மெய் உணர்வால் இனிய சுவையை நுகர்ந்து பல யுகங்களைக் கடந்து திரேதாயுகத்தில் மூலன் அவதரித்த மேம்பட்ட குலத்தவர் கோகுலரே.

**அ.பொ:** தேறிய மாதர் சுவை - தெளிந்த இனிய சுவை, மூலர் - திருமூல நாயனார். **(சாச)**

65. **நலமான பூசையிற் சிற்றாயர் கேட்டிட நல்லமிர்தம்**
**இலதேகென் றந்தணர் சீறிய போதவர்க் கீவதுவே**
**பலனாகும் வேள்வியி லென்னாகு மென்றிவர் பண்பையெல்லாங்**
**குலமாதர் கூறி வணங்கிய பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** அந்தணர் வேள்வி நிகழ்த்தியபோது ஆயர் உணவு கேட்க, அவர்கள் ஆயர்களை வெகுண்டு விரட்ட, ஆயர்களுக்கு ஈவதுவே வேள்விப் பயனாகும் என்று அந்தணர் குலமாதர் உணவளித்து வணங்கிய சிறப்புற்றவர் கோகுலரே.

**அ.பொ:** பூசை - வேள்வி, அமிர்தம் - உணவு. **(சாரு)**

66. **உரைகட வாதவ ரன்பாளர் மாதவ னோரிரண்டு**
**மரைமலர்ப் பாத மறவாத சிந்தையர் மாயவற்குத்**

திரையுறு பாற்கட லிந்து தயிர்நெய் செறியவென்றுங்
குறைகடன் மூன்று மமைத்தோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** சொன்ன சொல் தவறாதவராய்த் திருமகள் கேள்வனின் இரு திருவடிகளையும் மறவாதவர்களாய் அப்பெருமானுக்குப் பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல் என்று மூன்று கடல்களையும் அமைத்தவர் கோகுலரே.

**அ.பொ:** கடல் மூன்று - நெய், பால், தயிர்க்கடல். **(சுசு)**

67. ஆடலுண் டாகு மயிலு மரவமு மன்பிலொன்றி
நாடநின் றேயுற வாடவுங் கேட்டிடு நான்மறையின்
பாடலென் றேவிண் ணவருட் களிக்கப் பசுப்புலியும்
கூடநின் றேற்கவும் வேணிசை கூறுவர் கோகுலரே.

**பொழிப்:** மயிலும் பாம்பும் பகை மறந்து உறவோடு வேத ஒலியைக் கேட்டிடும் என்று கூறும் தேவர்களும் கண்டு களிக்கும்படி பசுவும் புலியும் கூட இருந்து இசை கேட்கப் புல்லாங்குழல் இசை பாடியவர்கள் கோகுலரே.

**அ.பொ:** வேணிசை - வேணு இசை, புல்லாங்குழல் இசை. **(சுஎ)**

68. வளந்தையி லேபிறை போலே தருமம் வளர்ப்பவர்கள்
தளர்ந்தவர்க் கேநடுக் காட்டினிற் பாலனந் தான்கொடுக்க
உளந்தய வானவ ரியாவரு முண்ணு முயர்குலத்தோர்
குளந்தையில் வந்தவர்க் கேவிருந் தேசெய்வர் கோகுலரே.

**பொழிப்:** பிறை வளர்வதுபோலத் தருமம் வளரச் செய்பவர்களாய், பசியால் வாடியவர்களுக்கு நடுக்காட்டிலே பால் அன்னம் வழங்கியவரும் குளந்தைத் திருப்பதியில் அந்தணர்களுக்கு விருந்துணவு அளிப்பவரும் கோகுலரே.

**அ.பொ:** வளந்தை - வளர்ச்சி, குளந்தை - பெருங்குளம் என்னும் திருப்பதி.
**(சுஅ)**

69. அடுத்தோர் பசுவினுக் கோர்பிடி புல்லை யளித்தவர்கள்
நடுத்தா ரணியினற் பாக்கியம் பெற்றுநற் சேய்கள்பெற்று
எடுத்தோங்கு சொர்க்கம் பெறுவா ரிவரெத் தனைபிடிபுல்
கொடுத்தா ரிவர்பல னளவிற் குறைவிலர் கோகுலரே.

**பொழிப்:** ஒரு பசுவுக்கு ஒரு பிடி புல்லை அளிப்பவர்கள் இவ்வுலகில் நற்பேறு பெற்று நல்ல பிள்ளைகளைப் பெற்று மறுமையில் சுவர்க்கம் பெறுவர். பல பசுக்களுக்குப் பல பிடி புல்லை வழங்கிப் பெரும் பயன் பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** நடுத்தாரணி - பதினான்கு உலகில் நடுவிலுள்ள நில உலகு, சேய் - மக்கள். **(சாகூ)**

70. **நறுந்திரை வீசிய மூன்றரைக் கோடி நதிப்பலனும்**
**அறிந்தன வேதத்தி னங்க முரைத்த ததிசயமாய்ச்**
**செறிந்திவர் தேனுவும் நீருண்டு வால்சுற்றச் சிந்துபுனற்**
**குறுந்துளிக் கொப்பில்லை யென்றும் புனிதர்கள் கோகுலரே.**

**பொழிப்:** மூன்றரைக்கோடி நதிகளில் நீராடிய பயனும் பசுக்கள் வயிறார உண்டு நீரைப் பருகிப் பின் தன் வாலில் தோய்ந்த தண்ணீரை உதற, அந்நீர்த் துளிக்கு ஒப்பில்லை என்னும் படி பசு வால் நீரினால் புனிதமடைபவர் கோகுலரே.

**அ.பொ:** வால் சுற்ற - வாலைச் சுழற்ற **(எO)**

71. **மீறத் தவத்தருந் தேவரு நல்வரம் வேண்டத்தரும்**
**பேறெப் புவிதனி லுண்டென்ப ரானிப் புனிதர்க்கிதந்**
**தேறப் பலருந் தெளிந்தன்பு கூர்ந்துசெய் தாலுடனே**
**கூறப் பலிக்குநல் வாக்குள்ள பேறவர் கோகுலரே.**

**பொழிப்:** தேவரும் நல்ல வரம் வேண்டத் தரும் சிறப்பு இப்பூமிக்கு உண்டு. இந்த ஆயராம் புனிதருக்கு ஒரு நன்மையை அன்போடு செய்தால் தமக்கு உதவி செய்தவருக்கு அவர் கூறும் நல்வாக்குப் பலிக்கும் என்ற பேறு உடையவர்கள் கோகுலரே.

**அ.பொ:** முந்நூல் - பூணு நூல். **(எக)**

72. **வடிவி லுதித்த பிராமண ராதி வருணங்களும்**
**படியி லுதித்தபின் நூல்பூண் டிருபிறப் பாளரென்பார்**
**நெடியவன் றன்னுருப் போலே யகத்தி னினைக்கவன்று**
**குடிமுந் நூலுடன் றான்பிறந் தாரவர் கோகுலரே.**

**பொழிப்:** அந்தணர் முதலிய மூவருணத்தினரும் உரிய வயது அடைந்த பின் பூணூல் பூண்டு இரு பிறப்பாளர் எனப்படுவர், (பூணூல் போடுவதற்கு முன் ஒரு பிறப்பு, பூணூல் போட்ட பிறகு இன்னொரு பிறப்பு) திருமால் தன் உருப்போல இவர்களும் பிறக்க வேண்டும் என்று நினைக்க அன்று முந்நூலோடு பிறந்தவர் கோகுலரே. **(எஉ)**

73. **சம்புவி னற்கனி சிற்றாயர் கண்ணனுந் தான்பருக**
**அம்பொ னிறைந்தன கூடை யெடுத்தவ ளாயர்முன்பாய்த்**
**தங்குஇவ ரால்வந்த தென்றன னீகொண்டு தான்செல்கெனக்**
**கும்பிட்ட வள்செல வாசையில் லாதவர் கோகுலரே.**

**பொழிப்:** கூடையில் ஒருத்தி பழம் கொண்டு வரக் கண்ணனும் ஆயர் சிறுவரும் அக்கூடையிலிருந்த பழங்களை வாங்கி உண்டனர். அவள் கூடை பொன்னால் நிரம்ப, அவள் அதனை எடுத்துச் சென்று இப்பொன் சிறுவர்கள் அளவு அறியாமல் வழங்கியது என்று காட்ட, இதனை நீயே எடுத்துச் செல் என்று கூறிப் பொன்னாசை இலராய் வாழ்ந்தவர் கோகுலரே. **(எங)**

74. **தலமெத் தனையுண் டதற்கேற்ற பூசனை தானதர்மம்**
**பலனைத் தருங்கோடி கன்னிகா தானங்கள் பண்ணிக்கற்பின்**
**நலனுற்ற கோசலை போலு மசோதை நகர்க்கழகாங்**
**குலத்தனி மாதருட் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** எத்தனையோ பூசனைகள் தானதருமங்கள் செய்து பல கன்னிகாதானங்கள் செய்த கற்பின் மேம்பட்ட கோசலை போன்று அசோதை வாழும் ஊரில் அநேக பத்தினி மாதர்களைப் பெற்றவர் கோகுலரே. **(எச)**

75. **மரகத மேனிநம் மாயனும் பால்வண்ண மாதவனுங்**
**கரசல மாகிய வாயருங் கந்துகங் கண்டடிக்க**
**உரமுடை வெற்றி கவரு மிருவரு முவந்துவந்து**
**குரகத மேறி விளையாடல் செய்தவர் கோகுலரே.**

**பொழிப்:** வெண்ணிறப் பலராமனும், கருநிறக் கண்ணனும் பந்து விளையாடியும் குதிரை மீது ஏறி விளையாடியும் பொழுதுபோக்க வழி வகுத்தவர் கோகுலரே.

**அ.பொ:** கந்துகம் - பந்து, குரகதம் - குதிரை. **(எரு)**

76. **மண்டலத் தெங்கு முளதாம் பலநகர் வாழ்வதிலே**
**திண்டிறற் கஞ்சன் வராததொன் றில்லைசொற் சேர்நகரில்**
**அண்டப் படாத வரம்பெற்று நாளு மணங்கினருட்**
**கொண்டுற்ற நற்றிரு வாய்பாடி வாழ்பவர் கோகுலரே.**

**பொழிப்:** உலகில் உள்ள பல நகரங்களிலே கம்சன் நுழையாத நகரமே இல்லை. கம்சன் தம் ஊரினுள்ளே நுழைய முடியாதபடி வரம் பெற்றுத் துர்க்கையின் அருள் கொண்டு திருவாய்ப்பாடியில் வாழ்பவர் கோகுலரே.

**அ.பொ:** அண்டப்படுதல் - நெருங்கி வருதல். **(எசா)**

77. **கவலை விடமுனம் மாயோன்வின் ணோர்க்குக் கடைந்தமிர்தம்**
**உவகைய தாக வொருபாற் கடலி லுதவிசெய்தான்**
**தவளித பாற்கடத் தேதினந் தோன்றுந் தனியமிர்தாற்**
**குவலயந் தன்னிற் கவலைக ளீர்ந்தனர் கோகுலரே.**

**பொழிப்:** தேவர்கள் கவலை நீங்கப் பாற்கடலைக் கடைந்து திருமால் தேவர்களுக்கு அமுதத்தை உதவினான். பாற்குடத்திலே கறந்த வெண்ணிற அமுதத்தால் உலகிலுள்ளார் கவலைகளைத் தீர்த்தவர் கோகுலரே.

**அ.பொ:** தவளித - வெள்ளிய, கடம் - குடம். **(எஎ)**

78. **மேவிய தேவ ரனைவரும் ரோமங்கள் வீசியவால்**
**தேவியு மாயன் மடிநான் முகன்முலை சேர்சுருதி**
**ஆவியு மீச னடித்தலந் தீர்த்த மதின்மயமாங்**
**கோவினப் பாலனஞ் செய்வோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** தேவர் அனைவரும் உடலில் உள்ள உரோமங்கள், திருமகள் வால், திருமால் மடி, பிரமன் முலை, வேதமே மூச்சுக் காற்று, அடிகள் வைக்கும் பள்ளத்தில் தங்கும் நீரே தீர்த்தமாம் என்று போற்றப்படும் சகல தேவதா சொரூபமான (தெய்வங்களின் சொரூபமான) பசுக்கூட்டங்களைப் பாதுகாப்பவர்கள் கோகுலரே. **(எஅ)**

79. **மாறாப் பரிவுட னாயருங் கண்ணனு மாசுணவர்**
**ஆறா மெனச்செல வப்புறம் போக்கில்லை யாகநின்று**
**பேறாய்ப் பசுத்தங்கள் பால்பாதி யீயப்பெற் றேயிரண்டு**
**கூறாய்க் கிழிக்க மகிழ்வோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** ஆயரும் கண்ணனும் மலைப்பாம்பின் வாயினைத் தாம் செல்லும் வழி என்று உள்ளே நுழைந்து சென்று வெளியேறும் வழியின்றி நிற்க, அவர்கள் நுகரத் தங்கள் பாலை வழங்கிப் பாம்பினைப் பசுக்கள் இரண்டு கூறாய்க் கிழித்து அவர்களை வெளிப்படுத்தக் கண்டு மகிழ்ந்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** மாசுணம் - பெரிய மலைப்பாம்பு. **(எகூ)**

80. **அடக்க முடையா ரரிய தரும மறிந்து செய்வார்**
**நடக்கு மநுநெறி தான்கட வாதவர் நாரணர்க்குத்**
**தொடுக்கும் விழாவினி லாயிரந் தீவர்த்தி தோன்றநெய்யே**
**கொடுக்க வரங்கர் கருணைபெற் றாரவர் கோகுலரே.**

**பொழிப்:** அடக்கம் உடையவர்கள் அரிய தருமங்களை அறிந்து செய்வர். நெறிமுறை தவறாமல் திருமாலுடைய திருவிழாவில் ஆயிரம் தீவர்த்தி பிடிப்பதற்குப் போதிய நெய்யைக் கொடுத்துத் திருவரங்கப் பெருமானின் கருணையைப் பெற்றவர் கோகுலரே. **(அ0)**

81. சேவிந்து பூணு மரனயன் றானுஞ் சிறந்தொன்றதாய்ப்
பூவிந்த மாக வளர்ந்தோன் றிருப்பெயர் போற்றுதற்கு
நாவிந்த மாக வனந்த மறைகள் நவில்வனபோற்
கோவிந்த பட்டந் தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** இடபக்கொடியை உயர்த்திச் சந்திரனைத் தரித்த சிவபெருமானும், பிரமனும் இவ்வுலகில் வியப்பாக வளர்ந்த கண்ணனுடைய திருப்பெயரைப் போற்றுவதற்கு வேதங்கள் ஒலிப்பன போலத் தாமும் போற்றக் 'கோவிந்தன்' என்ற பட்டத்தினைத் தரித்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** சேவிந்து - சிவந்த பிறைச் சந்திரன்; விந்தம் - விந்தை, வியப்பு.

**(அக)**

82. தொட்டீர டிக்கொண்டு மண்டலம் விண்டலஞ் சூழ்ந்தளந்த
நெட்டிநற் பாதம் பலதரம் வைக்க நெடுமனையோர்
பட்டி சுரர்க்கபி டேக முலைகுடப் பால்சொரியக்
கொட்டிலில் வாழ்பசு வீந்தவர் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** பாதங்களால் மண்ணையும் விண்ணையும் அளந்த திருமால் கண்ணனாய்த் தன் பாதங்களைப் பலமுறை வைக்கும் பேறு பெற்ற வீடுகளை உடையவர்களாய்த் தேவர்களுக்குக் குடம் குடமாகப் பால் அபிடேகம் செய்யப் பசுக்களை வழங்கியவர் கோகுலரே. **(அஉ)**

83. நூற்றெண் டிருப்பதிக் காலையிற் பூங்குட னூற்றுப்பத்தோ
டேற்றநற் பாற்பசுப் பூசனைக் கேற்றன வெப்பொருளும்
நேர்த்தி பெறவைத்து மார்க்கங்கள் தோறு நிறைந்தசத்ரங்
கோத்திரம் வாழவைத் தார்நந்த கோன்குலங் கோகுலரே.

**பொழிப்:** நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் பாற்பசுக்களை இனிய குடங்களோடு பூசனைக்கு ஏற்ப அமைத்து, அத்திருப்பதிகளுக்கு வரும் வழிகள் தோறும் நிறைந்த சத்திரங்களை அமைத்தவர்கள் கோகுலரே.

**அ.பொ:** சத்திரம் - அறக்கூழ்ச் சாலை. **(அ௩)**

84. சாத்திரக் கங்கைப் புனல்படி வோர்கட்குச் சார்யமுனை
மாத்திர மப்பல மாடா விடிற்குறை வந்ததுண்டோ
*வேத்தி யமுனையுங் காளிந்தி கோதா விரிநினைக்கக்
கோத்திர மோங்கிக் குருவாழ வாழ்கின்ற கோகுலரே.

* ஊகித்து இட்டது.

**பொழிப்:** கங்கையில் நீராடுவோர்களுக்கு யமுனையில் நீராடாவிட்டால் குறைவில்லை. யமுனை, காளிந்தி, கோதாவரிக் கரைகளில் சிறப்பாக வாழ்பவர் கோகுலரே.

**அ.பொ:** ஆடாவிடின் - முழுகாவிட்டால், காளிந்தி - யமுனையின் ஒரு கூறு.
**(அச)**

85. **வருதேச காலமி லுத்தரம் போய்வரு மாயவர்க்குத்**
**தருவாசி பால்சுடத் தன்கையில் வாங்கித் தயவதனால்**
**அருளேற வூக வனைத்தாய னாரென் றரங்கர்புகல்**
**குருதேசிகனைப் பணிவோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** பங்குனி உத்தர விழாவிற்குச் சென்று வரும் அரங்கநாதருக்கு வழங்கப்பட்ட பால் சுட, அதனை ஆற்றிப் பக்குவமாக வழங்கியதால் தாயை ஒத்தவர் என்று புகழப்பட்ட பெரியவரைப் பணிபவர்கள் கோகுலரே.

**அ.பொ:** உத்தரம் - பங்குனி உத்தரத் திருநாள். **(அரு)**

86. **நளிவா கனம்பெறக் கடல்கடந் தேயவர் நன்மைமனத்**
**தெளிவாகி யெங்கள் பங்கனைச் சேர்ந்தகஞ் சேருதற்கு**
**வளர்மா மலர்முல்லை யாயர்க் கியற்கைநல் வாசமுறுங்**
**குளிர்வாச சாந்தங் கொடுக்கப் புனைந்தவர் கோகுலரே.**

**பொழிப்:** முல்லைப்பூச் சூடும் ஆயருக்கு இயற்கை வாசமுறும் குளிர்ந்த சந்தனத்தைச் சிவபெருமான் வழங்க அதனைப் புனைந்தவர் கோகுலரே.

**அ.பொ:** நளி - பெருமை, சாந்தம் - சந்தனம். **(அசா)**

87 **நன்றாள் புவியி லிவர்தேனு நின்றது நரகத்தினும்**
**அன்றாள வந்த திவர்தேனு வேயகல் பூவுலகில்**
**என்றாலுழவ ரிவர்தேனு வாலுர மேத்திவைத்துக்**
**குன்றாத செல்வங் கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** தேவர் உலகினும், பூ உலகினும், நரகத்தினும் பசுக்களால் செழிப்பினை உண்டாக்கிச் செல்வம் கொடுத்தவர் கோகுலரே.

**அ.பொ:** தேனு - பசு, உரம் - ஆற்றல். **(அஎ)**

88. **பண்டாந் தவம்புரி யோர்விந்தி யாதரர் பற்பமின்னை**
**உண்டான சக்கரத் தேயமைச் தேயுயர் யோகமிகக்**

**கண்டான் விஜய னற்சேய் பிரவிடை காசினியிற்**
**கொண்டா னரபதி தங்கோத் திரமெனுங் கோகுலரே.**

**பொழிப்:** பண்டு தவம் புரிந்த ஒரு வித்தியாதரப் பெண்ணைத் தன் தேரிலே அழைத்து வந்து அவளால் யோகம் பெற்றான் அருச்சுனன் மகன். அம்மன்னனுடைய கோத்திரத்தவர் கோகுலரே.

**அ.பொ:** பற்பமின் - தாமரை மலரில் இருக்கும் திருமகள்; பிரவிடை - காமம் சான்ற கிளையோள், வய்து வந்த பெண். **(அஅ)**

89. **உள்ள புவியிற் பொருள்படைத் தென்ன வுதவுபுனற்**
**பள்ள நிறைந்த தடாகமுண் டாக்கிப் பரிந்துநிதி**
**அள்ளிக் கொடுத்து மிவர்தேனு வாய்வைத் தருந்துபுல்லைக்**
**கொள்ளெண் ணான்கு தருமம் புரிந்தவர் கோகுலரே.**

**பொழிப்:** பொருள் படைத்ததன் பயனாகப் பள்ளமுடைய குளங்களை உண்டாக்கிப் பொன்னை அள்ளிக் கொடுத்துப் பசுவுக்குப் புல்லிடல் முதலிய முப்பத்தியிரண்டு தருமங்களைச் செய்தவர் கோகுலரே. **(அகூ)**

90. **இடிக்கட்டி செய்துமின் னில்லாமன் மேகங்க ளெங்குமின்றிப்**
**படிக்கட்டி யாண்டு பனிரண்டு வாக்கியம் பண்ணுமன்னார்**
**படிக்கட்டி மேட மதினான்கு கோட்கண் மயங்கவென்று**
**கொடிக்கட்டிக் கொண்ட வீரர்கள் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** மழையில்லாமல் பன்னிரண்டு ஆண்டு பஞ்சம் ஏற்பட்டபோது, மேட ராசியில் நான்கு கிரகங்கள் ஒன்று சேருமாறு கொடிக்கட்டிக் கொண்டு செயற்பட்ட வீரர்கள் கோகுலரே.

**அ.பொ:** இடிக்கட்டிச் செய்து - இடி இடிக்காமல் அதனைச் சிறைப்படுத்தி, படி-நில உலகம்., பனிரண்டு வாக்கியம் - பன்னிரண்டு இராசி அமைப்பு. **(கூ0)**

91. **தலமேழில் மாயன் சமயம் வகுத்திடத் தான்குருவாய்**
**உலகூடு நான்கு வருணமு மோங்கி யொளிபெறவே**
**நலமாய் நடுவில் வைணவ நாரண நல்லுருவின்**
**குலமேவு வைணவ ராகவந் தாரவர் கோகுலரே.**

**பொழிப்:** ஏழுலகிலும் திருமால் சமயத்தை வகுத்திட அவனைக் குருவாய்க் கொண்டு நான்கு வருணமும் செழித்து விளங்க, நாரணன் கண்ணனாக விளங்கிய குலத்தில் வைணவராக வந்தவர்கள் கோகுலரே. **(கூக)**

92. நலத்தன யாகங்க ளுள்ளன செய்து நளிர்புனல்சூழ்
தலத்தைப் புரக்கின்ற கோனாதி நந்தன் சந்ததியாய்ச்
சொலப்புக ழோங்க மநுநெறி யோங்கிடச் சூழ்ந்தமதிக்
குலத்தினி லாதவர் தங்கோத் திரமெனுங் கோகுலரே.

**பொழிப்:** வேள்விகள் பல செய்து உலகைப் பாதுகாத்த நந்தனுடைய சந்ததியாய்ப் புகழ் ஓங்க, மனுநெறி ஓங்கச் சந்திரன் குலத்தில் சூரியன் கோத்திரத்தவராய் விளங்கியவர் கோகுலரே.

**அ.பொ:** ஆதவர் - சூரியன் போன்ற ஒளி உடையவர். **(௯௨)**

93. நலத்தைப் பொதுப்பி யருளொன்று நாற்குல நன்குறலாற்
பலத்தி லதிக மிவர்பஞ்ச கௌவியம் பார்கொளலாற்
றலத்தை விளக்கும் புனித மிவர்பொருட் டாளினென்றதாற்
குலத்திற் றிலகமென் றோதப்பெற் றாரவர் கோகுலரே.

**பொழிப்:** எல்லோருக்கும் பொதுவாக உதவுவதால் நாற்குலங்களும் செழிப்புறுதலால், இவர்கள் வழங்கும் ஆன் ஐந்துக்குப் பயன் மிகுதி என்று உலகவர் ஏற்றுக் கொள்வதால், இவர்கள் சொத்தாகிய பசுக்கள் நன்மையை விளக்கும் புனிதப் பொருள் ஆதலால் குலங்களில் திலகம் என்று ஓதப்பட்டவர் கோகுலரே.

**அ.பொ:** பொதுப்பி - பொதுவாக்கி; பஞ்சகவ்யம் - பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணி; திலகம் - நெற்றிப்பொட்டு. **(௯௩)**

94. மூலத் திருமரு மார்ப னூருவின் முளைத்தவர்நற்
சீலத்தர் தேனுவைப் பாலனஞ் செய்பவர் செந்திருமுற்
காலத்திற் பின்னைப் பிராட்டி யெனப்பெற்ற கருணையெனும்
கூலத்தர் ஞானத்தர் மேலுற்ற பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** திருமால் ஊருவி (தொடையி)லிருந்து தோன்றியவர், நல்ல பண்பினர், பசுவைக் காப்பவர், நப்பின்னைப் பிராட்டியைத் தம் மரபில் பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** உரு - ஊரு - தொடை, ஆயர்கள் - வைசியர்கள், கூலத்தர் - தானிய வாணிபம் செய்பவர். **(௯௪)**

95. மறையோது வார்முத னாலாம் வருணங்கள் மாண்புபெற
முறையாக வூணி னறுநெயும் பாலு மோர்பிறவும்
நிறைவாக வேண்டிய வெல்லா முதவிய நீதியினாற்
குறையாத செல்வ ரிவரென்ற பேறவர் கோகுலரே.

**பொழிப்:** அந்தணர் முதலிய நான்கு வருணத்தவரும் மாண்பு பெற, உணவு சிறத்தலுக்குரிய நறு நெய், பால், மோர் முதலியன உதவிய நீதியினால் குறையாத செல்வம் உடையவர் என்று போற்றப்படுபவர் கோகுலரே.

**அ.பொ:** ஊணி - உணவு. **(கூரு)**

96. **நாவி லனங்கள் புசிப்போர்க்குச் சுத்தியும் நல்கவல்லார்**
**பூவில் விளங்கிய தேவால யங்களைப் போற்றிடவே**
**மேவிய திங்களும் வெய்யோனும் போல விடிவிளக்குக்**
**கோவில் விளங்கநெய் யீந்தவர் பாடியிற் கோகுலரே.**

**பொழிப்:** உணவு உண்பவருக்கு நாவில் தூய்மை தரும் நெய்யை வழங்குபவர், கோயில்களைப் போற்றிப் பாதுகாக்கச் சூரியனைப் போலக் கோயில்களில் விளக்குகள் ஒளி வீசி விளங்க நெய் வழங்குபவர் கோகுலரே.

**அ.பொ:** அனங்கள் - உணவு வகைகள். **(கூசா)**

97. **நெறிபெறு சேய்க்கும் புகர்க்குநல் லாட்சி நிலைக்கவென்றுஞ்**
**செறிபல மான மனைபனி ரண்டினுஞ் சேய்முதலாய்**
**அறிவரி தாமக மேரு முகட்டி லரிதிசையிற்**
**குறிபெற மேட மிடபம்வைத் தாரவர் கோகுலரே.**

**பொழிப்:** செவ்வாய்க்கும் சுக்கிரனுக்கும் நல்லாட்சி நிலை பெற வலிமையுடைய பன்னிரண்டு இராசியிலும் செவ்வாய் முதலாக மேருவின் உச்சியில், இந்திர னுடைய திசையில் மேடம் இடபம் என்ற இராசிகளை அமைத்தவர் கோகுலரே.

**அ.பொ:** சேய் - செவ்வாய் - அங்காரகன், புகர் - வெள்ளி - சுக்கிரன். **(கூஎ)**

98. **காதா லுணர்ந்திடுஞ் சோதிடங் கூறுங் கனயோகமும்**
**வேதாக மங்கள் விளக்கிய யோகமும் வேறுளதும்**
**போதா தெனமுன் வியாச ரறிந்திவர் போற்றவளர்**
**கோதாளி யோக மதிகம தாப்பெற்ற கோகுலரே.**

**பொழிப்:** சோதிடர் கூறும் யோகங்களும், வேதாகமங்கள் விளக்கிய யோகமும் போதாது என்று வியாசர் வகுத்த கோதாளி யோகத்தை மிகப் பெற்றவர் கோகுலரே.

**அ.பொ:** கோதாளி - ஒரு யோகத்தின் பெயர். **(கூஅ)**

99. நெறியாற் சகத்தினிற் கீர்த்திபெற் றோர்க ணிறைசெல்வரென்
றறிவாளர் பேசிய தல்லாம லன்பரென் றாண்மைபெற்றோர்
செறிவான வேதத்தி னங்க மறிந்து செயலையெல்லாங்
குறியா யுரைத்தமிர் துண்டோர்கள் பாடியிற் கோகுலரே.

**பொழிப்:** உலகில் கீர்த்தி பெற்றோர்களே நிறை செல்வர் என்று கூறுவர். அன்பர் என்று போற்றப்படுபவரும் வேதம் குறிப்பிடும் செயலை எல்லாம் தாம் மேற்கொண்டு பிறருக்கு உரைத்து, அமுது உண்டவர்களும் கோகுலரே. **(௯௯)**

100. செழும்பாரின் முன்னங் கொடாமற் பிறந்து திரிபவர்க்கு
மழுங்காத செல்வம் வருவதுண் டோவதின் ஆறறிந்து
தொழும்பாய் வறுமைத் துயர்தாங்கிச் சித்தஞ் சுழல்பவர்க்குக்
கொழும்பா லனங்கள் கொடுக்குந் தியாகிகள் கோகுலரே.

**பொழிப்:** உலகில் பிறருக்கு வழங்காமல் திரிபவருக்குக் குறையாத செல்வம் வருவது உண்டோ? அதனை உணர்ந்து வறுமைத் துயரைத் தாங்கி மனம் தடுமாறுபவர்களுக்குச் சிறந்த பால் அன்னங்கள் கொடுப்பவர் கோகுலரே.

**அ.பொ:** தொழும்பு - தொண்டர், பால் அனங்கள் - பால் சோறு முதலியன.

**(௧00)**

101. அடியிற் பெரிய துலகளந் தானடி யாதிமன்னர்
முடியிற் பெரியது சோழன் றிருமுடி முத்தமிழ்சேர்
படியிற் பெரியது பாண்டியன் சங்கமிப் பாருலகிற்
குடியிற் பெரியது கோபர்லர் தங்கள் குலக்குடியே.

**பொழிப்:** அடிகளில் பெரியன உலகளந்தான் அடிகளே. மன்னர் முடியில் பெரியது சோழமன்னன் முடியே. உலகில் மேம்பட்டது பாண்டியனுடைய சங்கமே. இவ்வுலகில் குடிகளில் பெரியது கோவலர்களின் மேம்பட்ட குடியே. **(௧0௧)**

102. தரங்க மெறியுந் திருப்பாற் கடலிவர் தன்மனைபோல்
அரங்கந் துயிலும் பிரானரு ளாலண்ட ராய்த்தழைத்தார்
வரங்கள் பெறுகின்ற கோகுலப் பாவையர் மகிழ்வடைய
உரங்கொள் பெரும்புகழ் கொண்டார் குருவரு ளோங்கவுமே.

**பொழிப்:** பாற்கடலில் தன் இருப்பிடத்தில் யோகநித்திரை புரிவதுபோலத் திருவரங்கத்தில் துயிலும் பெருமான் அருளால் இடையராய்ச் சிறந்தவர்களும், பல நன்மைகள் பெறுகின்ற கோகுல மகளிரும் மகிழ்வடையக் குருவருளால் ஆயர்கள் மேம்பட்ட புகழைக் கொண்டுள்ளார்கள். **(௧0௨)**

# வாழ்த்து

103. குருவாழி கோவலர் கோக்குடி வாழி கொடிக்கருட
உருவாழி முல்லை நிலம்வாழி யாக்குல மோங்கிவளர்
திருவாழி பாடி நகர்வாழி வெற்றி சிறந்தமுல்லை
மருவாழி மாமறை வாழி தமிழ்நிதம் வாழியவே.

**பொழிப்:** குரு, கோவலர் குடி, கொடியிலுள்ள கருடன் உருவம், முல்லை நிலம், பசுக்கூட்டங்கள் ஓங்கி வளரும் திரு, திருவாய்ப்பாடி, வெற்றி சிறந்த முல்லை மலர் நறுமணம், வேதம், தமிழ் இவை நாளும் வாழ்க.

**அ.பொ:** கோக்குடி - பசுவைக் காக்கும் குலம், பாடி நகர் - திருவாய்ப்பாடிக் கோயில், நிதம் - நாடோறும். **(௧0௩)**

கோகுல சதகம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

திவ்வியகவி நாராயணதாசர்

அருளிச் செய்த

# வட வேங்கட
# நாராயண சதகம்

மூலமும் உரையும்

# வடவேங்கட நாராயண சதகம்

திவ்விய கவி நாராயணதாசர் என்ற பெரியவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகலாம். இந்நூல் காப்புச் செய்யுள், இரண்டு வெண்பாக்களும் நூறு கலிவிருத்தங்களும் உடையதாக அமைந்துள்ளது. இந்நூலுக்கு உரையும் இந்நூலாசிரியரே இயற்றியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இவ்வுரை நடை தோன்றுகிறது. இக்காலத்தில் சற்று விளங்காதனவாயுள்ளன. அக்காலப் பழக்கத்திலிருந்த சில வடசொற்கள் இதன் கண் சுவைபடப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதல் பாயிர வெண்பா ஆசிரியர் தம்மைப் பிறர் போலக் கூறும் மரபு பற்றி அமைந்தது.

ஸ்ரீ:
ஸ்ரீராமஜெயம்

# வட வேங்கட
# நாராயண சதகம்
## மூலமும் உரையும்

## பாயிரம்
### நேரிசை வெண்பா

**நஞ்சு வினைக்கா மமுத நமதுயிர்க்காம்**
**செஞ்சொல்லி னோர்சதகஞ் செப்பியது - விஞ்சுபுகழ்**
**நாரா யணதாசர் நன்றாக நானிலத்தே**
**பாரா யணஞ்செய் பவர்க்கு.**

***(இதன் பொருள்:)*** இந்தப் பூமியினிடத்து நன்றாகப் பாராயணஞ் செய்பவர்க்கு உபயோகமாகும் பொருட்டு மிகுந்த புகழையுடைய நாராயணதாசரென்பவர் செஞ்சொற்களினாலே திருவாய்மலர்ந்தருளியதாகிய ஒப்பற்ற **நாராயணசதக** மென்னும் பாமாலையானது, நம்முடைய ஊழ்வினையை யழிக்கத்தக்க நஞ்சாகும்; நமதுயிர்க்கோ காக்கத் தக்க அமுதமாகும் என்றவாறு.

## காப்பு
### நேரிசை வெண்பா

**நல்லவட வேங்கடத்து நாரா யணசதகம்**
**சொல்ல வெனக்குத் துணையாமே - மல்லற்**
**பணையான திண்புயத்துப் பாண்டவர்க்கு முன்னந்**
**துணையான பாதந் துணை.**

***(இ.ள்:)*** அழகிய வடக்கின்கணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தருளிய ஸ்ரீமந்நாராயணன் விஷயமாக ஓர் சதகமென்னும் பாமாலை பாடுதற்கு மாலையின் வளம் பொருந்திய பருமையான வலியுள்ள புயங்களைப் படைத்த

பாண்டவர்க்கு முற்காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்கள் துணையா யிருப்பதுமன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகும் என்றவாறு.

# நூல்

## கலிவிருத்தம்.

### பிரிந்திசை வண்ணம்.

104. ***நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின்***
***குறிகொண்டுவண்,***
***சீர்கொண்டுவந் தனைசெய்துனைச் செறிவார்களென்***
***பெறுவார்களோ,***
***பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர்களா***
***லருள்கொண்டிலன்,***
***நார்கொண்டுகண் டருள்சோதியே நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** பரிசுத்தமான தீர்த்தங்களையும் குளிர்ச்சி பொருந்திய புட்பங்களையும் கொண்டு நன்மார்க்கத்தை யறிந்து தேவரீருடைய சொரூபத்தைத் தெரிந்து அழகிய ஞானத்தைப் பொருந்தித் தண்டஞ் சமர்ப்பித்து உம்மை ஆராதனை செய்து அடைந்தபேர்களெல்லாம் என்ன பலனைப் பெறுவார்களோ அறியகில்லேன்; நாயினேன் தாசிய நாம முதலிய பஞ்ச சம்ஸ்காரத்தையும் பாகவதராலே கிருபையையும் கொண்டவனே அல்லன்; ஆதலால் அன்பு சுரந்து சந்தோஷித்து இரட்சித்தருள வேண்டும்; சோதிமயமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சொரூபம் - தனித்தன்மை. **(௧)**

105. ***பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின்***
***விரகாயிருந் தழுதாவதென் வெறியார்குணங் குறியார்களோ***
***உரகாரிமே லுபகாரியா யொருசாரியா வுலவாரியா***
***நரகாரியே முரகாரியே நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** கொலை, களவு, காமம், பொய், வஞ்சனை இவை முதலாகிய அநேக துஷ்ட கிருத்தியங்களைச் செய்து தேவரீரைப் பணியாமல் பிணியானது சம்பவித்த பிற்பாடுங் கபடமாயிருந்து அழுததினாலே உண்டாகிய காரியம் ஒன்றுமில்லை; ஆதலால், பயித்தியக்காரர் குணங்களை நல்லோர்களே யறிந்து இரட்சிப்பது கடன்; சர்ப்பங்களுக்குப் பகையாகிய கருடவாகனமீதி லெழுந்தருளி

அடியார்களுக் குபகாரமாக வொப்பில்லாத சேவையாய் உலாவிவந் தருளாநின்ற ஐயனே! நரகாசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** துஷ்டக்கிருத்தியம் - தீய செயல்கள், சம்பவித்த - நிகழ்ந்த, வைரி-பகைவன். **(உ)**

106. **சிவனீதலம் புயனீதலிந் திரனீதல்சந் திரனீதலா**
**தவனீதல்விண் ணவரீதன்மா தவரீதலோ டெவரீதலும்**
**அவனீதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப் பொடியாகுமோ**
**நவநீதமுண் கருமேகமே! நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** சிவனும் பிர்மாவும் இந்திரனும் சந்திரனுஞ் சூரியனுந் தேவர்களும் ரிஷிகளும் ஆகிய இவர்களுடனே பின்னும் யாவர்களுங் கொடுக்காநின்ற புலன்களை யெல்லாம் பூதலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் அவை தேவரீருடைய அடியார்கள் திருவடித் துகளுக்கும் ஒப்பாகமாட்டா; ஆதலால் அவர்களை நினைப்பதேயில்லை; கோபாலர் கிருகத்திலே வெண்ணெயை யுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** கொடுக்கா நின்ற - கொடுத்துக் கொண்டிருக்கிற, துகள் - தூசி. **(ரு)**

107. **அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலே யமரர்க்கிடுங்**
**கலசத்திலோர் துளிநல்கியென் கவியைக்கொளாய் கருணாகரா!**
**குலசக்கரன் சலசேகரன் குலசேகரன் புகழ்சாகரா!**
**நலசக்கரா! சலசக்கரா! நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** தேகமானது வருத்தத்தை யடையும்படியான நோய் வந்து அடியேன் அலையாமலிருக்கத் தேவர்களுக்குக் கொடுத்தருளா நின்ற கலசத்தமிர்தத்திலே ஒரு துளி கடாட்சித்தருளி அடியேனுடைய கவிதையைக் கொள்ளவேண்டும்; கருணைத் திருமேனியனே! வச்சிரபாணியுங் கங்காதரனுங் குலசேகரராகிய ஆழ்வாரும் தோத்திரம் பண்ணா நின்ற கீர்த்தியாகிய சமுத்திரத்தையும் நல்ல சக்கரத்தையும் தாமரை மலர் போன்ற திருக்கரங்களையும் உடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** கடாட்சித்தருளி - கடைக்கண் சார்த்தியருளி, உடைத்தாகிய - உடைய. **(சு)**

108. **எதிரும்பெரும் பிணியும்பரந் திரையுஞ்செறிந் தெழிலும்பறந்**
**துதிரந்திரிந் துடலங்கொளுந் துயரந்தெளிந் துனைநம்பவா**

**மதியங்கிடந் தொளிருஞ்சடா மகுடந்தொறுந் தொனியும்பவா
னதிவந்தெழும் பதபங்கயா நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேகத்திலே எதிர்த்து வாராநின்ற பெரியதாகிய நோய் மிகுந்து இரைப்பு நெருங்கி அழகு குலைந்து உதிர மூர்ந்து கொள்ளா நின்ற துக்கமானது தெளிந்துபோய்த் தேவரீரை அடியேன் நம்பும் படியாகப் பிரசன்னமாக வேண்டும்; சந்திரன் வாசமாய்ப் பிரகாசியா நின்ற சிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிறைந்திட ஆகாய கங்கையானது வந்தருளாநின்ற திருவடித் தாமரைகளை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** இரைப்பு - பெருமூச்சு, பிரசன்னமாதல் - வெளிப்பட்டுக் காட்சி தருதல்.

**(ரு)**

109. **எல்லாருமுன் னுதரத்துளே யென்னோடுமங் குறைகின்றபேர்
அல்லாதுவே றில்லாமையா லனைவர்க்குமோ ரருளல்லவோ
வல்லாருளார் மாட்டாருளார் வறியாருளார் வாழ்வாருளார்
நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அடியேனுடனே ஆத்மகோடிகளெல்லாந் தேவரீருடைய, குட்சிக்குள்ளே வாசம் பண்ணுகின்றனவே யல்லாமல் வேறே யிடமில்லையாதலால் யாவருக்குஞ் சமானமான கிருபையேயன்றிப் பேதமில்லையே; அத்தன்மையாயிருக்க இதிலே வலியரென்றும் மெலியரென்றும் தாழ்வினரென்றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும் பொல்லாதவரென்றும் உண்டாகியதென்ன மாயமோ! ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** பேதம் - வேறுபாடு. **(சா)**

110. **நீகாசுதா, நீதூசுதா நீயாடுதா நீமாடுதா
போகாதபேர்க் கிடுசோறெனப் புலையர்க்குநெஞ் சுருகச்சொனேன்
ஆகாதகா ரியமென்னிடத் தளவற்றதுண் டவையாய்வையோ,
நாகாசலா! நாகாலயா! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பணமும் வஸ்திரமும் ஆடும் மாடுஞ் சாதமும் ஆகிய இவைகளை நீங்கள் கொடுங்களென்று சொல்லுவதற்கு யோக்கியமில்லாத பேர்களாகிய மிலேச்சருடைய நெஞ்சானது உருகும்படியாய்க் கவிதைபாடித் தேடிக்கொண்ட பொல்லாத காரியங்கள் கணக்கில்லாம லடியேனிடத்தி லிருக்கின்றன; அவைகளை யாராய்ந்து பாராமல் இரட்சிக்கவேண்டும்; சேஷமலையையும் சேஷனாகிய கோவிலையும் பெற்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** யோக்கியம் - தகுதி, மிலேச்சர் - கீழ்மக்கள். **(எ)**

111. **அயனாரெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும்
பயனாயிருப் பவரில்லையிப் படிமீதிலப் படியன்றியே
வியனாயுனைத் தொழுவார்களவ் விதிவெல்வராய் மறைசொல்லுமே
நயனாரதன் புகழ்சோதியே! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பிரமதேவனானவன் எழுதின பிரகாரமே யல்லாமல் அதிகமாக க்ஷணப்போதாகிலும் இந்தப் பூமியிலே பிரயோசனப்பட்டிருப்பவரில்லை யென்றாலும், அப்படியல்லவென்று சந்தோஷமாகத் தேவரீரைத் தொழுதபேர்களெல்லாம் அந்த விதிவசத்தைக் கடந்திருப்பார்களென்று வேதங்கள் முறையிடுகின்றனவே; நயத்தோடுங் கூடிய நாரதமகாமுனிவர் தோத்திரம் பண்ணாநின்ற சோதிமயமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(அ)**

112. **ஓமங்களால் விரதங்களா லுயர்தீர்த்தயாத் திரைகோடியால்
ஏமங்கள்கன் னியரீதலா லெழுபாரையுஞ் சுழல்கின்றதால்
ஆமைப்புலன் கடிகின்றதா லடைபுண்ணியங் கணமேனுநின்
நாமம்புகன் றதுபோலுமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஓமங்களாலேயும் விரதங்களாலேயும் உயர்ச்சி பெற்ற கோடி தீர்த்த யாத்திரைகளாலேயும், சுவர்ணங்களுடனே கன்னிகாதானங்களாலேயும், ஏழு பூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும் உண்டாகிய பஞ்சவிந்திரியங்களை நீக்கினதினாலேயும் வாராநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதாகிலுஞ் சொல்லிய புண்ணியத்துக்கு ஒப்பாகமாட்டா; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சுவர்ணம் - தங்கம். **(கூ)**

113. **பாடேனலோ கவிசிந்துனைப் பணியேனலோ பலகாலெழுந்
தாடேனலோ பலிபீடமுன் னணுகேனலோ சடகோபமே
சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனை
நாடேனலோ கொடியேனலோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீரைக் கவிதைகளாலே பாடினதுமில்லை; உமக்குத் தண்டஞ் சமர்ப்பித்ததுமில்லை; பலகாலமுமெழுந்து ஆடினதுமில்லை; பலிபீடத்தின் முன்னே வந்ததுமில்லை; சடகோபத்தை முடியிலே சூடினதுமில்லை; வலமாகச் சூழ்ந்ததுமில்லை; கதியென்று உன்னை நினைத்ததுமில்லை; இத்தன்மையான பாவியானவன் கடைத்தேறு மார்க்கமுளதோ ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சடகோபம் - திருவடி. **(௫0)**

114. **அறவைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூலநீ**
**பிறருக்கெலாம் பெறுவித்ததும் பெறுவிப்பதும் பிணைதட்டிலே**
**உறவைக்கிலென் னுயிர்காவலுக் கொவ்வாதுவா துரைசெய்கிலேனோ**
**நறவத்துழா யணிமார்பனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** லோகங்களுக் கெல்லாம் அடிவேராகி யிருப்பதுயானேயன்றி வேறில்லை; கிருபைகளுக்கெல்லாம் மூலகாரணமா யிருப்பது தேவரீரேயன்றி வேறில்லை; அயலார்களுக்கு நீர்செய்த பலனையும் இனிச் செய்கின்ற பலனையுந் தராசினுடைய தட்டுக்களிலே பொருந்த வைத்தால் என்னுடைய உயிரை இரட்சிக்கின்ற பலனுக்கு அவை சரியாகமாட்டா; ஆதலால், வாது பேசுவதில்லை; தேன் பொருந்துந் திருத்துளவந் தரித்த திருமார்பை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** இரட்சித்தல் - காப்பாற்றுதல். **(கக)**

115. **பசியாதமந் திரமேவரும் பழியாதமந் திரமந்தகன்**
**விசியாதமந் திரநோயிலே விழியாதமந் திரநெஞ்சிலே**
**முசியாதமந் திரமோதுவார் முதலானமந் திரமொன்றிலே**
**நசியாதமந் திரமோநமோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஒரு மந்திரம், பசியை யெழுப்பாதது; எவர்களாலேயும் பழிப்பில்லாதது; எமன் பாசத்திற் கட்டுப்படாதது; நோயைப் பார்க்காதது நெஞ்சிலே கெடுதலில்லாதது; ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது; ஒன்றினாலேயும் நாசமில்லாதது; அது யாதெனில், ஓம் நமோ நாராயணா வென்னுந் திருமந்திரமே யல்லது வேறில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கஉ)**

116. **அபராதமா கியபல்சரக் கடலாகவோ டமதேற்றியே**
**விபரீதநோ யலையிற்குளே விடநின்றதூழ் வினையென்செய்வேன்**
**இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே**
**நபராசனே சுபராசனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அபராதங்களாகிய பலசரக்குகளை நெருக்கமாகத் தேகமென்னும் ஓடத்திலே யேற்றி விபரீத நோயாகிய கடலுக்குள்ளே ஊழ்வினையானது தள்ளி நின்றது; என்செய்வேன்; கஜேந்திரனைக் கரையேற்றின தேவரீர் அடியேனைக் கரையேற்றுதல் இவ்விடத்திலே அரிதல்லவே. தேவர்களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** விபரீதம் - திரிபு, சுபம் - நன்மை. **(கங)**

117. வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே
நிறைசேடன்வாய்,
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே
சசிசொல்லுமே,
தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே
திகையாமலே
நான்சொல்லவே, துவுமாவெனோ நாராயணா! நாராயணா!

**(இ–ள்):** தேவர்களுடைய நாவும், உலகத்தோருடைய நாவும், வேதங்களுடைய நாவும், கல்வி நிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிரம் நாவும், பெரிதாகிய சபையோடுங்கூடிய முனிவருடைய நாவும், சந்திரன் முதலாகிய நவக்கிரகங்களுடைய நாவும் தேன்போலுஞ் சொல்லினையுடைய பார்வதிபாகத்திலிருக்கும் ருத்திரனுடைய நாவும், திக்குப் பாலகருடைய நாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடைய கீர்த்தியை மாறுபடாமல் அடியேனுடைய நாவினாலே சொல்வதற்கு நான் காரணமாவனோ? சொல்லும், ஸ்ரீமந் நாராயணனே, எ–று.

**அ.பொ:** கீர்த்தி - புகழ். **(கச)**

118. சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றாமருந் தழற்றீயிலே,
உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந்
துழக்கெண்ணெயில்,
கருக்காமருந் திகற்கையிலே கசக்காமருந் திருகல்லிலே,
நருக்காமருந் திருக்கின்றதே நாராயணா! நாராயணா!

**(இ–ள்):** வெளியிலே சுருங்காதது; உடலிலேயூறினாற் சுழற்றாதது; அக்கினியிலே யுருகாதது; உண்டையாகவுருட்டி யுலர்த்தாதது உழக்கெண்ணெயிலே கருக்காதது; வலியகைகளிலே கசக்காதது. இரண்டு கல்லிலே நெருக்காதது; இத்தன்மைகளைக் கொண்ட மருந்தானது இருக்கின்றது; அது யாதெனில், அஷ்டாக்ஷரமே யன்றி வேறில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ–று. **(கரு)**

119. தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகல்பேசுவார்
முகவாயிலே புழுவீழுமே முனையந்தகன் கிளைமோதுமே
ககவாகனா மிகுமோகனா கனகன்களே பரமார்பெலாம்
நகவாளினா லரிசீயமே நாராயணா! நாராயணா!

***(இ-ள்):*** மேன்மையாகத் தேவரீரைத் தோத்திரஞ் செய்யாமல் கோபமே பொருந்திப் பகையாக இழிவு பேசுவாருடைய முகத்தோடுங் கூடிய வாய்களிலே புழுக்கள் சொரிவது மல்லாமல் எதிர்க்காநின்ற எமதூதர் மோதுவார்கள்; கருடவாகனனே! மோகசொரூபனே!! இரணியனுடைய மார்பையும் அவனது சேனைகளையும் நகமென்னும் ஆயுதத்தினாலே சங்கரியாநின்ற நரசிங்கரூபமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** மோகசொரூபன் - மயக்கும் வடிவினன், சங்கரியா நின்ற - அழித்துக் கொண்டிருந்த. **(கசுா)**

120. **தலமேழையும் படமோதினுஞ் சலமோவிடா தகிலாண்டநற்**
**பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோதிடா திசைமாதரார்**
**குலம்யாவுமின் பமதீயினுங் குறுகாதுமால் பெறுகாயமே**
**நலமேவுமே பொலமேவுமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஏழுலோகத்தையும் அழியும்படியாய்ப் போர் பண்ணினாலும் என் கோபங்களடங்குவதில்லை; அகிலாண்டங்களிலே யிராநின்ற நன்மையான பாக்கியங்களெல்லாம் என் வீட்டிலே நிறைந்தாலும் ஆசைக ளொழிவதில்லை; பெண்களொன்றிசைந்த சாதிகளெல்லாம் இன்பங் கொடுத்தாலும் காமங்கள் நீங்குவதில்லை; இத்தன்மையைக் கொண்ட என்னுடைய தேகமானது எத்தன்மையைப் பெறுமோ? அறியகில்லேன்; பிரகாசியாநின்ற மேகவண்ணனான ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கஎ)**

121. **பண்டிட்டதா மரையுந்தியிற் படிவார்நினக் கடியாரெனத்,**
**தொண்டிட்டுநின் றொழில்கொள்வதோ துயரத்திலே**
**யடைவிப்பதோ,**
**கொண்டிட்டநின் புகழ்நிற்கவே குறையாளரைப் புகழ்கின்றவாய்,**
**நண்டிட்டபாழ் வளையொக்குமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பழமையாயிராநின்ற தேவரீருடைய நாபிக்கமலத்திலே, பொருந்தின வுயிர்களையெல்லாம் அன்பராகும்படி அடிமை கொண்டு, கைங்கரியத்தைக் கொள்ள வேண்டுமே யல்லாமல் துக்கங்களடையச் செய்யலாமோ, வேதங்கள் கொண்டிராநின்ற உம்முடைய கீர்த்தியை விட்டுக் குறைச்சலான தெய்வங்களைப் புகழாநின்ற வாய்களெல்லாம் நண்டிட்டுத் தோண்டிவிட்ட பாழ்வளைக்கு ஒப்பாயதேயன்றிப் பிரயோசனமில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கஅ)**

122. **பகையானவன் பிணிசெய்ததோர் பதினாயிரம் பிழையுண்டுநான்,**
**வகையாநினக் குரைசெய்கிலேன் வருநோயுநின் னருளாதலால்,**

**மிகையானபின் முறையிட்டனென் விடுவித்திடாய்**
**விளையாடினால்,**
**நகையார்களோ குறையார்களோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அடியேனுடைய தேகத்திலே பகையாகிய பொல்லாத பிணியானது செய்யாநின்ற உபத்திரவங்கள் பதினாயிரமுண்டு; அவற்றை இன்ன விதங்களென்று தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்கிலேன். வாராநின்ற இந்த நோயானது உமது கிருபையே யல்லாமல் வேறில்லை, ஆதலால் துன்பம் மிகுந்த பிற்பாடு முறையுமிட்டேன்; இதை நீக்கி விடாமல் விளையாடினால் உலகத்தார் நகைப்பதுமல்லாமல் இகழ்ச்சியும் பண்ணுவார்கள்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** உபத்திரவங்கள் - துன்பங்கள். **(கக௯)**

123. **குப்புற்றகன் றுடனாகெலாங் குழுவாகவோர் குழலூதவே,**
**மப்புக்கொளுந் தொனிகாதிலவ் வழியேகுபுட் களுமுண்ணவே,**
**துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால் சொரிகைக்கு**
**மவ்விடைநங்கைமார்,**
**நட்புக்குமா டியகண்ணனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** துள்ளின கன்றுகளுடனே பசுக்களெல்லாங் குவிந்திருக்கவும் ஆகாயவழியிலே செல்லாநின்ற பட்சிகளுடைய காதுகளிலே கேட்கவும் ஒப்பில்லாத வேணுக் குழலூதித் தொனியாக மப்புக்கொட்டினது மல்லாமல் அங்கிருக்கும் இடைப்பெண்கள் பொழியாநின்ற நெய்க்கும் மோருக்கும் தயிருக்கும் வெண்ணெய்க்கும் பாலுக்கும் அவர்களுடைய நட்பினுக்கும் நடனஞ் செய்த கண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** மப்புக் கொட்டினது - மயக்கந் தந்து அழைத்தல். **(உ0)**

124. **தாயற்றபேர் தாயாகுவாய் தமரற்றபேர் தமராகுவாய்**
**சேயற்றபேர் சேயாகுவாய் செயலற்றபேர் செயலாகுவாய்;**
**வாயற்றபேர் வாயாகுவாய் மலைபோலுநோய்க் குனைநம்பினால்;**
**நாயிற்றுமுன் பனிநிற்குமோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தாயில்லாதபேர்களுக்குத் தாயாகவும், சுற்றமில்லாத பேர்களுக்குச் சுற்றமாகவும், பிள்ளையில்லாதபேர்களுக்குப் பிள்ளையாகவும், உதவியில்லாத பேர்களுக்கு உதவியாகவும், வாக்கில்லாதபேர்களுக்கு வாக்காகவும் அருளாநின்ற தேவரீரை அடியனேன் மலைபோலுங் கொண்ட நோய் தீருதற்கு நம்பினால் சூரியன் முன்னே பனி நீங்குமாறுபோல் நீங்குமேயன்றி நிற்குமோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** நாயிறு - ஞாயிறு, சூரியன். **(உக)**

125. **மந்தன்புதன் குருவெள்ளிசேய் மதிராகுகே தரிநாடொறுந்,**
**தந்தம்பொலா விடமேவினுஞ் சகலேசநின் சரணண்டினால்**
**எந்தம்பிரா னிவனென்றுகொண் டேகாதசப் பலனீவரே,**
**நந்தன்சுதா நம்பும்பதா நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** சனி, புதன், குரு சுக்கிரன், செவ்வாய், சந்திரன், ராகு, கேது, சூரியன் இவர்கள் நாடோறுந் தங்கள் தங்கள் பொல்லாத ராசிகளிலேயிருந்தாலும் சகலத்துக்கும் ஈசனே! தேவரீருடைய திருவடியை அடைந்தால் எங்களுடைய தம்பிரானிவனேயென்று அன்புகொண்டு, பதினோராமிடத்துப் பலனைக் கொடுப்பார்கள்; நந்தகோபனுடைய திருக்குமாரா! நாயினேன் நம்பாநின்ற பரமபதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(உஉ)**

126. **ஆற்றாமையொன் றமையாமையொன் றறியாமையொன் றருளாமையொன்,**
**றேற்றாமையொன் றிசையாமையொன் றின்னாமையொன் றிருதாளையும்,**
**போற்றாமையொன் றடியாருடன் பொலியாமையொன் றொருமெய்யிலே,**
**நாற்றாய்விளைந் திடலாகுமோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அயலார் வாழ்வைக் கண்டு அவதிப்படுதல், பொறுமை நீங்குதல், பேதைமை வளர்தல், ஈதன் மறுத்தல், முயற்சியிடைதல், இங்கிதம் ஒழித்தல், கொடுமை மிகுதல், திருவடிப் புகழ்விடுதல், அடியாருடன் கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயினேனுடைய ஒரு தேகத்துக்குள்ளே நாற்றுக்கள்போலே வளரலாமோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** இங்கிதம் - குறிப்பு. **(உ௩)**

127. **தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ**
**மென்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ**
**புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ**
**நன்மைக்குநீ தின்மைக்குநீ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அடியேனுடைய ஒழுக்கத்துக்கும், சலிகைக்கும், பிரகாசத்துக்கும், மெலிமைக்கும், வலிமைக்கும், குற்றத்திற்கும், முயற்சிக்கும், பொல்லாங்குக்கும், அறிவுக்கும், பொறுமைக்கும், மோட்சத்துக்கும், நன்மைக்கும், தின்மைக்கும், இன்னும் சகலத்துக்கும் தேவரீரேயல்லாமல் வேறில்லை ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சலிகை - தனி உரிமை. **(உச)**

128. **வேட்பித்ததுன் பெருநெஞ்சமே வியப்பித்ததுன் விளையாடலே,**
**கேட்பித்ததுன் பலநூல்களே கிளர்ப்பித்ததுன் பதிவாசமே,**
**பேட்பித்ததுன் கனசத்தியே பிழைபித்தவெம் பிணிபற்றற**
**நாட்பிச்சையுந் தரவேண்டுமே நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** உமது திருவுள்ளமே யெனக்கு இன்பந் தந்தது; உமது, திருவிளையாடலே யெனக்குச் சந்தோஷஞ் செய்வித்தது; உமது திவ்வியப் பிரபந்தம் முதலாகிய புராணங்களே நான் என் செவிக்குக் கேட்கப் பண்ணியவை, உமது திருப்பதியே யெனக்கு வாசத்தை யுண்டாக்கியது, உமது கனம் பொருந்திய வலிமையே யெனக்கு ஆதரவு புரிந்தது; ஆதலா லடியேனுடைய குற்றத்தையும் வெவ்விதாகிய நோயையும் நீக்கி விட்டு இனி வாழ்நாளாகிய பிச்சையுந் தரவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ–று.

***அ.பொ:*** வாசம் - வசித்தல். **(உரு)**

129. **பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே,**
**ஈரிக்குநின் சபையென்னவே யிரதிக்குநின் புகழென்னவே,**
**ஆரிக்குணம் பெறுதேவர்தா மடியாருளத் தானந்தமே**
**நாரிக்குவில்லொ டியச்செய்தாய் நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** உமது கருடக்கொடியே யென்றால் எனது தேகம் பூரிக்கும்; உமது அடியார்களே யென்றால் எனது மயிர் புளகிக்கும்; உமது சபையேயென்றால் எனது கண்களிலே ஆனந்தபாஷ்பம் பெருகும்; உமது புகழே யென்றால் எனது மனது ரம்மிக்கும்; ஆதலாவித் தன்மையான குணத்தைத் தேவர்களிலே எவர்கள்தாம் பெற்றார்கள்? பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனே ஜானகிக்காக ருத்திரன் வில்லை ஒடியச்செய்தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணனே, எ–று.

***அ.பொ:*** ஆனந்த பாஷ்பம் - உவகைக் கண்ணீர், ரம்மிக்கும் - சுவைக்கும்.
**(உசா)**

130. **தேன்பாடித்தா வனமாலையுந் திருவாழிசங் கமுமேந்தியே**
**தான்பாடிநா ரதனாடுமுன் சபைமானிடர்க் கதிதூரமே**
**வான்பாடிபுட் புயலென்றுதான் வருமென்றுவா டுவதென்னவே,**
**நான்பாடினால் வரவேண்டுமே நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** நாரத மகாமுனியானவர் பாடியாடாநின்ற தேவரீருடைய சபையானது மானிடர்களுக்கு அதிக தூரமாக விருக்கும். ஆதலால் வரக்கூடாது; வானம்பாடி யென்னும் பட்சியானது நீருண்ட மேகங்க ளென்றைக்கு வருமோவென்று மனது

வாட்டங் கொண்டு பாடுவதுபோல அடியேன் வருந்திப் பாடினால் அம்மேகம் வருவது போல வண்டுகள் பாடித் தாவாநின்ற துளபமாலையும், அழகிய சக்கரமும், சங்கமும் தாங்கி வந்து இரட்சித்தருளவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** தாவா நின்ற - தாவிச் செல்கிற. **(உஎ)**

131. **மானோயுநின் னருளுற்றநாள் வாய்நீர்மருந் தாயங்ஙனே**
**தானோடுநின் னருளற்றநாள் சஞ்சீவையைத் தளியேறுமே**
**தானோர்பவர் சுகமெய்துவர் சார்வாருளத் தானந்தமே**
**நானோதவா ஞானோதயா நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** மயக்கத்தைச் செய்யும் நோய்களெல்லாந் தேவரீருடைய கிருபையைப் பெற்றநாளையிலே உமிழ்நீரே மருந்தாகி அங்ஙனே ஓடிப் போகும்; உமது கருணையில்லாத காலத்திலே சஞ்சீவியைக் கொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகு மாதலா லிதை யறிந்த பேர்கள் சுகத்தைப் பெறுவார்கள்; அடியார்கள் இருதயத்தில் ஆனந்தமானவனே! நாயினேன் தோத்திரம் பண்ணுதற்கு வந்தருள்வாய்; ஞான உதயஞ் செய்தருள்பவனே! ஸ்ரீமந் நாராயணனே, எ-று.
**(உஅ)**

132. **ஈசன்பரன் பிரமன்பிதா விறைவிண்டுவண் டுறைதண்டுழாய்**
**வாசன்சரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் பதிதம்மிலே**
**தீசங்கடம் பிணிதாழுமே சிறைசண்டைவஞ் சனைவீழுமே**
**நாசங்கடந் துயிர்வாழுமே நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** ருத்திரனுக்குப் பரமனே யென்றும், பிரமனுக்குத் தந்தையே யென்றும், கர்த்தனே 'யென்றும், விஷ்ணுவே யென்றும், வண்டுகளுடனே குளிர்ச்சி பொருந்தாநின்ற திருத்துழாய் வாசனே யென்றும், சராசரங்களானவனே யென்றுந் தேவரீரைத் தோத்திரம் பண்ணி வழிபடாநின்ற அடியவர்கள் வாழ்ந்தருளுந் தலங்களிலே பொல்லாத சங்கடங்களும், நோய்களும், சிறைகளும், போர்களும், வஞ்சனைகளும் ஆகிய இக்குற்றங்கள் யாவும் நீங்கி மற்ற வுயிர்களெல்லாம் வாழ்ந்திருக்கும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** சங்கடம் - இடையூறு. **(உகூ)**

133. **ஆபாதவா யுனைவையுமே யடியாருடன் படைபண்ணுமே**
**மாபாவநூல், பலகற்குமே மறைபன்னுவா தியர்தம்மினும்**
**ஓபாவியேன் இவைநின்முனே யுரைசெய்தனன் விரைசெய்தபூ**
**நாபாபரா பரனேயரீஇ நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** அபத்தம் நிறைந்த என்னுடைய வாயானது தேவரீரை வைது கொண்டே யிருக்கும்; அடியார்களுடன் போர் பண்ணிக் கொண்டேயிருக்கும்;

மகத்தாகிய பாபசாஸ்திரங்களையே கற்கும்; ஆதலால், வேதத்திலே சொல்லா நின்ற விரோதிகளைப் பார்க்கிலும் அதிகரித்திரா நின்ற விரோதியாகிய நாயினேன் தேவரீர் சந்நிதாதனத்திலே விண்ணப்பஞ் செய்துவிட்டேன்; உமது சித்தம் எனது பாக்கியம்; வாசனை சேர்ந்த நாபிக்கமலம் பொருந்தா நின்ற பராபரனென்னும் அரியாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** நாபிக்கமலம் - கொப்பூழாகிய தாமரை. **(௩0)**

134. **காற்பாலினிற் கடலாதவன் கலிகாலமே திரையாடிடுந்**
**தோற்பாவைநா னதுமெச்சவே தொடுசூத்திரத் துறைகாரனீ**
**மேற்பாவபுண் ணியமானநல் வினைதீவினைக் கெவராகுவார்**
**நாற்பாலினுக் கொருமூலமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** கடலிலே உதித்துவராநின்ற சூரியனாலே அறியும்படியான காலப்பிரமாணத்தோடுங் கூடிய கலிகாலமே திரையாகவும், ஆடாநின்ற தோற்பதுமை யானாகவும், மனது மெச்சும்படியாகத் தொடுக்காநின்ற சூத்திரத் துறைக்காரர் தேவரீராயுமானால் மேலே வரா நின்ற பாப புண்ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகுவார்கள்? இந்த நியாயத்தைத் தெரியப்படுத்தவேண்டும்; பறப்பன, ஊர்வன, நடப்பன, இருப்பனவாகிய நான்குவித சாதிகளுக்கெல்லாஞ் சமானமான ஆதரவு தேவரீரே யன்றி வேறில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** பதுமை - பொம்மை, சூத்திரம் - கயிறு. **(௩௧)**

135. **இரையாலெழுஞ் சுவரானநா லிருசாணுடம் பிடியாமலே**
**கரையாமலே தகராமலே கழலாமலே யழலாமலே**
**திரையாமலே வினைமுடிகண் டிறவாமலே வகையென்னைதா**
**னரையாதசோ றிடுமையனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஆகாரத்திலே வளராநின்ற எண்சாணுடம்பாகிய சுவரானது கரைந்து போகாமலும், இடிந்து போகாமலும், அதிர்ந்து போகாமலும், உதிர்ந்து போகாமலும், வெந்து போகாமலும், திரைந்து போகாமலும், வினையினாலே இறந்துபோய் மறுபடியும் பிறந்து விழிதிறவாமலும் இருக்கும் வகை யாதெனில், நரைதிரை மூப்பில்லாத அமுதத்தைக் கொடுத்தருள வேண்டும்; என் ஐயனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௩௨)**

136. **புற்கொண்டு வாழ்பசுவாரெடார் புலியாழ்கிணற் றிடைவீழினுங்**
**கற்கொண்டுவா தடிகொண்டுவா கடிதென்பரப் படுபாவிநான்**
**எற்கொண்டநோய்க் கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும்**
**நற்கொண்டலால் வளர்கின்றதே நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** புல்லையுண்டு வாழாநின்ற பசுவானது கிணற்றிலே விழுந்தால் கண்டவர்கள் யாரேனும் எடுத்து விடுவார்கள்; புலியானது, விழுந்ததானால் சீக்கிரமாகக் கற்களுந் தடிகளுங்கொண்டு கொல்லுவார்கள்; அத்தன்மைபோலப் படுபாவியான என்னுடைய தேகத்திலே கொண்ட நோயைத் தீர்க்க எவரிருக்கிறார்கள்? இனித் தேவரீரையன்றி வேறில்லை; மழையினாலே எட்டிச்செடியும் வளர்வதுபோல உம்முடைய கிருபையினாலே அடியேனும் வளரவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௩௩)**

137. ***அரசன்கையா லபயம்பெறா ரயலாளுமன் னரையண்டினால்,***
***விரசென்றுவந் திடமீவர்நீ வினவாதசீ விகளண்டினால்***
***வரசங்கரா தியரஞ்சுவார் வருகென்னமேல் வகையென்னைதான்***
***நரசிங்கனே! முரபங்கனே! நாராயணா! நாராயணா!***

**(இ-ள்):** தாங்கள் நம்பியிருக்கும் அரசனாலே பிரயோசனமில்லையென்று மறுமன்னவரிடத்திலே சேர்ந்தால் அவர்கள் சந்தோஷித்து எதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள்; அத்தன்மையாகத் தேவரீரை நம்பினபேர்கள் யாவரேனும் உம்மை வினவாமல் வெறுத்துப் பக்கத்திலே சென்றால் முக்கியமான சங்கரன் முதலாகிய தேவதைகளானாலும் இரட்சிக்கப் பயப்படுவார்கள்; ஆதலால், கதிவேறில்லை; அடியேனை வாவென்றழைக்க வகையென்ன வெண்ணியிருக்கிறீரோ தெரியாது; நரசிங்கரூபனே! முரகாசுரனைக் கொன்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௩௪)**

138. ***கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன் குறைசொல்லுவேன்***
***முறைசொல்லுவேன்***
***கீட்சொல்லுவேன் மிகைசொல்லுவேன் கிலிசொல்லுவேன்***
***வலிசொல்லுவேன்***
***சூட்சொல்லுவே னயனூழிநாள் சொலவேண்டினுஞ்***
***சிறிதுன்னையோர்***
***நாட்சொல்லவென் றறிகின்றிலேன் நாராயணா! நாராயணா!***

**(இ-ள்):** பிரமகற்ப பரியந்தம் அடியேனுடைய நாவானது கோள்களையும், வசைகளையும், குறைகளையும், முறைகளையும், கீழ்மைகளையும், குற்றங்களையும், பயங்களையும், வலிமைகளையும், வஞ்சனைகளையும் சொல்லுமேயன்றிக் கொஞ்சமாகிலும் தேவரீர் நாமத்தை ஒரு நாளையிலேனுஞ் சொல்லும்படியா யறிந்ததேயில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௩௫)**

139. ***ஆளாகிநின் னிருநாலெழுத் தறியாதநா ளறிவார்களைக்***
***கேளாதநாள் செவியூறவே கிடையாதநா ளதிலாசையே***

**மூளாதநா ணிலமீதுதான் முதனாளிலங் கெழுதாதநாள்**
**நாளாகுமோ வாளாயுதா! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித்தேவரீருடைய திருமந்திரத்தை அறியாதநாளும், தெரிந்தபாகவதரைக் கேளாத நாளும் செவிகளிலே யூறும்படியாய்ப் பொருந்தாதநாளும், அதிலே ஆசையானது பெருகாதநாளும், அஞ்சாவது வயதில் முதல் நாளையிலே பள்ளிக்கூடத்தில் அரியென்று நிலவெழுத்தாகிலும் எழுதி வையாத நாளும் பயனுடைய நல்ல நாளாகுமோ? வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** நிலவெழுத்து - தரையில் எழுதுவது. **(௧௩௯)**

140. **வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்**
**கூட்டுக்குளே துணையாவதுங் குன்றுக்குளே துணையாவதும்**
**காட்டுக்குளே துணைவாதுங் கடலுக்குளே துணையாவதும்**
**நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும், சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும், மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும், காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும், நாட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௧௪௦)**

141. **வாய்க்கின்றதேன் பகையுண்ணலா மணக்கின்றசாந்**
**தரையுண்ணலாங்,**
**காய்க்கின்றமா வெறியுண்ணலாங் கறக்கின்றவாக் கட்டுண்ணலாந்,**
**தோய்க்கின்றபால் குடையுண்ணலாஞ் சுவைகெட்டமா**
**னிடவாலிலா,**
**நாய்க்கிந்தவாத னையேனையா நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேன் கூண்டினுக்குப் பகைத்தலும், சந்தனக்கட்டையினுக்குத் தேய்த்தலும், பழுத்த மரத்தினுக்குக் கல்லெறிதலும், கறக்கும் பசுவினுக்குக் கயிறணைத்தலும், தோய்த்த தயிரினுக்கு மத்தாற்குடைதலும் ஆகிய இந்த வுபத்திரவங்களுண்டாகில் பிறருக்கு உபகாரமாகும்; உருசியும் வாலு மில்லாத மானிடமென்னும் நாயினுக்கு இந்த வாதனையைக் கொடுத்தீரே, இதனாலே உமக்கென்ன பிரயோசனமுண்டு? தெரியச் சொல்லும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௧௪௧)**

142. **தும்பிக்கையா னையுமைவர்முன் றுகிலோடிவா டியநங்கையும்,
தம்பிக்கையா மகயோகருந் தாநிற்கவே சதுர்வேதியன்,
கம்பிக்கையா லரனுக்குநீ கனியையமிட் டினியையமேன்,
நம்பிக்கையா கியதெய்வமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** கஜேந்திரனையும், பாண்டவரையும், வஸ்திரம் நீங்குதென்று வாடினதுரோபதையையும், ஸ்தம்பிதமாயிருந்து தவம் பண்ணாநின்ற மகத்தாகிய யோகிகளையும் இரட்சித்ததிருக்கட்டும்; நான்கு வேதத்தையு முடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக் கிள்ளின சிவனுக்கும் பிட்சையிட்டுச் சாபத்தைத் தீர்த்த பிற்பாடும் இனிப்பரத்துவம் வேறேயென்று ஐயப்படலாமோ? நம்பிக்கையான தெய்வம் நீயேயன்றி வேறில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(௯௯)**

143. **பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகாவதோ,
மேலானசர்க் கரையாவதோ விரையாருநல் லமுதாவதோ
கோலாகலப் பிணிதீரவே குளியங்களோ வனமூலியோ,
நாலாவதோ நின்பேர்சொலாய் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அடியேனுடைய தேகத்திலே கோலாகலஞ்செய்யாநின்ற நோயைத் தீர்க்கும்படியான தேவரீருடைய திருநாமமானது பாலாகியதோ? தேனாகியதோ? பழமாகியதோ? பாகாகியதோ? மேலாகிய, சருக்கரையாகியதோ? வாசனை சேர்ந்த நல்லமிர்தமாகியதோ? வனமூலிகை யாகியதோ? இவையல்லாமல் மணிமந்திரம் அவிழ்தம் இவை மூன்றுக்கு மேலாகியதோ? என்னென்று சொல்லுவோம்! ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** கோலாகலம் - மகிழ்ச்சி ஆரவாரம், அவிழ்தம் - அமிர்தம். **(௪0)**

144. **பூவுக்குநல் லதுசொல்லவோ பொலிசீதளப் புதுவாசமே
தேவுக்குநல்லது சொல்லவோ செவியார்முனே யெதிர்நிற்பதே
ஆவுக்குநல் லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே
நாவுக்குநல் லதுசொல்லவோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** புட்பங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால், காந்தியுங் குளிர்ச்சியும் புதியவாசனையும் உண்டாகிய புட்பமேயல்லாமல் வேறில்லை; தெய்வங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் முறையத்தைக் காதிலே கேட்கு முன்னமே அடியார்களுக்குப் பிரசன்னமாகிய தெய்வமேயன்றி வேறில்லை; பசுக்களுக்குள்ளே நல்லது சொல்ல வேண்டுமானால் அதுவெகு சாதுவாயமுதத்தைக் கொடுக்கும் பசுவேயன்றி வேறில்லை, நாவுகளுக்குள்ளே நல்லது சொல்ல வேண்டுமானால் தேவரீருடைய திருநாமத்தைச் சொல்லிய நாவேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** முறையத்தை - முறையீட்டை. **(௪௧)**

145. **ஆனந்தமா யழுவார்முனே யலர்சூடியே தொழுவார்முனே,**
**மோனந்தனிற் கரைவார்முனே முகிலென்னவே புகழ்வார்முனே,**
**தானந்தவம் புரிவார்முனே சரணென்றுனை யடைவார்முனே,**
**நானென்செய்கே னிவையொன்றிலே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீருடைய திருவடியை நினைத்து ஆனந்த பாட்பங்களைக் கண்களிலே பெருக்குவார்களுக்கு முன்னே, புட்பங்களை யலங்காரஞ் செய்து தண்டஞ் சமர்ப்பிப்பார்களுக்கு முன்னே, மௌனத் தியானத்தினாலே? உள்ளங் கரைந்திடுவார்களுக்கு முன்னே, பசுங்கொண்டலே யென்று புகழ்ந்திடுவார்களுக்கு முன்னே, தானங்களுந் தவங்களும் செய்திடுவார்களுக்கு முன்னே, சரணாகதி செய்திடுவார்களுக்கு முன்னே, அடியேன் இவைகளிலே ஒன்றாகிலும் செய்யமாட்டுவனோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சஉ)**

146. ***செரிக்கின்ற வூணுகர்வேனலேன் சிரிக்கின்றகா ரியமேசெய்வேன்,***
***கரிக்கின்றகண் படையேன்வெறுங் கழப்பன்கொடுங் கடுவஞ்சகன்,***
***பரிக்கின்றநின் னடியாரொடும் பழகேனலேன் படர்வந்தபின்,***
***நரிக்கின்றனே னினிசெய்வேன் நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** சீரணமாகும்படியான ஆகாரத்தைக் கொள்ளாமல் நகைக்கும் படியான காரியமே செய்து, தெரிசன அபேட்சையான கண்ணையும் படையாமல் அன்பைப் பரிக்கா நின்ற அடியாருடனேயுங்கூடாமல், விருதாவாகிய கழப்பனாகவும் பொல்லாத விஷம்போலும் வஞ்சகனாகவும் அவதரித்துத் துன்பம் வந்தபிற்பாடு அவதியைக் கொள்ளாநின்ற நாயினேனினியென் செய்வேன்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** அபேட்சை - விருப்பம், பரிக்கா நின்ற - தாங்கிக் கொண்டிருக்கிற, விருதா - வீணான, பயனற்ற; கழப்பன் - உரிய செயலைச் செய்யாது நழுவுபவன்.
**(சஙு)**

147. **ஆதாரதே வதையென்பனோ வடியேனையா ளரசென்பனோ**
**ஓதாதுணர்ந் திடவன்புகூ ருபதேசதே சிகனென்பனோ**
**மாதாபிதா வுடலாவிநீ மனைகாணிபொன் வலிசெல்வநீ**
**நாதாவுநீ தாதாவுநீ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஆதாரமாகிய தேவதையென்பனோ? அடியேனையாளுங் கர்த்தனே யென்பனோ? பலநூல்களையோதாமல் தன்னிலே யறிந்திட நண்பு செய்யாநின்ற உபதேச குருவே யென்பனோ? என்னென்று சொல்லுவேன்? தாயும், தந்தையும், தேகமும், உயிரும், பெண்சாதியும், காணியும், திரவியமும், வலிமையும், செல்வமும், நாதனும், பிரபுவும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சச)**

148. வடுநிந்தையே யிடுவந்தியேன் மருள்விஞ்சினே
யருளஞ்சினேன்,
அடுசிந்தையே னெடுவிந்தையே னலைபண்பினே
னுனைநம்பினேன்,
விடுதுன்பிலேன் முடுகன்பிலேன் வினைமண்டினே
னுனையண்டினே,
னடுவொன்றிலே யிடைகுன்றுமோ நாராயணா! நாராயணா!

**(இ-ள்):** குற்றம் பொருந்திய நிந்தையையும், இடுவந்தியையும், மிகுந்த மயக்கத்தையும், அருளில்லாத பொல்லாத இருதயத்தையும், பலவித துர்நடத்தையையும், காரியமென்கிற அலைச்சலையும், தீவினையையும் ஆகிய இவைகளைக் கொண்டிரா நின்ற நாயினேன், இரக்கத்திலே பயந்தவனாகி, அன்பிலே துரிதமில்லாதவனாகி, துன்பம் ஒழிவில்லாமல் தேவரீரை யடைந்தேன்; மத்தியிலே இன்னமொரு விதத்தினாலே எனது வருத்தம் நீங்குமோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** இடுவந்தி - குற்றமில்லாதவர் மேல் குற்றத்தை ஏற்றுதல். **(சரு)**

149. குடிநீர்கொடீர் முகவேதிடீர் குடவெண்ணெயை வடியீர்பிரம்,
படியீர்வெணீ றெறியீர்விழிக் கதிகோரவஞ் சனமேயிடீர்
கடியீர்வயித் தியரால்வரா கமதாடுகுக் குடமிட்டுனே
நடியீரெனிற் பிணியஞ்சுமோ நாராயணா! நாராயணா!

**(இ-ள்):** குடிக்கும்படியாகக் கிஷாயங்கள் கொடுங்களென்றும், முகத்துக்கு வேது பிடியுங்களென்றும், குடத்திலே யெண்ணையைக் காய்ச்சிக் கொடுங்களென்றும், பிரம்பு கொண்டடித்து வெளுத்த விபூதியை யெறியுங்களென்றும், கண்களுக்கு அதி கோரமாகிய கலிக்கம் போடுங்களென்றும், வயித்தியருக்குக் காட்டித் தீருங்களென்றும், பன்றியும் ஆடும் கோழியும் பலிகொடுத்துச் சன்னதமாட்டிப் பாருங்களென்றும் சொல்லினால் இவைகளாலே நோய் தீர்வதுண்டோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** சன்னதமாட்டி - குறிகேட்டு. **(சசு)**

150. பிரம்புக்குமுள் ளிடுதாமரைப் பிணிகட்குநீள் பிணியுற்றவென்
உரம்புக்குளே யறியாததெ னுலகத்தெலா முறைசோதிதோல்
வரம்புக்குளே யெலும்புக்குளே வம்புக்குளே தழும்புக்குளே,
நரம்புக்குளே புகவெட்கியோ நாராயணா! நாரர்யணா!

**(இ-ள்):** முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம் புதருகளினும் தாமரைக்கொடிப் பிணையல்களினு மிகுந்த பின்னலான நோய்கொண்டிரா நின்ற என்னுடைய

நெஞ்சுக்குள்ளே நீ நுழைந்தறியாம லிருப்பதென்ன? உலகத்திலிருக்கும் எல்லா வுயிர்கள்தோறும் வாசம்பண்ணா நின்ற சோதி நீயேயன்றி வேறில்லை; ஆதலா லிது தோலுடம்பும், எலும்பும், வழும்பும், நிணமும், நரம்பும் கூடி நாற்றமா யிருப்பதனாலே புகுந்தறிதலுக்கு நின்மனம் வெட்கமாகியதோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சஎ)**

151. ***மன்றாடிய வதிசோபன மழைவண்ணனே! விசயங்கரா***
***வென்றாய்சயஞ், செயமச்சுதா!, மிகவாழி!கே சவனேசு!,பங்***
***கன்றால்விள வெறிந்தாய்,பெருங் கலியாணமங் கலமாதவா!***
***நன்றாகவேங் கடநாயகா! நாராயணா! நாராயணா!***

***(இ–ள்):*** கோபிகா ஸ்திரீகளுடைய சபையிலே நடனம் பண்ணா நின்றவனே! உனக்கு அதிக சோபனம்; மேகவண்ணனே! உனக்கு விசயம்; முதலையை வென்றவனே! உனக்குச் செயம்; அச்சுதனே! உனக்கு மிகுந்த வாழி; கேசவனே உனக்குச் சுபம்; கன்றால் விளாங்கனி யெறிந்தவனே! எனக்குப் பெரிதாகிய கலியாணமாதவனே! உனக்கு மங்களம்; வேங்கடநாயகா! நீ இத்தன்மையாக நன்றாயிருக்கவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சஅ)**

152. ***இந்தாவெனா வெனதிச்சைநீ யெளிதீவையே லிழிவாகுமோ***
***சந்தானமா மலராலருச் சனைசெய்குவார் தவிர்வார்களோ***
***வந்தானபேர் துதியார்களோ வசுதேவர்சீர் குறையாகுமோ***
***நந்தாதபெண் ணகைசெய்வளோ நாராயணா! நாராயணா!***

***(இ–ள்):*** அடியேனுடைய இச்சையானபடியே இங்கேவாவென்று தேவரீர் எளிதாகப் பலனைக் கொடுத்தருளினால், உமக்கு இகழ்ச்சியாகுமோ? கற்பகமலரினாலே அருச்சனை செய்யாநின்ற தேவர்கள் விட்டு விடுவார்களோ? சந்நிதானத்தில் வந்த பேர்கள் துதியோர்களா? வசுதேவருடைய உடைமையிலே குறைந்து போகுமோ? அழிவில்லாத ஸ்ரீமகாலட்சுமி நகைப்பாளோ? சொல்லும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சகூ)**

153. ***சிற்றப்பனோ துருவற்குநீ ததிபாண்டனார் பெரியப்பனோ***
***கற்றத்தைதே வகிதங்கையோ கண்டாகனன் மிதிலேசனோ***
***சுற்றத்தரோ பெறுவோரெலாந் தொடுவேன்வழக் கிடுவேன்விடேன்***
***நத்தப்படும் பொருடந்துபோ நாராயணா! நாராயணா!***

***(இ–ள்):*** தேவரீர் முன்னாளையிலே இரட்சித்த பேர்களுக்குள் துருவ மகாராஜனுக்கு நீ சிற்றப்பனோ? ததிபாண்டனெனும் குயவன் உமக்குப் பெரியப்பனோ? கல்லுருவம் போக்கிக்கிளிபோலப் பேசப் பண்ணாநின்ற அகலிகையானவள் தேவகிக்குத் தங்கையாகிய உமது சிறிய தாயாரோ?

கண்டாகன னென்னும் விரோதியானவன் உமக்குப் பெண் கொடுத்த மிதிலைச் சனகமகாராசனாகிய அம்மானோ? இன்னம் பேறு பெற்றபோர்களும், பெறும்பேர்களும் உமக்கு உறவின் முறையார்களோ? ஆதலால், சம்பந்தமில்லாத பேரையெல்லாம் இரட்சித்தபடியினாலே தேவரீருக்கும் அடியேனுக்கும் வழக்குவிடுவதில்லை; ஆசைப்பட்ட பலனைக் கொடுத்து அப்புறம் போகவேண்டுமே யன்றிப் போகக்கூடாது ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** ததி - தயிர். **(ருo)**

154. **தன்னெட்டெழுத் தயன்மத்தகந் தனிலேபொறித் தடிநாவிலே,**
**உன்னெட்டெழுத் தெழுதாமையா லுலகத்துளோ**
**ரவனைத்தொழார்,**
**கன்னெட்டிடத் தருநெட்டிடக் கனனெட்டிடக் கனகாலிபின்,**
**நன்னெட்டெலாந் தொடர்பாதனே நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** பிரமதேவனானவன் உலகத்திலேயுள்ள மானிடர்களுடைய தலைகளிலே தனது நெட்டெழுத்தை மாத்திரம் எழுதி அடிநாவுகளிலே தேவரீருடைய அஷ்டாக்ஷரத்தை எழுதாமற் போனபடியினாலே அவனை ஒருவருந் தேடுகிறதேயில்லை; முல்லை நிலத்திலே கல்லுகள் நெட்டிடவும், விருக்ஷங்கள் நெட்டிடவும், அக்கினிகள் நெட்டிடவும், விஸ்தாரமாகிய பசுக்கள் பின்னாலே நன்மைபெற நெடிதான தூரமெல்லாம் நடந்தருளாநின்ற திருவடியை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(ருக)**

155. **உரலுக்ககுமோ ருறுபஞ்சமோ வுனைநச்சினே னெனையச்சமன்**
**விரலிட்டுத்தேர் வினைவல்லனோ விதிகைக்குளவ் விரலேலுமோ**
**பொரலுற்றநோய் கழலப்பணாய் புதிதாமருந் தொருதூதனால்**
**நரலைக்குளாய் வரவேண்டுமோ நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** குத்தா நின்ற உரலினுக்கு ஒருகாலத்திலேயும் தரித்திரம் வருவதில்லை; அத்தன்மை போலத் தேவரீரிடத்திலே நிரம்பிய ஐசுவரியமேயன்றி இல்லாததில்லையே; ஆதலால் உம்மிடத்திலே இச்சை கொண்டேன்; இனி என்னை அந்த எமனானவன் விரல் விட்டுக் காட்டியறிந்து வினை செய்ய மாட்டுவனோ? பிரமாவினுடைய கைகளிலே இராநின்ற விரலும் என்றலையிலே எழுத அசைய மாட்டா; வருத்தத்தைச் செய்யா நின்ற என்நோய் தீரும் படியாய்ச் செய்வதற்கும் புதிதாய் ஒப்பில்லாத சஞ்சீவியானது ஸ்ரீ அனுமாராலே வரவேண்டுமோ? க்ஷீராப்தி வாசனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** குத்தா நின்ற - தானியங்கள் இட்டுக் குற்றப்பட்ட (குற்றுதல் - குத்துதல் என்று கொள்ளப் பட்டுள்ளது) **(ருஉ)**

156. **சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதிநின் பெயரென்பதும்,**
**உமையாளுடன் பரமன்பரிந் துனைமாமறைப் பொருளென்பதும்,**
**தமையாள்வதென் றிமையோர்திலோத் தமையாதிபன்,**
**புகழ்கின்றதும்,**
**நமையாமலே யெனையாளுவாய் நாரரயணா! நாரரயணா!**

***(இ—ள்):*** சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயே யென்பதும், எச்சமயத்துக்கு முரியது உம்முடைய பெயரே யென்பதும், மகத்தாகிய வேதப்பொருள் நீயே யென்று உமையவளுக்குச் சிவன் பரிந்து நிச்சயம் பண்ணினதும், தேவதைகளுக்கும் திலோத்தமைக்கும் அதிபனாகிய தேவேந்திரன் இரட்சிக்குங் கர்த்தனேயென்று புகழ்கின்றதுங் கெடாமற்படி என்னை இரட்சித்தருள வேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(ருரு)**

157. **நீயண்டரா லடிபட்டநா ணினைவில்லைநின் னுதரத்துளே**
**போயண்டகோ டியிலெந்தவூர் புரையிற்குளே விளையாடினேன்,**
**மாயங்கடந் தறிவேனெனில் வரதன்கெடீர் வானோர்க்கெலாம்**
**நாயன்கெடீர் விடுமென்பனே! நாரரயணா! நாரரயணா!**

***(இ—ள்):*** தேவரீர் அசோதை முதலாகிய இடையராலே அடிபட்ட நாளையிலே அடியேனுக்கு நினைவில்லாமற்போயது; அது எதனாலேயென்றால், உமது குட்சிக்குள்ளே இராநின்ற அண்டகோடிகளிலே எந்தச் சந்துகளுக்குள்ளேயோ விளையாடினேன்; நீர் செய்யும் மாயம் நீங்கி யறிந்தேனேயானால் தேவதைகளுக்கெல்லாம் உம்மை, வரதனென்றும், நாயகனென்றும் அந்த இடையர்களுக்குத் தெரியப்படச் சொல்லிக் கெடுவிர்கள், விட்டு விடுங்கோளென்று நீக்கிவிடுவேன்; திருமேனி யென்னவிதமாக நொந்ததோ? இப்போது பெரியோர்களாலேயறிந்தேன்; அறிந்துஞ்சமயத்திலே உதவாதேபோனேன்; இனி வருந்தி என்ன பிரயோசனம்? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** குட்சி - வயிறு. **(ருச)**

158. **காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபா தகனாகையால்,**
**கூசிக்குலைந் துனைவந்தியேன் குறையாகுமோ**
**வினையென்பதோர்,**
**வாசிக்குவந் தருள்செய்குவாய் வயிரத்திரா வணன்றங்கைதன்,**
**நாசிக்குவா ளெறியையனே நாரரயணா! நாரரயணா!**

***(இ—ள்):*** காசியினிடத்திலேயும், கயாவினிடத்திலேயும், வாசம் பண்ணினாலும் நீங்காத பாவியானபடியினாலே மனது கூசிக் குலைந்து தேவரீரைத் தோத்திரம்

பண்ணாமல் விட்டுவிட்டேன்; அதினாலே உமக்குக் குறைவாகுமோ? அடியேனுடைய வினையென்னும் வாசி தீரும்படியாய் வந்து கிருபை செய்தருள வேண்டும்; முன்னாளையிலே வயிரத்தோடுங் கூடிய இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகையினது மூக்கறும்படியாய்ச் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** வாசி - வேறுபாடு. **(ருரு)**

159. **தாளுக்கவா வியநாவினுஞ் சலியாதுவா, சனியானநோய்**
**ஆளைக்கெடா தின்றைக்குவா, வசையாமலே யன்றைக்குவா,**
**தோளுக்குவா ளியையெய்தவன் றுயர்கண்டிரா வணனின்று போய்**
**நாளைக்குவா வெனுமையனே நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசை கொள்ளாநின்ற எனது நெஞ்சிலேயும் நாவிலேயும் வருத்தமில்லாமல் வரவேண்டும்; சனியான நோயானது அடிமையைக் கெடுத்துவிடாமல் இன்றைக்கே வர வேண்டும்; சரமதசையிலே யமனைக் கண்டு சஞ்சலிக்கு முன்னமே அன்றைக்கு வரவேண்டும்; முன்னாளையிலே பாணங்களை இராவணனது தோள்களிலே யழுந்தும்படியாய் எய்து அவனது துயரத்தைக்கண்டு வயிரத்தையுடைய ராவணா! நீ இன்றைக்குச் சென்று நாளைக்குவாவென்று கிருபை பண்ணாநின்ற என்னையனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** சரமதசை - இறுதிநேர நிலை **(ருசா)**

160. **விக்கற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சுமே லெழுதற்கிடம்**
**கக்கற்கிட மிருமற்கிடங் கருதற்கிடந் திருகற்கிடம்**
**சொக்கற்கிடங் குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வெருவற்கிடம்**
**நக்கற்கிடந் தருமெய்யருள் நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** விக்கலென்றும், பொருமலென்றும், மேல்மூச்சென்றும், கக்கலென்றும்,இருமலென்றும் கருதலென்றும், திருகலென்றும், சொக்குதலென்றும், குளிர்தலென்றும், சுடுதலென்றும், பயப்படுதலென்றும், நக்கலென்றும் சொல்லாநின்ற அந்தப் பீடைகளுக்கெல்லாம் இடங் கொடுத்திராநின்ற தேகத்தையுடைத்தாகிய அடியேனை இரட்சித்தருள வேண்டும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(ருஎ)**

161. **துளசிதளத் துளசிதளத் தூய்நீரதே குடிநீரதாம்**
**உளதாயிரம் பெயரெண்ணுநூற் றொருகோடிமந் திரமேலதாம்**
**வளமார்பின்மா மணியென்னவே மணியாமெனைப் பிணியென்செயும்**
**நளகூபரன் பகைவென்றவா நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** திருத்துழாயினது தளங்களிலே பொருந்துங் குளிர்ந்த நீரே குடிக்குங் கிஷாயங்களுக்கெல்லாம் மேலாகிய கிஷாய நீராகவும், நிலைபெற்றிராநின்ற ஆயிரந் திருநாமங்களும் நூற்றொருகோடி மந்திரங்களுக்கு மேலாகிய மந்திரமாகவும், வளம் பொருந்தா நின்ற திருமார்பிலே யிருக்கும் கவுஸ்துவ மணியே மணிகளுக்கெல்லாம் மேலாகிய மணியாகவும் இருக்கின்றன; ஆராயுமிடத்தில் இவைகளே மணிமந்திர அவிழ்தமாக விருக்கப் பிணியானது அடியேனை யென்ன செய்யும், நளகூபரனுடைய சாபத்தைத் தீர்த்து அருளிய ஸ்ரீமந் நாராயணனே, எ–று. **(ருஅ)**

**162.** **சுவையோசையு றொளிமாமணந் தொடராமனஞ் சுழல்**
**கெண்டையுங்,**
**கவைமானுமா னையும்விட்டிலுங் களிவண்டுமே,**
**விளிகின்றபோ,**
**லிவைதூயவென் றிவைதீயவென் றினியுண்டிலே**
**னினியென்செய்வே,**
**னவைதீரவே யருள்செய்குவாய், நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** ஆகாரவுருசையினாலே கெண்டையும், மணியோசையினாலே கிளைமானும், தேகபரிசத்தினாலே ஆனையும், தீபப் பிரகாசத்தினாலே விட்டிற் பூச்சியும், வாசனையினாலே மதர்த்தவண்டும் மனந்தொடர்ந்து சுழன்று விழுந்திறந்து போவதுபோலே, எனது பஞ்ச இந்திரியமும் இது நன்மை யென்றும் இது தீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை; இனி யென்செய்கேன்? இந்தக் குற்றந் தீரும்படியாய்க் கிருபை செய்தருளவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ–று.

***அ.பொ:*** உருசை – ருசி, சுவை. **(ருகூ)**

**163.** **நெட்டேணியின் படியெட்டுமோ நின்னெட்டெழுத்**
**தெழிலண்டமேல்,**
**எட்டாமெனும் பதமெட்டவே யிரதித்தசர்க் கரையேயதின்,**
**வட்டேபசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனும்,**
**நட்டேயருட் புனல்கட்டுவாய் நாராயணா! நாராயணா!**

***(இ–ள்):*** மூங்கில்களாலே நெடிதாயமைத்திராநின்ற ஏணியினது படிகளிலேயேறினால் பரமபதம் எட்டமாட்டாது, ஆதலால், ஏழு அண்டத்துக்கு மேலே எட்டாவதாகிய அந்தப் பரமபதத்துக்கு ஏறிவர உபாயமுண்டு; அதுயாதெனில், நினது திருமந்திரமாகிய எட்டெழுத்தையும் எனது நெஞ்சிலே நட்டு, இரம்மியமான சர்க்கரையும் கற்கண்டும் கனிந்த முப்பழமும் நித்திய

மதுரமாகிய நிறைந்தவமிர்தமும் ஆகிய இவைகளின் சுவைபோலே பரவும்படியாகக் கிருபைப்புனல் கட்டினால் ஏறிவருவேன்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூ0)**

164. **காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனலாஞ்சனம்**
**பூணும்புயம் புளகாங்கமே புகழ்நாவதே திகழ்கேள்வியே**
**ஆணும்பெணுஞ் சரணென்பதே யவையல்லனா னபராதிகாண்,**
**நாணும்பெயர்க் காதாரமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீர் திருவடியைக் காணாநின்ற கண்களும், உம்மைக் கண்டு குவியாநின்ற கைகளும், நின்னை நினையாநின்ற உள்ளங்களும், மந்திராக்கினி பொருந்திய சங்குசக்கர லாஞ்சனம் பூணாநின்ற புசங்களும், உனக்காகப் புளகம் கொள்ளாநின்ற தேகங்களும், உன்னைப் புகழாநின்ற நாவுகளும், நின் புகழ் கேட்காநின்ற செவிகளும் ஆகிய இவைகள் பொருந்திக் குடும்பத்துடனே சரணாகதி பண்ணாநின்ற அடியார்களைப்போலப் பொருந்தினவன் நான் அல்லன்; மிகுந்த அபராதத்தை உடையவன்; ஆதலால், தரிசனம் பண்ண வெட்கத்தை யடைந்தேன், இத்தன்மையாம் வெட்கத்தையடைந்த பேர்களுக்கெல்லாம் ஆதாரமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** லாஞ்சனம் - முத்திரை. **(கூக)**

165. **கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனான் விதைவித்திடும்**
**புவிநல்லதேல் விளைவெய்துமே புகழ்நல்லதேல் புகர்கேட்கவென்**
**செவிநல்லதே லருணல்லதே செயனல்லதே லியனல்லதே**
**நவிநல்லதே வரினாவிலே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** மிகுந்த மூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மையாயதோ? தீமையாயதோ? தெரியவராது; விதைக்காநின்ற விதையானது பூமி நல்லதாயிருப்பின் விளையுமேயன்றி விளையாமற் போவதில்லை; ஆதலாலுமது புகழுங் கிருபையுஞ் செயலும் இயலும் நல்லவையான படியினாலே அவற்றை யென்காதிலே கேட்டு நாவினாலே தோத்திரம் பண்ணினால் நன்மை வருமேயன்றித் துன்பம் வருவதில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூஉ)**

166. **பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ்**
**சசைகொண்டபா தகநீரிலே யமிழ்வேனையா ணவமாதியாம்**
**கசைகொண்டமோ துகைதாக்குமோ களவுள்ளநா னுனதன்பிலேன்**
**நசைகொண்டகா ரியமாகுமோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீரிடத்திலே அன்புபொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகம சாஸ்திரங்களை எனது காதானது கேட்பதுமில்லை; அவ்வாறு கேட்டு

நெஞ்சானது உருகுவதுமில்லை; அலையாநின்ற பாதகக்கடலிலே விழுந்த என்னைக் காமம் வெகுளி மயக்கமென்கிற பிரமை எடுத்துக்கொண்டு வினையானது மோதியடிக்கும் திருட்டு மனத்தையுடைத்தானவனா யும்மிடத்திலே பத்தியில்லாமல் பரமபதத்துக்குக் காதல்கொண்டதால் அந்தக்காரியமாகுமோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூகூ)**

**167.** ***பலகூறுபட் டொருநெஞ்சினன் பரிசென்னவெங் கணுமானவா,***
***விலகூறுகொண் டெனைவிண்டதென் விரனீக்கிமோர்***
***நுகர்வார்களோ,***
***மலகூறலாய் நீதானுமென் மதிதன்னைவிட் டெனையொத்தனை,***
***நலகூறுவார் சுரதேனுவே நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** அடியேன் பலவிதமான இடையூறுபட்ட ஒரு நெஞ்சை யுடையவனானேன்; தேவரீர் வாய்வு பரிசம்போலே யெங்கும் நிறைந்தவரானீர்; ஆதலா லென்னை மாத்திரம் நீங்கும்படியான குற்றத்தைத் தேடிவிட்ட தென்னோ? விரல் நீக்கி மோரைக் குடிக்கிற பேர்களுமுளரோ? கிருபையுற்றுப் பெருகிய உண்மையான இருதயத்திலே என்னை மறந்துவிட்டபடியினாலே தேவரீரும் அடியேனுஞ் சமானமேயன்றி அதிசயமில்லை; நன்மையாகத் தோத்திரம் பண்ணாநின்ற தேவர்களுக்குக் காமதேனுவாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.
**(கூச)**

**168.** ***வாஞ்சித்ததே வதையாகுநீ வடவேங்கடந் தனினிற்கவும்,***
***நீஞ்சித்திரிந் தனன்வீணிலே நிழல்கண்டபின் வெயினிற்பரோ,***
***காஞ்சித்தலத் தருளாளனே கனகோபுரக் கொடியாடுமொண்,***
***நாஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** அடியேனுடைய நெஞ்சிலே ஆசைகொள்ளாநின்ற தெய்வமாகிய தேவரீரிந்தத் திருவேங்கடத்திலேதானே யெழுந்தருளியிருப்பது தெரியாமல் வீணிலே உலகமெல்லாந் திரிந்தலைந்தேன்; இனி நிழல்கண்டபேர்கள் வெயிலிலே நிற்பதுண்டோ? கனம்பொருந்திய கோபுரங்களிலே கொடிகளாடாநின்ற அழகிய மதில்களோடுங் கூடிய காஞ்சித்தல முதலாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் அருளாளனென்றும் வள்ளலென்றும் விளங்கிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூரு)**

**169.** ***மைநாகமா ழியையண்டிவாழ் வகையென்னநின்***
***னருள்வெள்ளவாஞ்,***
***சையினாலிருந் ததிலூறவே சமைவேனுறத் தருமாறெவன்,***
***கையினாலறிந் திடரண்ணிய கலிதீரநீ யருள்செய்திடும்,***
***நைனாரினிற் சரியாவனோ நாராயணா! நாராயணா!***

***(இ-ள்):*** மைநாகமலையானது சமுத்திரத்திலே முழுகிவாழுந் தன்மைபோலே தேவரீருடைய கிருபாசமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊறும்படியாய்ப் பொருந்தின எனக்கு வரத்தைக் கொடுக்கும்படியான மார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது; நான், பிரமாவினுடைய சிரத்தைக் கிள்ளிப் பொருந்தாநின்ற தரித்திரம் தீரும்படியாய்த் தேவரீர் கிருபைபண்ணாநின்ற ருத்திரனுக்குச் சமானமாக மாட்டுவேனோ ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கசு௯)**

170. **எமக்கென்றுவாழ் குடும்பத்திலே யிழுப்புண்ணுவா**
**ரெம்தாதையர்,**
**தமக்கொன்றைவைத் திலரென்பரே சழக்குள்ளபேர்**
**வழக்குள்ளபேர்,**
**சுமக்கின்றவச் சுமையாளனச் சுதன்மற்றையச்**
**சுமைகட்கெலாம்,**
**நமக்கென்னகா ரியமென்பரே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** எங்களுக்கென்று வாழாநின்ற குடும்பத்திலே அவதிப்படும் பேர்களாகிய பாவிகள், நம்முடைய அவதி தீரும்படியாய் நம்முடைய பிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற் போனார்களேயென்று அழுவார்கள்; இந்தச் சம்சாரமாகிய சுமையைச் சுமக்காநின்ற புருஷன், அச்சுதனாகையாலே, அந்தச் சுமைகளைத் தாங்க நமக்கென்ன காரியமென்று அறிவாளர் சந்தோஷிப்பார்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கஎ)**

171. **பசுக்கட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயர்தம்**
**சிசுக்கட்குமா யினைமைந்தனாய்த் திருட்டுக்குமா யினையன்றுதான்**
**முசுக்கட்குமா யினைநாயினேன் முசிப்புக்குமா யருள்பூவையே,**
**நசுக்கிப்பின் வாசனைகொள்வரோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** ஆயர்பாடியிலே யிராநின்ற பசுக்கூட்டங்களுக்கு இரட்சக கர்த்தாவாகியும், இடைப்பிள்ளைகளுக்குப் பாடலுடனே ஆடல் காட்டியும், சிறுபிள்ளையாகி வெண்ணெய் திருடுந்தொழிலுக்கு இசைந்தது மல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்கு நேசமாகி இரட்சித்த தேவரீர் நாயினேனுடைய தளர்ச்சிக்குக் கிருபை பண்ணாமல் புட்பத்தை நசுக்கி முகர்வாரைப்போல உபேட்சை பண்ணலாமோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** உபேட்சை - அலட்சியம். **(கஅ)**

172. **குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும்**
**பலங்காணுநின் னடியாரெனிற் பவசாகரப் பரப்பென்னுளங்**

**கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே**
**நலங்காமலே நலங்காணுமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** குலவண்மையும், குலத்தின் நிலைமையும், குணப்பெருமையும் ஆகிய இவைகளைக் காணுமிடத்தில் பழுதாயிருந்தாலும், தேவரீருக்கு அடிமைப்பட்டார்களேயானால் மேன்மை பெறுவார்கள்; ஆதலால் பாவசமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடைய நெஞ்சமானது கட்டு விட்டுக் கலங்கி ஒதுங்கி நலங்காமல் நலங்காணும் கப்பலைப்போன்ற திருவடியைக் காணும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(சாசா)**

173. **ஈன்றோனுநீ யலனாநுமவ் வியலுந்தியண் டினனல்லனிற்**
**போன்றானெவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதிரான்**
**சான்றோர்முனே யினிநோயைநீ தவிராயெனிற் சபதங்கெடும்,**
**நான்றோரைவீ சியவாளனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** என்னைப் பெற்றவனும் நீயலவோ? நானும் அருமையான இயல்பொருந்திய உமது உந்தியிலே இருந்தவனல்லவோ? உம்மைப் போலே இரக்கமில்லார் எவரிருக்கிறார்கள்? போ போ; பிதாவானவன் பெற்ற பிள்ளையை வினவாதிருப்பானோ? பெரியோர்கள் முன்பாக என்னுடைய நோயை இனித் தீராமற்போனீரானால், உமது சரணாகதி சம்ரட்சணை யென்கிற நெறிகெட்டுப்போகும்; பகைஞரை வீசிய வாளாயுதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சம்ரட்சணை - பாதுகாப்பது. **(எO)**

174. **கஞ்சப்பதந் தனையங்ஙனே கட்டிக்கரைந்த வசத்தராய்**
**நெஞ்சத்துநா ரணவென்றுதா னியமித்துநித் திரைகொள்ளுவார்,**
**கொஞ்சத்தைநின் றளவாக்குவாய் குணபத்தைவாழ் குடியாக்குவாய்**
**நஞ்சத்தையா ரமுதாக்குவாய் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீருடைய தாமரை போலும் திருவடியை யுள்ளத்திலே நினைந்து ஞானக்கயிற்றினாலே அங்ஙனே கட்டிக் கரைந்துருகிப் பரவசத்தை அடைந்து ஸ்ரீமந் நாராயணனேயென்று நிச்சயம் பண்ணி ஆனந்த நித்திரை கொள்ளுவார்கள் துரும்புபோலே யிருந்தாலும் அவர்களை மகாமேருவாகச் செய்தருளுவாய்; இதுவுமல்லாமற் புழுக்களை ஐசுவரியத்தை யுடைத்தாகிய குடும்பங்களாகவும், விஷத்தை யமிர்தமாகவுஞ் செய்தருளாநின்ற மகிமையையுடைய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(எக)**

175. **எழுநெட்டிருப் பருமேனிவந் தென்கைக்ககப் படுமென்றுநான்,**
**தழுவிக்கொளத் திரிகின்றனன் சகலச்சரா சரமாகுநீ**
**வழுவிக்கொடங்கிங் கோடியே வரநல்கமுன் வரவஞ்சியே**
**நழுவிக்கொடே திரிகின்றதென் நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** நெடியதாய் வளர்ந்திராநின்ற உமது பருத்த திருமேனி யானது எனது கைக்குள்ளே வந்தகப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத் திரிகின்றேன், சகல சராசரங்களாகிய தேவரீரென் முன்னே வந்து வரத்தைக் கொடுக்கப் பயந்து அங்குமிங்குமோடி வழுவிக்கொண்டும் நழுவிக்கொண்டும் திரிகின்றதென்சொல்லும்? ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(எஉ)**

176. **எனைக்காக்கநீ வரமேன்மையென் றிருப்பாய்பராக் கதுவுண்டுநின்,**
**றனைக்காத்தவா கனமில்லையோ தகுசேனைகா வலனில்லையோ,**
**நினைக்காத்தசே டனுமில்லையோ நினைவில்லையோ**
**விமையோர்பிரா,**
**ணனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** அடியேனை இரட்சிக்க வருதல் மேன்மை யென்றெண்ணியிருப்பீர்; அப்படி இருக்கு மெண்ணத்தில் பராக்கு வந்ததோ? அல்லது தேவரீருக்கு வாகனமாகவும் துணையாகவும் காத்துக்கொண்டிராநின்ற கருடனும், சேனைக்காவலனும், ஆதிசேஷனும், தேவர்களாகிய வானவர்களுயிரை இரட்சிக்கச் சஞ்சீவி கொண்டுவந்த அனுமானும் இல்லாமற் போனார்களோ? அல்லது திருவுள்ளத்தில் ஞாபகமில்லையோ? சொல்லும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** பராக்கதுவுண்டு - வேறு கவனமாயிருப்பது. **(எசு)**

177. **கண்பொன்றுகோ மகன்மாற்றவன் கடுகொத்தபொய்க்**
**கிருள்பார்த்ததோர்,**
**பண்பொன்றுநா லுரைசெய்யநான் பலபொய்ச்சொலால்**
**விளையாடினேன்,**
**மண்பொன்றிநீ ரனல்பொன்றிவிண் வளிபொன்றவே வருமன்றுநின்,**
**நண்பொன்றுநீ தரல்வேண்டுமே நாராயணா! நாராயணா!**

**(இ-ள்):** கண்பார்வைபோன திருதராட்டிரன் குமாரனாகிய துரியோதனனுக்குப் பகைவனான தர்மராசன் கடுகளவு பொய் சொன்னதினாலே இருள்சூழ்ந்த நரகத்தைப் பார்த்தானென்றும் ஒப்பில்லாத பண்பு பொருந்துஞ் சாஸ்திரஞ் சொல்லச்சேயும், நான் அனேகமான பொய்களை விளையாட்டாகச்

சொல்லினேன், ஆதலால், எனக்கென்ன கதிவருமோ தெரியவராது; பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களுந் தேவர் குட்சியில் அடங்குங் காலத்திலே அடியேனும் வந்துசேருவேன்; அப்போதாகிலும் உமது நண்பொன்று மாத்திரம் வைத்து என்னை இரட்சித்தருளவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** சொல்லச்சேயும் - சொன்னபோதும், பிரிதிவி - நிலம், அப்பு - நீர், தேயு - தீ, குட்சி - வயிறு. **(எச)**

178. **போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவிபுல் லரையேந்தவே**
**ஆகேனெனா வுரைசெய்வளே லடியேனையேந் துகைவேண்டுவாய்,**
**மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடா சலவள்ளலே**
**நாகேந்தியே நகமேந்தியே நாராயணா! நாராயணா!**

***(இ—ள்):*** சர்ப்பங்களுக்கு இராசனாகிய ஆதிசேஷன் முடிகளிலே, ஏந்தாநின்ற உமது தேவியாகிய பூமிதேவியானவள் பாபிகளைத் தாங்குதற்கு வருத்தமாயிருக்குதென்று தேவரீருடைய திருச்செவியிலே விண்ணப்பஞ் செய்தருள்வாளாகில் அடியேனை மாத்திரம் தாங்கிக் கொள்ளுப்படியாய் வேண்டிக்கொள்ள வேண்டும்; தேவேந்திரனுக்குத் தம்பியாகவும், திருவேங்கடமலைக்கு நாயகனாகவும் பொருந்திய வள்ளலே! பாஞ்சசன்னியத்தையும் கோவர்த்தன கிரியையும் மேந்தியருளா நின்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(எரு)**

179. **ஊழிற்பிறந் திடுபாவநோ யுடலைத்தொடா வகைதந்திடாய்,**
**வாழிக்குநா யகனிந்திரன் மனுவின்பதம் பெறவிச்சியேன்,**
**ஆழிக்கையுன் கொடைமிக்கதென் றடியேன்மிகப் பெறலாகுமோ,**
**நாழிக்குடங் கலங்கொள்ளுமோ நாராயணா! நாராயணா!**

***(இ—ள்):*** இகத்திலே மனுச்சக்கரவர்த்தியினுடைய பதமும், பரத்திலே வாழ்வுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதமும் இச்சியேன், ஆகையால், ஊழ்வினையினாலே பிறந்திடா நின்ற பாவநோயானது, அடியேனுடைய தேகத்திலே சேராவகை செய்தருளிப் பரமபதத்தைத் தேவரீர் கடாட்சித்தருளவேண்டும்; திருவாழி தரித்த திருக்கரத்தையுடையவனே! உம்மிடத்திலே மிகுந்த தியாகமுண்டென்று நானிச்சைகொண்டதினாலே மிகுந்து வருமோ? என் பிராப்தி யெவ்வளவோ அவ்வளவே முடியும்; அதுவும் எத்தன்மையெனில் நாழிக்குடத்தைக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினால் நாழி கொள்ளுமேயன்றிக் கலங் கொள்ளுவதில்லை; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(எசா)**

180. **தனுவுக்குளே யுளராறுபேர் சலிகைக்குநா யகருன்னைநான்,
பனுவற்சொலா வகைதட்டுவார் பழகிச்சதா நெறிகட்டுவார்
அனுவற்றசோ ரரையெற்றியே யடியேனையா ளரசென்னவே
நணுகிக்கொடே திரிகின்றனன் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** என்னுடைய தேகத்துக்குள்ளே இராநின்ற காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்று சொல்லா நின்ற ஆறுபேர்களுண்டு; அவர் சலிகைக்கு நாயகராகிய தேவரீருக்குக் கவிதைகள் சொல்லாதபடி தட்டுவார்; அன்றியும் என்னோடு பழகி மார்க்கத்தையும் கெடுப்பார்; ஆதலால் நான் கிரமம் நீங்கிய அத்திருடர்களைக் கொன்று அடியேனை இரட்சித்தருளும் கர்த்தனே யென்று உம்மை, அடுத்துக்கொண்டு திரிகின்றனன்; என்னை யாண்டருள வேண்டும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** மாற்சரியம் - பொறாமை. **(எஎ)**

181. **உடைச்சேலைதா, குழைக்கோலைதா, வுணச்சோறுதா,
பணப்பேறுதா,
கடைப்பூவடா, வடைக்காயடா, கறிக்காசடா, கடைக்கோளனே,
கிடைக்கோடிவா, முடிச்சேதடா, வெனப்பாவையார்
கடுப்பார்பொலா,
நடைக்காசையா யிறுத்தேனலோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** உடுக்கிறதற்குச் சேலை தாடாவென்றும், காதுக்குப் பொன்னோலை தாடாவென்றும், உண்கிறதற்குச் சோறுதாடாவென்றும், மிகுந்த பணங்களைத் தாடாவென்றும், கடைப்புஷ்பங்களை வாங்கித்தாடாவென்றும், பாக்கு வெற்றிலை தாடாவென்றும், கறிக்குக் காசுதாடாவென்றும், கடைப்பட்ட கோளனேயென்றும் படுக்கைக்கு ஓடிவாடாவென்றும், அடிச்சோமனிலே முடிச்சேதடாவென்றும் வம்பாகப் பேசி வெறுத்துக் கெடுக்கின்ற வேசியருடைய பொல்லாத நடத்தைகளிலே ஆசையாய்த் திரவியத்தை யெல்லாம் இழந்துவிட்டு விழலானேன் ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(எஅ)**

182. **கன்னிப்பெருங் கடலோடுவான் கம்பத்திலே விளையாடுநான்,
உன்னிக்கொளும் பயமென்னநோ யுட்பட்டுநெஞ் சுழலவுற்றனன்
என்னிற்பயந் தெளிவித்திடா எல்லோர்க்குமீந் தென்மட்டிலே
நன்னிக்குணம் பிடிப்பட்டதே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பெரிதாகிய கடலிலே நீந்தவும், கம்பத்திலேறி விளையாடவும், பொருந்திய இளம் புத்தியை யுடையவன் சென்ற பிற்பாடு நினைத்துக் கொள்ளா நின்ற பயங்களைப் போலே, நோயுட் சிக்கிய பின் எனது நெஞ்சம் வருந்துகின்றனன். ஆதலால் என்னிடத்திலே உண்டாகிய பயத்தைத்

தெளிவித்தருள வேண்டும். யாவருக்குங் கிருபை செய்கிற நீ என் மட்டுஞ் செய்தருள உமக்கு லோபகுணம் பிடிப்பட்டதோ? ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**(எகூ)**

183. **புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பொன்னவன் கலையென்னவே,**
**கட்புண்டரீக கமலத்தினேர் கண்ணென்னவே, கரைகின்றிலேன்,**
**சட்புள்ளவுன் சமயத்திலே சலமண்டினேன் சரணண்டினேன்,**
**நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா! நாராயணா!**

***(இ—ள்):*** பட்சிரூபமாகிய கருடக்கொடியனே யென்றும், வண்மை பெற்ற சுவர்ணவஸ்திரனே யென்றும், தேனோடு கூடிய சிவந்ததாமரைக் கண்ணனேயென்றும், கரைந்துருகாத பாவியானவன், உமது, சமயத்திலே வயிராக்கியம் பொருந்தித் திருவடியடைந்தேன்; அடியேனிடத்திலே நேசமிருக்குமோ பகையிருக்குமோ தெரியவராது; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** புண்டரீகம் - தாமரை, சட்பு - சுவை, வயிராக்கியம் - பற்றறுப்பது.

**(அ0)**

184. **கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவாள்விழிப் படைகோடிகள்,**
**தச்சுக்கிடந் திடுநெஞ்சிலே தனியம்புதைத் தவருய்வரோ,**
**பிச்சுத்தயா பரனானநீ பெருமந்திரந் தனிலாற்றுவாய்,**
**நச்சுப்பெருஞ்சதை வேலையாய் நாராயணா! நாராயணா!**

***(இ—ள்):*** கச்சடங்காமலெழுந்த கொங்கைகளையுடைய கன்னியர் கடைக்கண் பார்வையாகிய ஆயுதகோடிகள் எனது நெஞ்சிலே தைத்துருகிப் புண்ணாகியது; அந்த நோயை என் சொல்வேன்? ஒரு பாணம்பட்டவர்கள் பிழைப்பதில்லையே; ஆதலால் நீ நித்தியபரனாகையினாலே இந்தப் பாணங்களைப் பிடுங்கிப் புண்களை உமது பெரிதாகிய திருமந்திரத்தினாலே ஆறும்படி செய்தருளவேண்டும்; ஆசையுடனே, உயர்ந்த அமுதக்கடலிலே மேவும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** நித்தியபரன் - என்றும் உள்ள மேலானபொருள் ஆனவன். **(அக)**

185. **எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற் பழிபாதகம்**
**செய்தாரிறுத் திடலன்றியே தெய்வந்தனைச் சிதைவாகவே**
**வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வாய்பாறுமே**
**நைதாதுவின் பரகாரனே! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பாணத்தை யெய்தவரிருக்க அம்பை நோகா நின்ற இழிவாளர்போலே பழிபாதகஞ் செய்த நானல்லவோ அனுபவிக்கவேண்டும், அதுவன்றித் தேவரீரை விதனத்தினாலே கெடுதலாக வைதென்ன? இதனால் நன்மார்க்கமுஞ் சத்தியமுங் கெட்டுப்போகுமேயன்றி வேறில்லை; சரமதசையினாலே நைந்து போகாநின்ற தாதுவுக்கு வயித்தியனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** விதனம் - விசனம், மனவருத்தம். **(அ௫)**

**186. முகிலுக்குளே யடிபட்டவோர் முதுமக்கள்போற்**
**றுணிவிக்குநோய்,**
**மிகலற்பமோ விடுவித்திடாய் விமலத்தநீர் மடுவுக்குள்ளே,**
**துகிலைக்கொடாய், துகில்விட்டிடாய், தொழவெட்கமே**
**வியமைக்கணார்,**
**நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** மேகவருஷத்தி லடிபட்ட கிழவர்கள் வருத்தத்தை யடைந்து இறக்குமாப்போல அடியே னிறக்கும்படியாய்த் துணிந்து செய்யாநின்ற நோயானது பெருகுதல் சொற்பமல்லவே; ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருளவேண்டும்; முன்னாளையிலே பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய யமுனாநதியிலே ஸ்நானம் பண்ணாநின்ற கோபிகா ஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கொடாமலும் விட்டுவிடாமலும் நின்ற காலத்திலே அவர்களும்மைத் தொழுது கேட்க வெட்கத்தை யுடையவர்களாய் மைதீட்டிய கண்பார்வையானது தங்கள் கொங்கையிலே படியத்தக்கதாய்த் தலையைக் கவிழ்ந்து கொள்ள நகைத்தருளா நின்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(அ௬)**

**187. கமலத்தைவந் தயல்வண்டுணுங் கருகாததே ரைகளொக்கவே,**
**அமலத்த நீரிடைவாழினு மதுபோலவே யயலாரெலாம்**
**நிமலப்பதந் தொழுமூரிலே நிலைபெற்றிருந் துனைவந்தியேன்,**
**ஞமலிக்குமோ ரருள்செய்திடு நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலே இராநின்ற தாமரையினுடைய பெருமையை யத்துடனே பிறந்த தவளை யறியமாட்டாது; பக்கங்களிலேயிருந்து வண்டுகள் அதின்தேனைச் சாப்பிட்டுச் சந்தோஷத்தையடையும்; அதுபோலத் தேவரீர் நிலைபெற்றிரா நின்ற ஊரிலே அடியேனிருந்துந் தேவரீரைத் தோத்திரம் பண்ணிக் கடைத்தேற வறியேன்; அயலிலே இராநின்ற பிரமா முதலாகிய பேர்களெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத்தொழுது கடைத்தேறுகிறார்கள்; கடைகெட்ட சுவானத்துக்கும் கிருபை செய்தருளின ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** சுவானம் - நாய். **(அ௭)**

**188. என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணிமண் ணென்**
**சொம்மெனும்,**
**தன்மாலிலே யறியாதபேர் தமதாகுமோ வவையாவுமே,**
**வன்மாயமென் றதுகண்டவர் வடவேங்கடப் பதிவைகியே,**
**நன்வானுயர் நிலைநிற்பரோ நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** என்மாடென்றும், என்வீடென்றும், என்பிள்ளையென்றும், என் பெண்சாதியென்றும், என்காணி மண்ணென்றும், என்னுடைமையென்றும், தங்கள் மயக்கத்தினால் மூடரானபேர் எல்லாம், சொந்தமென் றிருப்பார்கள்; அப்படி அவைகள் சொந்தமாகுமோ அவைகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமென்ன? இவையெல்லாம் வலிய மாய்கையென்று தெளிந்து நன்மைபெற்ற மானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையை நித்திய பதார்த்தமென்று நினைத்துத் தங்கி உயர்ந்த நிலைபெறுவார்கள் ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** நித்தியபதார்த்தம் - நிலையான பொருள். **(அரு)**

**189. பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயுவும்,**
**சுரலோகமுஞ் சுரரூபமுஞ் சுரபோகமுஞ் சுரராயுவும்**
**திரிலோகமென் றிவையாவையுந் திருவேங்கடந் தனிலுள்ளதால்,**
**நரலோகமே மிகநன்றுகா ணாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பரமபதமும், திவ்விய திருமேனியும், நித்தியானந்தமும், நித்திய தத்துவமும் மற்ற இமையவர்நாடும், இமையவர்மேனியும், இமையவர் ஆயுளும், இமையவர் போகமும், இமையவர்களுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதவியும் ஆகிய ஐசுவரியங்களெல்லாந் தமது திருவேங்கடத்தை யடைந்த பேர்களுக்கெல்லா முண்டாகிய தன்மையினாலே இந்த நரலோகமிகுந்த நன்மையானது ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** நரலோகம் - மக்கள் வாழும் இந்த நிலஉலகம். **(அசா)**

**190. அசவாதவன் பழிவேடரா ரடியேனுடன் பினினோயெலாம்**
**கசவாதுதின் பவர்போலவே கவராமலிங் கருள்கூறுவாய்**
**குசவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னமா**
**னசவாவியிற் பயிலன்னமே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அசைவில்லாமல் வலியபழியைச் செய்யாநின்ற வேடரானவர்கள் தயவில்லாமல் மிருகங்களைக் கொன்று தின்னுமாப்போல அடியேனுடைய தேகத்தைப் பிணியானது பிடுங்கித் தின்னாமல் இவ்விடத்திற் கிருபை செய்தருள வேண்டும்; கலப்பை யாயுதத்தை யுடையவனே! இளமையாகிய கோபாலனே! குட்டனாகிய வாமனனே! சூரியகுல மன்னவனே! மானசமடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** குட்டன் - குள்ளையானவன், மானசமடு - மானசரோவர் என்னும் ஏரி. **(அஎ)**

191. **மீன்கூருமங் கிடிபாதியாண் மிருகங்குறள் பரசாளிகோ**
**மான்கூரலா யுதனாயன்மேல் வருவாசியும் பெருவாசியோ**
**தேன்கூருமா சுமசாரமுஞ் சிறுபோகமோ கமசாரமும்**
**நான்கூருரை குருபத்தனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** மச்சமென்றும், கூர்மமென்றும், வராகமென்றும், நரசிங்கமென்றும், வாமனமென்றும், பரசுராமனென்றும், ஸ்ரீராமனென்றும், பலராமனென்றும், ஸ்ரீகிருஷ்ணனென்றும், வந்ததல்லாமல் மேலும் கற்கியாய் வருவதினாலே உமக்குப் பெரிதாகிய பலனுண்டோ? மதுரம் பொருந்திய ஆகம சாத்திரமுஞ் சிற்றின்பமாகிய காமசாரமும் நான்கு சாரமும் ஓதுவித்த குருவாகிய சாந்திபருக்குப் பத்தனாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(அஅ)**

192. **மிறுக்கத்தகா தெனதாவியின் விளக்கிற்குநின் னருணெய்யிடாய்,**
**பொறுக்கத்தகா ததுமெய்யுடல் புழுக்கத்தகா தொருபோரிலே,**
**குறுக்கிட்டபேர் நடுக்கிட்டிடக் குலைவாணனார் திரடோளெலாம்,**
**நறுக்கிக்கையோர் துணைவிட்டவா நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அவமாகிய எனது தேகமானது புழுக்கங் கொண்டு பொறுக்கத்தகாமல் இறந்து போகிறது தகுதியான காரியமல்லவே; ஆதலால் உயிராகிய விளக்கானது அவிந்துபோகாமல் தேவரீர் கிருபையாகிய நெய்யமுது பெய்தருளவேண்டும்; ஒப்பில்லாத யுத்த முகத்திலே குறிக்கிட்ட சிவன் முதலானபேர் நடுக்கங்கொள்ளப் பொல்லாத வாணாசுரனுடைய விஸ்தாரமான தோள்களையெல்லாஞ் சக்கரத்தினாலே நறுக்கி இரண்டு கையை மாத்திரம் விட்டருளிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(அகூ)**

193. **புன்சொல்லிலே யகப்பட்டதும் போதாமலே யவமேற்றெனக்**
**கென்சொல்லுபோ மெனவெண்ணியோ யாதோவெனக் கீயாதுநீ,**
**தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்மொழிச் சதுர்வேதமா,**
**நன்சொல்லிலே விளையாடுவாய் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** அடியேனுடைய மூடபுத்தியினாலே பாடாநின்ற புல்லிதாகிய கவிதைச் சொல்லிலே அகப்பட்டதும் போதாமல் எனது அக்கியானத்தையெல்லாம் ஏற்றபடியினாலே இவனுக்கு என்ன சொல்லுவோமென்று திருவுள்ளத்திலே யெண்ணியதோ என்னமோ கிருபை செய்தருளாம லிருப்பதை அறிகிலேன்; தமிழாகிய தென்சொல்லிலேயுங் கிரந்தமாகிய வடசொல்லிலேயுந் திருவாய்மொழியென்னும் நான்கு வேதத்தினுடைய நன்மைபெற்ற சொல்லிலேயுந் திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** அவம் - வீணாக. **(கூ0)**

194. **மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந் திடதேகமும்,**
**சலியாமையும் பகைநாசமுந் தனராசியுந் தகுசீலமும்**
**கலியாணமும் பெறநீதரக் கடனாளியாற் பினுமுன்னைநான்,**
**நலியாமலே யருள்கூருவாய் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** மெலிதலில்லாமையும், அழகிய ஞானமும், மிகுந்த போகமும், வலிய தேகமும், சலியாமையும், பகைநாசமும், திரவியராசியும், யோக்கியமான ஆசாரமும், கலியாணமும் ஆகிய இவையெல்லாந் தேவரீரிடத்தில் நான் பெறும்படியான கடன்காரனாதலால் இனி உம்மை நான் வருத்தாமல் பூரணமான கிருபை செய்தருளவேண்டும்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூசு)**

195. **சமர்த்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேது,மிக்**
**கமைத்தேது,மே லடைவேதுகாரணமேதுபூ ரணமேதுசங்**
**கமைத்தே,துரா கதமேதுசொல் கமையேதுசெல் கதியாவுநீ**
**நமத்தேதுவா ரகைவாசனே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** சாமர்த்தியங்கள் தாமேது? நல்ல தருமங்கள் தாமேது? அருமையான தயவுகள் தாமேது? அரியதவங்கள் தாமேது? மிகுந்த அமைப்புகள் தாமேது? மேலாகிய அடைவுகள் தாமேது? காரணங்கள் தாமேது? பூரணங்கள் தாமேது? கூட்டங்கள் தாமேது? ஆணவங்கள் தாமேது? சொல்லிய பொறுமைகள் தாமேது? செல்லாநின்ற மோட்சங்கள் தாமேது? இவைகள்யாவும் தேவரீருடைய கிருபையேயன்றி வேறில்லை; ஆதலால் உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ் செய்து நின்றேன்; துவாரகா வாசனாகய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

குறிப்பு: சாமர்த்தியங்கள் தாம் ஏது முதலியவற்றைச் சாமர்த்தியம் தான் ஏது என ஒருமையாக உரை எழுத வேண்டும். **(கூரு)**

196. **பித்தங்கயஞ் சொறிதே மல்கம்பிதமீளை காமாலைபாண்டுவுன்**
**மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைவிக் குதல்கக்குவா**
**யுத்தம்பனந் தலைநோவுமற் றுளநோயெலாந் தொடராமலாள்**
**நத்தம்மகர்க் கொருகாவல நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** பித்தம், க்ஷயம், சொறி, வெள்ளைப்பாண்டு, நரை, ஈளை காமாலைப் பாண்டு, உன்மத்தம், சுரம், சளி, சன்னி, கால்வலி,சூலை, விக்கல், கக்குவாய், தம்பனம், தலைநோய், மற்றுஞ் சொல்லா நின்ற நோய்களெல்லாம் அடியேனைத் தொடராமல் இரட்சித்தருள வேண்டும்? ஆசைகொள்ளாநின்ற அழகிய தேவர்களுக்கெல்லாம் ஒப்பில்லாத தெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

***அ.பொ:*** தம்பனம் - அடக்குதல். **(கூகு)**

197. **துறையூருமா முதலைக்குலச் சுனையொத்தமன் னவர்வாசலில்**
**குறையூர்வதுங் கசைசாடவே குலைக்கின்றதுந் தலைசோரியாய்**
**முறையூர்வதும் பிறகுன்னையே முனிபாவமுந் தெரியேனலேன்**
**நறையூரனே கருடாசலா! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** முதலைக்குலஞ் சஞ்சரியாநின்ற துறையையுடைய சுனைபோலேயிராநின்ற துஷ்டமன்னர் வாசலிலே குறைவுகளைச் சொல்லுமிடத்தில் அவர்கள் தருமம் விசாரியாமல் நேர்ந்தபடிக்குப் பிரம்புகளாலே அடித்திடத் தேகம் நொந்து கலைகளிலே உதிரம் பெருகும் போது முறையமிட்டுக் கேள்வியில்லாமல் பிற்பாடு தேவரீரைத் தெய்வமேயென்று வெறுத்துக் கொள்பவருடைய பாவந் தீர்வதேயில்லை, ஆதலால் தேவரீர் சன்னிதானத்திலே முன்னமே முறையமிட்டேன்; திருநறையூரிலேயுந் திருவேங்கடமாகிய கருடாசலத்திலேயும் நிலைபெற்ற ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூச)**

198. **பிணிவிட்டதே விதியாவையும் பிழைவிட்டதே சுகசீவியாய்**
**பணிவிட்டதே நமனாரெனும் பகைவிட்டதே பலபூசலும்**
**தணிவிட்டதே யதிஞானமே தகவிட்டதே யுனையோதவாய்,**
**நணிவிட்டதே யென்மட்டிலே நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** தேவரீர் கிருபை செய்ததனாலே என்னளவில் சனனங்கள் தோறுந் தொடராநின்ற பிணி நீங்கியது; இன்னும் அவ்வருள் விதிகளையும், எமன் பகைகளையும், மன்மதன் சண்டைகளையும் நீக்கிச் சுகசீவியாகவும் பண்ணிவிட்டது; அதிகஞானத்தை யடையும்படியும் செய்தது; அதனால் என் வாய் உம்மை ஓதும்படியாகவும் பொருந்தி விட்டது; ஸ்ரீமந் நாராயணனே, எ-று.
**(கூரு)**

199. **வாய்செய்தபுண் ணியங்கோடியென் வழிசெய்தபுண்ணி**
**யங்கோடியென்,**
**தாய்செய்தபுண் ணியங்கோடிதந் தையர்செய்தபுண்**
**ணியங்கோடியென்,**
**பாசெய்தபுண் ணியங்கோடி யென் பதிசெய்தபுண்**
**ணியங்கோடியென்,**
**நாசெய்தபுண்ணி யங்கோடிகா ணாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** எனது வாக்கும், எனது மரபும், எனது மாதாவும், எனது பிதாவும், எனது பாடலும், எனது ஊரும், எனது நாவும் ஆகிய இவைகளெல்லாஞ் செய்த புண்ணியம் அனேகங்கோடி யானபடியினாலே தேவரீரைத் தரிசிக்கப் பெற்றேன்; ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூசா)**

200. **உன்கோயிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும்**
**நின்பாடலென் வாய்பாடவு நின்காரியங் கைசெய்யவும்**
**என்காதுநின் புகழ்கேட்கவு மென்னெஞ்சநின் னினைவுன்னவும்,**
**நன்காகநல் வரமேதரு நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** உமது திருக்கோயிலை என்கால் சூழவும், உமது திருவடியை என் கண் காணவும், உமது சரித்திரத்தை என்வாய் பாடவும், உமது கைங்கரியத்தை என் கை செய்யவும், உமது புகழை யெனது காது கேட்கவும், உமது தியானத்தை என்னெஞ்சு செய்யவும் பொருந்துகின்ற நல்ல வரத்தைக் கொடுத்தருள வேண்டும் ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூஎ)**

201. **இற்கண்ணெலா நாராயணா! வெங்கெங்கணு நாராயணா!**
**சொற்கண்ணெலா நாராயணா! தொழிலெங்கணு நாராயணா!**
**முற்கண்ணெலா நாராயணா! முகமெங்கணு நாராயணா!**
**நற்கண்ணெலா நாராயணா! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** வீடுகள் யாவையினும், வெளிகள் யாவையினும், சொல்லுகள் யாவையினும், தொழில்கள் யாவையினும், முன்னிடங்கள் யாவையினும், முகங்கள் யாவையினும், மற்ற நல்லிடங்களெல்லா வற்றிலும் பரிபூரணமாயிருப்பது நாராயணாவென்னும் தேவரீர் சொரூபமேயன்றி வேறொருவருண்டோ ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூஅ)**

202. **தேறுந்திருப் பதிவேங்கடந் தெரிசித்துநா ரணவென்றுதான்,**
**நூறும்படிப் பவர்பன்னுவார் நூறும்மிருந் துலகாண்டபின்**
**பேறும்பெறும் பிள்ளைப்பெறும் பெருமைப்பெறும் பெறுவிப்பையே,**
**நாறுந்துழா யணிமார்பனே! நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** வேதமுடிவிலே தேறாநின்ற திருவேங்கடமென்னுந் திருப்பதியைத் தரிசித்து ஸ்ரீமந்நாராயணசதகம் நூறுபாடலையும் படிப்பவர்களும், அர்த்தங்கள் ஆராய்பவர்களும், நூறுவருஷமுமிருந்து பிள்ளைகள் முதலாகிய உலகாட்சியினது பலனை அனுபவித்த பிற்பாடு அவர்க்குப் பெருமையைப் பெற்ற பரமபதத்தைக் கடாட்சித்தருள்வாய் பரிமளிக்குந் திருத்துழாயணிந்த திருமார்பையுடைய ஸ்ரீமந் நாராயணனே, எ-று. **(கூகூ)**

203. **நனிவாழி!நின் பல்கோயிலு நனிவாழி!நின் பலதேவிமார்,**
**நனிவாழி!நின் னடியாரெலா நனிவாழி!நின் பல்வைபவம்,**
**நனிவாழி!நின் வடவேங்கட நனிவாழி!நின் கவிகற்றபேர்,**
**நனிவாழி!நின் கவிகேட்டபேர் நாராயணா! நாராயணா!**

***(இ-ள்):*** சோழநாட்டிலும், பாண்டிநாட்டிலும், மலைநாட்டிலும், நடுநாட்டிலும், தொண்டைநாட்டிலும், வடநாட்டிலும், தேவரீர் நித்திய வைபவமாய் விளங்காநின்ற

திருவரங்கம் பெரியகோயில் முதல் பரமபதம் அந்தியமாகவிராநின்ற நூற்றெட்டுத் திருப்பதியிலும் பாகவதர்கள் உச்சீவிக்கத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிரா நின்ற தேவரீருடைய திருக்கோயில்களெல்லாம் பல்லாண்டு பல்லாண்டு, மிகுதியாக வாழ்க; தேவரீருடைய வட்சஸ்தலத்தில் இன்பமுற்று, வீற்றிராநின்ற மகாலட்சுமியும், பூமிப்பிராட்டியும், நீளாதேவியும் பல்லாண்டு, பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர்; திரிகாலங்களிலும், இடைவிடாமல் தமது திருவுள்ளமே ஆலயமாகச் செய்துகொண்டு தேவரீரைத் தியானஞ் செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் கணுள்ள, பரம பாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாகவும் வாழ்க; தேவரீருடைய மகிமையுற்று விளங்கும் வைபவங்கள் பல்லாண்டு வாழ்க; சமஸ்கிருத பாஷைக்கும் திராவிட பாஷைக்கும் எல்லையாகியும், சதுர்வேதங்களும் மற்றைய சாஸ்திரங்களும் சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம் முடிவாகியும், தர்மத்துக்கு வரம்பாகியும், பூமிதேவிக்கு மணிமுடியாகியும், தனக்கொப்பில்லாமல் பெருமை பொருந்திய சொர்ணமயமாகியும், ஓங்கிய தேவரீர் எழுந்தருளியிராநின்ற வடக்கின்கணுள்ள திருவேங்கடமலையும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது; திரிகாலக்கியானிகளாகிய வசிஷ்டவாமதேவ விஸ்வாமித்திர வியாசபராச சுகசவுனகாதிரிஷிகளும், மகாத்துமாக்களாகிய, நம்மாழ்வார் முதலாகிய ஆழ்வார்களும், பதோத்தராகராகிய இராமாநுஜாசாரியரும், வரகவிகளான தண்டி, பவபதி, காளிதாசன், கம்பர் முதலாகிய கவிச்சக்கரவர்த்திகளும், பரமபாகவதோத்தமர்களாகிய அழகிய மணவாள பிள்ளைப் பெருமாளையங்கார் முதலாகியவர்களும், இவர்களாற் செய்தருளிய வேதங்களும், வைஷ்ணவாகமங்களாகிய ஸ்ரீபாஞ்சராத்திர வைகாசனங்களும், இதிஹாசங்களாகிய இராமாயண பாரதங்களும், வாமம் வராக முதலிய புராணங்களும், மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளில் சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்திய கல்யாண குணங்களை அத்தியயனஞ் செய்த பாகவதர்கள் யாவரும் பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர்; இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாகச் செய்தருளிய கவிகளைச் சிரவணானந்தத்துடன் கேள்வியுற்ற பாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவர் ஸ்ரீமந் நாராயணனே, எ-று.

**அ.பொ:** உச்சீவிக்க - ஆபத்துகளிலிருந்து தப்பி உயிர் வாழ, வட்சஸ்தலம் - மார்பு, திரிகாலம் - முக்காலம், அத்தியயனம் - வேதம் ஓதுதல், பதோத்தாரகர்- கீழ் மக்களை உயர்த்தி மேல் நிலைக்குக் கொண்டு வந்தவர், திரிகாலக்யானி- முக்காலமும் உணர்ந்த ஞானி, பவபுதி - பவபுதி என்ற கவி, சிரவண ஆனந்தம்- கேட்பதனால் ஏற்படும் மகிழ்ச்சி. **(௧00)**

வடவேங்கட

**நாராயணசதகம் மூலமும் உரையும் முற்றிற்று.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும்

பெயருள்ள

திருச்சிற்றம்பல நாவலரவர்கள்

இயற்றிய

# அண்ணாமலை சதகம்

# அண்ணாமலை சதகம்

இச்சதகம் மாம்பாக்க உபாத்தியாயர் என்ற பெயரில் பிரசித்தமாக இருந்த திருச்சிற்றம்பல நாவலர் அவர்களால் இயற்றப்பட்டது. இந்நூல் சாலிவாகன சகாப்தம் *1770*-க்குச் சமமான கி.பி. *1848*-இல் நிறைவு செய்யப்பட்ட செய்தி இந்நூலின் *101*-ஆம் பாடலால் புலப்படுகிறது. இந்நூல் காப்பு, நூற்பெயர் என்பன பற்றிய இரண்டு வெண்பாக்களும், *103* பன்னிருசீர் ஆசிரிய விருத்தங்களும் கொண்டு அமைக்கப்பட்டது. இந்நூலுக்கு 'அண்ணாமலை சதகம்' என்றும் 'வசந்தராயச் சதகம்' என்றும் பெயரிடலாம் என்பது ஆசிரியர் கருத்து.

நூலின் தொடக்கத்தில் அண்ணாமலைப் பெருமான் கடவுள் வணக்கம், அவருக்கு அபிடேகம் செய்யும் பொருள்கள், திருவண்ணாமலையில் உள்ள தீர்த்தத் தொகைகள், மாதந்தோறும் அப்பெருமானுக்குச் செய்யப்படும் அபிடேக வகைகள் என்பனவே திருவண்ணாமலையைப் பற்றிய சிறப்பான செய்திகள். அடுத்து, திருக்கோவலூரைப் பற்றிய செய்திகள் சற்று மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. திருக்கோவலூர் தலப்பெருமை, திருமுனைப்பாடி நாட்டின் நான்கெல்லை, தெய்விக மன்னன் பிறப்பு, அவன் வாழ்த்து, அவனுடைய நான்கு முடிகள், பன்னிரண்டு மலைகள், முதலில் அவன் மணந்த தேவிமார்கள், பின்பு அவன் மணந்த ஏழு ஊர்களைச் சார்ந்த அரசரின் மகளிர், அங்கவை சங்கவை என்பவரை மணந்தமை, அவன் மரபில் வந்த மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர், குலசேகர நாயனார் பற்றிய செய்திகள் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

இவற்றைத் தவிர இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவும் பழைய சாத்திர நூல்களை அடியொற்றிப் பொதுவாக நால்வகை வருணத்தாருக்கும் நல்வாழ்வு வாழக்கூறப்பட்ட செய்திகளே.

பொதுமக்கள் பெரும்பான்மையினர் சைவராய் இருந்தமையின் விபூதி தரிக்கும் விதி, விபூதியைக் குழைத்து இடும் விதிகள், பெரியவர்கள் கையிலிருந்து விபூதியை வாங்கித் தரிக்கும் விதிகள், உருத்திராக்க மணிகளை அணியும் விதிகள், பிரதோட தரிசனம், சிவபூசைக்கு உரிய பூக்கள், பூசைக்கு ஆகாத பூக்கள், சிவலிங்க வகை, சைவ மடங்களின் வகை, அர்ச்சனை முதலிய

அறச்செயல்கள், சபமாலை, சபம் செய்யும் முறைகள், ஆலயங்களில் தீபமிடல் முதலிய இம்மை மறுமைப் பயன்தரும் செய்திகள் கூறப்படுகின்றன.

நால்வகை வருணத்தவரின் தொழில்கள் விரித்துரைக்கப்படுகின்றன. பொதுவாக அறிய வேண்டிய பெண்கொள்ளும் முறை, பெண்கள் இலக்கணம், ஆண்கள் இலக்கணம், *32* அறங்கள், பல் துலக்கும் குச்சிகளை அமைத்தல், உண்ண ஏற்புடையன அல்லாத பொருள்கள், உணவு உண்ணும்போது கடைப்பிடிக்கத் தக்க சமய ஒழுகலாறுகள் நோய் வாராமல் வாழும் வகை, கொக்கோக நிலை என்பன குறிப்பிடப்படுகின்றன.

உடல் உண்டாகும் முறை அதன் வளர்ச்சி, புணர்ச்சிக்கு ஆகாத நாள்கள், பெண்கள் பூப்பெய்தும் நாள் பற்றிய பயன்கள், நவகிரகம் பற்றிய பல செய்திகள், தேவாரப் பாடல்கள், தேவாரத் திருத்தலங்கள், நல்லோர், தீயோர் தேடும் பொருள் செலவிடப்படும் வகை, சிற்றின்பம், பேரின்பம் அட்டாங்க யோகம் முதலிய பலவகைச் செய்திகளை இயம்பி இந்நூல் அவையடக்கம் வாழ்த்து என்பனவற்றோடு நிறைவுறுகிறது.

பாடல்கள் எளிமையாக உள்ளமையால் பொருளைத் திரிபின்றி உணரப் பாடல்களின் கருத்துரைகளே தரப்படுகின்றன. ஆங்காங்கு அருஞ்சொற்பொருள் தேவைப்படுவதால் அருஞ்சொற்பொருள் வரையப்பட்டுள்ளது.

# அண்ணாமலை சதகம்

## விநாயகர் காப்பு

### நேரிசை வெண்பா

அண்டமனைத் தும்பரவு மண்ணா மலைச்சதக
மொண்டமிழாற் பேதையே னோதவே - தொண்டர்பணிந்,
தெண்ண வரந்தருநல் யானைதிறை கொண்டருண்முக்
கண்ண வரந்தருந்தாள் காப்பு.

**அருஞ்சொற்பொருள்:** பேதையேன் - அறிவில்லாத யான்; யானை - யானை முகத்தவன்; திறை - அடியார் வழங்கும் காணிக்கை; முக்கண்ணவர் - விநாயகப் பெருமான்; அம் தரும் தாள் - அழகு தரும் திருவடிகள்.

## நூற்பெயர்

### நேரிசை வெண்பா

மன்னுதிரு அண்ணா மலைச்சதக மென்றும்பேர்
பின்னு மொருநாமம் பேசுவாம் - இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்குந் துதிப்பதா மே.

## நூல்

## கடவுள் வாழ்த்து

### ஆசிரிய விருத்தம்

204. கார்கொண்ட திருமேனி செந்தா மரைக்கணன்
கமலால யத்தெண்கணன்
காணரிய பேரொளிச் சுடராகி யண்ட
கடாகமுழ டுருவிநின்ற
வேர்கொண்ட திருவுருவ மருவுருவ மாகியுல
கெங்கும் வியாபியாகி
யெல்லா வுருக்கடொறு முயிராகி யவ்வுயிர்க்
கின்பவா னந்தமாகிப்

பார்கொண்ட தூலசூக் குமமாகி யழியாத
பரசத்தி யிடமுமாகிப்
பஞ்சகிர்த் தியமும் புரிந்தருள் சுரந்தெழும்
பரசிவ மகாலிங்கமே!
ஆர்கொண்ட மலைவளச் சிங்கபுரி யரசுசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பிரமன், திருமால் இவர்களால் முடி, அடி காணமுடியாத அரு உருவமாகிய தீப்பிழம்பு வடிவினன். உயிர்கள் தொறும் கரந்து பரந்து தங்குபவன். உயிர்களுக்கு இன்பக்கடலாயவன், பருப்பொருளும் நுண்பொருளுமாயவன். பார்வதி இடப்பாகன். ஐந்தொழில் புரிபவன். அருள் சுரந்து எழுபவன் அண்ணாமலை இறைவன்.

**அ.பொ:** எண்கணன் - எட்டுக்கண்களை உடைய பிரமன்; அண்ட கடாகம்- அண்டங்களின் உச்சி; தூலம் - பருப்பொருள்; சூக்குமம் - நுண்பொருள்; பரசத்தியிடம் - பராசக்தி உமை இடப்பாகம்; பஞ்சகிருத்தியம் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்; ஆர் - ஆத்திமரம்; சிங்கபுரி - வசந்தராயர் என்ற சிற்றரசரின் தலைநகர்; அண்ணா- அண்ணாமலை. (க)

## திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை

205. கருணா கரக்குக முனிக்காக வேமுனங்
கைலாய கிரியின்முருகன்
கைவேல் விடுக்கவந் தூன்றலா லேதிருக்
கையில்வே லூராகுமெய்ப்
பொருணாய னாரவ தரித்ததல மௌவையார்
புகலும்வெண் பாவினுக்காய்ப்
பொங்குபா னெய்வந்த பெண்ணைநதி சூழ்தலம்
பொன்மாரி பொழியுந்தலம்
வருமா வருட்பெரிய நாயகியும் வீரட்ட
மாதேவர் வாழுந்தலம்
மாதவக் குகமுனி மகந்தனிற் றெய்விக
மன்னனவ தாரத்தலம்

அருணா சலக்கிருஷ்ண தாண்டவ வசந்தவா
ணாந்தகை வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** குக முனிக்காக முருகன் வேலினை விடுக்க, அஃது வந்து ஊன்றலால் வேலூர் என்று பெயருடைய தலம் மெய்ப்பொருள் நாயனார் அவதரித்த இடமாகும். ஔவையாருக்காகப் பாலும் நெய்யும் வழங்கிய தென்பெண்ணை நதி சூழ்வதும் பொன்மாரி பொழியப் பெற்றதும் பெரிய நாயகியுடன் வீரட்டமா தேவர் கோயில் கொண்டருளியிருப்பதும், குகமுனிவர் வேள்வியில் தெய்விக மன்னவன் அவதரித்த சிறப்புடையதும் திருக்கோவலூர்த் தலமாகும்.

**அ.பொ:** கருணாகரம் - அருளுக்கு இருப்பிடம்; குகமுனி - திருக்கோவலூரில் வாழ்ந்த பெரியவர் ஒருவர் பெயர்; மகம் - யாகம்; வாணாந்தகை - வாணகோவரையர் மரபினன். **(உ)**

## திருவண்ணாமலையில் இறைவனுக்குச் செய்யும் வரிசை - 206, 207

206. சுத்தசல மபிடேக நல்லெண்ணெ யரிசிமாத்
தூண்மஞ்ச ணெல்லிமுள்ளி
தூபஞ்ச கௌவியமோ டாவிநெய் பாறயிர்
சுவையான பஞ்சாமிர்தம்
உற்றபல மாக்கதலி மாதளையு மெலுமிச்சை
யோங்குதம ரத்தைநார்த்தை
யொண்கனிச் சுளைகுளங் சித்தேன் றிரட்டுப்பா
லுயர்கருப் பஞ்சாறுடன்
மெத்துமிள நீரன்னம் வில்வநீர் தபனநீர்
மிளிர்பொன் னிரத்நோதகம்
மென்பசுங் கற்பூர நன்புனுகு சந்தனம்
விளங்குதா ராபிடேகம்
அத்தனுக் கித்தகைய வபிஷேக மேபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சுத்தநீர், எண்ணெய், அரிசிமாவு, மஞ்சள், நெல்லி, முள்ளி விழுது, ஆன் ஐந்து, பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், பஞ்சாமிர்தம், வாழை, மாதுளை,

எலுமிச்சை, தமரத்தை, நாரத்தைப் பழங்கள், பலாச்சுளை, கிச்சிலிப்பழம், தேன், திரட்டுப்பால், கருப்பஞ்சாறு, இளநீர், அன்னம், வில்வம் ஊறவைத்த நீர், வெந்நீர், பொன், இரத்தினங்கள், செம்பினுள் இடப்பட்ட நீர், பச்சைக் கற்பூரம், புனுகு, சந்தனம், பல நீர்த்துளிகளாக அபிடேகம் செய்யும் நீர் இவை அபிடேகிக்கப்படும்.

**அ.பொ:** மாத்தூள் - அரிசி மாவு; தமரத்தை - ஒரு வகைப்பழமரம், குளஞ்சி-சர்க்கரை நாரத்தை; மெத்தும் - மென்மையான; தபனநீர் - வெந்நீர்; பொன்னி-காவிரி நீர்; ரத்நோதகம் - நவமணிகள் ஊற வைக்கப்பட்ட நீர்; தாராபிடேகம்-பல தாரைகளால் சல்லடைக்கண்கள் வழியே ஊற்றிச் செய்யப்படும் அபிடேகம்.

(ரு)

**207.** **தருமல ரெடுத்துனைப் பூஜைபுரி வோமெனிற்**
**றண்மலர்த் தேனருந்தச்**
**சமையந் தெரிந்துமுகை யவிழ்கின்ற போதுவீழ்**
**தனிவண்டி னாலெச்சிலாம்**
**விரிபுன லெடுத்துனக் காட்டுவோ மென்கிலோ**
**மேயுமண் டூகமாமை**
**மீனத்தை ஞெண்டிருந் துலவலா லந்தநீர்**
**மிகுதியுந் தானெச்சிலாந்**
**தெரிமறை யிருக்காதி மூவர்தே வாரங்க**
**டிருவாச கத்துதிகளைச்**
**செய்வமெனி லோதுதிகள் செய்நாக்கு ளெச்சிலென்**
**செய்துனக் காளாவனோ**
**அருள்பரம தேசிகக் குகநமசி வாயர்திரு**
**வருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** நறுமலர்கள் எனின் அவை வண்டுகள் தேன் உண்ட எச்சிலாக உள்ளன. ஆற்றுநீரை அபிடேகிக்கலாம் எனின் அது தவளை, ஆமை, மீன், நத்தை, நண்டு இவை உலவுதலால் எச்சிலாயிற்று. வேதங்களையும் தேவார திருவாசகங்களையும் துதிக்கலாம் எனின் அவற்றை ஒலிக்கும் போது நாவின் எச்சில்பட அவை எச்சிலாகிவிடும். இவ்வாறாதலின் யான் மலரிடுதல், அபிடேகித்தல், துதித்தல் என்ற மூன்றனையும் விடுத்து வேறு யாதனால் உனக்கு அடிமையாகுவேன்?

**அ.பொ:** மண்டூகம் - தவளை, குகை நமசிவாயர் - சிவனடியாருள் ஒருவர்.

(சு)

## திருவண்ணாமலையில் உள்ள தீர்த்தங்கள்

208. இந்திரன் றீர்த்தமோ டக்கினித் தீர்த்தமா
மெமதீர்த்த நிருதிதீர்த்த
மியல்வருண தீர்த்தமுயர் வாயுதீர்த் தம்வடக்
கெழிலாங் குபேரதீர்த்தம்
நந்தலறு மீசானி யன்றீர்த்த மிறைவியுண்
ணாமுலைத் தீர்த்தமரிய
நற்சிங்க தீர்த்தமா ணிக்கவா சத்தீர்த்த
நாடரும் பிரமதீர்த்த
முந்துசிவ தீர்த்தமரி மைந்துசக் கரதீர்த்த
மெய்ப்பெருங் கட்கதீர்த்த
முந்நூற்றின் மேலுமறு பதுதீர்த்த மேவுதல
மொழியினின் னருணாசலம்
ஐந்துபூ தத்தலத் தொருதலமி தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** எட்டுதிக்குப் பாலகர் பெயரால் அமைந்த எட்டுத் தீர்த்தங்கள், இறைவி தீர்த்தம், அரியநற்சிங்க தீர்த்தம், மாணிக்கவாசக தீர்த்தம், பிரமதீர்த்தம், சிவதீர்த்தம், சக்கர தீர்த்தம், கட்க தீர்த்தம் முதலாக *360* தீர்த்தங்கள் திருவண்ணாமலையில் உள்ளன.

**அ.பொ:** மைந்து சக்கரம்- வலிமையுடைய நேமி; கட்கம் - வாள்; ஒரு தலம்- தேயுதலம். **(௫)**

## மூவர் பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடம்

209. காவிரியின் வடகரையி லறுபத்து மூன்றுபதி
காண்டருந் தென்கரையினிற்
கருதுமொரு நூறுமிரு பத்தே ழெனும்பதி
கணிக்கிலீ ழத்திரண்டு
கோவியற் பாண்டிபதி நான்குமலை நாடொன்று
கொங்கிலேழ் நடுநாட்டினிற்
கூறுமிரு பத்திரண் டாந்தொண்டை நாட்டிற்
குறிக்கிலெண் ணான்கு தலமாம்

பூவிரவு துளுவத்தி லொன்றுவட திசையைந்து
புகலிலிரு நூறுமெழுபான்
புணருமோர் நாலுதல மூவர்பா டியதலம்
புண்ணியத் தலமென்பார்காண்
ஆவிதொறு நின்றுண வளித்திடும் பரமனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** காவிரி வடகரை *63,* தென்கரை *127,* ஈழம் *2,* பாண்டியநாடு *14,* மலைநாடு *1,* கொங்குநாடு *7,* நடுநாடு *22,* தொண்டைநாடு *32,* துருவநாடு *1,* வடதிசை *5* ஆகச் சிவத்தலங்கள் *274* ஆகும். **(சூ)**

## மாசந்தோறும் பௌர்ணமி திதியில் அண்ணாமலையாருக்கு அபிடேகவகை

210. வருடாதி சித்திரைத் திங்கள்பூ ரணைநாண்
மருக்கொழுந் தபிடேகமாம்,
வைகாசி சந்தனம தானியில் பலாப்பழமு
மாங்கனி கதலிக்கனி,
கருதுஆடி சர்க்கரை,ந லாவணியி லதிரசங்,
காணும் புரட்டாசியிற்
காய்ச்சிய திரட்டுப்பா லைப்பசிக் கன்னமாங்,
கார்த்திகைத் தீபார்ச்சனை,
திருமார் கழிக்குநெய், தைத்தேன், குடங்கிர்தஞ்
சேர்ந்தகம் பள,மீன்மதித்
தீந்தயிர், பரமனுக் காட்டல்விதி பூரணைத்
திதிதோறு மாசபூசை
யரிதா யறிந்துனக் கபிஷேக மதுபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சித்திரை - மருக்கொழுந்து; வைகாசி - சந்தனம்; ஆனி - பலாப்பழம், மா, வாழை; ஆடி - சர்க்கரை; ஆவணி - அதிரசம்; புரட்டாசி - திரட்டுப்பால்; ஐப்பசி - அன்னம்; கார்த்திகை - தீபஅர்ச்சனை; மார்கழி - நெய்;

தை - தேன்; மாசி - நெய்யிட்ட கம்பளி; பங்குனி - இனியதயிர் என்ற வகையில் அண்ணாமலையாருக்கு அபிடேகம் செய்யப்படும்.

**அ.பொ:** வருடாதி - ஆண்டில் முதலில் உள்ள; கிர்தம் - பசுநெய்; மீன்மதி பங்குனி; குடம் - கும்பமாசமாம் மாசி; கம்பளம் - கம்பளி; பூரணை - நிறை மதிநாள். **(எ)**

## திருநீறு அணியும் விதி

211. **நித்தலும் வைதீக ராதிமறை யோர்கட்கு**
**நீர்கொடு குழைத்து நீற்றை**
**நெற்றியிற் பன்னிரண் டங்குலத் தளவதாய்**
**நேராய்த் தரித்த னெறியாஞ்**
**சித்திரமி ழைத்தசிங் காதனத் தரசுபுரி**
**செங்கைவே லரசருக்குத்**
**திருநீற்றை யொன்பதங் குலநீள மாய்நுதற்**
**சேர்த்தணித லேவிதியதாஞ்**
**சுத்தவை சியருக்கு நாலிரண் டங்குலஞ்**
**சூத்திரற் கேழங்குலந்**
**தோகையர் தமக்குநா லங்குலத் தளவெனச்**
**சொன்னதே மகுடாகமம்**
**அத்ததே வாங்குலந் திரிசூல வடிவணித**
**லருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** திருநீற்றை நீர்கொடு குழைத்து வைதீகர், ஆதிசைவர் முதலிய அந்தணர் *12* அங்குலம், அரசர் *9* அங்குலம், வைசியர் *7* அங்குலம், வேளாளர் *6* அங்குலம், மகளிர் *4* அங்குலம் நெற்றியில் அணியவேண்டும் என்று மகுடாகமம் கூறுகிறது.

**அ.பொ:** ஆதிமறையோர் - ஆதிசைவர் முதலியோர்; தோகையர் - மகளிர்; திரிசூலம் - முத்தலைச் சூலம். **(அ)**

## பார்ப்பனர் தொழில்கள்

212. **வேதமது தானோதன் மற்றொருவ ருக்கோது**
**வித்தறா மியாகஞ்செயல்**

விதியோடு மற்றொருவ ருக்குநல் யாகஞ்செய்
வித்தலோ டீதலேற்றல்
ஓதுமிவை சட்கரும மாகவன் னியமொன்
றுரைத்தகா ருகபத்தியம்
ஒன்றுசுடர் தஷிணாக் கினியொன்ற திவைமூன்று
முறமுந் திரேதாக்கினி
கேதமறு மியல்பிரம சாரிகிர கத்தன்
கிளர்ந்தவா னப்பிரத்தன்
கேடில்சந் நியாசியிவை யாச்சிரம நான்கதாங்
கீதவே தங்கணான்காம்
ஆதிவரு ணர்க்கென வியாசமுனி செய்தவிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறு தொழில் புரிதல், முத்தீ வளர்த்தல், பிரமசரியம் கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகளில் இருத்தல் வேதங்கள் நான்கனுள் தங்களுக்கு மரபாக உள்ள வேதம் ஓதுதல் என்பன அந்தணர்களுக்கு உரிய தொழில்களாக வியாசரால் குறிக்கப்பட்டவை.

**அ.பொ:** சட்கருமம் - அறுதொழில், காருகபத்தியம் - முத்தீயில் ஒரு தீயின் பெயர், ஆகவன்னியம் - ஆகவனீயம் என்ற அக்கினி; திரேதாக்கினி - முத்தீ; கேதம் - குற்றம்; ஆதி வருணன் - அந்தண சாதியினர். **(௬)**

## தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் தீர்த்தத்தால் செய்யும் உபசாரம் கொடுக்கும் பலன்

213. இரவிலோ ரையைந்து கடிகையது ஷக்கால
மேத்துவான் மீனினங்க
ளெங்கும் விளங்குமக் காலையி லருக்கிய
மிறைத்திடுதல் பூரணபலன்
மருவுமிரு பானேழு கன்னலரு ணோதயம்
வானிலகு தாரகையெலா
மழுங்கியு மழுங்கா திருக்கவர்க் கியமீதன்
மத்திமப் பலனாகுமாம்
உரைசெயிரு பானெட்டி லின்னுதய முடிவொளி
யொழிந்தருக் கியம்அதமமா

முதயமே லர்க்கியம் வந்திமை துனபல
னுரைக்குமறை யோர்க்கென்பர்காண்
அருணகிரி நாதர்புக ழுயிலவன் றாதையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பொழுது விடிய ஐந்து நாழிகைக்கு அர்க்கியம் கொடுத்தல் முழுப்பயன், மூன்று நாழிகைக்கு முன் கொடுத்தல் இடைப்பட்டபயன், பொழுது விடிந்த பின் அர்க்கியம் கொடுத்தல் மலடி மகப்பேறு கருதி ஆடவனைப் புணர்தல் போல்வதாம்.

**அ.பொ:** கடிகை - நாழிகை *(24* நிமிடம்*);* உஷக்காலம் - விடியற்காலம் நாலு மணி*;* இருபத்தேழு கன்னல் - பொழுதுவிடிய மூன்று நாழிகை. *4.45* மணி, தாரகை - விண்மீன்கள்*;* உடுஒளி - நட்சத்திரங்களின் பிரகாசம்*;* வந்தி மைதுன பலம் - மலடி புணர்ச்சிப் பயனாம் கருவுறுதலை எய்தாமை*;* அயிலவன் - வேலை ஏந்திய முருகன். **(௫0)**

## எண் மணங்களுள் அந்தணர்க்கு உரியவை, அந்தணர் நாடோறும் செய்ய வேண்டிய செயல்

214. கருதுபிர மந்,தேவ தம்,ப்ரசா பத்தியங்,
காணமகி ழாரூடமாங்,
கந்திருவ, மசுர,மும் ராக்கதம், பைசாச
கலியாண மோரெட்டினிற்
பரவுமுத னான்கும் பொருந்திமா னினிகருப்
பாதான மாதியான
பதினாறு மாச்சிரம நான்குசட் கருமமும்
பழகுமுத் தழலும்வேள்வி
யிரவியுதி யாமுன் னுஷக்கால நீராடி
யேன்றதிரி சந்திகால
மிருகையா லர்க்கியம் பூசையென பாசன
மியம்புகா யத்திரிசபம்
அரியநால் வேதாத்தி யயனமறை யோர்செய்கை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பிரமம், தெய்வம், பிரசாபத்தியம், ஆரிடம், கந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற எண் வகை மணங்களுள் அந்தணருக்கு உரியவை முதல் நான்கு மணங்களே. பெண்ணின் கர்ப்பாதானம் முதலிய *16* சடங்கு, நான்கு ஆசிரமம், அறுதொழில், முத்தீ, அதிகாலை நீராடுதல், இருகையால் அர்க்கியம் விடுதல், பூசை, ஔபாசனம், காயத்திரி ஜபம், வேதாத்தியனம் - இவை அந்தணர் செய்கைகளாம்.

**அ.பொ:** தேவதம் - தெய்வம் என்ற மணம்; ஆருடம் - ஆரிடம் என்ற மணம்; முதல் நான்கு - பிரமம், தெய்வம், பிரசாபத்தியம், ஆரிடம் என்ற நால்வகை மணங்கள். **(கக)**

## இருபத்தொரு வேள்விகள்

215. ஓதரிய வக்கினிட் டோமமத் தியாக்கினிட்
டோமமக் கிரகாயணி
யுத்தியஞ் சோடசீ வாசபே யம்மாக்னி
கோத்திரஞ் சாதுர்மாசியந்
தீதிலா வத்தோரி யாமமதி ராத்திரஞ்
செப்புமக் கினியாதேயந்
தெரிசபூ ரணமாக நிருடபசு பந்தஞ்
சிராவணி சவுத்ராவணி
மேதகைய சத்திரி சிராத்தமோ டட்டகை
விளங்குமாத் ராயணமுடன்
மேவுபார் வணமாசு வயசியிரு பத்தொன்றும்
வேதநவில் யாகங்களாம்
ஆதிவேள் வியில்வந்த வமிசநர சிங்கவே
ளருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அக்கினிட்டோமம், மத்தியாக்கினிட்டோமம், அக்கிரகாயணி, உத்தியம், சோடசீ, வாசபேயம், அக்னிகோத்திரம், சாதுர்மாசியம், அத்தோரியாமம், அதிராத்ரம், அக்கினியாதேயம், தெரிசபூர்ணமாகம், நிருடபசுபந்தம், சிராவணி, சௌத்ராவணி, சத்திரி, சிராத்தம், அஷ்டகை, ஆக்ராயணம், பார்வணம், ஆசுவயசி ஆகிய *21*-உம் வேதம் குறிப்பிடும் வேள்விகளாம்.

**அ.பொ:** வசந்தராயர் - நரசிங்கன் என்பவர் மகன். **(கஉ)**

## ஆட்சிச்சிறப்பு

216. மலையரண் காடரண் மதிலரணு நீரரண்
மருவுமிந் நான்கரணமும்
மந்திரிக டளகர்த்தர் குடிபடையு முடையராய்
வலியசது ரங்கசேனை
நிலையுடைய ராயெளிய ரெளிதினிற் கண்டுகொள
நேரிடுங் கருணையுளராய்
நிலமுழுங் குடிகள்பா லாறிலொரு கடமையின்
னிதிகொண்டு தனதுநாட்டிற்
கலகமிடு வோர்களைக் கொலைகளவி னோர்களைக்
கனதுஷ்ட மிருகங்களைக்
கண்டித்து மனுநூ லறிந்துசெங் கோலின்முறை
காத்திடுத லரசாட்சிகாண்
அலைபுனற் பாண்டிநா டாண்டசொக் கேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மலை, காடு, மதில், நீர் என்ற நான்கு அரண்கள் அமைச்சர், குடி மக்கள், படைத்தலைவர், நாற்படை காட்சிக்கு எளியர், கடுஞ்சொல்லன் அல்லராய், குடிகள்பால் ஆறில் ஒன்று நிலவரி பெற்றுக், கலகம், கொலை, களவு செய்வோர்களைத் தண்டித்து, கொடிய விலங்குகளை அடக்கி, மனு நூல் அறிந்து செங்கோலின் முறையில் அனைத்துயிர்களையும் பாதுகாத்தலே அரசாட்சி.

**அ.பொ:** கடமை - வரி, கனதுஷ்ட - மிகக்கொடிய. (௬௩)

## அரசர்க்கு உறுதிச் சுற்றம்

217. மந்திரியர், கருமாதி காரர்கடை காப்போர்கண்
மருவுநகர் மாக்கள்சுற்ற
மலைபடைத் தலைவரோ டிவுளியே றிடுமறவர்
மதயானை வீரரெண்மர்
சந்ததமு மரசருக் குறுதுணைவ ராமியல்பு
தவறாத வந்தணாளர்
சாந்தமுறு நட்பாள ரொடுமடைத் தொழிலர்நோய்
தனையறிந் தவிழ்தமீயும்

புந்தியுண் மருத்துவர் கலைஞரு நிமித்திகப்
புலவரிவ ரைவர்களுமெப்
போதுமர சர்க்குறுதி யாகின்ற சுற்றமிது
புகலுமனு நீதிகண்டாய்
அந்திசந் தியுமுச்சி வந்தனம் பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அமைச்சர், கருமகாரர், கடைகாப்பாளர், நகரமாந்தர், கனகச் சுற்றம், படைத்தலைவர், குதிரை மறவர், யானை வீரர் என்ற எண்பேர் ஆயத்தார், புரோகிதர், நட்பாளர், படைத்தொழிலர், மருத்துவர், நிமித்திகக் கலைஞர் என்ற ஐவர் ஆகியோர் அரசர்க்கு உறுதியாக அமைந்த சுற்றம் எனப்படுவர்.

**அ.பொ:** கருமாதிகாரர் - அரசாங்கச் செயல்களைச் செய்பவர், சந்ததம் - எப்போதும், அவிழ்தம் - மருந்து. **(கச)**

## திருமுனைப்பாடிநாடு

218. **மன்னியல் பசும்புரவி யேறியொரு கணமதில்
வலம்வரும் புவியைநீயே
மாமுடி கவித்தாள்க வென்றுமூ வேந்தரும்
வாய்மலர்ந் தருளவாங்கே
மின்னுறு குணக்குக் கடற்கரை வரைக்குமிகு
மேவுமலர் சோலைதெற்கு
விளங்குதிரு வரத்துறை வதிட்டகுடி வெள்ளாறு
மேற்றிசைக் கொல்லிமலையாந்,
தென்னியல் வடக்குப் புனற்றருங் கடியாறு,
செப்புமிந் நான்கெல்லையுட்
டிருமுனைப் பாடிநா டீதுசதுர் முடிபெற்ற
தெய்விக மன்னனாண்ட
அந்நிலையில் சிங்கபுரி நன்னிலத் தரசுபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** பச்சைக் குதிரை மீது ஏறி ஒரே கணத்தில் சுற்றி வரும் பூமியை நீயே ஆட்சி செய்வாயாக என்று மூவேந்தரும் இசைக்க, அவர்கள் வழங்கிய மூன்று

முடிகளோடு தனக்கே இயல்பாக உள்ள முடியைச் சேர்த்து நான்கு முடிகளைக் கொண்டு தெய்விக மன்னன் ஆட்சி புரிந்த திருமுனைப் பாடிநாடு கிழக்கே கடற்கரை, தெற்கே அரத்துறை, வதிட்டகுடி, வெள்ளாறு, மேற்கே கொல்லிமலை, வடக்கே நீர் வெள்ளம் வரும் தென்பெண்ணை என்னும் இந்த நான்கு எல்லைக்கு உட்பட்டதாம்.

**அ.பொ:** பசும் புரவி ஏறி - பச்சைக் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறி வரும் சூரியன். இப்பாடலில் அவனை ஒத்த தெய்விகன் என்பது பொருள்; வலம் வருதல் - சுற்றி வருதல்; சதுர்முடி - நான்குவகை முடிகள். **(௯௫)**

## வாழ்த்து

219. ***பணிவெள்ளி செம்பொனப ரஞ்சிமணி மரகதப்***
***பச்சைநிகழ் வைடூரியம்***
***பவளமா ணிக்ககோ மேதகங் கோமளம்***
***பணிமுத்து புஷ்பராகம்***
***மணியுந்து மாபரண மாலையும் பன்னிரு***
***வகைத்தெய்வ மலர்மாலையும்***
***மார்பத் தணிந்துமா முடிசூடி யிலகுபசு***
***வான்புரவி யூர்ந்துவேள்வி***
***நணியுள் ளெழுந்துவந் துயர்திரு முனைப்பாடி***
***நாடாந் திருக்கோவலூர்***
***நல்லசிங் காசனத் தெய்விக ராசனு***
***நரசிங்க முனையர்வாழ்க***
***அணிவெள்ளி கோத்ரகுல தீபமென வந்தநிதி***
***யருள்பெறு வசந்தராயர்***
***அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய***
***அண்ணா மலைத்தேவனே!***

**பொழிப்:** வெள்ளி, உயர்ந்த பொன், நீலமணி, பச்சை, வைடூரியம், பவளம், மாணிக்கம், கோமேதகம், வயிரம், முத்து, புஷ்பராகம் என்ற ஒன்பது இரத்தினங்கள் வைத்து இழைத்த அணிகல மாலைகள், தெய்வ மலர்மாலை இவற்றை அணிந்து முடிசூடி பச்சைக் குதிரையில் ஏறியவாறு குகமுனிவர் செய்த வேள்வியிலிருந்து தோன்றித் திருமுனைப்பாடி நாட்டினைத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு அரியணை ஏறி ஆட்சி செய்த தெய்விக மன்னனும் அவன் வழித் தோன்றிய நரசிங்க முனையரையரும் வாழ்க.

**அ.பொ:** அபரஞ்சி - புடமிட்ட பொன்; கோமளம் - வைரம்; வெள்ளி கோத்திரம்- வசந்தராயன் கோத்திரம். **(௯௬)**

## தெய்விகராசன் நான்குமுடி

220. பன்னிரண் டலர்மாலை புனைகின்ற திண்புய
பராக்ரமத் தெய்விகநீ
படையெடுத் தமர்புரிய வேண்டா மெனச்சொலிப்
பாராளும் வேந்தர்காண
மன்னரோர் மூவரும் மல்லுயுத் தம்மேற்று
மல்லாட லுக்கிளைத்து
மற்போர் புரிந்திடற் கிவனொருவ னரசிங்க
மாவீர னெனவியந்து
தென்னனுஞ் சோழனுஞ் சேரனுந் தந்தமுடி
செல்வமுடி யென்றுசூட்டத்
திருமுடி யுடன்றோன்று மொருமுடிச் சதுர்முடித்
தெய்விகக் குலத்துதித்த
அன்னமென மதிவளரு நிபுணகெம் பீரதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பன்னிரண்டு தெய்வமலர் மாலைகளை அணிந்த தெய்விக மன்னனே! நீ படையெடுத்துப் போர்புரிய வேண்டா என்று கூறி மற்ற மன்னர்கள் காண மூவேந்தரும் தனித்தனித் தெய்விகனோடு மற்போர் புரிந்து தோற்று அவனை நரசிம்மத்தை ஒத்த மாவீரன் என்று புகழ்ந்து பாண்டியனும், சோழனும், சேரனும் தத்தம் முடிகளைத் தெய்விகனுக்குச் செல்வமுடியாகச் சூட்டத் தன் பழைய முடியோடு நான்குமுடிகளைப் புனைந்த தெய்விகன் மரபில் வந்தவன் வசந்தராயன்.

**அ.பொ:** நரசிங்க மாவீரன் - நரசிம்மாவதாரம் எடுத்த திருமாலை ஒத்த பெரிய வீரன், தந்த முடி - தம்தம் கிரீடங்கள். (கஎ)

## தெய்விகராசன் பன்னிருமாலைகள்

221. கொம்பலர் பசும்பொனேர் கொன்றைபுனை மாதளை
கூவிளங் குமிழ்சண்பகங்
குலவுபரி மளவகுள மலர்துளவு கமலமலர்
கோங்குசெங் குவளைவாகை
தும்பையார் வேம்புபன் னிருமாலை கொண்டபுய
சுந்தர விலாசமார்பன்

தூயசதுர் முடிமகுட சேகரன் மும்மன்னர்
சொந்தசம் பந்தமுடையோன்
கம்பமத முத்தலைக் காரண்ட னைச்சயங்
கண்டவேல் கொண்டதிறலோன்
காசினியை யெழுநூறு வயதாண்ட தெய்விகக்
காவலன் மகிமைகண்டாய்
அம்புய மலர்ந்தமுக கெம்பீர ராசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** கொன்றை, மாதுளை, கூவிளம், குமிழ், செண்பகம், மகிழம், திருத்துழாய், தாமரை, கோங்கு, செங்குவளை, வாகை, தும்பை என்ற பன்னிரு மாலைகள், ஆத்திமாலை, வேப்பம்பூமாலை இவற்றுடன் நான்குமுடி புனைந்து காரண்டன் என்ற அசுரனை வென்று இவ்வுலகத்தை எழுநூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன் தெய்விக மன்னன்.

**அ.பொ:** பரிமளம் - வாசனை, காரண்டன் - மிருகண்டு முனிவரிடம் தோன்றிய அசுரன், கம்ப மத - மற்றவரை நடுங்கச் செய்யும் வலிமையுடைய. **(கஅ)**

## இமவான் தெய்விகனாய் அவரித்தமை

222. கரையில்புகழ் கைலையிற் சிவனுமையு மருவுமக்
காலைமலை யரயனோர்நாட்
கடவுளுக் கறிவியா தேபுகப் பரமனக்
காதன்மா துலனைநோக்கித்
தரையின்மா னிடனாச் சனிப்பையென் றுரைசெயத்
தாழ்ந்தவன் சோர்ந்துநிற்குந்
தருணத்தி லுமையெழுந் துன்மாம னார்பிறவி
சார்வனோ வென்றிறைஞ்சி
யுரைசெயச் சாபந் தவிர்க்கவேண் டுவதாலிவ்
வுலகத்தி லன்னைவயிற்றி
லுதியாமல் வேள்வியி லுதித்தவனி யாள்கவென்
றோதிடக் குகமுனிமகத்
தரயனென வந்ததெய் விகக்குலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஒருநாள், தன்வருகையை முன் கூட்டி அறிவியாமல் இமவான் பார்வதி பரமேசுவரனைக் காணச் சென்றபோது அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டிருக்க, சிவபெருமான் அப்பொழுது வந்த இமவானை மானுடனாகுமாறு சபிக்க, பார்வதி தன் தந்தை பிறவி எடுப்பதைத் தான் விரும்பாதவளாக, அவள் விருப்பப்படி சிவபெருமான் இமவான் அன்னை வயிற்றிலிருந்து பிறவாமல் குகமுனிவர் வேள்வியில் உதித்து நாடாளுமாறு வரம் நல்க, இமவான் தெய்விக மன்னவனாகத் தோன்றி இவ்வுலகினை ஆண்டனன்.

**அ.பொ:** சனிப்பை - தோன்றுவாய், குகமுனி மகம் - குகமுனி செய்த யாகம்.

**(கக)**

## தெய்விக மன்னன் மனைவியர்

223. சேரன் பயந்தபது மாவதியெ னும்பெயர்த்
தெரிவையும் பாண்டியன்மகட்
டினமால் பொருந்துகாஞ் சனமாலை யென்னுமொரு
தேவியுஞ் சோழனீன்ற
பேரன்பு கொண்டசண் பகமாலை யென்கின்ற
பேதையு மணம்புரிந்த
பெண்ணையாற் றங்கரைக் கோவறெய் விகனருள்
பெருமா னிலங்குநாவ
லூரன் றுதித்திருத் தொண்டத் தொகைக்குள்
ளுமாபதி யுருக்கலந்தே
யுற்றவறு பத்துமூ வரிலொருவ ராகின்ற
வோங்குநர சிங்கமுனையர்
ஆனவம் மிசகுல குபேரனிகர் செல்வதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சேரன் மகள் பதுமாவதி, பாண்டியன் மகள் காஞ்சனமாலை, சோழன் மகள் சண்பகமாலை என்ற தமிழ் மன்னர் மகளிரை மணந்த தெய்விகன் பயந்த சுந்தரர் திருத்தொண்டத் தொகை குறிப்பிடும் அடியார்களுள் ஒருவராகிய நரசிங்க முனையரையர் மரபில் உதித்தவர் குபேரனை ஒத்த செல்வ வளமுடைய வசந்தராயராவார்.

**(உ0)**

## தெய்விகனுடைய ஏனைய தேவியர்

224. காசிரா சன்மக ளனப்பிரபை தன்னையுங்
காஞ்சிபே ரிகதனீன்ற
கமலா வதிப்பெணு மயோத்தியிற் சிசுருமன்
கன்னியாங் கனகையினையும்
மாசறும வந்தியா புரிவிசா லாக்கன்
மகிழ்ந்தருள் கலாவதியினை
மன்னுந் துவாரகைச் சந்த்ரவரு மன்றரு
மடந்தையும் பலமாலையுந்
தேசுவட மதுரையம் போசவிச யவருமர்
செல்விகம லக்கண்ணியைச்
செல்வபுரி மாயைமா சேனன் பயந்தமதி
சேர்ந்தவுற் பலநயனியை
ஆசையொடு வேட்டதெய் விகக்குலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** காசி அரசன் மகள் அனப்பிரபை, காஞ்சிப் பேரிகதன் மகள் கமலாவதி, அயோத்தி சிசுருமன் மகள் கனகை, அவந்தி விசாலாக்கன் மகள் கலாவதி, துவாரகைச் சந்திரவருமன் மகள் உம்பலமாலை, வடமதுரை அம்போச விசயவருமன் மகள் கமலக்கண்ணி, மாயாபுரி மாசேனன் மகள் உற்பல நயனி என்ற எழுவரையும் தெய்விகன் மணந்தான். **(உக)**

## அங்கவை சங்கவை திருமணம்

225. சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாளன்
செய்தவப் பயனாற் பிறந்தநற் குணமான
சிறுமியங் கவைசங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தௌவையார்
மாமுகக் கணபதிகையான்
மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகிடற்குத்

தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணைநெய்பா
றான்வரப் பாடிய பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம்புரியவே
அங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சிங்கள மன்னன் பாரிசானன் மகளிர் அங்கவை, சங்கவை இருவரையும் ஔவையார் வளர்த்தெடுத்து, விநாயகப்பெருமானைக் கொண்டு மணஓலை எழுதி மும்மன்னரையும் கோவலூருக்கு ஆசீர்வாதம் செய்ய வரவழைத்து, பனந்துண்டம் மரமாகிப் பழம் தரச்செய்து, பெண்ணையாற்றில் நெய்யும் பாலும் வருமாறு பாடி, தெய்விகனுக்கு அவ்விருவரையும் மணம் செய்து வைத்தார்.

(உஉ)

## மெய்ப்பொருள் நாயனார்

226. செப்பருந் தெய்விக மன்னவன் றென்னவன்
செவ்விகாஞ் சனமாலையைத்
திருமணஞ் செய்தவளை மருவிப் பயந்தவொரு
சிறுவர்மெய்ப் பொருணாயனார்க்
கொப்புறு பசும்புரவி யூர்ந்துமுன் வட்டம்வந்
துற்றநடு நாடுதன்னி
லொத்தவிந் திரதிசை யினத்தங்க ளெல்லா
முவந்தரசு புரிகுவாயென்
றிப்பெருங் கோவலின் மணிமுடி தரித்திட
விருந்தமெய்ப் பொருணாயனார்
ஈன்றசந் ததியெலா நத்தமன் னவனென்
றிருந்திடுங் குடிகள்கண்டாய்
அப்பெரிய மெய்ப்பொருளி னற்குலம் விளங்கவந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தெய்விகன் பாண்டியன் மகள் காஞ்சன மாலையைக் கூடிப் பெற்ற மகனான மெய்ப்பொருள், தெய்விகமன்னன் பச்சைக்குதிரையில் வட்டம் வந்து வரம்பு கோலி நடுநாட்டின் கிழக்குத்திசை செல்வங்களை எல்லாம் நுகர்ந்து அரசுபுரியுமாறு ஆணையிட, மெய்ப்பொருள் நாயனார் திருக்கோவலூரில் மணிமுடி சூடி அரசாண்டு வந்தார். அவர் சந்ததியாரே நத்த மன்னவர் என்ற பெயருடைய குடிகள் ஆயினர். அந்த நற்குலம் விளங்கத் தோன்றியவர் வசந்தராயர்.

**அ.பொ:** இந்திர திசையின் நத்தங்கள் - கிழக்குத் திசையிலுள்ள நிலபுலன்கள்.

(உரு)

## நரசிங்கமுனையரையர்

227. வந்துலகில் புகழ்கொண்ட தெய்விக மன்னனெழின்
மலையமான் றந்தபதுமா
வதிமா தினைப்புணர்ந் தரிதாய்ப் பயந்ததொரு
மைந்தனர சிங்கமுனையர்க்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன்னனா
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்கமுனையர்
சந்ததியில் வந்தவர்கள் மலையமன் னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசையெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர்கண்டாய்
அந்தநர சிங்கமுனை யரயர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தெய்விக மன்னன் சேரன்மகள் பதுமாவதியைக் கூடிப் பெற்ற மைந்தன் நரசிங்கமுனையரையன். அவனைத் திருமுனைப் பாடி நாட்டின் எல்லைக்குள் மலைப்பகுதிகளுக்கு மன்னனாகத் தெய்விகன் முடிசூட்டி வைக்க, அந்நாட்டின் மேற்றிசைப் பரப்பில் அவன் மரபினர் மலையமன் என்ற பெயரோடு பரவி உழுது பயிர் செய்து, பெருஞ் செல்வராயினர். அந்த நரசிங்க முனையரையரின் அருள் பெற்றவர் வசந்தராயர்.

(உச)

## குலசேகரநாயனார்

228. சோழன் பயந்தசண் பகமாலை வதுவையிற்
றோய்ந்துதெய் விகனீன்ற
தோன்றல்குல சேகரன் சுருதியை யுணர்ந்தன்ன
துரய்முனைப் பாடிநாட்டில்
வாழுமூன் றினிலொன்று தன்பங்கி லாசித்து
வடநாடு போய்வந்துதன்
மனைவியை விடுத்தே குடந்தையின் குடபான்
மணிச்சோழன் மாளிகைக்கண்
ணூழினெறி யாற்றாதி மூப்பியைச் சேர்ந்ததி
லுதித்தவர்கண் மூப்பனாரென்
றுலகெலாஞ் சொல்லவுஞ் சுருதிமன் னென்றுபெய
ருண்டா யிருப்பர்கண்டாய்
ஆழ்தரு பெருஞ்சுனைகள் சூழ்தருஞ் சிம்மபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தெய்விக மன்னன் சோழன்மகள் சண்பகமாலையைக் கூடிப்பெற்ற மகன் குலசேகரன். அவன் திருமுனைப்பாடி நாடாகிய நடுநாட்டில் கிழக்கு மேற்குப்பகுதிகள் நீங்கலான எஞ்சிய மூன்றில் ஒரு பரப்பைத் தான் ஆளும் நாடாகக் கொண்டு, வேதங்களைக் கற்றுணர்ந்து வடநாடு போய் வந்து, தன் மனைவியை விடுத்துக் கும்பகோணத்தில் மேற்குப்பகுதியில் மணிச்சோழன் மாளிகையில் விதிவசத்தால் 'மூப்பி' என்ற வேலைக்காரியைக் கூட, அவள் பெற்ற பிள்ளைகள் மூப்பனார் எனவும் சுருதிமன் எனவும் பெயருடையராய் வாழ்ந்து வருவாராயினர்.

**அ.பொ:** ஆசித்து - விரும்பிப் பெற்று. (உரு)

## மிருகண்டு முனிவரால் காரண்டன் தோன்றல்

229. கற்கோட்டை யிறைசைநகர் நந்தன வனத்திற்
கனத்தமிரு கண்டுமுனிவன்
கடவுளைப் பூசிக்க மலர்கொண்டு வாவெனக்
கடிதினொரு பிரமசாரி
விற்கோட்டு மலர்கொயச் செல்காலை வஞ்சனை
வியாவரி யரக்கமாதர்

விளையாட லைக்கண்டு தாழ்த்துவர வம்முனி
வெகுண்டசுர னாவாயெனச்
சொற்கேட்டவ் வசுரனாய்ப் பிறையூர் மலைச்சார
றோன்றுகா ரண்டனைமுன்நீ
துண்டித்த வாகைவேல் கொள்புயத் தெய்விகத்
தோன்றல்புகழ் சொல்லவெளிதோ
அற்கூட்ட மணிகண்ட நாதாவி னோதனே!
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** இறைசை நகர் நந்தனவனத்திலிருந்து, சிவபூசைக்கு மலர் கொண்டு வருமாறு மிருகண்டு முனிவர் தன் சீடருள் ஒருவனை ஏவ, அப்பிரமசாரி மலர் கொண்டு வரச்சென்ற போது, நெறிகெட்ட அரக்கமாது ஒருத்தியின் விளையாடலைக் கண்டு காலம் தாழ்த்தி வர, முனிவர் வெகுண்டு அந்தச் சீடனை அரக்கனாகுமாறு சபிக்க, அந்த அரக்கன் பிறையூர் மலைச்சாரலில் காரண்டன் என்ற பெயரோடு மக்களைத் துன்புறுத்தத் தெய்விக மன்னன் தன் வேலாயுதத்தால் காரண்டனை வதம் செய்த செயல் எல்லோராலும் போற்றப்பட்டது.

**அ.பொ:** வியாவரி - செயலை உடையவன். **(உகூ)**

## வேளாளர் பெருமை

230. தேவால யந்தொறுந் திருவிழாப் பூசையுஞ்
செப்பரிய பிரமாலயத்
தெய்வமறை யோர்செய்யு நித்தநை மித்தியமுந்
திரிசந்தி யாகங்களும்
பூவாளு மன்னர்சது ரங்கபல முதலான
பொக்கிஷ மிகுஞ்செல்வமும்
பொன்வெள்ளி தனதானி யம்பல சரக்கினாற்
பொருளாக்கும் வணிகர்தொழிலுங்
கோவாதி சோடச மகாதான தருமமுங்
குவலயத் தனைவர்சுகமுங்
கோளாறு கொண்டுழும் வேளாள ருழுபடைக்
கோலதன் பெருமையன்றோ
ஆவாற் கறந்தபா லபிடேக னேயனே
யருள்பெறு வசந்தராயர்

**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** கோயில்களில் பூசனைகள், திருவிழாக்கள், அந்தணர் நிகழ்த்தும் முக்கால வழிபாடு, பொதுச்சிறப்புப் பூசனைகள், வேள்விகள், அரசனின் நாற்படை முதலிய செல்வங்கள், வணிகர் தொழில் செய்யும் பொன் வெள்ளி தானியங்கள் முதலிய செல்வங்கள், பசு முதலிய பதினாறு தானதருமங்கள், ஊர்த்தலைவர்களின் நலன்கள் என்பன யாவும் கிரகங்களின் நிலையை ஆராய்ந்து உழுது பயிரிடும் வேளாளர்களின் செயலால் நிகழ்வனவாம்.

**அ.பொ:** பிரமாலயம் - ப்ரும்மத்துக்கு இருப்பிடமான மனம், நைமித்தியம் - சிறப்புப் பூசனை, கோ - பசு, சோடசம் - பதினாறு, குவலயம் - நில உருண்டை, பூமி, கோளாறு - கிரகங்கள் செல்லும் வழி. **(உஎ)**

## வைசியர் பெருமை

231. **செம்பொனைக் கல்லினி லுரைத்தாணி வைத்துத்**
**தெளிந்ததன் மாற்றுரைப்பர்**
**திரளுடைமை யடகுவைத் தாலுநிலை கண்டுமேற்**
**செட்டாக நிதிகொடுப்பர்**
**பம்புநவ ரத்நப் பரீட்சைரதி கண்களாற்**
**பார்த்துவிலை யைப்பணிப்பர்**
**படியுந் தராசுமுண் ணடுநிலை நிதானம்**
**படைத்தநா நிலைமையுடையார்**
**நம்பவரு வர்த்தகமு காந்திரங் கோடிபொன்**
**னம்புவார் வரவுசெலவு**
**நாடோறு நாடுவார் நாணய மிலார்க்கணுவு**
**நல்கார்கள் வைசியர்கண்டா**
**யம்புவியில் வணிகர்பாற் செம்பொன் வளர்ந்திடுநல்**
**லருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** பொன்னின் மாற்று உரைத்தல், நவரத்தினங்களின் நீரோட்டத்தைக் கண்டு விலை நிர்ணயித்தல், பொருளை அடகு வைத்தாலும் அப்பொருள் மதிப்புக்குக் குறைவாகவே கடன் வழங்குதல், நடுவுநிலைமை சற்றும் தவறாமை, வியாபாரத்தின் பொருட்டுப் பெரும் பொருளை நம்பிக் கொடுத்தல், வரவு செலவு

நாடோறும் பார்த்தல், நாணயம் இல்லாதவர்க்குச் சிறிதும் நல்காமை - இவை வணிகர் தொழில்.

**அ.பொ:** பம்பு - நிறைந்த, ரதி - நுட்பம், முகாந்திரம் - காரணமாக. **(உ அ)**

## நான்குவருணத்தாரின் அறு தொழில்

232. **வேதம் படித்தலொரு வர்க்கோது வித்திடுதல்**
**வேள்விசெயல் செய்வித்திடல்**
**வேண்டுவ திரத்தலொரு வர்க்கீத லாறுதொழில்**
**வேதியர்க் கானவிதியாம்**
**ஒதறான் வேள்யிசெய லீதலிவ் வுலகெலா**
**மோம்பல்படை பயிறல்பொருத**
**லோராறு மரசர்தொழி லோதலியா கஞ்செய்ய**
**லோங்குபொரு ளீட்டலீதல்**
**காதனைக் காத்தலே, ருழல்,வைசிய ராறுதொழில்**
**குயிலுவத் தொழிலேருழல்**
**கோகாத்தல் காருக வினைத்தொழிற் பொருளீட்டல்**
**குணமாக வீதலென்றும்**
**ஆதிசூத் திரர்தொழிற் பகரிலீ தாறுகா**
**ணருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** ஓதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் இவை அந்தணர்க்குரிய தொழில். ஓதல், வேள்வி வேட்டல், ஈதல், உலகு ஓம்பல், படை பயிறல், பொருதல் ஆகியவை வேந்தர்க்குரிய தொழில். ஓதல், வேள்விவேட்டல், பொருளீட்டல், காத்தல், ஈதல், ஏருழல் இவை வணிகர்க்குரிய தொழில். நெய்தல், ஏர் உழல், நிரைகாத்தல், இசைத்தொழில், ஈட்டல், ஈதல் முதலியவை வேளாளர்க்குரிய தொழில்.

**அ.பொ:** குயிலுவத்தொழில் - இசைத்தொழில், காருகம் - நெசவு, ஓவியம் வரைதல் முதலியன. **(உகூ)**

## சூத்திரம் ஆறு சாத்திரம் ஆறு

233. **செப்புமா பஸ்தம்ப சூத்திர மிசைத்திடுந்**
**தியாமியா யனசூத்திரம்**

திறமான சத்தியா ஷாடசூத் திரமறை
தெரிந்திட்ட போதாயனம்
ஒப்பிலாக் காத்தியா யனமாசி லாயனமி
தோராறு சூத்திரங்க
ளோதரு வியாகரண சத்தசாத் திரமொன்
றுயர்ந்தசோ திடசாத்திரந்
தப்பறும் பரதசாத் திரமொன் றுரைப்பருந்
தர்க்கசாத் திரமிதொன்று
சாற்றும்வே தாந்தசாத் திரமந்த்ர சாத்திரந்
தகுசாத் திரங்களாறாம்
அப்புலிங்க கத்துருவ மாகின்ற வண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஆபஸ்தம்பம், தியாயியாயனம், சத்தியாஷாடம், போதாயனம், காத்தியாயனம், ஆசுவலாயனம் - ஆகியவை ஆறு சூத்திரங்கள். வியாகரணம், சோதிடம், பரதம், வேதாந்தம், தர்க்கம், மந்திரம் - ஆகியவை ஆறு சாத்திரங்கள்.

**அ.பொ:** மாசு இல் அயனம் - குற்றமற்ற ஆசுவலாயனம். **(௩௰)**

## நிலைத்த புகழாளர்

234. பாலனஞ் செய்துளோ ராலய மமைத்துளோர்
பகர்கோ புரங்கட்டினோர்
பத்திமணி மண்டபந் தேர்விமா னம்பொன்
பதித்தவா கனமமைத்தோர்
சாலையன சத்திரம் விக்கிரக ரூபஞ்
சமைத்துளோ ரன்னதானந்
தடமேரி யக்ரார நிலமானி யங்கோட்டை
தண்சாலை யுண்டாக்கினோர்
வேலையா யோயா தளித்தவர்கள் பொய்சொலா
விரதியர்கள் கவிவாணரான்
மேலாங் கவித்தொங்கல் பெற்றுளோ ரிவர்களே
வீயாத புகழ்படைத்தோர்
ஆலிலைத் துயிலுமா லறியாத பரமனே!
யருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பிறஉயிர்களை வளர்ப்பவர், ஆலயம், கோபுரம், மண்டபம், தேர், விமானம், பொன்பதித்த வாகனம், சாலை, அன்ன சத்திரம், விக்கிரகம் அமைத்தவர்கள், அன்னதானம், குளம், ஏரி, அக்ரகாரம் அமைக்க நிலம், கோட்டை, தெரு, வழி இவற்றை உண்டாக்கினோர், ஓயாது பிறருக்கு வழங்குபவர், பொய் சொல்லாமையைக் கைக்கொண்டவர்கள், கவிஞரின் பாமாலை பெற்றவர் ஆகிய இவர்கள் அழியாத புகழாளர்.

**அ.பொ:** பாலனம் - பிறரைப் பாதுகாத்தல், சாலை - தங்குமிடம், தடம் - குளம், அக்ராரம் - அந்தணர் உறையும் தெரு, நிலமானியம் - நிலத்தை முற்றூட்டாக வழங்குதல், வேலையாய் - தங்கள் கடமையாகக் கொண்டு, கவித்தொங்கல் - பாமாலை, வீயாத - அழியாத. **(௩௧)**

## சைவமுறை

235. சந்தவல ரோனுமா லறியாத பரசிவந்
தானே யனாதியாகுஞ்
சகலரும் பணிசிவா லயமேய னாதியாஞ்
சைவமட மாகுமதுதான்
எந்தைசிவ லிங்கவுரு வைத்தீண்டி யர்ச்சித்
திறைஞ்சிவாழ் மறையோர்கடம்
மில்லமே யுயராதி சைவமட மாமென்
றிசைக்குமுய ராகமங்கள்
சிந்தையன் பாகியே மறவாது சந்ததஞ்
சிவசம்ஸ் காராதிகள்
செய்யுமறை வேதியர்க ளில்லமே கோகனகை
திகழ்மகா சைவமடமாம்
ஐந்துநதி யாந்தலச் சுந்தரச் சைவனே!
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சிவாலயமே அநாதியாகும் சைவமடம். சிவமறையோர்கள் வீடுகளே ஆதி சைவமடம். ஆகமம் மறவாது சிவவேதியர் சிவவழிபாட்டோடு வாழும் இடமே சைவமடம்.

**அ.பொ:** சமஸ்காரம் - செப்பம் செய்யும் செயல்கள், கோகனகை - திருமகள்.

**(௩௨)**

## பதினாறு பேறுகள்

236. நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி
நவதானி யப்பெருமையு
நற்குணத் தொடுசொன்ன சொற்படி நடந்துவரு
நன்மனையு நன்மக்களும்
மதிவளந் தருகின்ற குறைவிலாக் கல்வியுடன்
மனமிக்க ஞானவறிவும்
வளர்கின்ற விளமையொடு மறுவிலா வழகும்
மகிழ்ச்சிதரு நோயின்மையும்
விதிவளந் தருகின்ற வாணாளு மெய்த்திடமு
மெய்த்துணிவு மிக்கபுகழும்
வெற்றியுட னல்லூழு மறுசுவை நுகர்ச்சியும்
மேலாய் நிறைந்ததனமும்
அதிவளந் தருமிதைப் பேறுபதி னாறென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வளந்தரும் பூமி, விளைகின்ற நவதானியம், சொன்ன சொற்படி வாழும் மனைவி, மக்கள், குறைவிலாக் கல்வி, ஞானஅறிவு, வளர் இளமை, மாசற்ற அழகு, நோயின்மை, வளம் தரும் வாழ்நாள், உடல் உறுதி, உண்மையான துணிவு, மிக்க புகழ் வெற்றி தரும் நல்வினை, அறுசுவை உணவு, மேம்பட்ட மிக்க செல்வம் - இவை பதினாறு பேறுகளாகும்.

**அ.பொ:** நவதானியம் - ஒன்பதுவகை உணவுப் பொருள்கள். அவை உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல், பயறு. **(௲௲)**

## பெண் கொள்ளும் முறை

237. தன்னுடைய கோத்திர மலாதநற் கோத்திரத்
தகையாளப் பொய்மையிலளாய்த்
தவறிலா தாண்பெண் சகோதரத் தவளாய்த்
தருங்குலத் திழிவில்லளா
யிந்நில மிகழ்ந்தபழி யுடையமர பில்லளா
யேந்துவிண் மீன்பறவையா

றெழில்வரைப் பாந்தள்பெய ரில்லளாய்ப் புருடனுக்
கிளையளாய் மென்மொழியளாய்ப்
பின்னுமுனி வில்லளாய் நன்னய குணத்தளாய்ப்
பெருமிதம் பிணியில்லளாய்ப்
பெருமதி முகத்தளாய்ப் பேசுமிப் பெற்றியுள
பேதயை மணஞ்செய்திடில்
அன்னையிலு மிக்கபே ரன்புடைய ளாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஒத்த கோத்திரப் பிறப்பு, பொய் பேசாமை, சகோதர சகோதரிகளுடன் பிறத்தல், இழிவில்லாக் குடும்பம், பழியில்லா மரபு, விண்மீன், பறவை, பாம்பு, என்பனவற்றின் பெயரைத் தன் இயற்பெயராகக் கொள்ளாமை, கணவனை விட ஆண்டில் இளையவள், மென்மொழியள், கோபமற்றவள், நல்ல உறவு கொள்ளத்தக்க பண்பு, பெருந்தன்மை, பிணியின்மை, சந்திரன் போன்ற முகம் இவற்றை உடைய பெண்ணை மணந்தால் அவள் குடும்பத்துக்குத் தாயை விட இனியளாய் உதவுவாள். **(௩௪)**

## பெண் இலக்கணம்

238. பம்பைச் சுருட்டைமயி ரில்லாம னுனிமயிர்
பகுவாய் பிளப்பிலாமற்
பற்றுசடை யில்லாது கட்டைமயி ரோடுசெம்
பட்டைமயி ரில்லாமலுங்
கொம்புபோற் பிறமயிர் குறுகிவர வில்லாது
கொத்தாக மயிரிலாது
கோணலாய் மேன்மயிர் புடைகொண்டி லாதுவரி
கொடுவெள்ளை மயிரிலாது
செம்பிறையி னெற்றிமேற் பாம்பின் படச்சுழிகள்
சேராம லந்நெற்றியுஞ்
செவியுமிரு கண்களுங் குறுகாமன் மூக்கொன்று
திகழ்நீள மில்லாமலும்
அம்பழுதி லாவிதே பெண்ணிலக் கணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பரட்டை, சுருட்டை, நுனிபிளத்தல், சடை, கட்டை, பிறமயிர் இணைந்து வாராமை, செம்பட்டை, கொத்து, கோணல், மேல்நோக்கி நிமிர்தல், வெள்ளை ஆகிய இயல்புடைய மயிர் இல்லாத கூந்தலை உடையவளாய் நெற்றியில் பாம்பின் படச்சுழிகள் இல்லாமல், நெற்றி, காதுகள், கண்கள் குறுகாமல், மூக்கு மிக நீளாமல் பழுதற்று இருத்தல் பெண் இலக்கணம்.

**அ.பொ:** பம்பை மயிர் - பரட்டை மயிர், பகுவாய் - பிளந்த வாய். **(டூரு)**

## ஆண் இலக்கணம் 239-241

239. **நெற்றியிடை யோரைந்து கீற்றாய் மடிப்புறையி
னிறைகின்ற வாயுளுண்டாம்
நிரையாக நாலுவரை தோன்றிலெண் பதுவயது
நிலையான வாழ்வுமுண்டாம்
மற்றுமுக் கீற்றா யிருக்கிலறு பான்வருட
மட்டினு மகிழ்ச்சியுண்டாம்
மருவுமிரு வரைதோன்றி லாயுளைம் பானேக
வரைதோன்றி லாயுண்முப்பான்
ஒற்றையஞ் சுழிவலம் புரியாய் நடுத்தலையி
லொருமையுட னேயிருந்தா
லுலகமுழு தாளுவா னெற்றியில் வலம்புரிச்
சுழியொன் றிருக்கிலிறையாம்
அற்றுறந் தெழுசோதி நயனப்ர காசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** நெற்றியில் ஐந்து கோடுகள் அமையின் நிறை வயது, நான்கு கோடுகள் அமையின் எண்பது வயது, நிலையான வாழ்வு. மூன்று கோடுகள் இருப்பின் அறுபது வயது, மட்டற்ற மகிழ்ச்சி, இரண்டு கோடுகள் இருப்பின் ஐம்பது வயது, ஒரே கோடு இருப்பின் முப்பது வயது. வலம்புரிச் சுழி நடுத்தலையில் இருந்தால் உலகம் முழுதும் ஆள்வான். நெற்றியில் வலம்புரிச்சுழி இருப்பின் தலைவனாவான்.

**அ.பொ:** வரை - கோடு. **(டூசா)**

240. **விழிதோள் கதுப்புமூக் கிருமுழந் தாளைந்து
மிகநீண் டிருக்கவேண்டும்**

விரன்மயிர் நகந்தோ ளெருங்குபல் லிவையைந்து
மெதுவா யிருக்கவேண்டும்
ஒழியாது நீறணியு நெற்றியிரு தோண்மார்பு
மொண்புறங் கைகள்வயிறு
மோதருங் கைம்மூல மாகுமிவ் வாறிட
முயர்ந்தே யிருக்கவேண்டுஞ்
செழியுமுள் ளங்கைகீ ழுதடுமுள் ளங்காற்
சிறக்குமுண் ணாக்குநாக்கு
சேருங் கடைக்கணுகிர் கூறுமிட னேழுஞ்
சிவந்தே யிருக்கவேண்டும்
அழிவிலா நூல்சொலும் புருடல க்ஷணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** விழி, தோள், கன்னம், மூக்கு, இரு முழந்தாள் ஐந்தும் நீண்டிருக்க வேண்டும். விரல், மயிர், நகம், தோல், பல் – இவை மெதுவாயிருக்க வேண்டும். நெற்றி, தோள், மார்பு, முதுகு, கைகள், வயிறு, கை தோளோடு இணையும் இடம் இவை உயர்ந்திருக்க வேண்டும். உள்ளங்கை, கீழ் உதடு, உள்ளங்கால், உள்நாக்கு, நாக்கு, கடைக்கண், நகம் தோலோடு கூடும் இடம் இவை சிவந்திருக்க வேண்டும். **(கூஎ)**

241. இடைமார்பு நெற்றியிம் மூன்றும் விசாலமா
யியல்பா யிருக்கவேண்டு
மிருமுழங் காற்கீழ மாண்குறி கிரீபமிவ்
விடமிகக் குறுகுவேண்டுந்
தடையிலா துந்தியுஞ் சந்துதாள் வாய்மிகத்
தாழ்ந்தே யிருக்கவேண்டுந்
தங்குகான் மேன்மையா யங்கைமிக வன்மையாய்த்
தானங் கிருக்கவேண்டுங்
கொடைதருஞ் செங்கையிற் சங்குசக் கரரேகை
கோதண்ட மகரரேகை
குலிசமா லிகைரேகை நளினசா மரரேகை
கோணா திருக்கவேண்டும்
அடையுமிப் புருடல க்ஷணமுடைய ரரசரா
மருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** இடை, மார்பு, நெற்றி, மூன்றும், அகலமாய்; இரு முழுங்கால் கீழ் ஆண் குறி, கழுத்து இவை குறுகலாய், உந்தியும் சந்துகளின் தாளும் தாழ்வாய், கால் மேன்மையாய், உள்ளங்கை வன்மையாய், செங்கையில் சங்கு, சக்கரம், வில், மீன்ரேகை, வச்சிரரேகை, சாமரரேகை இவை வளைவிலாது இருத்தல் ஆண்மக்கள் இலக்கணமாம்.

**அ.பொ:** கிரீபம் - கழுத்து. **(௩அ)**

## திருநீறுஇடுங் காலம்

242. காலையி லெழும்போது மலசலம் விடுத்துமிகு
கால்சுத்தி செய்தபோதுங்
காரிகை யொடுங்கூடி நீராடி னுந்தரணி
காவல ரிடம்போயினும்
மாலையம் போதினுஞ் சண்டாளர் நிழல்படினு
மறுகூடு சென்றுவரினும்
மாதசூ தகமேவு மங்கையர்க ணிழல்படினு
மாபெரிய ரிடமேயினும்
பால்பழம் போசனங் கொண்டபினு மருமலர்
பறித்திடினு மாபாதகர்
பார்த்திடினு மெவ்வழி பயப்படினு நன்னூற்
படித்திடினு மவிழ்தமுணினும்
ஆலயம் புகினும் விபூதியிடன் முறையென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** காலையில் எழும்போது, மலசலம் விடுத்துக் கால் கழுவும்போது, புணர்ச்சிக்குப் பின் நீராடியபோது, நாட்டுத்தலைவரிடம் போகும்போது, மாலைப்போது, கீழ்மக்கள் நிழல் படியும்போது, தெருவில் வெளியே சென்று வீட்டுக்கு மீண்டு வரும்போது, தீட்டினை உடைய மகளிர் நிழல் படும்போது, பெரியவர்களிடம் போகும்போது, பழம் உணவு இவற்றை உட்கொள்ளும்போது, மலர் பறித்திட்டபோது, கொடியவர்களைப் பார்த்தபோது, அச்சம் வரும்போது,

நல்ல நூல் படிக்கும்போது, மருந்து உண்ணும்போது, கோயிலுக்குப் போகும் போது ஆகிய நேரங்களில் திருநீறு அணிய வேண்டும்.

***அ.பொ:*** காரிகை - மகடூஉ, சூதகம் - தீட்டு, அவிழ்தம் - மருந்து. **(௩௯)**

## அறம் முப்பத்திரண்டு - 243,244

243. ஓதுவார்க் குணவீத லாறுசமை யத்துளோர்க்
கோதன மளித்தலாவந்
துரிஞ்சிடத் தறிநாட்ட னாடொறும் பசுவினுக்
குவந்துவா யிரைகொடுத்தல்
காதோலை யீந்திடுதல் கண்ணாடி காட்டலிரு
கண்மருந் திடன்மடங்கள்
கட்டிடுதல் பூஞ்சோலை நாட்டிடுதல் பொருளீந்து
கன்னிகா தானஞ்செயன்
மாதுபோ கம்புரிய வைத்திட றலைக்கெண்ணெய்
வார்த்திடுதல் சுண்ணமீதல்
வருவிலங் கிற்குண வளித்தனா விதனுதவல்
வண்ணா னமைத்துவைத்தல்
ஆதுல ரிருந்திட வறச்சாலை செய்வித்த
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

***பொழிப்:*** ஓதுவார்க்கு உணவு தருதல், அறு சமயத்தோருக்கு உணவு அளித்தல், ஆ உரிஞ்சு தறி நாட்டல், பசுவினுக்குப் புல் அளித்தல், காது ஓலை ஈதல், கண்ணாடி காட்டல், இரு கண் மருந்து இடல், மடங்கள் கட்டிடல், பூஞ்சோலை நாட்டுதல், பொருள் தந்து கன்னிகாதானம் செய்தல், பிரிந்த தம்பதிகளைச் சேர்த்து வைத்தல், தலைக்கு எண்ணெய் தருதல், சுண்ணம் ஈதல், விலங்கிற்கு உணவு அளித்தல், நாவிதன் மூலம் உதவல், வண்ணான் அமைத்து வைத்தல், நோயாளிகள் இருந்திட அறச்சாலைகள் அமைத்தல் இவை அறம்.

***அ.பொ:*** ஓதனம் - உணவு, ஆதுலர் - நோயாளிகள். **(௪௦)**

244. செம்பொனள வின்றியே விலைகொடுத் துயிர்காத்தல்
சேருஞ் சிறைச்சோறிடற்
றின்பண்ட நல்கலற வைச்சோ றளித்திட
றினந்தோறு மையமிடுதல்

வெம்புநோய்க் கவிழ்தங் கொடுத்தலே றிடபம்
விடுத்தன்மக வினைவளர்த்தன்
மென்மகப் பால்வார்த்த னன்மகப் பெறுவித்தன்
மேவுபிறர் துயர்காத்திட
னம்புமற வைப்பிண மடக்கலற வைக்காடை
நல்குதல் குளங்கல்லுத
னல்லதண் ணீர்ப்பந்தல் வைத்திடுதல் சொற்றிட்ட
நாலெட் டறங்கண்முன்னம்
அம்பிகை வளர்த்ததென் றருமறைகண் முறையிடுநல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பொருள் அளவின்றிச் செலவிட்டு உயிர் காத்தல், சிறைச் சோறிடல், தின்பண்டம் நல்கல், ஏழைக்குச் சோறு அளித்திடல், நாள்தோறும் ஐயமிடல், நோய்க்கு மருந்து கொடுத்தல், பொலிகாளைகளை வளர்த்தல், குழந்தைகளை வளர்த்தல், குழந்தைகளுக்குப் பால் தருதல், மகப்பேறு நிகழ உதவல், பிறர் உயிர் காத்திடல், அநாதைப் பிணத்தை அடக்கம் செய்தல், ஏழைக்கு ஆடை நல்குதல், குளம் கல்லுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல் - இவை *32* அறங்களாம்.

**அ.பொ:** அவிழ்தம் - மருந்து, அறவை - வறியவர்கள், ஐயம் - பிச்சை.

**(சக)**

## பல்துலக்கும் குச்சி அமைத்தல்

245. இலைதிகழு மாவன்னி யரியநா யுருவிவே
ரிதழிகரு வேலழிஞ்சி
லீந்துநறு விலிவாகை யார்ந்தபூ லாநெல்லி
யெழினாவல் வேம்புநார்த்தை
மலர்தருங் கொய்யா நறுங்குமி ழிருப்பைதுவர்
வாய்த்ததாய்ப் பாலுள்ளதாய்
மருவுகைப் புள்ளதாய்த் தருமுறித் தங்குலம்
மறையவர்க் கீராறதாங்
கலைதெரியு மன்னவர்க் கேகா தசாங்குலங்
கனவைசி யர்க்கோர்தசங்
கருதுசூத் திரர்தமக் கொன்பதா மங்குலங்
கழியின்மேற் றோலுள்ளதாய்

அலர்தருந் தந்ததா வனவிதி யதாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மா, வன்னி, நாயுருவி வேர், இதழி, கருவேல், அழிஞ்சி, ஈந்து, நறுவிலி, வாகை, பூலா நெல்லி, நாவல், வேம்பு, நாரத்தை, கொய்யா, குமிழி, இருப்பை இவற்றின் குச்சிகளைப் பட்டையோடு துவர்ப்பும் கசப்பும் வாய்ந்தனவாய், பால் உள்ளனவாய்ப் பறித்து அந்தணர் பன்னிரண்டு அங்குலம், அரசர் பதினொரு அங்குலம், வணிகர் பத்து அங்குலம், வேளாளர் ஒன்பது அங்குலம் ஆகிய குச்சிகளைக் கொண்டு பல் துலக்க வேண்டும்.

**அ.பொ:** தந்த தாவன விதி - பல் விளக்கும் முறை. (சஉ)

## திருநீறு குழைத்து அணியும் முறை

246. குழைத்திடு விபூதிமுன் றங்குலத் தளவதாக்
கொண்டுதலை மேலிடநலங்
கூறுநெற் றியினிலிரு நான்கங் குலத்தளவு
கோணாது நெல்லெள்ளளவை
தழைத்தளவை யிடைவிட்டுத் திரிசூல வடிவாய்த்
தரித்திடுத றிரிபுண்டரந்
தனிமார்பி லும்புயத் தாறங்கு லம்முந்தி
தன்னிலோ ரங்குலமிடல்
கழைநிகர் முழங்கையின் மணிக்கட்டி லேநீறு
கனமிலா தேதொட்டிடல்
கழுத்திடுப் பினிலுமுன் றங்குலக் குறியிடல்
கணித்தமகு டாகமவிதி
அழைத்தன்ன முதவுபார்க் கவகோத்தி ரத்தில்வரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** திருநீற்றைக் குழைத்துத் தலைமேல் மூன்று அங்குலம், நெற்றியில் நெல் அல்லது எள் அளவு இடைவெளி விட்டு முப்பட்டையாக எட்டு அங்குல அளவோ திரிசூல வடிவோ அணிதல், மார்பிலும் புயத்திலும் ஆறு அங்குலம்.

முழங்கை மணிக்கட்டு இவற்றில் சிறிதளவு இடல், உந்தியில் ஓர் அங்குலம் இடல், கழுத்தினும் இடுப்பினும் மூன்று அங்குல மிடல் என்பது மகுடாகம விதி.

**அ.பொ:** திரிபுண்டரம் - மூன்று பட்டையாக நீறணிதல். (சகூ)

## பூசைக்காகாத பூக்கள்

247. இச்சிலா லரசுபூ சணியெருக் காமணக்
கிலையினி லெடுத்திட்டபூ
வீஞ்சோலை பனையோலை பின்னலிடு கூடையி
லெடுத்தபூ விடதுகையிற்
பச்சிலையி லாவெறுங் கையினி லெடுத்தபூ
பாண்டத் தெடுத்திட்டபூ
பால்போ னிறத்ததுகி லதனிலு மெடுத்தபூ
பரிசுத்த மில்லாவிடத்
துச்சிதம தென்றே யெடுத்தபூ கீழ்விழுந்
துதிர்ந்தபூ மோந்திட்டபூ
வுண்மையாய்ப் பூசனைக் காகாது குற்றமென
வோதுஞ் சிவாகமங்கள்
அச்சுதன் கண்மலர் பறித்திட வுவந்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அரசு, பூசணி, எருக்கு, ஆமணக்கு இலையில் எடுத்து வைத்துக் கொண்டு வந்த பூக்கள், ஈச்சஓலை, பனைஓலை, பின்னலிட்ட கூடை இவற்றில் எடுத்த பூ, இடக்கையில் இலை இல்லாமல் வெறுங்கையில் எடுத்த பூ, வெள்ளைஆடையில் எடுத்த பூ, தூய்மையில்லா இடத்திலிருந்து எடுத்த பூ, கீழே விழுந்த பூ, உதிர்ந்த பூ, மோந்திட்ட பூ இவை பூசனைக்கு ஆகா என்று சிவாகமங்கள் ஓதும். (சச)

## பூசைக்கு ஆகும் பூக்கள் 248–251

248. வில்வமலர் கொன்றைமாந் தளிர்புன்னை மல்லிகை
விரிந்தசத குப்பைதண்ணீர்
மிட்டான் பருத்திபொன் மத்தைவெண் தாமரை
வெண்பட்டி வெள்வழுதுணை

செல்வநிறை தாமரை நறும்பச்சை வெண்காசை
தேமுறழ் மருக்கொழுந்து
செய்யமந் தாரைபன் னீர்முல்லை மாதுளஞ்
செழுமலர்க் கொன்றையாத்தி
புல்லறு கழிஞ்சில்பொன் னாவாரை செவ்வந்தி
பூத்திகழ் குதம்பைவெட்சி
பூளைமலர் நாரத்தைசெவ் வரவிந்த ஞாழலிவை
பூசனைக் காகுமலராம்
அல்லிமலர் கொண்டுசிவ பூசைபுரி நேசனா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வில்வ மலர், கொன்றை, மா, புன்னை, மல்லிகை, சதகுப்பை, தண்ணீர் மிட்டான், பருத்தி, பொன்மத்தை, வெண்தாமரை, வெண்பட்டி, வெள் வழுதுணை, தாமரை, பச்சை, வெண்காசை, மருக்கொழுந்து, மந்தாரை, பன்னீர், முல்லை, மாதுளம், ஆத்தி, அறுகம்புல், அழிஞ்சில், பொன்னாவரை, செவ்வந்தி, குதம்பை, வெட்சி, பூளை, நாரத்தை, செந்தாமரை, ஞாழல் இவை பூசைக்கு ஆகும் மலர்கள்.
**(சரு)**

249. தேவிசெங் கழுநீர் பசுந்தும்பை கோங்குசிறு
செண்பகம் வெண்பட்டிகை
சிறுநாக மல்லிகை வலம்புரி யடுக்குநந்
தியாவர்த்த நீலோற்பலம்
நாவல்பூம் பாதிரி புரோசைபொன் மத்தையெழி
னாயுருவி குமரிவேங்கை
நாணல்வெண் காக்கணங் கோட்டங் கடம்பலர்
நறுந்தாளி வெள்ளெருக்குப்
பூவுறு கருந்துழாய் வன்னிவெண் கருமையாம்
போதுமால் காந்திபிச்சிப்
பூவினொடு வேரிலா மிச்சமிவை சிவபூசை
புரியுமல ரென்பர்கண்டாய்
ஆவலன் போடுதமிழ் நாவலர்க் குதவுமுகி
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** செங்கழுநீர், பசுந் தும்பை, கோங்கு, சிறு செண்பகம், வெண்பட்டிகை, சிறுநாகமல்லிகை, அடுக்கு நந்தியாவர்த்தம், நீலோற்பலம், நாவல், பாதிரி, புரோசை, பொன்மத்தை, நாயுருவி, குமரி, வேங்கை, நாணல், வெண் காக்கணம், கோட்டம், கடம்ப மலர், நறிய மணமுடைய தாளி, வெள்ளெருக்கு, கருந்துளசி, வன்னி, வெண்கருமை, போது மால்காந்தி, பிச்சி, இலாமிச்சம் இவை சிவ பூசை புரிய உதவும் மலர்கள். **(சசு)**

250. ***கரியசெம் பைப்பூ பசுங்குசை செழுசேவ***
***கன்போது செம்பாதிரி***
***கள்ளொழுகு வெள்ளலரி வெள்ளைத் திலோத்தங்***
***கமழ்ந்திடுஞ் சிவகரந்தை***
***விரிதரும் வெட்பாலை மாமணிப் பட்டிகை***
***மிகுங்கொடிப் புலித்தொடக்கி***
***மென்குராக் குன்றாத்தி சண்பகம் பூகம்***
***விளாகிளுவை வெள்ளைநொச்சின்***
***மருவுகரு வெண்ணெய்தல் கொட்டைக் கரந்தைகிளை***
***மண்டுகண் டங்கத்திரி***
***மாதளை செருந்தியை வண்ணமிரு வாட்சியிவை***
***மாபூசை பண்ணுமலராம்***
***அரியகண் ணப்பர்கண் மலர்கொண்ட விமலனே***
***யருள்பெறு வசந்தராயர்***
***அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய***
***அண்ணா மலைத்தேவனே!***

**பொழிப்:** செம்பைப்பூ, பசுங்குசை, சேவகன், செம்பாதிரி, வெள்ளலரி, வெள்ளைத்திலோத்தம், சிவகரந்தை, வெட்பாலை, மாமணிப் பட்டிகை, கொடிப்புலி, குரா, ஆத்தி, சண்பகம், பூகம், விளா, கிளுவை, வெள்ளைநொச்சி, கருநெய்தல், வெண்நெய்தல், கொட்டைக் கரந்தை, கண்டங்கத்திரி, மாதளை, செருந்தி, இருவாட்சி இவை பூசைக்கு உரிய மலர்கள். **(சஎ)**

251. ***நிலமருவு தமரத்தை வெண்கோங்க சோகுதண்***
***ணீராம்ப லாண்குறிஞ்சி***
***நிலவுவெள் ளைத்துளவு மாவிலிங் கந்தளிர்***
***நிறைந்திடு பெருங்கரந்தை***
***குலவிய கருங்காலி செவ்வேங்கை வெண்ணிறக்***
***கொக்கிறகு வெள்ளடுக்குக்***

கூடுமந் தாரங் கதிர்ப்பச்சை யார்ந்தகுங்
குமவலரி கருமைவெண்மை
நல்விளா செவ்வந்தி யோரிதழ்த் தாமரை
நவின்றநூற் றெட்டுவகையின்
நன்மலர் சிவார்ச்சனைக் காமென்று புட்பவிதி
நவிலாகம மத்தின்முறையே
அலர்கொண்டு நாடொறு மநோன்மணிப் பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தமரத்தை, வெண்கோங்கம், அசோகு, நீராம்பல், ஆண்குறிஞ்சி, வெள்ளைத் துளசி, மாவிலிங்கம், பெருங்கரந்தை, கருங்காலி, செவ்வேங்கை, வெண்ணிறக்கொக்கிறகு, வெள்ளடுக்குக்கூடும் மந்தாரம், கதிர்ப்பச்சை, செவ்வலரி, கருவிளா, வெண்மைவிளா, செவ்வந்தி, ஓரிதழ்த் தாமரை, இவை *108* வகையின் சிவார்ச்சனைக்கு ஆகும் நன்மலர்களாம். **(சஅ)**

## சிவலிங்க வகைப் பலன்

252. ஆற்றுமண லாலே யிலிங்கமே பாணித்
தருச்சனை புரிந்தபேருக்
காயுளுண் டாம்பசுஞ் சாணலிங் கப்பூசை
யாற்றுவோர்க் கர்த்தமுண்டா
நீற்றிலிங் கார்ச்சனம் முத்தியுண் டாநித்த
நியதியா யாற்றோரமண்
ணேயலிங் கஞ்செய்து பூசித்த பேர்க்கின்ப
நிதிமைந்தர் பேறுமுண்டா
மாற்றருஞ் சந்தனச் சாந்தா லிலிங்கம்
வகுத்துவழி பாடுசெய்யும்
மானிடர் தமக்குக் குபேரபாக் கியமவனி
மணிமாட மனைகளுண்டாம்
ஆற்றுமுடை யவர்பூசை யரசாக்ஷி செல்வமா
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஆற்று மணல் இலிங்கம் அமைத்து அருச்சித்தால் தீர்க்க ஆயுள். பசுஞ்சாணலிங்கம் அமைத்து அருச்சித்தால் செல்வம். திருநீற்றால் லிங்கம் அமைத்து அருச்சித்தால் முத்தி. ஆற்றோர மண்ணால் லிங்கம் அமைத்து அருச்சித்தால் இன்பம், செல்வம், மைந்தர். சந்தனத்தால் லிங்கம் வைத்து அருச்சித்தால் குபேரபாக்கியம், வீடு, மாடம் முதலியவை கிட்டும்.

**அ.பொ:** பாணித்து - உண்டாக்கி, அர்த்தம் - செல்வம். **(சகூ)**

## அர்ச்சனைமுதலிய தருமம் ஒன்றிற்கு ஒன்று சிறப்பு

253. ஓராயி ரம்பூவி னாலருச் சித்தனிக
றொருவில்வ மர்ச்சித்தலா
மோராயி ரங்கிணறு வெட்டிவைத் ததுநிகரு
மொருதடா கப்ரதிஷ்டை
சீராயி ரம்மனைகள் கட்டிவைத் திடுபலன்
சேருமொரு மடமமைத்தல்
செப்பருங் கிருகத்த ராயிரம் பேர்க்குநிகர்
தீதிலொரு சந்நியாசியாம்
பேராயி ரஞ்சொல்லு மந்திர நிகர்க்குமொரு
பெருமுத்தி பஞ்சாக்கரம்
பெரிதுமெண் ணான்கற நிகர்க்குமொரு ஞானியைப்
பிட்சைசெய் வித்தலாகும்
ஆராம சிங்கபுரி வாழ்தருந் தருமதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஓராயிரம் பூ அர்ச்சனையை விட ஒரு வில்வ அர்ச்சனை சிறப்பு. ஓராயிரம் கிணறு வெட்டுதலைவிட ஒருகுளம் வெட்டுதல் சிறப்பு. ஓராயிரம் இல்லறத்தாருக்கு உணவு இடுவதைவிட ஒருதுறவிக்கு உணவிடல் சிறப்பு. ஓராயிரம் மந்திரம் உச்சரிப்பதனைவிட ஒருமுத்தி பஞ்சாட்சரம் உச்சரிப்பது சிறப்பு.

**அ.பொ:** தடாக ப்ரதிட்டை - குளம் அமைத்தல், கிருகத்தார் - இல்லறத்தார், முத்தி பஞ்சாட்சரம் - சிவாயநம என்பது. **(ருO)**

## பூசைசெய்ய வாரங்கட்குப் பூவிடு பயன்

254. ஆதிவா ரத்திலே வில்வமர்ச் சிக்கவே
யஷ்டமா சித்தியுண்டாம்

அமலனைச் சோமவா ரந்துளப மர்ச்சிக்கி
லளவிலாச் செல்வமுண்டாம்
நீதிசெவ் வாயினில் விளாவருச் சிக்கினன்
னேயமுள மைந்தருண்டா
நிகழ்புந்தி வாரமா தளையருச் சிக்கினன்
னெறியுமெய்ஞ் ஞானமுண்டாம்
வேதியன் வாரமதில் வங்கமலர் கல்வியாம்
வெள்ளிநா வற்கொழுந்து
மேதினிக் கரசனாஞ் சனிவார மால்காந்தி
மெய்யினோய் வாராதுகாண்
ஆதியினில் வல்லாள ராயற்கு நேயனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஞாயிறு வில்வம் இட்டு அர்ச்சிக்க அட்டமாசித்தி, திங்கள் துளவம் இட்டு அர்ச்சிக்க பெருஞ்செல்வம், செவ்வாய் விளாமலர் இட்டு அர்ச்சிக்க நல்ல மைந்தர், புதன் மாதுளை இட்டு அர்ச்சிக்க நல்லநெறி, மெய்ஞ்ஞானம், வியாழன் வங்கமலர் இட்டு அர்ச்சிக்கக் கல்வி, வெள்ளி நாவற்கொழுந்து இட்டு அர்ச்சிக்க மேதினிக்கு அரசன், சனி சூரியகாந்தி இட்டு அர்ச்சிக்க நோய் வராது.

**அ.பொ:** வேதியன் - வியாழன், மால்காந்தி - சூரியகாந்தி. (ருக)

## ஆலயத்தீப மிடல் ஒன்றுக்கொன்று சிறப்பு

255. ஓதரிய தேவால யங்களுக் குள்ளே
யுவந்துதேங் காயெண்ணெயா
லொருகோடி தீபமிட் டதையொக்கு நல்லெண்ணெ
யொருவிளக் கேற்றிவைத்தா
றீதறுந் தெளிவான நல்லெண்ணெ யொருகோடி
தீபங்க ளிட்டதொக்குஞ்
சேருமிரு கொம்புள்ள வெண்பசுவி நெய்யினாற்
றீபமொன் றேற்றிவைத்தா
னீதிபுனை பசுவினெய் யாயிரம் விளக்கொக்கு
நிரைமுலைக் காயிலுப்பை
நெய்விளக் கொன்றிடலிவ் வாயிரஞ் சுடரொக்கு
நிறைகருப் பூரதீபம்

ஆதியிற் பரவைமனை தூதுசெலு மண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஆலயத்தில் தேங்காய் எண்ணெய்த் தீபம் ஆயிரம் இடுதலுக்குச் சமம் ஒரு நல்லெண்ணெய்த் தீபம், ஆலயத்தில் நல்லெண்ணெய்த் தீபம் ஆயிரம் இடுதலுக்குச் சமம் ஒரு பசுநெய்த் தீபம், ஆலயத்தில் பசுநெய்த்தீபம் ஆயிரம் இடுதலுக்குச் சமம் ஒரு இலுப்பைநெய்த் தீபம், ஆலயத்தில் இலுப்பைநெய்த் தீபம் ஆயிரம் இடுதலுக்குச் சமம் ஒரு கற்பூரத்தீபம். (௫௨)

## உட்சமயம் ஆறின் பெயருந்தெய்வமும்

256. சந்தகண பதிபூசை பண்ணுவது பாசுபத
சமயமாக் கதிர்வேலவன்
றன்பூசை பண்ணன்மா விரதசம யஞ்சிவன்
றன்பூசை சைவசமயங்
கந்தரண வீரபத் திரபூசை பண்ணுவது
காளாமு கச்சமயமாங்
கருதுவை ரவதேவ ரைப்பூசை புரியுமது
காணும்வை ரவசமயமாம்
பந்தன பயோதர பராசத்தி யைப்பூசை
பண்ணுவது வாமசமயம்
பகருமிச் சமயங்க ளாறுமுட் சமயமாய்ப்
பன்னுஞ் சிவாகமங்கள்
அந்தரற் கரிதான மெய்ஞ்ஞான பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** கணபதி பூசை பண்ணுவது பாசுபதம், முருகன் பூசை பண்ணுவது மாவிரதம், சிவன் பூசை பண்ணுவது சைவம், வீரபத்திர பூசை பண்ணுவது காளாமுகம், பைரவ பூசை பண்ணுவது பைரவம், சக்தி பூசை பண்ணுவது வாமம். இவை ஆறும் சைவத்தின் உட்சமயம் என்று சிவாகமங்கள் கூறும்.

**அ.பொ:** அந்தரர் - தேவர். (௫௩)

## திருநீறு விபூதிவாங்கித் தரிக்கும் முறை

257. ஒருகரந் தனைநீட்டி மூன்றுவிர லால்வாங்கி
யொளிவிரலி னாற்பூமிமே
லுதிரும் படிக்குநீ றிடுவோ ரகோரநர
கொருகோடி கற்பமாழ்வார்
இருகரங் கொடுதொழுது வலதுளங் கையிலேற்
றிறைவனெதிர் குருவினெதிரே
யெரியினெதிர் வழிநடுவி லாசூச மேவுழி
யிடாமலெள் ளளவாயினும்
பெருநிலந் தன்னிலே வீழாம லண்ணாந்து
பேசுபஞ் சாக்கரத்தைப்
பேரன்பி னாலுன்னி வெண்ணிற விபூதியைப்
பெட்புடன் பூசுவோர்கள்
அருணிதியு முயர்கதியு மாயுளும் பெருகுவா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஒரு கையை நீட்டி மூன்று விரலால் வாங்கி மோதிர விரலால் திருநீறு பூமியில் உதிரும்படி நீறு அணிவோர் கொடிய நரகில் ஒரு கோடி கற்பகாலம் கிடப்பர். இரு கையால் தொழுது வலது உள்ளங்கையில் ஏற்று இறைவன், குரு அக்கினி எதிரே அணியாது நடுவழி, தீட்டுப்படும் இடம் இவற்றை விடுத்துத் தூய இடத்தில் அண்ணாந்து திருநீறு கீழே சிந்தாதபடி திருவைந்தெழுத்தைத் தியானித்து விருப்போடு திருநீறு பூசின் செல்வமும் உயர்கதியும் வயதும் பெருகும்.

**அ.பொ:** அகோர - மிகக்கொடிய. **(ருச)**

## உருத்திராக்கம் அணிதல்

258. உச்சியிடை யோர்மணி தழைத்தவிரு காதிலு
முயர்ந்தமா மணியாறிரண்
டுத்தமாங் கச்சிரத் தெண்ணைந்து நீள்கழுத்
தூடுமுப் பத்திரண்டாஞ்
செச்சையணி மார்புநூற் றெட்டுறுமு ழங்கையிற்
செப்புமிரு பத்தாறதாஞ்
சேர்ந்திரு மணிக்கட்டி லிருபத்தி ரண்டுமணி
தேர்ந்துருத் ராக்கமணியே

நிச்சயப் பயபத்தி நியமநெறி யுள்ளன்பு
நேயநிறை யார்வமுடனே
நித்தலும் பூசைபுரி காலத்தி லாயினு
நீங்கா தணிந்தபேர்கள்
அச்சிவ சொரூபரவ ராமென்ன மாமறைக
ளருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** உச்சியில் ஒன்று, இரண்டு காதுகளில் *12,* தலையில் *40,* கழுத்தில் *32,* மார்பில் *108,* முழங்கையில் *26,* மணிக்கட்டில் *22* என்ற கணக்கில் உருத்திராக்க மணியைப் பயபக்தி, நெறிமுறை, விருப்பம், உள்ளன்பு இவற்றுடன் நாடோறும் பூசை செய்யும் காலத்திலாயினும் அணியின் அணிந்தவர் சிவ சொரூபம் பெறுவர்.

**அ.பொ:** செச்சை - வெட்சி. (ருரு)

## செபமாலைக்கு விதியும்பலனும்

259. செய்யவிரு பத்தைந்து ருத்திர மணிக்கோவை
சேர்த்துசெப மன்பொடுசெயிற்
செப்பரிய முத்திதரு மூலொன்ப தக்கமணி
செல்வமேன் மேலாயிடும்
பையவெண் ணான்குமணி கல்விநல முந்தரும்
பதினைந்து மாபிசாரப்
பாலதாம் பதின்மூன்று மேவுமுச் சாடன
பலந்தருஞ் செபமாலிகை
கையினிற் சிறுவிரலின் மேற்றள்ளன் ஞானமது
காட்டும் பவித்திரவிரல்
கனகமுறு நடுவிரற் பகைதருந் தற்சனி
கடியநோய் விளிவுமுண்டாம்
ஐயமிலை யங்குட்ட மருளே தழைத்திடு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** *25* உருத்திராக்கம் சேர்த்துச் செபம் செயின் முத்தி கிட்டும்.
*27* உருத்திராக்கம் சேர்த்துச் செபம் செயின் செல்வ வளர்ச்சி பெருகும்.

*32* உருத்திராக்கம் சேர்த்துச் செபம் செயின் கல்விநலம் மேலோங்கும்
*15* உருத்திராக்கம் சேர்த்துச் செபம் செயின் ஆபிசாரத்துக்கு உதவும்
*13* உருத்திராக்கம் சேர்த்துச் செபம் செயின் ஆவர்த்தி பல மடங்காகும்

உருத்திராக்கத்தைச் சிறுவிரலால் தள்ளி எண்ணுதல் ஞானம். பவித்திரவிரலால் தள்ளி எண்ணினால் செல்வம், நடுவிரலால் தள்ளி எண்ணினால் பகை, சுட்டுவிரலால் தள்ளி எண்ணினால் நோய், கட்டைவிரலால் தள்ளி எண்ணினால் அருள் தழைத்திடும்.

***அ.பொ:*** ஆபிசாரம் - கெடுதி செய்தல், தற்சனி - சுட்டுவிரல், அங்குட்டம் - கட்டைவிரல். **(ருசா)**

## செபஞ் செய்யும் திசையின் பலன்

260. **நல்லகீழ் முகமா யிருந்துசெப மேசெய்யி**
**னாடொறும் வசியமுண்டா**
**நாடுமக் கினிமூலை நோயில்லை தென்றிசையை**
**நாடிச் செபம்புரியினோ**
**வெல்லருந்தீமைதரு நிருதிநல் குரவே**
**விளைந்திடுவ குடதிசையதோ**
**வேண்டி முன்றேடிய பொருட்செலவு வாயுதிசை**
**வீறுமுச் சாடனமிகுஞ்**
**சொல்லரும் வடக்குமுக மாய்ச்செபஞ் செய்திடிற்**
**சொன்னமுங் கல்விநலமுந்**
**தோன்றுமீ சானதிசை முத்திவீ டாமென்று**
**சொல்லுஞ் சிவாகமங்கள்**
**அல்லலற வெத்திசையு மாகுமடி கட்குநல்**
**லருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

***பொழிப்:*** கிழக்கு நோக்கிச் செபம் செயின் யாவரும் வசப்படுவர், தென்கிழக்கு நோக்கிச் செபம் செயின் நோயின்மை. தெற்கு நோக்கிச் செபம் செயின் கொடிய தீமை, தென் மேற்கு நோக்கிச் செபம் செயின் வறுமை. மேற்கு நோக்கிச் செபம் செயின் பொருட் செலவு. வடமேற்கு நோக்கிச் செபம் செயின் ஆவர்த்தி மிகும். வடக்கு நோக்கிச் செபம் செயின் கல்வியும் செல்வமும் தோன்றும். வடகிழக்கு நோக்கிச் செபம் செயின் முத்திவீடு தரும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

**அ.பொ:** அக்கினி மூலை - தென்கிழக்கு, நிருதி - தென்மேற்கு, குடதிசை- மேற்றிசை, வாயுதிசை - வடமேற்கு, உச்சாடனம் - செப ஆவர்த்தி, ஈசான திசை - வடகிழக்கு, அடிகள் - இறைவன். **(ருஎ)**

## பிரதோஷ தரிசன விதி கூறியது

261. நண்ணுதிரை யோதசித் திதியதே பிரதோட
நாளென்று பெயராகுமந்
நாளிலிரு பத்தாறு நாழிகை யதற்குமே
னாலுநா ழிகையுநீல
வண்ணராத் திரியின்மூன் றரைநாழி கைத்தொகை
வரைக்கும்பிர தோடகாலம்
மறவாம லேசிவா லயநந்தி யிருகொம்பு
மத்தியினி னாட்டம்வைத்து
வெண்ணந்தி கேசுரன் விஷணத்தை நீவிவான்
மேவுழியி னின்றிறைஞ்சி
விமலசிவ லிங்கத்தை யரகர வெனச்சொல்லி
விழியினாற் றெரிசிப்பவர்
அண்ணலரு ளாற்செல்வ மாயுளும் பெறுவர்நல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** திரயோதசி திதியில் பகற்பொழுதில் இறுதி நான்கு நாழிகை இரவில் முதல் மூன்றரை நாழிகை ஆக ஏழரை நாழிகை ஆகிய மூன்றுமணி நேரம் பிரதோஷநேரம். நந்தியின் இருகொம்பு வழியே வலப்புறமாக இருந்து சிவபெருமானைத் தரிசித்து நந்திதேவரின் பீஜத்தைத்தொட்டு வணங்கிப் பின் சிவபெருமானை வழிபடுபவர்கள் செல்வமும் ஆயுளும் பெறுவர்.

**அ.பொ:** விஷணம் - பீஜம், வான் - வெற்றிடம். **(ருஅ)**

## மட்டமான பொருள்கள்

262. பனையினது வெல்லங், கிழங்குநுங் கொடு,பனம்
பழமி,வை யருந்தலாகா
படர்தரு செடிப்பசலை, செம்பசலை, சிறுபசலை,
பரியகுண் டைச்சுரைக்காய்
சினையுலவு மரவள்ளி, யீருள்ளி வெள்ளுள்ளி,
செங்கீரை, செம்முருங்கை

**தென்னைவெல் லத்தினொடு மீச்சவெல் லங்காய்ச்**
**சிரக்குபான் முள்ளி,புண்ணாக்**
**கினியதேன் கையாற் பிசைந்ததயி ரொட்டைநெய்**
**யெருமைசெம் மறியசப்பா**
**லீன்றநாட் பத்திற் கறந்தபாற் சூதகத்**
**தில்லிற் கறந்திட்டபால்**
**அனுசித மிதாசார முடையோ ரருந்திடா**
**ரருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** பனைவெல்லம், பனங்கிழங்கு, நுங்கு, பனம்பழம், செடிப்பசலை, செம்பசலை, சிறுபசலை, குண்டைச் சுரைக்காய், மரவள்ளி, ஈருள்ளி, வெள்ளுள்ளி, செங்கீரை, செம்முருங்கை, தென்னை வெல்லம், ஈச்ச வெல்லம், காய்ச்சிரக்கு, பால்முள்ளி, பிண்ணாக்கு, தேன், கையால் பிசைந்த தயிர், ஒட்டகநெய், எருமை, செம்மறியாடு இவற்றின் பால், கன்று ஈன்ற பத்து நாள்களுக்கு உட்பட்ட நாளில் கறந்த பால், தீட்டு உள்ள வீட்டில் உள்ள பால் இவற்றை ஆசாரமுடைய சான்றோர் உண்மாட்டார்கள்.

**அ.பொ:** ஒட்டை - ஒட்டகம், செம்மறி அசம் - செம்மறி ஆடு, அனுசிதம் - ஏற்புடையதல்லாதது. **(ருகூ)**

## ஐவகைப் பாவமும் அவற்றைப் போக்குதலும்

263. **தினந்தோறும் பலபண்ட மம்மியி லரைப்பதாற்**
**செறிவிற கடுப்பிலிட்டுச்**
**செந்தீ யெறிப்பதாற் றண்ணீர்க் குடத்தினுட்**
**சேர்ந்திட முகக்குமதனான்**
**முனைந்துசோ தினிகொடு பெருக்கிநற் சாணிபட**
**முறையாய் மெழுக்கிடுவதான்**
**மூரியரி வாண்மணையி லேகறி குறைப்பதான்**
**மூளுமைம் பாவநீங்க**
**நினைந்துமறை யோதிட றருப்பணம் விடுத்திட**
**னெருப்பினிடை யோமஞ்செய**
**னியமமொடு பலியிடுத றன்பா லுவந்துவரு**
**நியதிபெறு மதிதியோர்கட்**

கனம்பகிர்த லிவைதினஞ் செய்மகம தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அம்மியில் அரைத்தல், அடுப்பில் விறகிட்டு எரித்தல், தொட்டியிலிருந்து குடத்தில் தண்ணீரை முகந்து கொண்டு வருதல், விளக்கு மாற்றால் பெருக்கிச் சாணியிட்டு மெழுகுதல், அரிவாள்மணையில் காய்களை வெட்டுதல் ஆகிய ஐவகைப் பாவமும் மறை ஓதித் தருப்பனம் செய்து தீயில் ஓமம் செய்து நியமமொடு பலியிட்டு விருந்தினருக்கு உணவிட்டால் நீங்கிவிடும்.

**அ.பொ:** சோதினி - விளக்குமாறு, அதிதி - விருந்தினர். (௬0)

## நாள்தோறும் செயும் ஐந்து வேள்விகள்

264. பரிவொடுங் காலைக் கடன்கழித் தருமறை
பகர்ந்திடுதல் பிரமயாகம்
பலவமர ரிருடிபிது ராதிக டருப்பணம்
பண்ணுவது பிதுரியாகமாந்
தெரிதரும் விதியினாற் றீவளர்த் தோமவினை
செய்குவது தேவயாகஞ்
செப்புஞ் சிவாகமப் படியன்ன பலியிடுதல்
றேர்ந்திடும் பூதயாகம்
வருமரிய வதிதியர்க் குளமகிழ்ந் தன்னம்
வழங்கன்மா னிடயாகநோய்
மாற்றுமக மைந்துந் தினஞ்செயிற் பாவமது
வாரா தெனத்துணிந்தே
அரனருள் பெறுஞ்சைவ மறையவர் புரிந்திடுவ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வேதம் ஓதுதல் பிரமயாகம், தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்தல் பிதுர்யாகம், தீயில் ஆகுதி அருத்துதல் தேவயாகம், சிவாகமப்படி பலியிடுதல் பூதயாகம், விருந்தினருக்கு உணவிடுதல் மனிதயாகம். இவ்வைந்தும் நாடோறும் செய்யின் பாவம் வாராது.

**அ.பொ:** பிதுர் - தென்புலத்தார். (௬௧)

## உண்பதில் குற்றம்

265. பந்தியிடை யோதன மிருப்புக் கரண்டியாற்
பரிமாற வுண்ணறோடம்
பாவைய ரிடுங்கறியை மீண்டுகொடு வாவெனப்
பன்னியிட வுண்ணறோடஞ்
சந்தியா காலத்து மத்தராத் திரியினுந்
தயிரடிசி லுண்ணறோடஞ்
சாலவய லாருண்ட நற்கலந் தன்னிலே
தானுண்ண லதிகதோடம்
வந்தெடுத் திடுமட் கலத்தினுந் தகரத்து
மிகவுடைந் திடுகலத்து
மேவுமுள் ளங்கையினு மிட்டுண்ண னின்றுண்ணன்
மேலான தோடமாகும்
அந்தமிகு பொன்வெள்ளி பாத்திரத் திலையுசித
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** இருப்புக் கரண்டியில் பரிமாற உண்ணல், இலையில் இடப்பட்ட காய்கறியை மீண்டும் வேண்டிப் பெற்றுண்ணல், மாலையிலும் நடுஇரவிலும் தயிர்ச்சோறு உண்ணுதல், மண்பாத்திரம், தகரம், உடைந்த பாத்திரம் இவற்றில் உண்ணல், உள்ளங்கையில் பெற்று உண்ணல், நின்று கொண்டே உண்ணல் என்பன பழுதான செயல்கள்.

**அ.பொ:** தோடம் - தோஷம், குற்றம். (சூஉ)

## உணவு உண்ணும் போது அன்னம் பலியிடல்

266. போசனஞ் செயுமிடந் திருமெழுக் கிட்டுப்
பொருந்திய கிழக்குமுகமாய்ப்
பொற்பா யிருந்திட்ட வடிசின்மே லுதகம்
புரோட்சித் துடன்வலப்பால்
வாசநறு நெய்யன்ன மைந்துபிடி பலிவைத்து
மந்திர நவின்றுநன்னீர்
வலமாக வாபோ சனங்கொண்ட மிகுதிநீர்
மருவுசிறு விரலின்வழிவிட்

டேசிலப் பலிகொடிக் கிட்டசன மைங்கா
லெழிற்பிரா ணாகுதிபுரிந்
தின்னடிசி லுண்டுத்த ராபோச னங்கொண்
டெழிற்சேட நீர்ப்பெருவிரல்
ஆசில்வழி விட்டெழுத லாசார சைவநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** இலைபோடும் இடத்தை மெழுக்கிட்டுக் கிழக்கு முகமாய் இலை முன் அமர்ந்து, பரிமாறிய சோற்றின் மீது சிறிது நீர் தெளித்து, நெய்யிட்ட சோற்றை இலையின் வலப்புறத்தில் ஐந்து பிடி வைத்து மந்திரம் சொல்லி, நீரை இலைப் பகுதியை வலமாகச் சுற்றிச் சிறிது நீரை ஆபோசனம் செய்து, கையில் மீதி உள்ள நீரை, சிறுவிரல் வழியாக இலைக்கு வெளியே வழியவிட்டுக் காக்கைக்கு உணவிட்ட பின் ஐந்து முறை மந்திரம் கூறிச் சில பருக்கைகளை உட்கொண்டு விழுங்கி, உணவு உண்டு முடிந்தபின் உத்தர ஆபோசனம் செய்து சிறிது நீர் உட்கொண்டு, கையில் மீதி உள்ள நீரைக் கட்டைவிரல் வழியே சொட்ட விடுதல் சைவநெறி.

**அ.பொ:** உதகம் - நீர், புரோட்சித்து - தெளித்து, கொடி - காக்கை, அசனம்-சோறு, உத்தராபோசனம் - உணவு உண்டு முடித்த பின்பு செய்யும் ஆசமனம்.

(௨௬௬)

## உணவு உண்டபின் செயற்பாலன

267. போசனஞ் செய்தபின் பாசமன முஞ்செய்து
பொற்புடன் வடகிழக்கம்
போருகா சனமேவி வில்வலன் வாதாவி
பொன்றிட வயிற்றைவருடித்
தேசொடுஞ் சீரணஞ் செய்தகும் போதுமச்
சிவமுனியை யுன்னியோர்ந்து
திலமளவு திருநீ றருந்திப் புனைந்துளந்
தேர்ந்தங்கன் யாசமுடனே
வாசியு ளெழும்பிரா ணாயாம மாற்றிநா
மௌனமாய் மூவேழுரு
மந்திர மகோரத்தை யுள்ளே செபித்துமேன்
மகிழ்வொடு மிருப்பர்நாளும்

ஆசையுறு கிருகத்த வாச்சிரம நெறியென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** உணவு உண்டு கையலம்பிய பின் ஆசமனம் செய்து வடக்கோ கிழக்கோ நோக்கி ஆசனத்திலிருந்து வாதாபி இல்வலன் அழியுமாறு வயிற்றைத் தடவி, அவர்களைச் சீரணம் செய்த அகத்தியரைத் தியானம் செய்து, எள் அளவு திருநீறு உண்டு, திருநீறு பூசி, அங்க நியாசம், பிராணாயாமம் செய்து *21* முறை அகோரமந்திரம் செபிக்க வேண்டும். இஃது இல்லறத்தார் நெறி.

**அ.பொ:** அம்போருகாசனம் - பத்மாசனம், அங்க நியாசம் - உறுப்புக்களை மந்திரத்துடன் தொடுதல், கிருகத்த ஆசிரமம் - இல்லறம். **(சுச)**

## தாம்பூலந்தரிக்கும் முறை

268. மெல்லிலைக் காம்பும் பழுப்போடு காம்பதன்
மேற்றொறும் புங்கசங்கன்
மிகமுறுக லழுகலும் வதங்கலிவ் வெட்டாகும்
வெற்றிலைக் குற்றநீக்கி
நல்லபாக் கெச்சின்முக் காலுமிழ்ந் தாராய்ந்த
நறியவெள் ளிலைகிழித்து
நண்ணுகற் சுண்ணங் கிராம்பேல தக்கோல
நன்மிளகு வான்மிளகுநேர்
சொல்லருஞ் சுக்குமண மேவுசா திக்காய்
தொடர்ந்திடுஞ் சாதிபத்திரி
சுகவாச பூரமிவை தாம்பூல சகிதமாய்த்
துய்த்திடுவர் செல்வர்கண்டாய்
அல்லியலர் வாவிசூ ழணியணா மலையனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வெற்றிலைக் காம்பு, பழுத்த வெற்றிலை, ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்ட வெற்றிலை, கசங்கின வெற்றிலை, மிக முற்றின வெற்றிலை, அழுகிய வெற்றிலை, வதங்கின வெற்றிலை, அழுக்குப் படிந்த வெற்றிலை, இவற்றை நீக்கி, வாயில் பாக்கு இட்டுப் பாக்கு எச்சிலை மும்முறை உமிழ்ந்து, நல்ல

வெற்றிலையை நரம்பு போகக் கிழித்துக் கல் சுண்ணாம்பு தடவிக் கிராம்பு, ஏலம், தக்கோலம், வால்மிளகு, சுக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, பச்சைக் கற்பூரம் இவற்றுடன் வாயிலிட்டுச் சுவைத்து நுகர வேண்டும்.

**அ.பொ:** துறும்புங் கசங்கல் - ஒட்டிக் கொண்டு கசங்கியிருத்தல். **(சாரு)**

## பழுதுபடும் செயல்கள்

269. **ஊணருந் துங்காலை பேசனகை செய்தல்பிடி**
**யுண்டையா யுண்ணல்சிந்தல்**
**ஒருவிரலை நீக்கியுணன் மயிரென்பு பூச்சிபுழு**
**வுகிர்பட்ட சோறுண்டிடல்**
**காணுநக மயிரினைப் பல்லாற் கடித்தலொரு**
**காலினாற் காறேய்த்துநீர்**
**கழுவிடுத லுண்கலத் தெச்சிலை யுமிழ்ந்திடுதல்**
**கையினா னகமுரித்தற்**
**பாணியாற் றலைசொறிதல் விரலினாற் றலைகீறல்**
**பாழ்மனையி லேயுறங்கல்**
**பட்டகஞ் சாக்கட் குடித்தல்பெரி யோரைப்**
**பழித்தனித் திரையெழுப்பல்**
**ஆணைதள் ளுதலிவை மகாதோட மென்பர்கா**
**ணருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** உண்ணும்போது பேசுதல், சிரித்தல், சோற்றை உருட்டி உண்ணல், மயிர், எறும்பு, பூச்சி, புழு, நகம் பட்ட சோற்றை உண்ணல், நகத்தையும் மயிரையும் கடித்தல், ஒரு காலால் மற்ற காலைத் தேய்த்து நீரால் கழுவிடல், உண்ணும் பாத்திரத்தில் எச்சிலை உமிழ்தல், கைகளால் நகத்தை நீக்குதல், கையினால் தலையினைச் சொறிதல், விரலினால் தலையைக் கீறல், பாழ் வீட்டில் உறங்குதல், பட்டைச்சாராயம், கஞ்சா, கள் குடித்தல், பெரியோரைப் பழித்தல், தூக்கத்தில் எழுப்புதல், பெரியவர் ஆணையைக் கடத்தல், இவை மிகவும் பழுதுபட்ட செயல்களாம். **(சாசா)**

## ஆசமனஞ் செய்யுங் காலங்கள்

270. **வாசமலர் கொய்யினும் வீதியிடை போய்வரினு**
**மலசலம் விட்டுவரினும்**

மாதரொடு சம்போக மேவிடினு நீசர்நிழன்
மருவியுடன் மீதுபடினுந்
தூசரை யுடுக்கினும் பலகார முண்ணினுஞ்
சோறுணினு நீருண்ணினுந்
தூயநற் கருமங்க டருமங்கள் புரியினுந்
தொகுசிராத் தங்கள்செயினுந்
தேசுதரு தானங்கள் செய்யினுங் கனிகாய்க
டின்னினுந் தூங்கியெழினுந்
தீயகொலை செய்குவோர் பாயுநிழ றோயினுந்
தீண்டொணா தவைதீண்டினும்
ஆசமன மக்கணஞ் செய்யல்விதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** பூக்கள் கொய்யும் முன்னும் கொய்த பின்னும், வீதியில் போய் வருதல், மலசலம் கழித்து வருதல், மகளிர் புணர்ச்சிக்குப் பின், கீழ்மக்கள் நிழல் நம் உடல் மீது பட்டபின், ஆடை உடுத்தபின், பலகாரம் சோறு உண்டபின், நீர் குடித்தபின், நற்கருமங்கள் தருமங்கள் சிராத்தங்கள் செய்யும் போது, தானங்கள் செய்யும் போது, கனிகாய்கள் தின்ற பின், தூங்கி எழுந்தபின், தீயோர் நிழல் பட்டபின், இவை தீண்டத்தகாதவை. தீண்டிய பின் ஆசமனம் செய்தல் விதி முறை என்ப.

**அ.பொ:** தூசு - ஆடை, பாயும் நிழல் - பரவிய நிழல். **(சுஎ)**

## மூதேவி இருப்பிடமும் பழுதான செயல்களும்

271. நாட்டரசு நீழலும் விளாமரத் தடிநிழலு
நன்மனை விளக்குநிழலு
நடமாடு மனிதர்நிழ லிரவினுடன் மேற்படியி
னலமிலாச் சேட்டைமருவும்
பூட்டுநூன் மறையவர்க டந்நிழன் மிதித்திடற்
புனிதமா யொருவனுண்ட
புனற்சேட மொருவனுண லாடைதோய்த் திட்டநீர்
பொருந்தவுட் கொள்ளலாகா
வீட்டிடை பெருக்கிய விளக்குமாற் றுப்புழுதி
மென்மயி ருகுத்தபுழுதி

வீறிடுங் கழுதைநாய்ப் புழுதிவெந் திடுசாம்பல்
வேகாக் கரிப்புழுதியும்
ஆட்டிடைப் புழுதிபட லாகாது மேலென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அரசமர நிழல், விளாமரத்தின் அடி, விளக்கின் நிழல், இரவில் மனிதர் நிழல் நம்மேல் படிதல் இவ்விடங்களில் மூதேவி உறைவாள். அந்தணர் நிழலை மிதித்திடல், ஒருவன் குடித்து வைத்த மீதிநீரைப் பருகுதல், ஆடை தோய்த்து அழுக்கான நீரைப் பருகுதல் இவை கூடா. வீடு பெருக்கிய விளக்குமாற்றுப் புழுதி, கழுதை நாய்ப் புழுதி, மயிர் உகுத்த புழுதி, சாம்பல் வேகாக்கரிப்புழுதி, ஆடு செல்லும்போது எழும் புழுதி இவை நம்மீது படிதல் கூடாது.

**அ.பொ:** சேட்டை - மூதேவி. (சூஅ)

## இவ்வகைஅமையின் சிறப்பு

272. விளையுநன் னிலமுமாய்த் தண்ணீரு மருகதாய்
விரையெலா மனையிடமுமாய்
வெள்ளிமலை போலெருது கருமலை யெனக்கடா
விடுகோலு மாயேருமாய்க்
களவிலா நெஞ்சுடைய படியாளு மாயுழுங்
காலத்தி லேயுழவுமாய்க்
கனமான கிடையெருத் தழையுமாய் நாற்றுவிரை
காலுமாய் மேனடவுமாய்
வளமான பாடுமாய்க் களைபறிவு மாய்வேலி
வளைவுமாய் நற்காவலாள்
வைப்புமாய் நாடோறும் வந்துபார்க் குந்திறமு
மாயிருந் தாற்பலிக்கும்
அளையுறுங் கொழுமுனைச் செல்வமே செல்வமா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** விளையும் நல்ல நிலம், அருகில் தண்ணீர், வீட்டில் பாதுகாவலாக வைத்திருக்கும் விதைகள், கயிலைமலை போன்ற எருது, கருமலை போன்ற

எருமைக்கடா, ஏர்க்கலப்பைகள், உண்மையாக உழைக்கும் ஏவலர்கள், நல்ல ஆடுமாடு புழுக்கை, சாணக எரு, தழை எரு, நல்ல நாற்று, நல்ல நடவு, நல்ல களைபறிப்பு, நல்ல வேலி, நல்ல காவல், நாடோறும் வயல்களைச் சென்று பார்க்கும் திறமை இவை இருப்பின் கொழுமுனைச் செல்வம் நல்ல விளைவு தர, நாடு செழிக்கும். **(சாகஅ)**

## நன்மக்கள் பிறத்தல்

**273.** **இங்குள சரீரமுண் டாகின்ற வயணமே**
**காதசி யிலங்குபர்வ**
**மியலமா வாசைமா தப்பிறப் பாகா**
**திருக்குநாட் களைநீக்கியே**
**மங்கையர்கள் பூத்துநீ ராடிய தினந்தொட்டு**
**வருமா றிரண்டுநாளில்**
**வாலாய மாய்க்கருக் குழிவாய் திறந்திடும்**
**மணவாள னொடுகலந்தாற்**
**பொங்குசுக் கிலமுஞ்சு ரோணிதத் தொடுசேர்ந்து**
**பூரிக்கு மொண்சிப்பியிற்**
**பூத்தமுத் தைப்போலு மறுகுநுனி மேற்பனிப்**
**போலுந் திரண்டுருவமாம்**
**அங்கமல சன்வந்த மைப்பனே யிவ்வுருவ**
**மருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** உத்தராயணம், தட்சிணாயணம் இவை பிறக்கும் நாள், ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை, மாதப்பிறப்பு நாள் இவற்றை விடுத்து மனைவி பூத்து நீராடிய தினம் தொட்டுப் பன்னிரு நாள்களில் பொதுவாகக் கருக்குழி வாய் திறந்திருத்தலின் அந்நாள்களில் கணவன் மனைவி கூடினால் சுக்கிலமும் சுரோணிதமும் கலந்து பூரிக்கும். சிப்பியில் பூத்த முத்தினைப்போல அறுகம்புல்லின் நுனியிலுள்ள பனிநீர்த்துளி போலக் கருத் திரண்டு நன்மக்கள் தோன்ற வாய்ப்பு ஏற்படும்.

**அ.பொ:** அயணம் - ஆடி, தை - மாதம் பிறக்கும் நாள்கள், பர்வம் - பௌர்ணமி திதி, வாலாயமாய் - சாதாரணமாய், கமலசன் - பிரமன். **(எ0)**

## கரு உடம்பாய் வளரும் முறைமை

274. சுக்கிலஞ் சோணிதத் துட்சேர்ந்து சோணித
சொரூபமாய்த் தமர்வாசலைத்
தோன்றா தடைத்திடும் வாயுவே வேலிபோற்
சூழ்ந்துகாக் குறும்விந்துவோ
டொக்கப் பிராணவாய் வொளியாம பானவாய்
வொன்றியே வெளியினிற்கு
முட்பாய்ந்து விந்துடன் பிராணவா யுவுகூடி
யுள்ளே கலந்துநிற்கும்
மிக்கதா னன்கரு வளர்க்குமக் கருவுக்குண்
மேவும் வியாதிமூன்று
விரவிக் கலக்குமைந் தாநாட் கருக்குமிழி
மேனிபோ லாய்வளருமே
அக்கமணி துர்க்கையுறை மிக்கபதி வாசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சுக்கிலம் சோணிதத்துடன் சேர்ந்து ஒன்றானவுடன் வெளியே வராதபடி கருப்பைவாசல் வாயுவால் அடைக்கப்படும். வாயுவே வேலிபோல் சூழ்ந்து காக்கும். பிராணவாயு விந்துவுடன் கலக்க அபானவாயு வெளியே நிற்கும். உதானன் கருவை வளர்க்கும். கருவுள் வாதம், பித்தம், கோழை என்ற மூன்று நோயும் இணையும். ஐந்தாம்நாள் கரு நீர்க்குமிழி போல வளரும்.

**அ.பொ:** சுக்கிலம் - இந்திரியம், சோணிதம் - மகளிர் சூதகம், அபான வாயு- பத்து வாயுக்களுள் ஒன்று. **(எக)**

## சரீரம் வளரும் வகை 275, 276

275. கருத்தரித் திட்டபத் தாநா டிரண்டுருவு
கண்டுமுளை போன்முளைத்துக்
கருதுபதி னைந்தாந் தினத்திலே முட்டைபோற்
காணுமக் கருமிதந்தே
யுருத்தரு முதற்றிங்கள் கம்பமா மிருமதியி
லுற்றதலை முதுகுமுகமா
மோதுமூன் றாந்திங்கள் செங்கையும் பாதங்க
ளுறுவிரல்க ளரையுமுண்டாந்

திருந்துநா லாந்திங்கண் மூக்குமுக வுருவமாஞ்
செய்யவைந் தாந்திங்களிற்
செவிநாவு கண்களாஞ் செப்புமா றாந்திங்கள்
சேர்ந்திடு நகங்களுண்டா
மரத்தமா ணிக்கம் பதித்தமுடி யரசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** கருத்தரித்திட்ட பத்தாம்நாள் திரண்டு முளைபோல் முளைத்துப் பதினைந்தாம் நாள் முட்டைபோல் வடிவிற்றாய் முதல் மாதம் கருப்பை நீரில் மிதந்து அசையும். இரண்டாம் மாதம் தலை, முதுகு, முகம் உண்டாகும். மூன்றாம் மாதம் கைகள், கால்கள், விரல்கள், இடுப்பு உண்டாகும். நான்காம் மாதம் மூக்கு, முகம் உருவாகும். ஐந்தாம் மாதம் செவி, நா, கண்கள் உண்டாகும். ஆறாம் மாதம் நகங்கள் உண்டாகும்.

**அ.பொ:** கம்பம் - நடுங்குதல். (எஉ)

276. *விஞ்சுமே ழாந்திங்கண் மயிர்நரம் பென்பும்
விளைந்திடுஞ் சடமோடுதான்
மேவிடுஞ் சலமலந் தங்குதா துக்களு
மியைந்துமூச் சுண்டாகுமே
யெஞ்சிலெட் டாந்திங்க டாயுண்ட சாரங்க
ளியாவுமுனை யானகதிர்போ
லேய்ந்தருவி பாய்ந்தே கபாலத்தின் வழியாக
விழியவக் குழவிவளருங்
கொஞ்சவுரு வோவொன்ப தாங்திங்க ளறிவுமேற்
கொடுபிறப் பித்தோன்றனைக்
குறித்திரு கரங்கூப்பி யருடா வெனத்தவங்
கொண்டே யிருந்துபுரியும்
அஞ்சலப் பையொரீஇ வெம்பிறவி நோக்குமே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

* கருத்தரித்தது முதல் ஏழாம் மாதம் வரைக் குழந்தையின் உறுப்புக்கள் உருவாகும் என அக்கால மக்கள் நம்பியிருந்த செய்தி *274-276* ஆகிய பாடல்கள் வாயிலாகத் தெரியவருகின்றது. ஆனால், கருத்தரித்த நாலரை மாதத்திற்குள் குழந்தையின் அனைத்து உறுப்புகளும் உருவாகிவிடும். அதன் பின் உருப்பெருக்கம் (Increase in size) தான் நிகழும் என்பது மருத்துவ உண்மை.

**பொழிப்:** ஏழாம் மாதம் மயிர், நரம்பு, எலும்பு இவை தோன்றும். அப்பொழுது சலம், மலம், தாதுக்கள் மூச்சு உண்டாகும். எட்டாம் மாதம் தாய் உண்ட சாரங்கள் ஒளி வீசி அருவிபோல் பாய்ந்து மண்டையோட்டின் வழியே கருவின் உடலில் பாய அக்குழந்தை வளரும். ஒன்பதாம் மாதம் மற்ற உருவங்கள் யாவும் நிரம்பப் பெற்று அறிவு ஏற்பட இருகை கூப்பிப் படைத்த தலைவனை அருள் தருமாறு தவம் புரிந்து கொண்டே ஒன்பது திங்கள் கழிந்த பத்தாம் மாதம் கருப்பையை விடுத்து இவ்வுலகில் பிறக்கும்.

**அ.பொ:** சாரம் - சத்து, பயன்; கபாலம் - மண்டை ஓடு. (எ௩)

## பிறவித்துன்பத்தினியல்பு

277. **கொடியபத் தாந்திங்கள் சற்குரு பார்வையே**
**கொண்டிடுங் குழவிதன்னைக்**
**கோதறு மபானவளி கீழ்நோக்கு விக்குமக்**
**குழவிமிகு துன்பமுற்றுப்**
**படியிற் பிறந்தபின் பகரரிய மாயா**
**படப்போர்வை யான்மறைந்து**
**பண்டையி லிருந்தபே ரறிவழிந் திருவினைப்**
**பாசவலை யிற்படிந்து**
**துடியளவு நேரநீங் காக்கவலை நோயிலே**
**தோயுமிங் கிதனைநோக்கிற்**
**சுரைக்கொடி படர்ந்ததை நிகர்க்குமிச் சனனமாந்**
**தோதகம் ஒழிப்பரறிவோர்**
**அடியணா மலையனே தொடியரா மணியனே**
**யருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** பத்தாம் மாதம் இறைவனை வேண்டிய நினைவுடன் பிறக்கும் குழந்தையை அபானவாயு கீழ்நோக்கித் தள்ள, அக்குழவி மிகத் துன்பமுற்றுப் பூமியில் பிறந்த பின், மாயையாகிய போர்வையால் மறைக்கப் பட்டு முன்பிருந்த பேரறிவை இழந்து, இருவினையாகிய பாசவலையில் அகப்பட்டு ஒரு கண நேரமும் தன்னை விட்டு நீங்காத கவலைநோயிலே, சுரைக்கொடிபோலப் படர்ந்து துன்புறும். இந்தப் பிறவித்துயரை ஒழிக்கச் சான்றோர் வழி தேடி இதனைப் போக்கிக் கொள்வர்.

**அ.பொ:** தோதகம் - துயரம். **(எச)**

## அட்டஇலக்குமிகள்

278. மட்டிலாச் செல்வங்கண் மருவுதன லட்சுமி
வளர்ந்ததா னியலட்சுமி
மணிமாட மனையாதி செந்நெல்வய றோட்டங்கள்
வளமிகும் பூலட்சுமி
யிஷ்டபாக் கியகுணச் சந்தான லட்சுமி
யெழுத்தொடு நிறைந்தகேள்வி
யியல்பான புத்திவளர் வித்தியா லட்சுமி
யிசைந்தவீ ரியலட்சுமி
திட்டமா யெங்கணுஞ் சென்றேபோ தினும்வெற்றி
சேர்தரும் விசையலட்சுமி
தீமைவந் தாலுங் கலங்கா திருக்கின்ற
தீரதை ரியலட்சுமி
அட்டலட் சுமிவாச நேசதுரை ராசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தனலட்சுமி, தானியலட்சுமி, பூலட்சுமி, பாக்கியம் அருளும் சந்தான லட்சுமி, புத்தியை வளர்க்கும் வித்தியாலட்சுமி, வீரத்தை வளர்க்கும் வீரலட்சுமி, வெற்றியை வழங்கும் விசயலட்சுமி. எந்தத் துன்பம் வந்தாலும் கலங்காதிருக்கும் தைரியலட்சுமி என இலக்குமிகள் எண்மர். **(எ.ந)**

## ஆடி ஐந்தாந்தேதிவரும் கிழமை பற்றிய பலன்

279. ஆடிமா தம்பிறந் தைந்தாந் தினத்திலே
யரியபுத வாரம்வந்தால்
அவ்வருட மொருபோக நாடெலா மிகவிளையு
மவனிமே லிட்டபயிர்கள்
பாடுள வியாழம்வரி லிருபோக மேவிளைவு
பாரெலாஞ் சுகசீவனம்
பன்னுசுக் கிரனெனில் கதிர்சாவி சனியனோ
பயிரொன்றும் விளையாதுகாண்
நீடுஞா யிறுபயிர்கள் பாழ்திங்க ளொருபோக
நெல்விளையு மேசெல்வமாம்

நேர்ந்தவங் காரகன் பனிச்சோள மேவிளையு
நெறியீது குறியென்பர்காண்
ஆடல்புரி யண்ணலே மாடமா ளிகைசெல்வ
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஆடி ஐந்தாம் தினம் புதன்கிழமை அன்று வரின் ஒரு போகம் மிக வளரும். வியாழம் அன்று வரின் இருபோகம் நல்ல விளைவு. வெள்ளி வரின் பயிர் சாவியாகும். சனியன்று வரின் பயிர் ஒன்றும் விளையாது. ஞாயிறன்று வரின் பயிர்கள் பாழ். திங்களன்று வரின் ஒரு போகம் நல்ல விளைவு. செவ்வாய் அன்று வரின் பனிச்சோளமே விளையும். **(எசூ)**

## பெண்கள் பூப்பெய்தும் நட்சத்திர பலன் - 280,281

280. **மன்னுமச் சுவினியிற் புட்பவதி யாயிடின்**
மகிழ்நனுக்கே தோடமாம்
வான்பரணி நாணல்ல மைந்தருண் டாங்கனக
மருவுகார்த் திகைமலடியா
முன்னுரோ கணிதீர்க்க மங்கிலிய முடையளா
முலவுமான் றலைதலைவனுக்
குயர்சுக மளிப்படிரு வாதிரை வெறுப்புமன
முடையளாம் புனர்பூசநாள்
பொன்னெழில் சுகந்தரும் பூசஞ் சிறப்புடையள்
பொலியுமா யிலியமைந்தர்
பூத்தொழியு மகமுரிய புருடன்மே லதிகாமி
பூரமைந் தர்களானியாம்
அன்னநடை யார்நடன சாலைவளர் சிங்கபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** அசுவினி நட்சத்திரத்தில் பூப்படைந்தால் - கணவனுக்குத் தோஷம், பரணி - நல்ல புதல்வர் பிறப்பர், கார்த்திகை - மலடியாம், உரோகணி - தீர்க்க சுமங்கலி, மிருகசீரிடம் - கணவனுக்குச் சுகம் தருவாள், திருவாதிரை - வெறுப்பு மனம், புனர்பூசம் - அழகும், சுகமும் தரும், பூசம் - சிறப்புடையள் ஆவள், ஆயில்யம் - குழந்தை பிறந்து இறக்கும், மகம் - கணவனிடம் மிக விருப்பம் கொள்வாள், பூரம் - ஆண்மக்கள் பிறந்து இறக்கும். **(எஎ)**

281. உத்தரம் பதிவிரதை யத்தமென் மேற்செல்வ
முண்டா யிடுஞ்சித்திரை
யோங்கிய நலந்தரும் பாங்குறு சுவாதிசுக
முற்றிடுந் தனிவிசாகம்
மத்திமந் தலைவனுக் கல்லல்புன் னோய்கேட்டை
மறுபுருட னிச்சைமூலம்
வாழ்வுபால் பாக்கியம் பூராட மடிமைகெடு
மாமுத்த ராடஞானப்
பத்தியுறு மோனைநற் பொருளா மவிட்டம்
பசும்பொனாள் சதையநிதிபோம்
பகரும் புரட்டைமல டுத்தரட் டாதிமிடி
படுமிரே வதிநடலையாம்
அத்தந் துகிர்ச்செறி மடந்தையர்கள் பூத்தபல
னருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** உத்தரம் நட்சத்திரத்தில் பூப்படைந்தால் பதிவிரதை, ஹஸ்தம் - செல்வமிகுதி, சித்திரை - ஓங்கு நன்மைகள், சுவாதி - சுகம், விசாகம் - நடுவான நன்மைகள், அனுடம் - கணவனுக்குத் தொல்லை, கேட்டை - பிற புருடர்களிடம் விருப்பம், மூலம் - வாழ்வு, பால் பாக்கியம், பூராடம் - அடிமை கெடும், உத்தராடம் - ஞானமும் பக்தியும் கிட்டும், திருவோணம் - நற்பொருள், அவிட்டம் - பொன் பெருகும், சதயம் - செல்வம் கெடும், பூரட்டாதி - மலடு, உத்தரட்டாதி - வறுமை வரும், ரேவதி - துன்பம். இவையே பூப்பெய்தும் நட்சத்திர பலன்கள்.

**அ.பொ:** புன்னோய் - அனுஷம், ஓணம் - திருவோணம், புரட்டை - பூரட்டாதி, மிடி - வறுமை, நடலை - துன்பம், அத்தம் - கை, துகிரி - செந்நிறம்.**(எஅ)**

## தீட்டு ஏற்படா இடங்கள்

282. தேவால யங்களிற் சந்நிதா னங்களிற்
றிருவிழா விற்சிறந்த
தேர்நடந் திடுபொழுதி லருமறை பகர்ந்தவழி
செய்யுந் தழற்சாலையிற்
பாவாணர் கல்விப்ர சங்கம் புராணம்
படிக்கின்ற வித்வசபையிற்

பார்வைக் கலங்கார சோபன முகூர்த்தங்கள்
பண்ணும் விவாகசபையிற்
கோவான சிங்கா தனத்திருந் தரசுசெங்
கோல்கொண்ட ராசர்சபையிற்
கூறுமிவ் விடமெலா மாசூச மிலையென்று
கூப்பிட் டுரைக்குமறைகள்
ஆவா கனத்தனே மாவார் வனத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தேவாலயம், சந்நிதானம், தேர்த்திருவிழா, வேதம் ஓதும் இடம், சமையல் அறை, பாவாணர் சொற்பெருக்குப் புராண பிரசங்கம் நடக்கும் இடங்கள், திருமணம் நிகழும் இடம், அரசசபை இவற்றிற்கு ஒரு போதும் தீட்டு ஏற்படாது.

**அ.பொ:** ஆசூசம் - தீட்டு. **(எகூ)**

## குதிரை இலக்கணம் 283–291

283. நீலமர கதமுத்து மாணிக்க மம்பொன்
னிறைந்தவெண் பனிசந்திரன்
நெடியதா மரைமலர்க் காசைமலர் கருமுகி
னெருப்புமணி வண்டுதீம்பாற்
கோலமுறு கின்றசெம் பஞ்சுக் குழம்புகுயில்
கூறுமீ ரெட்டுநிறமாங்
குதிரையுந் தமமிவையி லொருநிற முடைத்தாய்க்
குறித்தமுக மார்புச்சிவாற்
கானாலிவ் வெட்டிடம் வெளுப்பா யிருக்கிலது
கதியட்ட மங்கலம்தாங்
கவினுமுக நாற்பாத மைந்தும் வெளுப்புறிற்
கனபஞ்ச கல்யாணியாம்
ஆலவா யிற்பரியி லக்கண முரைத்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** நீலம், மரகதம், முத்து, மாணிக்கம், பொன், வெண்பனி, சந்திரன், தாமரை, காயாம்பூ, கருமுகில், நெருப்பு, மணி, வண்டு, பால், செம்பஞ்சுக்குழம்பு,

குயில் என்ற *16* நிறங்களில் அமையும் குதிரை உத்தமம். இவற்றில் ஒரே நிறமுடைய குதிரை, முகம், மார்பு, உச்சி, வால், நான்கு கால்கள் என்ற எட்டிடங்களும் வெளுப்பாய் இருப்பின் கதி அட்டமங்கலம் ஆகும். முகமும் நான்கு கால்களும் வெள்ளையாய் இருப்பின் பஞ்சகல்யாணியாம்.

**அ.பொ:** காசை - காயாம்பூ, கானால் - நான்கு கால்கள். **(அ0)**

284. **கட்டுவாம் பரிநாபி தொட்டுமுன் புறமெலாங்**
**கதிர்போற் சிவந்துமதிபோற்**
**கவினுறும் பின்முழுது நலமா வெளுக்கிலக்**
**கற்கிபகல் விஜயமென்பார்**
**வட்டமதி போலவே முற்புறம் வெளுப்பாய்**
**வயங்கியே பிற்புறமெலாம்**
**வடிவுசெங் கதிர்போற் சிவந்திடுங் கிள்ளையது**
**மருவுகதிர் விஜயமென்பார்**
**இட்டநூ றங்குல முயர்ந்தபரி யுத்தமம்**
**எண்பத்து நாலங்குல**
**மிவுளியது மத்தியம தறுபத்தொ ரங்குல**
**மியம்புமத மக்கோடையாம்**
**அட்டமங் கலதுரக நித்தலு நடாத்துதுரை**
**யருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** கொப்பூழ் முதன் முன்பக்கம் சிவந்து பின்பக்கமெல்லாம் வெளுத்திருப்பின் பகல் விசயம், சந்திரனைப் போல முன்புறமெல்லாம் வெளுப்பாய்ப் பின்புறம் எல்லாம் சிவந்திருப்பின் கதிர் விசயம். *100* அங்குலம் உயர்ந்த குதிரை உத்தமம். *84* அங்குலம் உயர்ந்த குதிரை மத்திமம். *61* அங்குலம் உயர்ந்த குதிரை அதமம்.

**அ.பொ:** கிள்ளை - குதிரை, இவுளி, துரகம் - குதிரை. **(அக)**

285. **வாசியின் வயதுமுப் பத்திரண் டேவருட**
**மருவிடும் பத்தவத்தை**
**மாற்றிலொரு மூன்றுவற் சரமுமிரு மாதமு**
**மன்னுநாட் பன்னிரண்டாம்**
**பேசுபரி யெவ்வண்ண பேதக மிருக்கினும்**
**பெருவெள்ளை தான்கலந்தாற்**

பெட்புமிகு மப்புரவி தலைவன் றனக்குப்
பெருஞ்செல்வ முங்கல்வியாந்
தேசுள கறுப்புப் பரிக்குவயி றேனுந்
திகழ்ந்தநெடு மார்பமேனுஞ்
செஞ்சிவப் பேறினும் வெள்ளைநிற மேவினுஞ்
செயவாரு ணத்துரகமாம்
ஆசுமது ரஞ்சித்ர வித்தார கவிஞர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** குதிரைக்கு வயது 32 ஆண்டு, அதற்குப் பத்து நிலைகள் உண்டு. மூன்று வருடம் இரண்டு மாதம் பன்னிரண்டு நாள் உள்ள குதிரையின் நிறத்தில் வெள்ளை நிறம் கலந்து இருந்தால் அக்குதிரையை உடையவனுக்குப் பெருஞ்செல்வமும் கல்வியும் உண்டாம். கருநிறக் குதிரைக்கு வயிற்றிலோ மார்பிலோ, செஞ்சிவப்போ வெளுப்போ காணப்படின் அது சயவாருண துரகம் எனப்படும்.

**அ.பொ:** வாசி - குதிரை, வற்சரம் - வருடம். (அஉ)

286. ஏறுபரி மாக்கழுத் திடையிரட் டைச்சுழி
யிருக்கின்மிடி யின்னலுண்டாம்
இருகாலி லேயிரட் டைச்சுழி யிருக்கிலவ்
விவுளியா னிகளபந்தங்
கூறருங் கொடியவினை யாமிறுதி யுண்டாங்
குதக்குமீ ருதடுதனினுங்
குலவுமுற் காலடியி னுங்கபோ லத்தினுங்
கோதறு முழந்தாளினும்
வீறுசுழி தானொன்றின் மாவேறு தலைவனை
வெவ்வினை மிகுத்தொறுக்கு
மேவுமிவு ளிப்பந்தி யூடுறப் பண்டய
மெலிந்துநல் குரவெய்திடும்
ஆறுலவு செம்பவள வேணிமதி முடியனே!
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** குதிரையின் கழுத்தில் இரட்டைச் சுழி இருப்பின் வறுமையும் துன்பமும் உண்டாகும். இருகாலில் இரட்டைச் சுழி இருப்பின் கெடுதி இறுதி தரும். இரண்டு உதடு, முன் காலடி, கன்னம், முழந்தாள் இவற்றில் சுழி இருந்தால் தலைவனைக் கெடுக்கும். பழைய குதிரைகளை மெலியச் செய்யும்.

**அ.பொ:** ஆனி - தீங்கு, பண்டு அயம் - முன்புள்ள குதிரைகள், வாசி - குதிரை. **(அங)**

287. **தெரிதரு கழுத்தினிடை யொருசுழி யிருந்திடிற்**
**றெய்வமணி யென்றுபெயராம்**
**திருமகள் விலாசமுண் டாமுகந் தலைநாசி**
**திகழுமார் பிவைநாலிடம்**
**மருவிய விரண்டுசுழி யுண்டாயின் வெற்றிதரு**
**மாறிலாச் சரிமத்தகம்**
**மணியா யிருக்கிலவ் வாசிமே லேறுவோர்**
**வாழ்வுமென் மேலெய்துவார்**
**விரவுநெற் றியினடுவி லொருசுழி யிருக்கினது**
**வீறுநிதி மதியுமுண்டாம்**
**வேளிவ் விடங்களிற் சுழியிலா விவுளியின்**
**மேலேற னன்றன்றுகாண்**
**அரியயற் களவிடற் கரியபே ரழகனே**
**யருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:** கழுத்தில் ஒரு சுழி இருப்பின் தெய்வமணி என்று பெயர் பெறும்; செல்வம் தரும். முகம், தலை, மூக்கு, மார்பு என்னும் நாலிடங்களிலும் இரு சுழி இருப்பின் வெற்றி தரும். இதன் பெயர் சரிமத்தகம். இதன் மேல் ஏறுவோர் வாழ்வு மேல் எய்துவர். நெற்றியின் நடுவில் ஒரு சுழி இருப்பின் நிதியும் மதியும் உண்டாம். இவ்விடங்களில் சுழியில்லாக் குதிரை மேல் ஏறுதல் நன்று அல்ல.

**அ.பொ:** விலாழி - குதிரை வாய்நுரை, வேள் - தலைவன். **(அச)**

288. **வேங்கைநரி சிங்கமுயன் மயின்மல்ல ரம்புமத**
**வேழங் குரங்குபோல**
**வேகமுள நடையதாச் சங்குவெண் கன்னலின்**
**விலாழிகால் வாய்நுரையுமாய்த்**

தாங்குவிற் றொனிசங்கு மேகமத் தளமேறு
தண்டிரை மடங்கற்றொனியாய்ச்
சாற்றுகுற மகள்போற் கவிழ்ந்தமுக மாகநாத்
தழையுமாந் தளிரினிறமாத்
தேங்கமழ் மலர்ந்தகரு நெய்தல்போ லுக்கிரஞ்
சேர்ந்தவிழி யாய்ப்பற்கள்தாம்
செப்பமா யொப்பமாய் வாலைந்து சாணாய்ச்
சிறக்குங் குளம்புயரமா
யாங்குதிரை லக்ஷண முரைத்தவிதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வேங்கை, நரி, சிங்கம், முயல், மல்லர், அம்பு, மதயானை, குரங்கு போல வேகம் உடைய நடையை உடையதாய், சங்கு, வெள்ளைக் கரும்பு என்பன போன்ற வாய் நுரை உடையதாய், வில் நாண் ஒலி, சங்கு, மேகம், மத்தளம், காளை, கடல் அலை, சிங்கம் போன்ற குரலுடையதாய், குறமகள்போலக் கவிழ்ந்த முகமுடையதாய், நாக்கு மாந்தளிரின் நிறமாய், கருநெய்தல் போல் உள்ள கண்களில் உக்கிரத்தை வெளிப்படுத்துவதாய், பற்கள் செப்பமாய், வால் ஐந்து சாண் நீளமாய்க், குளம்புகள் உயரமாயிருத்தல் பொதுவாக நல்ல குதிரையின் இலக்கணங்களாம்.

**அ.பொ:** மடங்கல் - சிங்கம். **(அரு)**

289. பாயும் பெரும்பரி முகத்திடை வெளுத்திடிற்
பரராச ரைச்செயிக்கும்
பணிபூண் கழுத்துவால் முதுகிவை வெளுத்திடிற்
பாக்கியமெ லாங்கொடுக்கும்
ஏயுமிரு பிடர்வெள்ளை யாயிருந் தாற்புதல்வ
ரின்பமேன் மேலுமுண்டா
மெழின்மார்பில் வெள்ளையுறில் கவலைநோ யின்றியே
யெப்போது மனமகிழ்தருந்
தோயுமுக மிடதுபால் வெள்ளைநிற மேவிடிற்
றாயசந் தானமுண்டாந்
தோன்றிய வலப்புறம் வெண்ணிறஞ் செல்வமாந்
தூய்முகம் பிற்பாற்சுகம்

ஆயும்ப்ர பந்தகவி நேயம் பொருந்துதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** குதிரை முகத்திடை வெளுத்திருக்கின் பகைமன்னரை வெல்லும். கழுத்து, வால், முதுகு வெளுத்திருக்கின் குதிரையை உடையவர் புதல்வரால் இன்பம் பெறுவர். மார்பில் வெளுத்திருக்கின் கவலையின்றி மகிழ்ச்சி தரும். முகத்து இடப்பக்கம் வெளுத்திருப்பின் அக்குதிரையை உடையவர் நல்ல மக்களைப் பெறுவர். முகத்தின் பின்பாதி வெளுத்திருக்கின் சுகம் தரும்.

(அசா)

290. மார்புங் கழுத்துமர வப்படம் போலதாய்
வாழைமட லொத்தசெவியாய்
வதனமுக் கோணமாய் நுதலுயர்ந் தகலமாய்
வைக்குமடி பந்தொத்ததாய்
ஏர்புனையு நாலுகா லுங்கடைந் தேயதை
யெடுத்துநாட் டியதுபோலா
யிருதொடை திரட்சியாய்ச் சுழல்கின்ற போதுதீ
யெழுகடைக் கோலென்னலாய்
போர்புரி முகத்திலே வெட்டினு மெதிர்ப்பதாய்ப்
புரவியோன் மனமறிவதாய்
பொங்ககழி கோட்டையுந் தங்கிய துருக்கமும்
புலியெனப் பாய்கின்றதாய்
ஆர்பரி யிருக்கின்ற துத்தமப் புரவிகா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மார்பும் கழுத்தும் பாம்பின் படம் போல அகன்று, செவி வாழை மடல் போன்றவாய், முகம் முக்கோணமாய், நெற்றி உயர்ந்து அகலமாய், நடை பந்து போன்றதாய், நான்கு கால்களும் கடைந்தெடுக்கப் பட்டவை போலத் தொடை திரட்சியாய், சுழல்கின்றபோது தீக்கடைக்கோல் போல்வதாய், போர்க்களத்தில் தன்னை வெட்டினாலும் எதிர்த்துப் போரிடுவெதாய், குதிரையின் உடைமையாளன் மனம் அறிந்து செயற்படுவதாய், அகழி, கோட்டை, துருக்கம். இவற்றைப் பாய்ந்து தாக்கும் குதிரையே உத்தமக் குதிரை.

**அ.பொ:** துருக்கம் - மலை அரண்.

(அஎ)

291. கொய்யுளைப் புரவியது நிற்கின்மலை யென்னவுங்
கூத்தினட மகளென்னவுங்
குலவிடும் வாசனையின் மான்மதம் பாளிதங்
குங்கும மகிற்கொப்பதாய்
வெய்யகட் பொறியரா வட்டநெடு வீதிநடை
விடுசுழற் பந்தென்னவும்
மேலேறு சேவகன் காற்குள் ளடங்கியே
வேகத்தில் வளியென்னவுஞ்
செய்யுநற் சாரிகை பதினெட்டு முள்ளதாய்த்
திருத்தமிரு நான்குவயது
சென்றபரி மேலேறல் விதியென்று மறையாஞ்
செழும்பரியி லேறிவந்தெம்
ஐயநீ பாண்டியற் கறிவித்த தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** குதிரை நிற்கும்போது மலைபோலவும், நடனமாட நிற்கும் கூத்து மகள் போலவும் நின்று, வாசனையில் கஸ்தூரி, பாற்சோறு, குங்குமம், அகில் வாசனை வீசி, பாம்பு போல வட்டமிட்டு, பந்து போலக் குதித்து, குதிரை ஏறும் வீரன் காலுக்குள் அடங்கி, காற்றுப் போன்ற வேகத்துடன் பதினெட்டு வகை நடைச்செலவு உடையதாய் உள்ள எட்டு வயது நிரம்பிய குதிரை சவாரிக்கு ஏற்றது.

**அ.பொ:** சேவகன் - வீரன். **(அஅ)**

## இன்னது கருதினால் இன்னதுசெய்க

292. தாமமா கியபிறவி சாராத மெய்ஞ்ஞான
சாதனம் பெறவேண்டினோர்
சரியைகிரி யாயோக மூன்றுங் கடந்தமெய்ச்
சற்குருவை யடையவேண்டும்
நாமமார் தருசிவா லயலிங்க தரிசன
நாடியருள் பெறவேண்டினோர்
நக்கன் வலக்கைதலை மேற்கொண்டே வதிகார
நந்தியைமுன் காணவேண்டும்
பூமியா ளரசரைக் கண்டுகா ரியசெயம்
பூர்த்தியாப் பெறவேண்டினோர்

புரவலர் கருத்துக் கிசைந்தமந் திரிகள்பாற்
போய்முன்பு காணவேண்டும்
ஆமிக வளங்கள்சிங் காபுரி விளங்கவரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மெய்ஞ்ஞான சாதனத்தால் பிறவியைப் போக்க விரும்பினோர் சரியை, கிரியை, யோகம் இவற்றைக் கடந்த உண்மையான நல்ல குருவை அடைதல் வேண்டும். சிவலிங்க தரிசனம் விரும்பினோர் வலப்புறமாக வந்து அதிகார நந்தியை வணங்க வேண்டும். அரசர்களைக் காண விரும்பினோர் அவர்கள் கருத்துக்குப் பொருந்தின மந்திரிகளை முதலில் காண வேண்டும். **(அகூ)**

## கலவியிற் கொக்கோகலீலை

293. நாடுமுட லிழையுமா லிங்கன மதோரைந்து
நண்ணுமித ழுதரபான
நல்லசுவை பதினொன்று மமிர்தநிலை பதினைந்து
நகுநகக் குறிகளேழுங்
கூறுதந் தக்குறிக ளெட்டுமுயர் பறவைபோற்
குரலோசை யெட்டுமிருகைக்
குவிதாட னங்களிரு நான்குமுரை கரணங்கள்
கூறுநாற் பத்தெட்டுமே
யூடுகல விப்போக மெய்ம்முயக் கீரெட்டு
முறழுநூற் றிருபதுடனே
யோராறு மொழிகின்ற கொக்கோக விதமறிந்
தூடலோ டினிதாகவே
யாடவரு மங்கையரு மனுபவித் திடலின்ப
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** தழுவுதல் ஐந்து வகை, உதடுகளைச் சுவைத்தல் பதினொரு வகை, அமிர்த நிலைகளைத் தடவுதல் பதினைந்து இடம், நகக்குறிகள் செய்யும் இடம் ஏழு, பற்குறிகள் செய்யுமிடம் எட்டு, பறவை போல எட்டுவகைக் குரலோசை நிகழ்த்துதல், கைகளால் குத்தித் தட்டுதல் எட்டு, புணர்ச்சிச் செயல்கள் நாற்பத்தெட்டு, உடம்பைப் புணர்ந்து தழுவுதல் பதினாறு ஆக

*(5+11+15+7+8+8+8+48+16) 126* செயல்கள் ஆடவர்கள் மகளிரோடு ஊடலும் கூடலுமாக நிகழ்த்துபவை.

**அ.பொ:** தாடனம் - தட்டுதல் **(கூ0)**

## நோய்கள் வாராவகை

294. எட்டுநா ளைக்கிரு முழுக்காடொவ் வோர்பட்ச
மிருகண் கலிக்கமிடுவோர்
எத்தாக மதிதொறும் பித்தநீ ரெல்லா
மெடுத்திட மருந்துகொள்வோர்
திட்டமா யெண்ணான்கு நாளினுக் கொருகாற்
றிருந்திழை புணர்ச்சிசெய்வோர்
செப்புமொரு மூன்றுமா தத்திலகு நசியமது
சீருடன் செய்துகொள்வோர்
வட்டமா மூவிரு மதிக்கொரு விரோசனம்
வாங்காம லேவாங்குவோர்
வயிறுபசி கண்டுண்ணு வோர்களுக் கொருநோயும்
வாராது மிகுதியாக
அட்டமா சித்திமுன் னிட்டமது ரேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** எட்டு நாளைக்கு இருமுறை எணணெய்த் தேய்த்து நீராடல், *15* நாளைக்கு ஒருமுறை கண்ணுக்குக் கலிங்கம் இடுதல், ஒரு மாதத்துக்கு ஒரு முறை பித்த நீர் போக மருந்து உண்ணுதல், *32* நாளைக்கு ஒருமுறை மகளிர் புணர்ச்சி, மூன்று மாதத்துக்கு ஒருமுறை மூக்கில் மருந்திடுதல், ஆறு மாதத்திற்கு ஒருமுறை பேதிமருந்து உட்கொளல், பசி ஏற்பட்ட பின்பே உண்ணுதல் இவை மேற்கொள்ளின் நோய்கள் வாரா.

**அ.பொ:** கலிக்கம் - கண்ணிலிடும் மருந்து, பட்சம் - பதினைந்து நாள், நசியம் - மூக்கில் இடும் மருந்து, விரோசனம் - பேதி மருந்து. **(கூக)**

## தீயோர் தேடும்பொருள் போகும் வழி

295. வையகந் தன்னிலே தீயோர்க ளீட்டுபொருள்
வம்பருக் காம்பிணிக்காம்

வாயோட்ட மாகவே பேயோட்டு பூசாரி
மார்கள்தம் செலவினுக்காங்
கையகங் கொண்டகொலை பாதகர்க் காம்படைக்
கன்னமிடு கள்ளருக்காங்
கஞ்சா மயக்கபினி சாராய மாசுனங்
கடியகட் குடியருக்காம்
மெய்யகஞ் சிறிதிலாப் பொய்வழக் கதுபேசும்
வீணருக் காந்தழற்காம்
வேசையர்க் காம்பூத மூசுமண் ணுக்காகும்
வேந்தர்தண் டத்தினுக்காம்
அய்யனே துய்யனே செய்யவெழின் மெய்யனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** வம்பர், நோய், பேய் ஓட்டும் பூசாரி, கொலை பாதகர், கன்னமிடும் திருடர், கஞ்சா, அபினி, சாராயம், பாம்பு கடித்தது போன்ற மயக்கம் தலைக்கு ஏற்றும் பழங்கள், பொய் வழக்கு, நெருப்பு, பரத்தையர், மண், அரசர் இடும் அபராதம் இவற்றில் தீயோர் தேடும் பொருள் செலவிடப்படும். **(கூஉ)**

## நல்லோர் பொருள் பயன்படுதல்

296. சேற்கடற் றாரணியி னல்லோர்க ளீட்டுபொரு
டேவால யங்களுக்காந்
தேவாபி டேகமா ராதனைக் காமையர்
திகழ்சமா ராதனைக்கா
நூற்கடற் கரைகண்ட புலவர்கட் காமெனன
நுவலுமெய்ஞ் ஞானியர்க்காம்
நோற்குமா தவமுடைய பேர்க்காம் பசிக்கன
நுகர்ச்சிக்கு முதவலாகும்
நாற்கிளரும் வேதநெறி வேள்விகட் காஞ்சுகுண
நண்ணுதா னங்களுக்கா
நற்றொண்டர் பாகவதர் தங்களுக் காம்புரியு
நாலெட் டறங்களுக்காம்
ஆற்கணால வர்க்குமுன் னருள்பரஞ் சோதியே
யருள்பெறு வசந்தராயர்

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** நல்லோர்கள் ஈட்டும் பொருள் தேவாலயம், அங்கு அபிடேக ஆராதனை, புலவர், மெய்ஞ்ஞானியர், மாதவர், பசித்தவர், வேத வேள்விகள், நல்லவர்களுக்கு அளிக்கும் தானம், சிவனடியார், திருமால் அடியார், *32* வகை தருமங்கள் இவற்றிற்காகச் செலவிடப்படும்.

**அ.பொ:** நாற்கிளரும் - விளக்கிச் சொல்லும். **(௯௩)**

## பிரயாணத்துக்கு இராசி பலன்

297. மேடலக் கினமதனி லூர்ப்பயண மாகாது
வீறிடப நலமுள்ளதாம்
மிதுனத்தி லேசெலுங் காரியமெ திர்ப்படு
மென்கடக மரசர்சேவை
நாடருஞ் சிங்கத்தி லாதாய மாங்கன்னி
நளிர்ச்சுரங் காணுந்துலாம்
நற்பொருள் கிடைக்கும் விருச்சிகம் பிணியினா
னலிவுட னடுக்கமுண்டாங்
கோடுறுந் தனசுசத் துருஜயம் மகரமது
கொடியபய மாங்கும்பமோ
கொடியர்தண் டனையெய்து மீனமழை யாற்பயங்
கொண்டயாத் திரைசெய்காலத்
தாடுவே யுருதோளி பங்கவிலீ துண்மையா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மேடஇலக்கணத்தில் - பயணம் கூடாது, இடபம் - நலன் பயக்கும், மிதுனம் - காரியம் தானே முன் வரும். கடகம் - அரசர் சேவை. சிங்கம் - ஆதாயம், கன்னி - சுரநோய், துலாம் - பொருள் வரவு, விருச்சிகம் - பிணி மிகுதி, தனுசு - பகைவரை வெல்லுதல், மகரம் - பயம், கும்பம் - கொடியர் தண்டனை, மீனம் - மழையால் பயன். இவை பிரயாணத்துக்குரிய இராசிப் பலன். **(௯௪)**

## முக்குணத்தியல்பு

298. ஞானமரு டவமேன்மை வாய்மைபொறை மோனமொடு
நவைசெயைம் பொறியடக்கல்
நற்கரும வியல்புநெறி சாந்தமுயர் கல்வியிவை
நல்லசாத் வீககுணமாம்
ஈனமறு தானமன வூக்கந் தவந்தரும
மெழில்கல்வி கேள்விஞானம்
இசைவீர சௌரிய மலங்கார மிவையே
யிராசத குணத்தினியல்பாந்
தானுறு நெடுந்துயி லொழுக்கமுத னீதிவழு
தாழ்வுஞ் சமாதிகோபந்
தாவுகொலை பேருண்டி சோம்புபொய் காமமிவை
தாமத குணத்தன்மையாம்
ஆனமுத மைந்தாடு மந்திவண் ணத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஞானம், தவம், மேன்மை, வாய்மை, பொறை, அமைதி ஐம்பொறி அடக்குதல், நற்செயல், சாந்தம், கல்வி இவை சாத்துவிகம். தானம், ஊக்கம், தவம், தருமம், கல்வி, கேள்வி, ஞானம், புகழ், வீரம், அலங்காரம் ஆகியவை இராசதம், தூக்கம், நீதி தவறுதல், தாழ்வு, கோபத்தில் ஆழ்தல், கொலை, மிகுதியும் உண்ணுதல், சோம்பல், பொய், காமம் இவை தாமதம். **(கூரு)**

## நவக்கிரகதானம் பற்றிய செய்திகள்

299. பானுவுக் கீந்திடுந் தானமது கன்றீன்ற
பசுவாகு மதிதனக்குப்
பானிறச் சங்குசெவ் வாய்க்குச் சிவப்பெருது
பைம்புதற் குச்செம்பொனாம்
வானியல் வியாழந் தனக்குவெண் பட்டாடை
மாசுக்கி ரற்குவெள்ளி
மருவிய சனிக்குமிவை கரியநிற மாயிலகு
மயிடமா வெருமைக்கடா
தானிய லிராகுவுக் கச்சங் கருப்புடைத்
தானவெள் ளாட்டுக்கடா

தக்கசெங் கேதுவுக் கோதரிய மதயானை
சாற்றுமறை யோர்க்களித்தல்
ஆனது நவக்கிரக தானவிதி யீதென்பர்
அருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** சூரியனுக்குத் தானம் கன்று ஈன்ற பசு, சந்திரனுக்கு வெண்சங்கு, செவ்வாய்க்குச் சிவப்பு எருது, புதனுக்குச் செம்பொன், வியாழனுக்குப் பட்டாடை, வெள்ளிக்கு வெள்ளி, சனிக்குக் கரிய ஆண் எருமை, ராகுவுக்கு ஆண் வெள்ளாடு, கேதுவுக்கு மதயானை முதலியவை அந்தணர்க்கு அளிக்க வேண்டும். **(௬௯௯)**

## நவக்கிரக உருவும் திசையும்

300. நடுவட்ட மாமிரவி யுருவிருக் கின்றநிலை
நாடுமக் கினிமூலைதா
னாற்சதுர மதியுருக் காற்றிசைத் திரிகோண
நாணிலம கன்வடிவமாம்
வடுவிலீ சன்றிசைப் பாணவடி வம்புதன்
வடதிசைத் தீர்க்கசதுரம்
மருவுபொன் கீழ்த்திசைப் பஞ்சகோ ணத்துரு
வயங்குநீர் தருசுக்கிரன்
மிடையுமேற் றிசைதனுப் போலுருச் சனிநிருதி
மேவுசூர்ப் பாகாரமாய்
மேவுவனி ராகுவட மேற்றிசைத் துவசமென
வெங்கேது தங்குமிடமாம்
அடையுமொன் பதுகிரக வடிவமுந் திசையுமீ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:**

| நவக்கிரகம் | உருவம் | திசை |
|---|---|---|
| சூரியன் | நடுவட்டம் | தென்கிழக்கு |
| சந்திரன் | நாற்சதுரம் | வடமேற்கு |
| செவ்வாய் | முக்கோணம் | வடகிழக்கு |
| புதன் | அம்பு வடிவம் | வடதிசை |

| | | |
|---|---|---|
| வியாழன் | நீண்ட சதுரம் | கிழக்கு |
| வெள்ளி | ஐங்கோணம் | மேற்கு |
| சனி | வில் உருவம் | தென்மேற்கு |
| ராகு | முறத்தின் வடிவம் | வடமேற்கு |
| கேது | கொடி வடிவம் | ------- |

வடமேற்குச் சந்திரனுக்கும் இராகுவுக்கும் உரியதிசை என்று கூறப்பட்டுள்ளது. கேதுவுக்குத் திசை கூறப்படவில்லை. தென்திசைக்குக் கிரகம் கூறப்படவில்லை. (கூள)

## நவதானியமும் சமித்தும்

301. **சூரியன் கோதுமை செஞ்சாலி சோமனாந்**
**துவரைசெவ் வாய்தனக்காஞ்**
**சொல்லரிய புந்திக்கு நற்பசும் பயறதாந்**
**தூய்வியா ழந்தனக்கு**
**வேரியங் கடலையாம் வெள்ளிக்கு மொச்சையாம்**
**மேவிய சனிக்கெள்ளதாம்**
**வெற்றிகொ ளிராகுவுக் கானமா டங்கேது**
**விளைகாண நவதானிய**
**நாரிய லெருக்குப் பலாசலங் கருங்காலி**
**நாயுருவி யச்சுவத்தம்**
**நல்லத்தி வன்னிகூர்ப் புல்லறுகு தர்ப்பையிவை**
**நவசமித் தாகுமென்றே**
**யாரிய முணர்ந்தமே லவரீது விதியென்ப**
**ரருள்பெறு வசந்தராயர்**
**அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய**
**அண்ணா மலைத்தேவனே!**

**பொழிப்:**

| **நவக்கிரகம்** | **தானியம்** | **சமித்து** |
|---|---|---|
| சூரியன் | கோதுமை | எருக்கு |
| சந்திரன் | செந்நெல் | பலாசம் |
| செவ்வாய் | துவரை | கருங்காலி |
| புதன் | பசும்பயிறு | நாயுருவி |
| வியாழன் | கொத்துக்கடலை | அரசு |
| வெள்ளி | மொச்சை | அத்தி |
| சனி | எள்ளு | வன்னி |

| | | |
|---|---|---|
| ராகு | உளுந்து | அறுகம்புல் |
| கேது | கொள்ளு | தருப்பை |

முதலியன நவகிரகங்களுக்குரிய தானியமும் சமித்துமாகும். (௩௱அ)

## மூவர் தேவாரத்தொகை

302. பன்னருந் திருஞான சம்பந்தர் செந்தமிழ்ப்
பதிகமீ ரெண்ணாயிரம்
பண்பான சுந்தர ரிசைத்ததே வாரமுப்
பஃதுமே லேழாயிரம்
நன்னுதற் றிலகவதி யாரொடுந் தோன்றுதிரு
நாவினுக் கரசர்சொன்ன
நற்றமிழ்ப் பதிகநாற் பத்தொன்ப தாயிர
நாடுமிம் மூவர்மொழியுட்
பின்னரெண் ணூற்றாறு பத்துநாற் பதிகமிப்
பேருலகு தனில்விளங்கும்
பேசுமிரு நூற்றேழு பத்தைந்து சிவதலப்
பெருமைசேர் பதிகமாகும்
அன்னதிரு முறையோதி நின்னடிப் பூசைசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** ஞானசம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர், ஆதியில் அருளிய தேவாரங்கள் முறையே *16,000, 37000, 49,000* பதிகங்கள். அவற்றுள் இப்பொழுது *884* பதிகங்கள் கிட்டியுள்ளன. *800 + (6 X 14) 84 = 884.* பாடப்பட்ட சிவத்தலங்கள் *275.* இப்பொழுது கிட்டியுள்ள பதிகங்கள் *384+307+101=792* என்பதே சரி. (௩௱௩)

## சிற்றின்பம் பேரின்பம் அட்டாங்கயோகம்

303. வனிதை பஞ்சணையாறு சுவைபோச னங்கந்த
மருவுசித் திரவஸ்திரம்
மாழைமணி யிழையணித் தயிலதாம் பூலமெண்
வகையதே சிற்றின்பமாந்
தினமணி விபூதிருத் ராக்கபஞ் சாக்கரந்
தீர்த்தம்பிர சாதமாசான்

றெரிசன மிலிங்கசங் கம்மெட்டு மன்பருட்
டெளிதரும் பேரின்பமாந்
தனியியம நியமமா தனபிரா ணாயாம
தற்பிரத்தி யாகாரமாம்
தாரணை தியானஞ்ச மாதியிவ் வெட்டுமே
சாற்றுமட் டாங்கயோகம்
அனவரத நடனமிடு வளருக பதத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** நல்ல மனைவி, பஞ்சணை, அறுசுவை உணவு, நல்ல நறுமணம் ஊட்டப்பட்ட ஆடை, சிறந்த அணிகலன்கள், தலைக்கு நறுமணத் தைலம், தாம்பூலம் - இவை சிற்றின்பம். திருநீறு உருத்திராக்கம், திருவைந்தெழுத்து, தீர்த்தம், பிரசாதம், குரு தரிசனம், இலிங்க தரிசனம், அடியார் தரிசனம் ஆகிய எட்டும் பேரின்பம். இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாசாரம் தாரணை, தியானம், சமாதி இவ்வெட்டும் அட்டாங்க யோகம்.

**அ.பொ:** மாழை - பொன். **(௩00)**

## நாலு யுகத்திலும் திருவண்ணாமலைப் பெருமானை வழிபட்டவர்

304. **தீதிலா துயர்கிரே தாயுகந் தன்னிலே
செங்கனற் சோதிமலையாந்
திருமால யன்முத லிமையோர்கண் மறையினாற்
சிவதரும மேபுரிந்தார்
நீதிமா மணிதிரே தாயுகத் தாகம
நெறித்தபோ தனர்பூசனை
நிதிதுவா பரமதில் வச்சிராங் கதனீன்ற
நிருபனாம் வீரசம்பு
நாதனே கலியில்வல் லாளபிர புடதேவ
ராமர்தரு மஞ்சகாப்த
நவிலாயி ரத்தேழு நூறுமெழு பத்துமே
னாடுபில வங்கவருட
மாதியாய் நின்றதல தருமகர்த் தாவான
வருள்பெறு வசந்தராயர்**

அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** கிருதயுகம் - திருமால், அயன் முதல் தேவர், திரேதாயுகம் - ஆகம நெறித் தபோதனர், துவாபரயுகம் - வச்சிராங்கதன் என்ற மன்னன் மகன் வீர சம்புநாதன், கலியுகம் - வல்லாளப் பிரபு தேவராமர் தருமத்துத் தருமகர்த்தாவான வசந்தராயர். நூல் இயற்றிய காலம் - கலியுக ஆண்டு ஆன பிலவங்க சகாப்தம்- 1170. அஃதாவது கி.பி. 1770+78 = 1848. எனவே இச்சதகம் 152 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. **(௩0௪)**

**அவையடக்கம்**

305. பரிமளந் தோயிதழி மாலையொடு மணமிலாப்
பச்சிளம் புல்லறுகினைப்
பழுதென்று தள்ளாம லீசனுள மகிழ்வொடும்
படர்சடையி லேற்றபடியால்
விரவுமா சையினா லுரைத்தவிச் சதகமது
மிக்கபுன் சொல்லாயினும்
மேதினி யெலாம்புக ழிலக்கண மிலக்கிய
மிகத்தெளிந் தறிநாவலர்
பரவுநின் புகழ்தலப் பெருமையின் றுதியிருப்
பதனா லிகழ்ந்திடாமற்
படியுள நிறைந்தன்பு கொடுபெரி துவந்தருட்
பாலித்து மேற்கொள்ளுவார்
அரியயனொ டிந்திரன் பூசித்த வீசனே!
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** மணமுடைய கொன்றைமாலையோடு அறுகம்புல்லினையும் சிவபெருமான் தன் சடையில் அணிந்துள்ளான். அதுபோலத் திருவண்ணாமலைத் தலத்தை ஒவ்வொரு பாடலிலும் துதிக்கும் ஏற்றத்தால் இலக்கண இலக்கியத்துறைபோகிய நாவலர் அருள் உள்ளத்தால் இச்சதகத்தையும் ஏற்றுக் கொள்வர். **(௩0௫)**

**வாழி**

306. சந்ததமு மோதுநான் மறைவாழி! யாகந்
தளிர்க்கும் பசுக்கள்வாழி!

தரணிகா வலர்வாழி! மனுநீதி வாழி!முத்
தமிழ்வாழி! வேள்விதனிலே
வந்தெழுந் தெய்விக மன்னவன் வாழி!யவன்
மதலைமெய்ப் பொருணாயனார்
மைந்தர்வழி வந்தவர்கள் வாழி!குக முனிவாழி!
மாதவ நிறைந்துவாழி!
சுந்தர மிகுந்தவுண் ணாமுலைத் தாய்வாழி!
சோதிப்ர காசமாகத்
தோன்றுமண் ணாமலைப் பரமனார் வாழி!மெய்த்
துணைமநோன் மணியும்வாழி!
அந்தணர்கள் வாழி!யெழில் சிங்கபுரி வாழி!மெய்
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத்தேவனே!

**பொழிப்:** நான்மறை, பசுக்கள், நாடுகாவலர், மனுநீதி, தமிழ், தெய்விக மன்னவன், அவன் மகன் மெய்ப்பொருள் நாயனார் வழி வந்தவர்கள், உண்ணாமுலைத்தாய், அண்ணாமலை ஈசர், அவருக்குத் துணையான மநோன்மணி, வசந்தராயர் மரபு யாவரும் யாவும் வாழ்க. **(கOா_)**

அண்ணாமலை சதகம் முற்றிற்று.

உ

சிவமயம்

காஞ்சிபுரம் வித்வான்

சபாபதி முதலியாரவர்கள் இயற்றிய

# அருணாசல சதகம்

# அருணாசல சதகம்

இச்சதகம் பெரும்புலவர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் எனப்படும் சபாபதி நாவலரால் இயற்றப்பட்டது. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவரும் தேவாரத்தை முதன் முதல் அச்சேற்ற உதவியவரும் ஆவார். நூலில் காப்பு வெண்பாவோடு, கலிவிருத்த யாப்பில் *101* சதகச் செய்யுள்கள் உள்ளன. செந்தமிழ்ப் புலமையும் சிவபக்தியும் புலப்பட ஒவ்வொரு பாடலும் இயற்றப்பட்டுள்ளது. திருவண்ணாமலைப் பெருமானிடம் இப்புலவர் பெருமான் கொண்ட பக்தியை ஒவ்வொரு பாடலையும் அருணாசலா*!* அருணாசலா*!* என்று முடிப்பதன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அருணாசலம் என்பது 'ஒளிமலை' என்று பொருள்படும்.

# அருணாசல சதகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

திருநாதன் தேடரிய சேவடியான் றன்மேல்
அருணாசல சதக மன்பாத் - தெருணாவால்
சொல்லுதற்கு மும்மதத்த தும்பிமுகத் தான்பதும
மெல்லடியே நற்றுணை யாமே.

**பொழிப்புரை:** திருமகள் கணவனாகிய நாராயணன் தேடுதற்கு இயலாத திருவடிகளை உடைய அருணாசலப் பெருமான் மீது அன்போடு தெளிந்த நாவினால் பாடுவதற்கு மும்மதங்களை உடைய யானை முகத்தவனாகிய விநாயகனின் தாமரை போன்ற மெல்லிய திருவடிகள் காவலாக அமையும்.

## நூல்

### கலிவிருத்தம்

307. **பொன்பரவுகொன் றையினோடுவான் புனலாறுவெண் மதிசூடுநீ
என்பராமு மினிதாவணிந் திடுதன்மையா லெளியேன்சொலும்
புன்பாடலிங் கிதுதன்னையும் போற்றிக்கொள்வா யெனவுள்ளெழும்
அன்பாலுரைத் தேன்கொண்டருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பொன்நிறக் கொன்றை, கங்கை, வெண்மதி, எலும்பு மாலை இவற்றை நீ உயர்வு தாழ்வு கருதாமல் இனிமையாக அணிந்திடும் தன்மையால் என் அற்பமான இப்பாடலையும் புறக்கணியாது ஏற்றுக் கொள்வாய் என்று உள்ளத்தெழும் அன்பால் பாடியுள்ளேன்.

**அ.பொ:** வான் புனலாறு - ஆகாய கங்கை. (க)

308. **கடியார்துள வத்தொங்கலான் கமலப்புது மலர்மேவினான்
படியூடிடந் தடிதேடவும் பறந்தன்னமாய் முடிதேடவும்
கொடியேன்மன மேகோயிலாக் குடிமேவினை யெனிலையநின்
அடியாரெலா மென்சொல்லிடார் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** திருமால், பிரமன் இருவரும் உலகை அகழ்ந்தும் அன்னமாய்ப் பறந்தும் முறையே அடி முடி தேடவும், நீ கொடியேனாகிய என் மனத்தையே இருப்பிடமாகக் கொண்டு தங்கினாய் என்றால் அடியார்கள் யாது சொல்ல மாட்டார்கள்.

**அ.பொ:** துளபத் தொங்கல் - திருத்துழாய் மாலை, தொங்கலான் - திருமால், மலர் மேவினான் - பிரமன், இடந்து - தோண்டி. **(உ)**

309. **கற்பம்மனு கற்பம்முப கற்பம்மெனு முறையால்வரு**
**பொற்பின்மிகு திருநீறணி புனிதர்க்கலா னின்றாளெனு**
**நற்பங்கய நறுமாமலர் நணுகும்மரு ளாவெய்துமோ**
**அற்பின்னடி யார்போற்றிடும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கற்பம், அனுகற்பம், உப கற்பம் என்னும் முறையால் வரும் திருநீறு அணியும் புனிதர்க்கு அல்லால் உன் திருவடித் தாமரைகளை அணுகும் அருள் எய்துமோ?

**அ.பொ:** அற்பின் - அன்பின் அடியார். **(௩)**

310. **வில்லார்மலர்க் கணையேவிய வேளைப்பொடி யாச்செய்தனை**
**கல்லாலெறிந் தவன்முத்தியே காணப்பரிந் தனையாதலாற்**
**பொல்லாமனத் தவனென்றெனைப் புறமேவிடுத் திடலையனே**
**அல்லார்களத் தெம்மண்ணலே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மலர்க்கணை ஏவிய மன்மதனைப் பொடி செய்தனை. கல்லால் எறிந்த சாக்கியனுக்கு முத்தியை அளித்தனை. அத்தகைய நீ பொல்லாமனத்தவன் என்று என்னைப் புறக்கணித்துவிடாதே.

**அ.பொ:** கல்லால் எறிந்தவன் - சாக்கிய நாயனார், அல் ஆர் களம் - கரிய கழுத்து. **(ச)**

311. **முடிபட்டமென் றனக்கேமலர் முகிழ்போற்குழைந் திடக்கண்டிடும்,**
**வடிபட்டநோக் குடையாள்புவி வானோடளித்திடு வாள்மனம்,**
**பொடிபட்டநின் றிருமேனியிற் பொருபூழியன் கையிற்பிரம்,**
**படிபட்டபோ தென்பட்டதோ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உன் திருமேனியில் பாண்டியன் கையின் பிரம்பினால் அடி பட்டபோது இவ்வுலகை எல்லாம் காக்கும் பெருமாட்டி மனம் என்ன பாடுபட்டதோ?

**அ.பொ:** வடி - மாவடு, பூழியன் - பாண்டியன். **(ரு)**

312. வானாகினை வளியாகினை மால்வேதனோ டமரர்க்கெலாங்
கோனாகினை யடியார்மனங் குடிகொண்டவ ருணவூறிடுந்
தேனாகினை யமுதாகினை தேரூர்ந்திடர் செறிபோரினில்
ஆனாகிமால் வரவூர்ந்திடும் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** நீ வானமும் காற்றும் ஆயினை. திருமால் பிரமன் முதலிய தேவர்க்குத் தலைவன் ஆயினை. அடியார் மனத்தில் தேனும் அமுதமும் ஆயினை. உன் தேரை இழுத்துச் செல்லத் திருமால் காளை வடிவெடுத்து வரத் தேரைச் செலுத்தினை.

**அ.பொ:** வளி - காற்று, ஆன் - காளை. (சா)

313. புல்லாகியே பூடாகியே புழுவாகியே மரமாகியே
கல்லாகியே னுந்நின்னகர்க் கண்மேவிலே னினியெங்ஙனே
பொல்லாப்பிறப் பொழிந்துய்குவேன் புலைநாயினே னிமயந்தரும்,
அல்லார்குழற் கொருபாகனே அருணாசலா! அருணாசலா!.

**பொழிப்:** பார்வதி பாகனே! உன் அருணாசலத் திருப்பதியில் புல், பூடு, புழு, மரம், கல் இவற்றுள் ஒன்றாகப் பிறவி எடுக்காத அடியேன் பொல்லாப் பிறப்பை எவ்வாறு ஒழிந்து உய்குவேன்.

**அ.பொ:** அல் ஆர் குழல் - கரிய கூந்தல். (எ)

314. படைக்குந்தொழி லயற்கீந்தனை பரிக்குந்தொழி லரிக்கீந்தனை,
துடைக்குந்தொழி லரற்கீந்தனை துதிக்குந்தொழி லடியார்க்கெலாங்,
கிடைக்கும்படிக் கினிதீந்தனை கிளரும்வைகை தனையன்றுநீ,
அடைக்குந்தொழி லாளானதென் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** படைக்கும் தொழிலை அயனுக்கும், காக்கும் தொழிலைத் திருமாலுக்கும், அழிக்கும் தொழிலை உருத்திரனுக்கும், துதிக்கும் தொழிலை அடியாருக்கும் வழங்கும் நீ வையை நீர் வெள்ளத்தை அடைக்கும் தொழிலில் ஈடுபட்டது ஏன்? (அ)

315. பரிந்திட்டற மெண்ணான்குமுன் பயில்வாளிருக் கவுநின்னருள்,
சுரந்திட்டவன் றொண்டர்க்கெனச் சோறன்றுநீகச் சூரினில்,
இரந்திட்டதென் னோசொல்லுவா யெகினத்தவன் றலையொன்றினை,
அரிந்திட்டதிற் பலிதேர்ந்திடும் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பிரமன் தலை ஒன்றனை அரிந்து அதில் பிச்சை எடுத்த பெருமானே! 32 அறங்களைச் செய்யும் பார்வதி உன் பாகமாக இருக்கவும். நீ திருக்கச்சூரில் உன் அடியவன் சுந்தரனுக்காக உணவினைப் பிச்சை எடுத்தது ஏன்?

**அ.பொ:** எகினம் - அன்னம், எகினத்தவன் - பிரமன்.

**குறிப்பு:** ஏழாம் திருமுறை நான்காம் பதிகத்தில் திருக்கச்சூர் இடம் பெற்றுள்ளது. இது செங்கல்பட்டுக்கு அருகே சிங்கப்பெருமாள் கோயில் இரயில் நிலையத்திலிருந்து இரண்டரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. சுந்தரர் இதன் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். பெரிய புராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் - 174-176. **(கூ)**

316. **மையார்விழி மலைமாதொடு மருவுந்திருக் கோலத்தையோர்**
**கையார்புனன் மலரானிதங் காணப்பரி யாதென்னையோ**
**மெய்யானது வேறாகவே வேதாவரி யுழல்வுற்றனர்**
**ஐயாவவர் மதியென்கொலோ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** நீ பார்வதியோடு வீற்றிருக்கும் அழகைப் பிரமன் காண அவாவாதது ஏன்? உன் உடம்பு தீப்பிழம்பின் வடிவெடுக்க அயனும் அரியும் அதன் முடி அடி காண முடியாமல் தடுமாறினர். அவர்கள் அறிவு பற்றி அடியேன் யாது கூறுவன்.

**அ.பொ:** வேதா அரி - பிரமன், திருமால். **(க0)**

317. **வாதாசன னாண்வின்மலை மாலார்கணை மறையேபரி**
**போதாசன னேசாரதி புவியேரத மாக்கொண்டுபின்**
**நாதாபுர நகைத்திட்டது நவிலும்மவ ரகமங்கவோ**
**ஆதாரமா றினுமேலுறும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** காற்றை உண்ணும் பாம்பு நாண், மலை வில், திருமால் அம்பு, வேதங்களே குதிரை, தாமரையை இருப்பிடமாகக் கொண்ட பிரமனே தேரோட்டி, பூமியே தேர், இவ்வளவு இருந்தும் திரிபுரத்தைச் சிரித்து அழித்தது அவர்கள் செருக்கு நீங்கவோ?

**அ.பொ:** வாதாசனன் - பாம்பு, போதாசனன் - பிரமன், புவி - உலகம், புரம் - திரிபுரம், அகம் - செருக்கு. **(கக)**

318. **முன்னாளிதழ் நறுமாலையு முரிதோலுமே புனையத்தரும்**
**பொன்னாரித ழியினோடும்வெம் புலியானைமற் றிவைதம்மொடு**
**மன்னாப்பயில் தரவெண்ணியோ வளர்மாமலை யுருவாயினை**
**அன்னாயெனு மன்பர்க்கருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கொன்றை, புலி, யானை இவற்றோடு கலந்து பழக வேண்டும் என்று எண்ணியோ நீ மலை வடிவு எடுத்தனை?

**அ.பொ:** இதழி - கொன்றை, பயில்தர - பழக. **(கஉ)**

319. **மேனாளொரு விழியுன்பத மேல்சாத்திய மாயோன்பெரு**
**மீனானநா ளினுமாங்கவன் விழிகொண்டது ருசியென்று தீங்**
**கானார்கரும் பதைவேரொடு களைகின்றது போலானதால்,**
**ஆனாயனார் தொழுமையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** முன்னொரு காலத்தில் தன் விழியை உன் திருவடிகளில் மலராக இட்ட திருமால் விழியினிடத்துள்ள சுவையால் அவர் மீனாக வடிவெடுத்த போது அவர் விழியைக் கொண்டாயோ? கரும்பு ருசி என்றால் அதனை வேரொடு களையலாமோ? **(கங)**

320. **பாரின்கணே யைந்தாகினை பகர்நீரிடை நான்காகினை**
**சேருந்தழற் கண்மூன்றெனச் செறிந்தாய்வளிக் கிரண்டாகினை,**
**நேரும்விணி லொன்றாகினை நிமிரும்முயிர்க் குயிராகினை**
**ஆருன்னிலை யறிவார்சொலாய் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பெருமானே உன் நிலையை அறிவார் யார்? நீ பாரிடை ஐந்தாய் (நிலம் ஐந்து), நீரிடை நான்காய் (நீர், தீ, காற்று, ஆகாயம்), தீயிடை மூன்றாய் (தீ, காற்று, ஆகாயம்), காற்றிடை இரண்டாய் (காற்று, ஆகாயம்), வானிடை ஒன்றாய் (ஆகாயம்) உயிர்க்கு உயிராய் உள்ளாய்? **(கச)**

321. **மாறாவரந் தருவோமென வைகுந்தனும் மலர்த்தேவனு**
**நூறாயிர முறைவந்தெதிர் நுவல்கிற்கினு நின்னன்பர்கள்**
**பேறாயதை நினைவார்கொலோ பிறவிக்கட லதுநீந்தவே**
**ஆறாறுநீத் தவர்வாழ்த்துறும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கேட்டவரம் தருவோம் என்று பிரமனும் திருமாலும், எதிரே வந்து பலமுறை கூறினாலும் உன் அன்பர்கள் அவர்கள் தருவதைப் பேறாக நினைப்பார்களோ? பிறவிக்கடல் நீந்திக் கடக்க 36 தத்துவங்களைக் கடந்தவர் உன்னை வாழ்த்துவர்.

**அ.பொ:** பேறு - பாக்கியம், ஆறாறு - முப்பத்தாறு தத்துவம். **(கரு)**

322. **ஊனந்தரு மிவ்வாழ்வினி லுலையேற்றுமா மையினண்ணியே**
**ஈனந்தொடர் துயர்மேவினே னென்செய்குவே னெளியேனருண்**

**மோனந்தரு நிலையிதென மொழிவாயெனி லினியுய்குவேன்**
**ஆனந்தமே யுருவாகிய அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உலை நீரில் நீந்த விடப்பட்ட ஆமை போலப் பழுது தரும் இவ்வுலக வாழ்வினில் தடுமாறும் அடியேனுக்கு மௌனமாக இருக்கும் நிலை இது என்று குறிப்பிடுவாயானால் அடியேன் உய்குவேன்.

**அ.பொ:** உலை - கொதிக்கும் நீர் **(கசா)**

323. **இடியுங்கரை மரமாமென வெண்ணாமலிவ் வுடறன்னையோர்**
**பிடியுங்குறை யாதுண்டுநான் பெரிதேவளர்த் துனதன்பினில்**
**படியுங்குண மிலனாயினும் பரிவாருனை யலதியாவரே**
**அடியும்முடி யுங்காணொணா அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** இவ்வுடல் வெள்ளத்தால் இடிந்து கொண்டிருக்கும் கரையில் உள்ள மரமாதலின் நிலைபேறு உடையதன்று என்று கருதாமல் பெரிதும் உண்டு அதனை வளர்த்த நான் உன் அன்பில் ஈடுபடும் குணம் இலேன் ஆயினும் உன்னைத் தவிர எனக்கு உற்றவர் பிறர் இலர்.

**அ.பொ:** பரிவார் - இரங்குபவர். **(கஎ)**

324. **மட்டார்மலர் கொடுநின்னடி மலர்பூசனை செய்கின்றிலார்,**
**மொட்டார்தனத் தார்தம்மையே முயங்கித் திகைப்பாரையையோ**
**கெட்டாரவர் தமக்குன்னருள் கிடையாது முப்புரநீறெழ,**
**அட்டாரணன் றொழநின்றருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மலர் கொண்டு உன் திருவடிகளில் பூசனை செய்யாது மகளிரையே தழுவி மாயையால் அறிவு கெட்டவர்களுக்கு உன் அருள் கிட்டாது.

**அ.பொ:** மட்டு - தேன், மொட்டு - தாமரை மொட்டு, முயங்கி - தழுவி, ஆரணன் - பிரமன். **(கஅ)**

325. **பாம்பின்விட வாயிற்குளே படுதேரைபோ லெளியேனுளந்**
**தேம்பிப்புல னிற்சிக்குறாத் திகைப்புற்றுநல் லுணர்வின்றியே**
**சாம்பிக்கிடக் கின்றேனரு டருவாயெனி லினியுய்குவேன்**
**ஆம்பற்சிறு வாய்பங்கனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பாம்பின் விட வாய்க்குள் அகப்பட்ட தேரையைப் போல எளியேன் புலன்களில் சிக்குண்டு, நல்லுணர்வின்றி மெலிந்து கிடக்கிறேன். நீ அருள் தந்தால் இனி உய்வேன். **(ககூ)**

326. **வீட்டுக்கொரு வித்தாகிய மெய்ஞ்ஞானநன் னெறிதேர்கிலார்**
**பாட்டுக்கருள் செய்வாயெனும் பண்பேனுநன் குணர்கிற்கிலார்**
**கேட்டுக்கிட மாய்நாடொறுங் கிறிசெய்குவா ருய்வார்களோ**
**ஆட்டுக்குவல் லவனாகிய அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மெய்ஞ்ஞான நெறியே வீடடைதலுக்கு அடிப்படை. இறைவன் தன் மீது பாமாலை தொடுத்துப் பாடுபவருக்கு அருள் செய்பவன் என்பனவற்றை உணராமல் கேட்டுக்கு இடமாக நாடோறும் வஞ்சனை செய்பவர்கள் உய்யமாட்டார்கள்.

**அ.பொ:** கிறி - வஞ்சனை, ஆட்டுக்கு - கூத்தாடுதலுக்கு. **(உ0)**

327. ***செம்பிற்களிம் பதுநீங்கவே செம்பொன்னெனத் திகழ்தன்மைபோல்,***
***பம்புற்றமும் மலநீங்கவே பரமாவைநீ யெனவோதினை,***
***வம்புற்றநா யேனோர்ந்திலேன் மயிலைக்குளுங் கயிலைக்குளும்,***
***அம்பர்க்குளு மகிழ்பூத்திடும் அருணாசலா! அருணாசலா!***

**பொழிப்:** செம்பின் களிம்பு நீங்கினால் அது பொன்னாவது போலச் சீவான்மா மும்மலம் நீங்கவே பரமான்மாவுக்கு நிகராகும் என்ற உன் சொற்களை அடியேன் உள்ளபடி உணரவில்லை.

**அ.பொ:** பம்புற்ற - சூழ்ந்துள்ள, பரமாவை நீ - நீ பரம்பொருளுக்கு நிகர் ஆகுவாய். **(உக)**

328. ***பாராளுமன் னவர்செல்வமும் பகரும்விசும் பிறைசெல்வமுஞ்,***
***சீரானவே தன்செல்வமுந் திருமான்மகிழ் தருசெல்வமுங்,***
***காராருமின் னெனவெண்ணியுன் கழல்போற்றுவார் தஞ்செல்வமிங்கு***
***ஆராலுமோர வொண்ணாததாம் அருணாசலா! அருணாசலா!***

**பொழிப்:** அரசருடைய செல்வம், இந்திரன் செல்வம், பிரமன் செல்வம், திருமால் செல்வம், என்ற யாவும் மேகத்தில் தோன்றும் மின்னலைப்போல அழியும் என்று உணர்ந்து உன் திருவடிகளைப் போற்றுவார் பெறும் செல்வம் அளக்க முடியாதது.

**அ.பொ:** வேதன் - பிரமன். **(உஉ)**

329. **உனக்குண்மறைந் திந்நாளுநா னுறல்போலென தருளாலினி,**
**யெனக்குண்மறைந் திருமைந்தனே யென்றாய்குரு வாய்வந்துநீ,**
**நினைக்குந்தொறு நினைக்குந்தொறு நீயன்றியொன் றுங்காண்கிலன்,**
**அனக்குண்டமோர் பூதக்கருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** 'இந்நாள் வரை யான் உனக்குள் மறைந்திருப்பது போல இனி எனக்குள் மறைந்து இரு', என்று குருவாய் வந்து நீ எனக்கு அருளிய செய்தியை நினைக்குந்தொறும் உன்னையன்றி வேறொன்றையும் காண்கிலேன்.

**அ.பொ:** அனக்குண்டம் - சோற்றிக்குழி, பூதம் - குண்டோதரன். **(உ௩)**

330. **காவிக்குநேர் விழிமாதரார் காமக்கட லதின்முழ்கிய**
**பாவிக்குநின் னிருதாட்புணை பாலித்திடா யெனிலுய்வனோ**
**நாவிக்கருள் செயுமையனே ஞானத்தவர் புகழ்தூயனே**
**ஆவிக்குறு துணைமெய்யனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மகளிர் காமக்கடலில் முழுகிய பாவியாகிய எனக்கு உன் திருவடிகளாகிய தெப்பம் கிட்டாது எனின் யான் உய்யேன். மானுக்கும் அருளுபவனே! உலகவரால் புகழப்படுபவனே! உயிருக்கு உண்மையான துணைவனே!

**அ.பொ:** காவி - கருங்குவளை, புணை - தெப்பம், தாள் - திருவடி, நாவி - மான். **(உ௪)**

331. **ஒன்றாகினை பலவாகினை யுளதாகினை யிலதாகினை**
**யென்றாரண மதுகூறுவ தெண்ணாதுதாம் பரமென்றிடுங்**
**கன்றால்விள வெறிமாயவன் கமலத்தயன் வெருவுற்றிட**
**அன்றாரழல் வரையாகினை அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** நீயே ஒன்றாய்ப் பலவாய் உளதாய் இலதாய் உள்ளாய் என்று வேதம் முழங்கிடவும், தம்மையே பரம்பொருளாகக் கருதிய பிரமனும் திருமாலும் அஞ்சுமாறு நீ அனல் தம்பமாகக் காட்சி வழங்கினை.

**அ.பொ:** ஆரணம் - வேதம். **(உ௫)**

332. **வளர்கார்த்திகை மாதந்தொறும் வருகார்த்திகை நாடன்னிலே**
**பளகானதில் லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித்தொழக்**
**கிளர்மாமலை தனிலேயொளி கெழுசோதிகாட் டாநின்றநின்**
**அளவார்தெரி பவரையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் மெய்யன்பர்கள் ஏத்தித் தொழுமாறு மாமலையிலே சோதியைக் காட்டும் உன் அளவைத் தெரிபவர் யார்?

**(உ௬)**

333. ஒருபான்மல ரயனாகவு மொருபாறிரு மாலாகவும்
பொருவாவருட் டிருமேனியாய்ப் பொலிவாயிதன் றியுமாமலை
வருபாவையோர் பாலாகவும் வருவாயிதன் றியுமையனே
யருவாவையுன் னருளென்னையோ அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** ஒரு பக்கம் பிரமனாகவும் ஒரு பக்கம் திருமாலாகவும் அருள் திருமேனி கொண்டுள்ளாய். இஃதன்றிப் பார்வதி ஒரு பாகமாகவும் உள்ளாய். இவையன்றி அருவாகவும் உள்ளாய். உன் அருள் யாதோ? **(உஎ)**

334. ஒப்பானதி லொருமூர்த்தியா யொருபாதமார் திரிமூர்த்தியாம்,
அப்பான்மைபோன் மலையாகியு மருளின்பெரு மையினையனே,
இப்பாருளோர் கண்டேதொழ விருந்தாய்நதி மதியாடர,
வப்பார்சடை முடியண்ணலே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** நீ ஒரு பாத திரிமூர்த்தியாய் உள்ளாய். மலையாகியும் உள்ளாய். நதி, மதி, அரவு சூடிய சடையனே! உன் அருளின் பெருமைதான் என்னே!

**அ.பொ:** அப்பு - கங்கை. **(உஅ)**

335. இருப்பானது வெளிமலை யிடத்தோர்மர கதமாமலை,
மருப்பார்மத மலைபெற்றது வளைவில்லொரு பொன்மாமலை,
விருப்பாமித னாலோவொளி மேவும்மலை வடிவாயினை,
யருப்பாரெருக் கணிமாலையாய் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** எருக்கமாலை அணிந்தவனே! உன் இருப்பிடம் கயிலைமலை. உன் இடப்புறம் மரகத மாமலை போன்ற பார்வதி. நீ மகனாகப் பெற்றவன் மதமலையாகிய விநாயகன். நீ வில்லாக வளைத்தது மேருமலை. இவற்றால் தான் நீ விரும்பும் ஒளி மலை வடிவம் எடுத்தாயோ? **(உகூ)**

336. பொறியின்வழி மனம்போக்கிடார் பொன்னந்திரு வடிசேர்வதுஞ்,
செறியும்மிரு வினையாளர்க டிகழும்பிற வியிலாழ்வதும்,
வெறிகொண்மரை பரிதிக்கெதிர் விகசித்துவா டுதல்போலுமென்,
றறியுந்நிலை யெற்கீந்தருள் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பொறியின் வழி மனத்தைச் செலுத்தாதவர் உன் திருவடியைச் சேர்வர். இருவினையாளர்கள் பிறவியில் ஆழ்வர். இவை தாமரை சூரியனைக் கண்டு மலர்வதும் அல்லி போன்ற மலர் வாடுவதும் போலும்.

**அ.பொ:** விகசித்து - மலர்ந்து. **(௩0)**

337. **படியாவுமோர் குடைநீழலிற் பரிக்கும்மவர் மகிழ்செல்வமுங்,**
**கடியார்தரு நிழல்வைகுறுங் கண்ணாயிரன் மகிழ்செல்வமு,**
**நெடியோன்மகிழ் தருசெல்வமு நின்னன்பர்தாள் பணிந்தேத்திடும்,**
**அடியாரடிப் பொடிநேருமோ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** அரசர் செல்வமும், இந்திரன் செல்வமும், திருமால் செல்வமும் உன் அடியார்க்கு அடியார் அடிப்பொடிக்கு நிகராகா.

**அ.பொ:** கண்ணாயிரன் - இந்திரன். **(௩௧)**

338. **காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலின்னடுத் தவஞ்செய்குவார்,**
**தேட்டுற்றநற் கதிகாணவென் செயலிங்கிதுன் கோயிற்குளே,**
**வேட்டுற்றல கிட்டேதிரு மெழுகிட்டிலார் கதிகாண்பரோ,**
**ஆட்டுக்குமன் றினிநின்றிடும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** காட்டில் தவம் செய்வதும், கனலின் நடுவில் தவம் செய்வதும் ஆகிய நற்செயல் உடையோர் பெறும் பேற்றினை உன் கோயிலை அலகிட்டு மெழுக்கிடும் அன்பர் பெறுவர்.

**அ.பொ:** தேட்டுற்ற - தேடுகின்ற, வேட்டுற்று - விரும்பி, ஆட்டுக்கு - கூத்துக்கு. **(௩௨)**

339. **பிறவாநெறி தருவானுநீ பிறக்கும்படி செய்வானுநீ**
**யிறவாவரந் தருவானுநீ யிறக்கும்படி செய்வானுநீ**
**மறவாதுனை வாழ்த்தும்படி வந்தாளவும் வேண்டுமையா**
**அறவாணர்வாழ்த் தொலிமேவிய அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பிறவா நெறி, பிறக்கும் நெறி, இறவாவரம், இறக்கும் வரம் யாவும் தருவாய் நீயே. மறவாது உன்னை வாழ்த்தும்படி அடியேனுக்கு அருள் செய்க.

**அ.பொ:** அறவாணர் - தருமத்தினால் வாழ்வோர். **(௩௩)**

340. **உன்றாண்மலர் முடியாகவே யுறுமன்பர்கூற் றுவர்பெற்றபே**
**றொன்றேனுமா லயன்வானுளோ ருறுகின்றில ரெனிலாங்கவர்,**
**கன்றார்களோ விதுநன்றுகொல் கருணாகரா! மதிசேகரா!**
**அன்றாலமுண் டருள்செய்திடும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** ஆலம் உண்டு அருள் செய்த அருணாசலா! உன் அடியார்களும் உன் காலால் உயிர் நீத்த காலனும் பெற்ற பேற்றில் ஒன்றேனும் மால், அயன், வானோர் பெறாதது நன்றாகுமோ? **(௩௪)**

341. மானேந்தினை மழுவேந்தினை மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா வெருக்கேந்தினை கமலன்முடி கரத்தேந்தினை
வானேந்தினா ரெலும்பேந்தினை வறியேன்மொழி யையுமேந்திநல்,
ஆனேந்தவே வந்தாளுவாய் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** மான், மழு, மதி, நதி, எருக்கு, பிரமன் தலை, தேவர் எலும்பு, இவற்றை ஏந்திச் சுமக்கும் நீ அடியேன் மொழியையும் ஏந்தி என்னை ஆள்வாய்.

**அ.பொ:** ஆனேந்தவே - ஆன்ஏந்தவே. **(௩௫)**

342. திருமாலொரு கண்வாங்கியுன் செஞ்சேவடி மிசைசாத்தினன்
கருமாவடர் கண்ணப்பருன் கண்ணுக்கொரு கண்சாத்தினர்
பெருமானிவர் களில்யாவரே பெரியோரெனச் சிலரெண்ணுவார்,
அருமாதவர் மெய்யோர்குவார் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** கண்களை உனக்கு வழங்கியவர் திருமாலும் கண்ணப்பனும். இவருள் யாவர் பெரியவர் என்ற உண்மையைச் சிறந்த மாதவரே உணர்ந்து அறிவார்கள். **(௩௬)**

343. பூமாந்தினோன் முதலோர்தமைப் பொன்றச்செய்வை யெனவோர்ந்துமே,
காமாந்தக னாவாயெனுங் கருத்தேபெரி தாக்கொண்டுவீ,
ணேமாந்தர்கள் புகழ்வாரிது வெறியோமிகு, மஞ்ஞானமோ,
ஆமாம்பிணை திரிசாரல்சூழ் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** நீ உலகை உண்ட திருமால் முதலிய பலரையும் அழித்தாய் எனினும், உன்னை மன்மதனை அழித்தவன் என்றே மக்கள் புகழ்கின்றனர். இது உண்மையறிவு ஆகுமா?

**அ.பொ:** பூமாந்தினோன் - உலகை விழுங்கிய திருமால், காமாந்தகன் - காமனை அழித்தவன். **(௩௭)**

344. கல்லானைமுன் கைநீட்டியே கரும்புண்ணுமா றருள்செய்தநீ,
பொல்லாதகன் மனமுன்னருட் போதந்தனை யண்ணச்செய
வல்லாயலை போனிற்பதென் மாயஞ்சொலாய் மகிழ்தொண்டர்கள்
அல்லாதவர்க் கரிதாகிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** கல் ஆனையைக் கரும்பு உண்ணச் செய்த நீ பொல்லாத என் கல் மனம் உன் அருட்போதத்தை அடையச் செய்ய ஆற்றல் இல்லாதவன் போன்று இருத்தல் என்ன மாயை? **(௩௮)**

345. வாட்டேறுகண் ணிசைஞானியார் மைந்தன்றனை யாட்கொண்டநாள்,
பாட்டேயருச் சனையாமெனப் பகர்ந்தாயஃ துணர்ந்தும்பிறர்,
மாட்டேகவி சொலவெண்ணுமென் மருணீக்குவா யிருவோர்கள்போ,
ராட்டேசெய வவர்முன்வரும் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** இசைஞானி மகன் சுந்தரனை நீ ஆட்கொண்டபோது, பாட்டே எனக்கு அர்ச்சனை என்று கூறினாய். அதனை உணர்ந்தும் பிறரைப் பாட முற்படும் என் மயக்கத்தை நீக்குவாய்.

**அ.பொ:** வாட்டேறு - வாள்போன்ற. **(௩௯)**

346. ஈனந்தரு பிறவிக்கட லிடையேழையேன் பலகால்விழ
ஊனந்தரும் வினையாம்வளி யுறுவித்தலா லுனதின்னருள்
மோனந்தரு குகைசேரவே முன்னிக்கொடு வந்தேனையா
ஆனைந்துமா டியவையனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பிறவிக்கடலிடையே அடியேன் பலகால் விழுமாறு வினை ஆகிய காற்றடித்தலால் அக்காற்று அடிக்காத உன் இன்னருளாம் குகையைச் சேரவே கருதி வந்துள்ளேன்.

**அ.பொ:** ஆனைந்து - பஞ்சகவ்வியம். **(௪0)**

347. நாய்தன்னிலுங் கடையாகிநின் னல்லன்பர்தம் பானண்ணிலேன்,
வாய்தன்னினின் றனைவாழ்த்திலேன் வணங்கிப்பணி
செய்தும்மிலன்,
பேய்தன்னொடா டியவாறுபோற் பித்தேறுமென் னகநண்ணினை,
ஆய்தன்னினு மருள்செய்திடும் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** நாயினும் கீழேன் உன் அன்பரை அணுகிலேன். உன் கோயில் வாயிலில் நின்று உன்னை வாழ்த்திலேன். வணங்கிப் பணி செய்திலேன். அவ்வாறாகவும் நீ பேய்களோடு பழகுவது போலப் பித்தேறிய என் உள்ளத்தையும் இருப்பிடமாகக் கொண்டுள்ளாய்.

**அ.பொ:** வாய் - வாசல். **(௪௧)**

348. சந்தித்துமா லயன்வாதுசெய் தலினாங்கவர்க் கரிதாகினை
வந்தித்தலா லொருபாணன்முன் வந்தாய்விற கோதிக்கொடு
சிந்தித்திடி லவரித்திறந் தெளிவெய்தியின் னருள்சேர்குவார்,
அந்திப்பிறை முடியாளனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** மாலும் அயனும் வாதம் செய்து போட்டி போட்டதால் அவர்களுக்கு அரிதாயினாய். உன்னை வழிபட்டதால் ஒரு பாணன் முன்பு விறகு விற்பவனாய் வந்தாய். அயனும் அரியும் மனத்தெளிவு எய்திய பின்னரே உன்னைச் சேர்ந்தனர்.

**அ.பொ:** வந்தித்தல் - வழிபடுதல். **(சஉ)**

349. **உமையாளரு ளனையாகவு மொருதந்தைநீ தானாகவுந்**
**தமருன்னடி யாராகவுஞ் சார்பற்றவர் தமைநோக்குறி**
**னமனார்நணு காதோடுத னாயேனுணர்ந் துனையண்டினேன்**
**அமர்நீதியார் தொழுமையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பார்வதியே தாய், நீயே தந்தை, உன் அடியவரே உறவினர் என்று கொண்டு வேறு சார்பற்றவர்களைக் காலதூதுவர் அணுகாது ஓடுதலை நாயேன் உணர்ந்து உன்னை அணுகியுள்ளேன். **(சங)**

350. **கார்மேவிய களங்கண்டனன் கழன்மேவுமால் விழிகண்டனன்**
**போர்மேவுசூ லங்கண்டனன் போதன்றலைக் கரங்கண்டனன்**
**சீர்மேவுமா திடங்கண்டனன் சிறியேனிட ரினிக்காண்பனோ**
**ஆர்மேவுதா ரணிதோளனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கருமை பொருந்திய கழுத்து, கழலில் பொருந்திய திருமால் விழி, போர் செய்யும் சூலம், கையில் உள்ள பிரமன் தலை, பார்வதி தங்கும் இடப்பாகம், இவற்றைத் தரிசித்த நான் இனித் துயரம் என்பதனைக் காண்பேனோ?

**அ.பொ:** போதன் - பிரமன், ஆர் மேவு தார் - ஆத்திமாலை. **(சச)**

351. **திருமாலய னுனதாண்முடி தெரிவானல மந்தார்முனம்**
**ஒருமாதுவந் தியின்வாய்தலி னுறுமாறறி கிலராகிநல்**
**லுருமாறிய திறனென்னையோ வுமைபாகனே! யருளாகனே!**
**அருமாதவர் பலரேத்திடும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** திருமாலும் பிரமனும் உன் அடி முடி காணத் தடுமாறினர். அவர்கள் வந்தி என்ற பக்தையின் வீட்டு வாசலில் வந்து உன்னை அடி முடி காணாதவாறு நீ மண்வெட்டியானாய். உருவம் மாறிய செயலை ஏன் மேற்கொண்டாய்?

**அ.பொ:** அலமந்தார் - சுழன்றார், வந்தி - பிட்டு வாணிச்சி, அருள்ஆகன் - அருள் வடிவினன். **(சரு)**

352. **வல்லாளமன் னவன்வாழவோர் மகவாயவற் கருளீந்திடும்**
**வில்லார்மதி முடியண்ணலே வினையேன்பிறந் திடவைப்பையேல்,**

கல்லாய்மர மாயேனுநீ கனிவோடமர் தருமிப்பதி
யல்லாவிடந் தனில்வைத்திடேல் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** வல்லாள மன்னன் வாழ அவன் மகனாய் அருள் ஈந்த நீ அடியேனைப் பிறந்திட வைத்தாய். திருவண்ணாமலையில் கல்லாகவோ மரமாகவோவாவது பிறக்கச் செய். மற்ற இடங்களில் மனிதப் பிறப்புக் கூட வேண்டா.

**அ.பொ:** வில் - பிரகாசம். (சசா)

353. வரமாமல ரவனீந்திட வானோர்களுக் கிடரேசெயு
நரகாசுரன் றனைவெல்லமுன் னாராயணன் றவஞ்செய்தலின்
ஒருபாதியாங் கவனுக்களித் தொருபாதிதே விக்கீதலால்
அருவாய்மரு வினையோசொலாய் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பிரமன் வரந்தர அதனால் உலகைச் சிரமப்படுத்திய நரகாசுரனை வெல்ல நாராயணன் தவம் செய்தலின், உன் உடலில் ஒரு பாதி அவனுக்கும் மறுபாதி பார்வதிக்கும் ஈந்து நீ அருவாயினையோ? (சஎ)

354. எள்ளுக்குளெண் ணெய்போலவு மெறிமாமணி யொளிபோலவுங்,
கள்ளுற்றபூ மணம்போலவுங் கனகத்துறு மொளிபோலவும்,
விள்ளுற்றிடா துயிர்தோறுநீ மேவுற்றதோர்ந் தவர்ப்போற்றுவேன்,
அள்ளுற்றநீ றணிமெய்யனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** எள்ளில் எண்ணெய், மணியுள் ஒளி, மலருள் மணம், வானத்துள் ஒளி இவ்வாறாக உயிர்களைப் பிரியாது பொருந்தும் நின் நிலையை உணர்ந்து உன்னைப் போற்றுகிறேன்.

**அ.பொ:** விள்ளுற்றிடாது - வெளிப்படாது. (சஅ)

355. உமையாளுன் விழிமூடுநா ளொளிருங்கதிர் மதிவானிடை,
சமைவாயிருக் கவுநள்ளிரு டரணிக்குண்மூ டியதன்மையாற்,
கமையாருநின் விழிகாரணக் கதிர்மாமதி யெனவோர்ந்தனன்,
அமைவாமனத் தவர்போற்றிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** உமையாள் உன் கண்களைப் பொத்தியபோது வானத்தில் சூரிய சந்திரர்கள் இருந்தும் உலகம் இருண்டது என்பதனை நோக்கச் சூரிய சந்திரர் ஒளிக்கு நின் விழிகளே காரணம் என்பது புலப்படுகிறது.

**அ.பொ:** ஓர்தல் - ஆராய்ந்து அறிதல். (சகூ)

356. **பெருமைக்கட னிறவண்ணனும் பிரமன்முத லியதேவரும்**
**ஒருமிக்க,மாய் தரு,ஊழிதோ றொருதானுமாய் தர,னீங்கவே**
**தருமக்கட வுள்வெள்விடை தானாய்வர வுவந்தூர்ந்திடும்**
**அருமைத்திரு வருளாளனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** திருமாலும் பிரமன் முதலிய தேவரும் ஒரு சேர அழியும் ஊழிதோறும் தான் சாவிலிருந்து தப்பவே தருமதேவதை வெள்ளைக் காளையாக வந்து உனக்கு வாகனமாகி உயிர் பிழைத்தது.

**அ.பொ:** மாய் தரும் - இறக்கும். **(ருO)**

357. **கலையார்மதி கதிராகுநின் கண்ணோரிரண் டையுமூடுநாண்,**
**மலையான்மகள் கழுவாய்செயும் வகைசொல்லியே வினைநின்னரு,**
**ணிலையீதெனி னெவருய்ந்திடார் நிமிர்செஞ்சடை, மிசையேமதி,**
**அலையார்நதி யொடுசூடிய அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பார்வதி உன் கண்களை மூடிய தவற்றுக்காக அவளுக்குக் கழுவாய் சொல்லி அவளைத் தவம் செய்யுமாறு ஏவினாய். தவறு செய்பவர்களுக்கு நீ தப்புவிப்பதற்குக் கழுவாய் சொல்வதனால் எல்லோரும் தவற்றிலிருந்து உய்ய வாய்ப்பு உண்டு.

**அ.பொ:** கழுவாய் - பிராயச்சித்தம். **(ருக)**

358. **தக்கன்முனிந் தேகூறிய சாபந்தொடர்ந் தெய்தாதுனைப்,**
**புக்கண்முசந் திரனோர்கலை பொலிவெய்தவுன் முடிமீதிலே**
**வைக்கும்படி யச்சந்திரன் மனநைந்துசெய் தவமென்னையோ**
**அக்கன்புட னணிமெய்யனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** தக்கன் சாபத்தால் ஒளி முழுதும் குறையாமல் சந்திரன் உன் முடி மீதமர்ந்து ஒளி பெறுவதற்கு அவன் மனம் உருகிச் செய்த தவம் தான் யாதோ?

**அ.பொ:** அண்மு - நெருங்கி, அக்கு - சங்குமணி. **(ருஉ)**

359. **உன்னன்னிலை வினவும்பொழு துமைதன்னையே வியந்தானென,**
**மன்னும்யமு னையிற்சங்கமாய் மருவிச்சிறு விதிமாமக,**
**ளென்னப்பொலிக என்றேவியது எவர்க்கும்மருள் தரவல்லவோ,**
**அன்னத்தவன் பணியையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உன்னைப் பார்வதி வினவிய பொழுது அவளை யமுனையில் சங்கமாய்ப் பிறந்து சிறு மகளைப் போலப் பொலிக என்று கூறியது எவருக்கும் அருள் செய்வதற்காகவோ? **(ருங)**

360. விண்ணாளுமிந் திரனக்கினி விறலந்தக னிருதர்க்கிறை
தண்ணார்வரு ணன்வாயுவே தனதன்னுட னீசானனும்
உண்ணாடிமூழ் கியதீர்த்தமின் றொன்றேயெம திடர்தீர்த்திட,
அண்ணாமலை யெனநீடிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** இந்திரன், அக்கினி, இயமன், நிருதர் தலைவன் நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எண்திசை பாலகரும் மூழ்கிப் பயன் பெற்ற தீர்த்தமொன்று திருவண்ணாமலைத் திருப்பதியில் உள்ளது.

**அ.பொ:** விறல் - வெற்றி, அந்தகன் - இயமன், நிருதர்க்கு இறை - நிருதி, தனதன் - குபேரன். **(ருச)**

361. பூசிக்கநன் மலருண்டுதீம் புனலுண்டுநன் னெறிதேர்குவான்
வாசிக்கவா கமமுண்டுநின் மலர்நோக்கமு முண்டாகுமே
னேசித்தெளி யேனுய்குவே னீறோடுகண் மணிபூண்டுளத்
தாசற்றவர் தொழுமையனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** உன்னைப் பூசிக்க மலரும் தீர்த்தமும் உள. நல்வழியை அடைய வாசிப்பதற்கு ஆகமங்கள் உள. அருள்செய்ய உன் மலர்க்கண்கள் உள. எனவே உன்னை நேசித்து அடியேன் உய்குவேன்.

**அ.பொ:** ஆசு - குற்றம். **(ருரு)**

362. திருவாசக மொன்றுண்டுநற் றேவாரமு முண்டாங்கவை
கருவாய்வழி வாராநெறி காட்டும்மெனச் சான்றோர்சொலத்
தெருளாதுவீ ணேயையவோ தெருநாயினுங் கடையாயினேன்,
அருமாதவர் துதியோவிலா அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பிறவியை இனி எடுக்காத வகை வழிகாட்டும் தேவாரத் திருவாசகங்கள் உள்ளன என்று சான்றோர் சொல்லவும், அதனைத் தெளியாது அடியேன் தெருநாயினும் கீழ்ப்பட்டவனாகக் காலத்தைக் கழித்துவிட்டேனே.

**அ.பொ:** தெருளாது - தெளிவில்லாது. **(ருசா)**

363. பல்லார்விடப் பணியரவு உன்னைப் பரிந்தேதொழ வருளீந்ததும்,
பொல்லாவிட முண்டண்டரைப் புரந்தாள்வது மோர்ந்தும்முனைக்,
கல்லார்களைச் சேராநெறி கடையேற்கருள் செயவேண்டுமால்,
அல்லார்சுட லையிலாடிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பாம்புகள் உன்னைப் பணிந்து விரும்பித் தொழ அவற்றிற்கு அருளியதும் விடத்தை உண்டு தேவர்களைப் பாதுகாத்து ஆள்வது அறிந்தும்

உன்னை வழிபடாத கீழ்மக்களை நண்பர்களாகக் கொண்டு வீணாகாத வழியை எனக்கு அருள்.

**அ.பொ:** அல் - இரவு. **(ருஎ)**

364. **தேவாதிதே வாவென்கிலேன் சிவலோகநா தாவென்கிலேன்,**
**காவாயர னேயென்கிலேன் காபாலிவந் தாளென்கிலேன்,**
**சேவானதூர் வோயென்கிலேன் சிறியேனத னாலோவையா,**
**ஆவாவென வருள்செய்கிலை அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** யான் உன்னைத் தேவாதி தேவா, சிவலோக நாதா, அரனே, கபாலி, காளை வாகனனே என்னை வந்து ஆட்கொள் என்று வேண்டாததனால் நீ என்னை 'வா' என்று அழைத்து அருள்செய்யவில்லை.

**அ.பொ:** கபாலி - மண்டை ஒட்டை ஏந்தினவன். **(ருஅ)**

365. **கன்னாகுபே ராவிந்திரா காமாமுக சோமாபுவி**
**மன்னாவென வேபொய்யரை வாழ்த்திக்கவி சொல்லாமனன்,**
**குன்னாரருள் பெறுமன்பர்தா ளுளம்வைத்துவாழ்த் துறநல்குவாய்**
**அந்நாவலூ ராளிக்கருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** சாதாரண மக்களை அணுகி அவர்களைக் குபேரா, இந்திரா, காமா சோமா, புவிமன்னா என்று பொய்யுரையால் கவிபாடும் மனம் பொருந்தாத உன் அருள்பெறும் அன்பர் திருவடிகளை வணங்கி யான் வாழ்த்த அருள். **(ருசு)**

366. **பச்சென்னிற மொருபாலுறப் பைம்பொன்னிற மொருபாலுற,**
**வெச்சென்றதீ நிறமேவிமேல் வெண்ணீறுபூத் திடநின்றநீ,**
**நச்சுண்டிருண் டிடுகண்டமு நணலுற்றதைம் பூதங்களுக்,**
**கச்சென்னநிற் பதுகாட்டவோ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** ஒரு பக்கம் செந்நிறம், ஒரு பக்கம் பைம்பொன் நிறம் உறத் தீ நிறமேனிமேல் வெண்ணீறு பூத்திட நின்ற நீ கருநிறக் கழுத்தோடு விளங்குவது நீயே ஐம்பூதங்களுக்கும் அச்சு என்று இருப்பதனைக் காட்டவோ?

**அ.பொ:** நணல் - நண்ணுதல். **(சு0)**

367. **பன்னாகணைத் துயின்மாயனே பரிவோடுகாத் தருள்செய்குவ,**
**னென்னாச்சில ரெடுத்தோதுவ ரீதுண்மையே லிமையோர்வரை,**
**தன்னாற்கடைந் திடவந்தநஞ் சங்கண்டவ ரஞ்சித்தொழும்**
**அந்நாள்புர வாவண்ணமென் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** திருமாலே காத்தற் கடவுள் என்று சிலர் ஓதுகின்றனர். அவர் ஆலகால விடம் வந்தபோது அஞ்சித் தொழுத தேவர்களைக் காவாது விடுத்தது ஏன்?

**அ.பொ:** நாகணை - பாம்புப் படுக்கை, புரவா வண்ணம் - காப்பாற்றாத செயல். **(கூக)**

368. **காமத்தொடு கொலைசூதுபொய் களவுக்கிடந் தந்தென்மனம்,**
**பூமத்தமென் பணிகின்றநீ பொருந்தற்கிடந் தாராமையால்,**
**ஈமத்தெரி நரகம்மெனக் கிடமாகுமென் றெணிநின்னரு,**
**ளாமெய்த்துணை யேநம்பினேன் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** காமம், கொலை, சூது, பொய், களவு இவற்றோடு இடம் தந்த என் மனம் நீ பொருந்துதற்கு இடம் தாராமையால் நரகமே எனக்கு இருப்பிடமாகுமோ என்று எண்ணி உன் அருளால் உண்மைத் துணையை நம்பி வந்துள்ளேன். **(கூஉ)**

369. **உனக்குள்ளடி யேன்மேவியு முனையோர்கிலா மையினிவ்வுடல்**
**எனக்கென்னவீந் தனைமுன்னிரு ளென்னோடுசேர்ந் தந்தோவெனை,**
**நினக்குப்புறம் பாய்நிற்கவே நீடுற்றதா லென்செய்குவேன்,**
**அனக்கன்னிநேர் தருமாதர்சூழ் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உனக்குள் அடியேன் பொருந்தியிருப்பினும் உன்னை உள்ளவாறு உணராமையால் இந்த உடலை எனக்கு அளித்தாய். இவ்வுடலோடு ஆணவமும் என்னைச் சேர்ந்து உனக்கு வெளியே நிற்கவே பயன்படுகிறது. என்ன செய்வேன்? **(கூஙு)**

370. **பாசக்கிடம் பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு,**
**மாசற்றமா மறைபேசுமம் மாயைப்பசு வாமென்னுளே**
**தேசிற்பொலி பதியாகுநீ திகழ்கின்றதற் புதமல்லவோ**
**ஆசைக்குமே னிமிர்சோதியே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பாசத்துக்கு இடம் பசு, பசுவுக்கு இடம் பதி என்று வேதம் பேசும். மாயையின் வசப்பட்ட பசுவாகிய என்னுள்ளே ஒளிமயமாகிய பதியாகும் நீ திகழ்கின்ற செயல் அற்புதமாகும்.

**அ.பொ:** பசு - சீவன். **(கூச)**

371. **யான்செய்தனன் பிறர்செய்தனரெனதியா னெனுமஞ்ஞானமே,**
**யூன்செய்பிற வியைநல்குமென் றுணர்ந்தேனின தருளாலினி**
**வான்செய்பத விகள்யாவினு மயங்காநெறி தந்தாளுவாய்**
**ஆன்செய்நெடுங் கொடியாளனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** யான், பிறர், எனது, யான் என்ற அஞ்ஞானம் பிறவியை நல்கும் என்று உணர்ந்தேன். உன் அருளால் தேவர் பதவி எதனையும் விரும்பாத நெறியை அடியேனுக்குத் தந்து ஆட்கொள்க.

**அ.பொ:** ஆன்செய் கொடி - ரிஷபக்கொடி. **(சாரு)**

372. **வெய்யோனுத யஞ்செய்திடில் விரவும்மிரு ளொழிவாதல்போற்,**
**பொய்யானதில் குருவந்திடப் பொய்ப்போதநீங் கிடுமென்னவே,**
**மெய்யானநூ லுரைசெய்யவும் வீணேதிரிந் துழல்வார்சிலர்,**
**ஐயாவவ ருய்வார்கொலோ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** சூரியன் உதித்தால் இரவும் இருளும் ஒழிதல் போலக் குருநாதன் அருள் கிட்டினால் பொய்அறிவு நீங்கிவிடும் என மெய்நூல்கள் கூறவும், வீணாகச் சிலர் திரிந்து தடுமாறுகிறார்கள். **(சாசா)**

373. **பரையுன்னிரு விழிமூடுகைப் பதுமத்தனி விரற்பத்திலும்**
**வருகங்கைபத் தினின்மூன்றயன் மாலிந்திர னுக்கீந்துமற்**
**றொருநான்குமுன் றையும்வேணியி லொளித்துப்புவ னங்காத்தநின்,**
**அருமைச்செய லறிவாரெவர் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பார்வதி உன் விழிகளை மூட அவள் விரல்கள் பத்திலிருந்தும் பத்து கங்கைகள் தோன்ற, *(அவற்றுள்)* மூன்று கங்கைகளைப் பிரமன், திருமால், இந்திரன் என்பவருக்கு அளித்து, எஞ்சிய ஏழு கங்கைகளையும் சடைமுடியில் தரித்து உலகைக் காத்த அருமைச் செயலை யார் அறிவார்.

**அ.பொ:** பரை - பராசக்தி, வேணி - சடைமுடி. **(சாஎ)**

374. **மடவார்மய றானோர்புறம் வருகின்றபல் பிணியோர்புறந்**
**திடமாம்வறு மையுமோர்புறந் தீராதத்தீப் பசியோர்புறம்**
**கடனாகும்வன் பேயோர்புறங் கழிமானமாங் குரங்கோர்புறம்**
**அடலான்மெலிந் துனையண்டினேன் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பெண்களால் ஏற்படும் மயக்கம் ஒருபுறம், பிணி ஒருபுறம், வறுமை ஒருபுறம், தீராத தீப்பசி ஒருபுறம், கடனாகும் பேய் ஒருபுறம், மானமாகும் குரங்கு ஒருபுறம் இவற்றால் மெலிந்து உன்னை அண்டினேன்.

**அ.பொ:** மயல் - மயக்கம், மானம் - தன்மானம். **(சாஅ)**

375. **தாய்மார்களுஞ் சலித்தார்வரு சமனாருமோ சலித்தார்மலர்**
**வாய்வேதனுஞ் சலித்தானழன் மலிகும்பியுஞ் சலித்திட்டதாற்,**
**சேய்நானினிச் செயும்வண்ணமென் செப்பாய்பல கலைவேதமும்,**
**ஆய்மேலவர் தொழுமையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** என் பல பிறவிகளால் தாய்மார், காலன், பிரமன், நரகத்தைச் செலுத்துவோர் எல்லோரும் மனம் சலித்து விட்டனர். இனி நான் என் செய்வேன் என்பதனைச் சொல்வாய்.

**அ.பொ:** கும்பி - நரகம். (சாகூ)

376. **மனையாண்மனம் வெறுப்பாகவு மாதாமனம் வெறுப்பாகவுங்,**
**கனிவானபெண் கள்பிள்ளைகள் கசந்தேமனம் வெறுப்பாகவுஞ்,**
**சனியாமிரு மலுமீழையுஞ் சார்ந்தேழையே னலியாவகை,**
**அனையாமென வந்தாளுவாய் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மனைவி, தாய், பெண், பிள்ளைகள் ஆகியோர் வெறுக்குமாறு நோயும், இருமலும், சனியும் வந்து அடியேனைத் துன்புறுத்தாதபடி என் தாயாக வந்து என்னை ஆட்கொள்வாயாக.

**அ.பொ:** ஈழை - கோழை. (எO)

377. **காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலுக்குளே தவஞ்செய்குவார்,**
**நாட்டுக்குளே யறஞ்செய்குவார் நதியாவினும் போய்மூழ்குவார்,**
**பாட்டுக்குநால் வர்களெய்திய பரிசிற்பய னடைவார்களோ,**
**ஆட்டிற்பொலி தீக்கண்ணனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** காடுகளிலும், தீக்கள் நடுவிலும், தவம் செய்பவர்களும், நாட்டில் அறம் செய்பவர்களும், நதிகளில் முழுகி நல்வினை தேடுபவர்களும் நாயன்மார் நால்வர்களுடைய பாடல்களை ஓதுபவர் அடையும் பயனை அடைவார்களோ?

**அ.பொ:** நால்வர் - திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். (எக)

378. **பறவைக்கர சால்நைந்தவெம் பணிவந்துபோற் றப்பூண்டநீ,**
**மறமுற்றுமா தவரேவிட வருபாம்பணிந் திடவில்லையோ,**
**திறமுற்றுவன் பிலனென்றெனைச் செயிர்த்தாட்கொளா வகையென்னைமுன்,**
**அறவர்க்கரு டருமையனே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கருடனுக்குப் பயந்த சுமுகன் என்ற பாம்பினைப் பூண்டு அதற்கு அபயம் அளித்த நீ தாருகாவனத்து முனிவர்கள் விடுத்த பாம்புகளையும் பூணவில்லையா? உன் திறத்து முற்ற அன்பிலன் என்று என்னை வெகுண்டு ஆட்கொள்ளாதது ஏன்?

**அ.பொ:** பறவைக்கரசு - கருடன். (எஉ)

379. எரிகின்றதீப் போற்சீறியே யியமன்வரு மேற்பேதையேன்,
பரிகின்றமார்க் கண்டேயர்போற் பணிந்துன்பதம் போற்றுந்திறந்,
தெரிகின்றிலே னதனாலினே சிறியேனையாண் டருள்வெம்பலி,
யரிகின்றசென் னியிலேற்றிடும் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** தீப்போல வெகுண்டு இயமன் என்னைக் கொல்ல வரும் நேரம் அறியேன். மார்க்கண்டனைப் போல உன்னைப் போற்றும் திறம் அறிந்திலேன். ஆதலின் சிறியேனை நீயே ஆட்கொண்டு காப்பாற்று. **(எ௩)**

380. தம்மாலறி வனயாவையுந் தாமல்லவென் பதுமைந்தனே
சும்மாவிருந் திடுமாறெனச் சொல்லித்தெரி விப்பான்மலர்க்
கைம்மான்முத லியயாவையுங் கரந்தோர்குரு வாய்வந்தனை
அம்மாவுன தருளென்னையோ அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** தம்மால் அறியப்படுவன யாவையும் தாம் அல்ல. ஆதலின் உன் செயல் என்பது ஒன்றின்றி யாவும் இறைவன் செயல் என்று சும்மா இரு என்று உபதேசிக்க மானுட உருவம் தாங்கி நீ குருவாய் வந்து அருளினாய்?

**அ.பொ:** கைம்மான் - கையில் வைத்திருந்த மான். **(எச)**

381. காலாழ்களர் படுமாயின்வெங் கரிதன்னையு நரிகொல்வது,
போலாசையாம் படுசேற்றினிற் புலையேன்விழுந் துழல்கின்றதாற்,
பாலாமிரு வினைவெல்லுநின் பதமெங்ஙனந் தொழுவேனையா,
ஆலாலமுண் டருணாதனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** கால்ஆழ் களரில் நரியும் யானையைக் கொல்லும். யான் ஆசைச் சேற்றில் விழுந்து உழன்கின்றதனால் இரு வினைகள் என்னை அழித்து விடும். அவ்வாறாக அடியேன் உன் திருவடிகளை யாங்கனம் தொழ இயலும்?

**அ.பொ:** களர் - புதைமணல். **(எரு)**

382. பொருளீட்டவு மதனானவப் பொத்தற்சடந் தனையோம்பவு
மருளீட்டுமா தர்களாசையின் மயங்கித்திரி தரவுங்கொலோ
தெருளீட்டுமித் தனுவீந்தனை தேவாதிதே வாவென்னையே
அருளீட்டுமன் பர்கள்போற்றிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** பொருள் ஈட்டவும் அதனால் உடம்பை ஓம்பவும் மகளிர் ஆசையில் மயங்கித் திரியவும் தெளிவை அடைய வேண்டிய இவ்வுடலை எனக்கு அருளியுள்ளாயோ?

**அ.பொ:** பொத்தல் சடம் - ஓட்டைகளை உடைய உடல், தனு - உடம்பு. **(எசா)**

383. பொய்யானதே குடிகொண்டது புழுவானதோ நெளிகின்றது,
சையோகமே விழைகின்றது சவமாகிமேல் விழுகின்றது,
மெய்யானதிங் கிதைநாயினேன் வீணேசுமந் துழல்கின்றிலேன்,
ஐயாவுன தருள்வேண்டினேன் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** என் உடல் பொய்க்கே கொள்கலம், புழுக்களுக்கு இருப்பிடம், மகளிர் புணர்ச்சியையே விரும்புவது, இறுதியில் பிணமாகி விழக் கூடியது. இவ்வுடலை அடியேன் வீணே சுமந்து தடுமாறாது காப்பாற்றுவாய்.

**அ.பொ:** சையோகம் - புணர்ச்சி. (எஎ)

384. இந்நாள்வரை யிலுமுண்டசோ றெல்லமள விடவெண்ணிலோ,
பொன்னாமலை தானேருமோ புலையேனின முணலே,பெரி,
தென்னாவழல் வேனாதலா லியமன்வர வேயுன்னுவான்,
அந்நாளின்மு னீவந்தருள் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** இந்நாள்வரை யான் உண்ட சோற்றைச் சேர்த்து வைத்துக் கணக்கிட்டால் மேருமலை அளவு இருக்கும். கீழ்மகனாகிய யான் இன்னும் உண்ண வேண்டியுள்ளதே என்று வருந்துகிறேன். ஆதலால் இயமன் வரும் நாளில் நீ வந்து எனக்கு அருளி என் பிறவிப்பிணியை இப்பிறப்போடு போக்கு. (எஅ)

385. பறக்குஞ்சிறை மறையன்னமும் படிகீண்டகோட் டொருபன்றியுங்,
கறக்கின்றவான் பாலாட்டியே கனிவாயருச் சித்தீன்றவன்,
இறக்கும்படி செயுமன்பர்தா மெய்தும்பய னுணரார்கொலோ,
அறக்குஞ்சியஞ் சடையாளனே அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** உன்னைப் பசுப்பாலில் அபிடேகித்து அன்பால் அருச்சித்து அன்பர் எய்தும் பயனை அன்னமாகியும் பன்றியாகியும் உன் முடி அடிகளைக் காண முயன்ற பிரமனும் திருமாலும் அறியார் கொலோ? (எகூ)

386. தாய்தந்தைநீ குருதெய்வநீ தமியேனுயி ரதுநீயெனா,
வாய்தந்தனமொழி வேனலேன் மனமாண்ட நின்னடியாரொடுந்
தோய்தந்துவல் வினைநீங்கவுந் துலையொத்தநன் னிலைகூடவும்
ஆய்தந்திலே னுய்வேன்கொலோ அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** நீயே எனக்குத் தந்தை, தாய், குரு, உயிர் ஆவாய் என்று கூறுவேனல்லேன். உன் அடியவரோடு கூடித் தீவினை நீங்கவும் நன்னிலை கூடவும் முயல்கில்லேன். யான் யாங்கனம் உய்வேன். (அ0)

387. **மார்த்தாண்டனின் மலையுச்சிமேன் மதியாதுநா டொறுமேகுதல்,**
**பார்த்தாங்கவன், வெருவும்படி பணித்தோர்புறஞ் செலவைத்தநீ,**
**வேர்த்தாவென வுனைமேவுமென் வினையோர்புறஞ் செலவைத்திலை,**
**ஆர்த்தார்முடிக் கணியண்ணலே அருணாசலா, அருணாசலா**

**பொழிப்:** சூரியன் உன் மலைமேல் சஞ்சரிப்பதைப் பார்த்து அவன் அஞ்சுமாறு அவனை ஒரு பக்கமாகச் செல்ல வைத்த நீ, உன்னை அண்டிய என் வினைகளையும் என்னை விடுத்து வேறொரு புறம் செல்லுமாறு பணிக்கவில்லையே.

**அ.பொ:** மார்த்தாண்டன் - சூரியன். **(அக)**

388. **தெள்ளித்தெளி தருமன்பர்பாற் சேர்ந்தேயரு ளீவாய்,படர்**
**முள்ளிக்குவே லிகள்போடுதன் முறையல்லவென் பதுபோலெனை,**
**யெள்ளித்திரு வருளீந்திலை யெனினேழையே னென்செய்குவென்,**
**அள்ளிப்புனன் முடிமேற்கொளும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** தெளிந்த அன்பர்கள்பால் சேர்ந்து அருள்பாலிக்கும் நீ முள்ளிச் செடிகளை வேலிபோட்டுப் பாதுகாக்கவேண்டா என்று எனக்கு உன் திருவருளைப் பாலிக்கவில்லையேல் எளியேன் என் செய்வேன். **(அஉ)**

389. **தேன்பட்டசொல் லியராசையிற் றிகழாலைவாய்க் கரும்பென்னவே,**
**நான்பட்டுநொந் தனன்மேலுமோ நமனார்வரி லென்செய்குவேன்,**
**கான்பட்டபூங் குழல்பாகநின் கழல்சூடியாட் கொளவேண்டுமால்,**
**ஆன்பட்டநீள் கொடியண்ணலே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மகளிர் ஆசையாலே யான் அலையிடைப்பட்ட கரும்புபோல் சக்கையாகிவிட்டேன். மேலும் காலன் வந்தால் யாது செய்குவேன்? உன் கழல் தந்து என்னை ஆட்கொள்ள வேண்டும். **(அங)**

390. **பதியாகுநின் பதமாமலர் பணியாதபே யருநின்புகழ்**
**துதியாதமூ டருமாலயஞ் சூழவந்திடாப் புலையாளரும்**
**கதியாதுகா ணுவரையையோ காலன்கதை யடிபட்டுநைந்**
**ததியாகுல மடைவாரலால் அருணாசலா! அருணாசலா!.**

**பொழிப்:** உன் திருவடி பணிந்திடாத பேயரும், உன் புகழ் துதியாத மூடரும், உன் கோயிலை வலம்வாராப் புலையரும், நற்கதி அடையாமல் காலனுடைய கதையால் அடிபட்டு நைந்து பெரிதும் வருந்துவர். **(அச)**

391. **மாயோனையுந் தொழுகின்றிலன் மலரோனையுந் தொழுகின்றில**
**னாயேனினை யேபோற்றுவே னல்காயரு ளெனிலாங்கவர்**
**ஏயேயென நகைசெய்வரே யெனநாணிநான் மெலிகின்றனன்**
**ஆயேயென வடியார்க்கருள் அருணாசலா! அருணாசலா!.**

**பொழிப்:** அடியேன் திருமால், பிரமன் இவரை வணங்கேன். உன்னையே போற்றுவேன். நீ எனக்கு அருள் செய்யாவிடின் அவர்கள் என்னைப் பார்த்து உன்னைக் குறைவாக எண்ணிச் சிரிப்பார்களே என்று நாணி வருந்துகின்றேன்.

**(அரு)**

392. **பொருப்புச்சிலை யாயுன்னருட் போதந்தலைப் படுமன்பர்க**
**ணெருப்புக்கும்வா யுவினுக்குநீ ணீருக்குமஞ் சார்மேலுமோ**
**மருப்புக்கடா மறலிக்குமே மனமாய்வுறா ரெனவோர்ந்துநின்**
**அருட்புக்குவான் விழைகின்றனன் அருணாசலா! அருணாசலா!.**

**பொழிப்:** உன் அடியார் பஞ்சபூதங்களுக்கும் யமனுக்கும் அஞ்சார் என்பது உணர்ந்து உன் அருளில் புகுந்து வீடுபேறு உற விரும்புகின்றேன்.

**அ.பொ:** பொருப்பு - மலை, மறலி - காலன். **(அசா)**

393. **வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன் னடியார்பத**
**நேசிப்பதுன் னடியார்பத நினைகிற்பதுன் னடியார்பதம்**
**பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்**
**ஆசிப்பதுன் னடியார்பதம் அருணாசலா! அருணாசலா!.**

**பொழிப்:** அடியேன் வாசிப்பது உன்புகழ். வழிபடுவதும், விரும்புவதும், நினைப்பதும், பூசனை செய்வதும், அணி செய்வதும், வேண்டிப் பெறுவதும் உன் அடியவர் திருவடிகளே.

**அ.பொ:** ஆசிப்பது - இரப்பது, விரும்புவது. **(அஎ)**

394. **பொன்னுக்குளே யொளியென்னவும் பூவுக்குளே மணமென்னவும்,**
**என்னுக்குளே நீமேவுவ தெளியேனுணர் தருமாறுசெய்,**
**துன்னுக்குளே யான்மேவவு மொருநீயருள் செயவேண்டுமால்,**
**அன்னக்கொடி யோன்போற்றிடும் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** பொன்னின் ஒளி பூவின் மணம் என நீ என்னுள்ளே இருப்பதனை உணர்ந்து உன்னுள்ளே யான் பொருந்தவும் நீ அருள் செய்ய வேண்டும்.

**(அஅ)**

395. வேலிக்குமுள் ளிடவெண்ணிலார் வெறிகொண்டபே
யர்களாகியோர்,
காலுக்குமுள் ளிடல்போலுனைக் கடையேன்மறந் திதுகாறுமே,
மாலுற்றமெய் யதுபோற்றியுன் மலர்த்தாடொழு மாறோர்ந்திலன்,
ஆலிக்குமுள் ளத்தோர்க்கருள் அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** வேலிக்கு முள் இடாமல் காலுக்கு முள் இடுபவரைப்போல அடியேன் உன்னை மறந்து உடம்பைப் போற்றி உன் திருவடிகளைத் தொழாது காலம் கழிக்கின்றேன்.

**அ.பொ:** ஆலிக்கும் - மகிழும். **(அகூ)**

396. நட்டுத்தொழா தவனென்றரு ணல்காயிலே தோர்வாரெனிற்
றொட்டுக்கலா லெறிந்தோற்குமுன் றொலையாதவின் பந்தந்தது
கட்டுக்கதை யென்றேசிலர் கழறிக்கொள்வா ரேயம்மொழி,
யட்டிச்சுடு மென்காதினை அருணாசலா! அருணாசலா!.

**பொழிப்:** அன்போடு உன்னைத் தொழாதவன் என்று அடியேனுக்கு அருள் நீ நல்கா விடின் உன்னைக் கல்லால் எறிந்த சாக்கிய நாயனாருக்கு நீ வீடுபேறு அருளிய செய்தி கட்டுக்கதை என்று சிலர் பேச வாய்ப்பு ஏற்படும்.

**அ.பொ:** நட்டு - நேசித்து. **(கூO)**

397. கையாற்பெறு பயனின்மலர்க் கழலர்ச்சனை யதுசெய்தலே
மெய்யாற்பெறு பயன்மெய்யனீ மேவாலய மதுசூழ்தலே
பொய்யானதில் வாயாற்பயன் போற்றித்துதி செயலிங்கிவை
ஐயாவெளி யேற்கெய்துமோ அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** கைகளின் பயன் உன் திருவடிகளை அர்ச்சிப்பது. உடம்பின் பயன் உன் திருக்கோயிலை வலம் வருவது. வாயின் பயன் உன் புகழ் பாடுவது. இவை யாவும் எளியேனுக்குக் கிட்டுமோ? **(கூக)**

398. மலமூன்றுடை யாருக்கருள் வடிவங்கொடு வந்தாங்கவர்
சலமூன்றிரு வினையொப்பிலே தருபோதுவா தனைநீங்கியே
நலமூன்றுற வருள்செய்யுநீ நாயேற்கருள் செய்வாய்கொலோ
அலமூன்றுதோ ளவனேடிய அருணாசலா! அருணாசலா!

**பொழிப்:** மும்மலமுடைய சகலருக்கு மனித வடிவிலே குருநாதனாக எழுந்தருளி அவர்களுடைய மும்மலங்களையும் போக்கி நன்மை நிலைபெறச் செய்யும் நீ நாயேனுக்கு அருளுவாயோ?

**அ.பொ:** மலம் - ஆணவம், கன்மம், மாயை, அலம் ஊன்று தோளவன் - கலப்பைப் படை உடைய பலராமன், நேடிய - தேடிய. **(கூஉ)**

399. **பாசாடவிக் குள்ளைம்புலப் பகைவேடருக் குறவாதலாற்
காசாசையான் கொண்டற்பர்தங் கடைவாயிறோ றுங்காத்திது,
பூசாபல னோவென்றுளே புலம்பித்திரிந் துழல்கின்றிலேன்,
ஆசாரமா றாதார்க்கருள் அருணாசலா! அருணாசலா!.**

**பொழிப்:** பாசமாகிய காட்டில் ஐம்புலன்களாகிய வேடர்களுக்கு உறவாகி யான் பொருளிடத்து ஆசை கொண்டு, அவர்கள் வாசல் தோறும் சென்று காத்துக் கிடத்தல் நான் செய்த பூசைப்பயன் போலும், என்று மனத்தில் புலம்பித் தவிக்கிறேன்.

**அ.பொ:** அடவி - காடு, பூசாபாலன் - நல்வினைப் பயன். **(கூஙு)**

400. **புலையானதோர் தொழில்செய்யினும் பொய்யானதோர், மொழிபேசினுங்,
கொலையாகிய செயல்செய்யினுங் கொடிதாங்கள வதுசெய்யினு,
மலையாதுநின் னருள்சேர்வரேல் வறியேனவ ரடிசேர்வனால்,
அலையாறுசூ டியவண்ணலே அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** கீழ்த்தொழில் செய்யினும், பொய் பேசினும், கொலை செய்யினும், கொடிய களவு செய்யினும், உன் திருவடிகளைத் தவறாது சேர்பவருடைய திருவடிகளை அடியேன் சேர்ந்து வழிபடுவேன். **(கூச)**

401. **படைப்பானுநீ யுலகியாவையும் பரிவாயளித் திடுவானுநீ,
துடைப்பானுநீ பொய்பொய்யெனத் தோற்றாவகை மறைப்பானுநீ,
கடைப்பாலனுக் கிரக்கஞ்செயுங் கண்ணாளனு நீயாயன்,
அடைப்பாற்றுயில் வோனாயதென் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலும் நீயே செய்வதானால், ஆலிலையில் துயிலும் திருமாலுக்குத் தொழில் யாது?

**அ.பொ:** கடை - கீழ்ப்பட்ட, அடை - ஆலின் இலை. **(கூரு)**

402. **பாடார்கவி பரியாருனைப் பனிமாமலர் கொடுபூசியார்
தேடாரடி யார்தம்மையுந் தினமுண்டதே யுண்டையையோ
மாடாமெனத் திரிவாரவர் மனம்வெந்துகும் பியில்வீழ்வரே
ஆடாதபே யுடனாடிய அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** உன்னைக் கவி பாடாமல், உன்னை விரும்பாமல், உன்னை மலர் கொண்டு வழிபடாமல், அடியாரைத் தேடி வழிபடாமல் நாடோறும் உண்டதையே உண்டு மாடுபோலத் திரியும் கீழோர் மனம் நொந்து நரகில் வீழ்வரே என்று வருந்துகிறேன். **(சூ௲)**

403. **போகாதுவா யுவையுள்ளுளே பூரித்துநே ரிற்போக்கியே
சாகாமனத் தவராகிநின் சார்புற்றிட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள் செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமால் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** வாயுவை அடக்கி, யோகம் செய்து சாதலை அடையாது உன்னை அடைய எண்ணுபவர் பல ஏணிகளைச் சேர்த்துக் கட்டி அவற்றின்மேல் ஏறி ஆகாசத்தை எட்ட முயல்பவரை ஒப்பார்கள். **(சூஎ)**

404. **மாலாரொரு கற்பந்தனின் மழைமேகமாய் வரவாங்கதன்,
மேலாயினை பின்னும்மொரு விடையாய்வர வேயூர்ந்தனை,
பாலார்மொழி மாதாய்வரப் பரிவாஇடப் பாலீந்தனை,
ஆலாலமுண் ணும்பித்தனீ அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** திருமால் ஒரு கற்பத்தில் மழை மேகமாய் வர அதனைச் செலுத்தினாய், பின் காளையாய் வர அதனை ஊர்ந்தாய். பின்னும் தேவியாய் வர அவளுக்கு இடப்பகுதியை வழங்கியுள்ளாய். **(சூஅ)**

405. **பாய்வானதி நீர்ப்பாய்ச்சினும் படரெட்டியின் கனிகைப்பறா,
நாய்வானிமி ராதாற்பல நாண்கொண்டிறுக் கிக்கட்டினு,
மாய்வாகிவன் மனநேருறா வகையாங்கவை போலாதலோர்ந்,
தாய்வார்க்கரு ளுனையண்டினேன் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** ஆகாய கங்கையின் நீரைப் பாய்ச்சினும் எட்டிக் கனியின் கசப்பு நீங்காது. பல கயிறு கொண்டு நிமிர்த்திக் கட்டினாலும் நாய்வால் நிமிராது. எவ்வளவு முயன்றும் என்மனம் நேர்வழியில் செல்லாது. இதை உணர்ந்து மனம் நல்வழிப்பட உன்அருளையே அண்டியுள்ளேன். **(சூகூ)**

406. **கொம்பாரிடை வண்டார்விழிக் கொங்கார்தனச் சிங்காரிக,
டம்பான்மனஞ் சென்றேயழி சண்டாளனை யென்றாள்வையோ,
செம்பாகினேர் மொழிபங்கனே சிந்தித்தவர்க் குயர்வீடருள்,
அம்பார்சடை நம்பாவொளிர் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மகளிர் வனப்பில் ஈடுபட்டு அழியும் சண்டாளனாகிய என்னை, உன்னைத் தியானிப்பவருக்கு உயர்ந்த வீடுபேற்றினை நல்கும் நீ என்றைக்கு ஆட்கொள்ளப் போகிறாய்? **(௧௦0)**

407. **படியாளுமன் னவர்வாழவும் பரிவோடுமன் னுயிர்வாழவும்,**
**முடியாமறை தான்வாழவும் முதலானசை வம்வாழவுங்,**
**கடியானெறித் தமிழ்வாழவுங் கவிவாணர்யா வரும்வாழவும்**
**அடியார்கள்வா ழவுநன்கருள் அருணாசலா! அருணாசலா!**

**பொழிப்:** மன்னவர், மன்னுயிர், வேதங்கள், சைவசமயம், தமிழ், கவிவாணர், அடியார்கள் ஆகிய யாவையும் யாவரும் வாழ அருணாசலா நீ அருளல் வேண்டும். **(௧0௧)**

**அருணாசல சதகம் முற்றிற்று.**

உ

சிவமயம்

திருமூலர் மரபிலெழுந்தருளிய

கருணையானந்த சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# குருநாத சதகம்

# குருநாத சதகம்

குருநாதசதகம் திருமூலர் மரபில் எழுந்தருளிய கருணையானந்த சுவாமிகளால் இயற்றப்பட்டது. இந்நூல் *1913*-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த தவயோகியார் என்பது தவிர வேறு எதுவும் அறியக் கூடவில்லை. நூலினை நோக்க இவ்வாசிரியர் சைவ ஆகம அடிப்படையில் எழுந்த திருமூலர் திருமந்திரம், பதிபசு பாடல்களின் இயல்பினை விரித்துரைக்கும் சைவ சித்தாந்த சாத்திரம் இவற்றில் தோய்ந்து வாழ்ந்தவர் என்பதும் சத சத்தாகிய ஆன்மா உலகியல் பற்றிய பொறி இன்பங்களில் திளைத்துத் தீவினையைப் பெருக்கிப் பிறவிக்கடலில் இடையறாது அழுந்தித் தவிப்பது கண்டு வருந்தி ஆன்மா உய்வு பெற்று உலகப் பற்றறுத்து இறைவன் திருவடிகளில் இடையறாத பேரின்பம் நுகரப் பிறவிப் பற்றறுத்தலுக்கு முயல வேண்டும் என்பதனை வற்புறுத்தி ஆன்மா ஈடுபடும் தீய செயல்கள், உடம்பின் தூயதல்லாத நிலை இவற்றை எடுத்துக்கூறி மன்பதை உய்வதற்குத் தாம் செய்யக் கூடிய சிறிய தொண்டாக இந்நூலை அருளியுள்ளார் என்பதும் புலப்படுகின்றன. காப்புச் செய்யுளாக இரண்டு வெண்பாக்களும், சதகச் செய்யுளாக *102* கலிவிருத்தங்களும், முடிபுச் செய்யுளாக ஒரு வெண்பாவும் அமைந்துள்ளன.

# குருநாத சதகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

வேதன் றிருமாலும் விண்ணோருங் காண்கில்குரு
நாதன் சதகம் நவிலவே - பாதநிழற்
றந்தானைச் சுந்தரப்பொற் றாளானைநம்போல
வந்தானை நெஞ்சேநீ வாழ்த்து.

**பொழிப்புரை:** குருநாதன் சிவபெருமானே, அவன் பிரமன் திருமால் ஏனைய தேவர்கள் ஆகியோர் காட்சிக்கு அப்பாற்பட்டவன். அவன் நமக்குத் தன் திருவடிகளை அருளியவன். அவன் அடியவர்களாகிய நம்மைக் காக்க நம் போல மனித உருவில் குருநாதனாக வந்து அருளியவன். அவன் மீது சதகம் பாட நெஞ்சே நீ வாழ்த்து. **(க)**

குருவே துணையாகக் கூறினா னாளுங்
குருவே துணையாகக் கூடுங் - குருவே
துணையா யிருந்தறிவிற் றுன்னியெங்கும் நிற்பா
ரிணையார் நமக்குநெஞ்சே யீங்கு.

**பொழிப்புரை:** குருவைத் துணைக் கொண்டால் அவன் நமக்குத் துணையாகி நம் அறிவில் பொருந்தி நம்மை இயக்குவான் ஆதலின் நாம் இணையற்றுப் பேரின்பம் எய்தலாம். **(உ)**

## நூல்

### கலிவிருத்தம்

408. உலகஞ்சுகஞ் சொருபஞ்சிவ முணர்கின்றிலே னுனையண்டினேன்
இலகுஞ்சுட ருதயங்களி லிதயம்பதிந் திலையென்கொலோ
கலகஞ்சிறந் தொலிதங்கிடுங் கலைகண்டருங் கதிநம்பினேன்
குலகுஞ்சர னருள்தாதையாங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** விநாயகன் தந்தையாம் பெருமானே! குருநாதனே! உலகமே சிவசொரூபம் என்று இயற்கையில் காணப்படும் சந்திர சூரிய உதயங்களில்

உள்ளம் பதியாது பலகலைகளைக் கற்று நற்கதி பெறலாம் என்று கருதிய நான் அவ்வெண்ணத்தை விடுத்து உன்னையே பற்றியுள்ளேன். **(க)**

409. **பூதாதிநா தமுநின்னதாம் பூராயமாம் விழிபூத்தநின்**
**பாதாதிகே சமுநிற்குணம் பகல்கோடியோ மதிகோடியோ**
**ஏதாதிகண் டறியத்தகே னெல்லாமுநின் னருளையனே**
**கோதாதிதீ தறவான்கடற் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பூதங்களும் அவற்றின் தன்மாத்திரைகளும் உனக்கு அடங்கினவே, உன் வடிவமும் பண்புகளும் பலப்பல. யான் இவற்றுள் யாதனை அறிவேன்? எல்லாம் உன் அருளாலே என் கோது நீக்கி என்னை ஆட்கொள்வாய்.

**அ.பொ:** பூராயம் - விசித்திரம், கோது - குற்றம். **(உ)**

410. **திருவாகினாய் திறமாகினாய் திகழ்பானுமா மதியாகினாய்**
**உருவாகினா யருவாகினா யூனோடுயி ருறவாகினாய்**
**மருவாகினாய் மலராகினாய் மனமாதியெண் வடிவாகினாய்**
**குருவாகினா யெனையாண்டவா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** திரு, திறம், சூரியன், சந்திரன், உரு அரு, உடல் உயிர், மலர் அதன் மணம், மனம் முதலிய எண் வடிவங்கள் யாவும் நீயே.

**அ.பொ:** அரு - உருவமற்றது. **(ங)**

411. **நின்றாப்பெருங் கண்ணானவன் நீயாகின் நான்ஆர்சொலாய்**
**கொன்றாப்பெரும் பாவங்களார் கொண்டாடினுங் குணபானுநீ**
**சென்றாப்பெருந் தீயிற்சிறு திவலைச்சலஞ் செப்பத்தகுங்**
**குன்றாப்பெருஞ் செல்வத்துரைக் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** என்றும் நிலைபேறுடையவனாக நின்றவன் நீ; நான் சக்தியற்றவன்; நீயே எனக்குப் பற்றுக்கோடு; பெருந்தீயில் சிறு நீர்த்திவலை பட்டால் உருமாறி ஆவியாவது போல உன் பண்புகள் முன் என் பெரும் பாவங்கள் தொலைய அருள்வாயாக. **(ச)**

412. **பிணைக்கேடனை மலமாசனைப் பிணிமூப்பெனும் பிறவிக்குளே**
**கணக்கேடனை மூன்றற்றிடாக் கசுமாலனைக் கனபாவியைச்**
**சுணக்கேடனை யிச்சைக்குளே சுழல்மூடனைக் கெடுபூடனைக்**
**குணக்கேடனை யாட்கொள்ளுவாய் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பிணமாகும் கேடன், மலமாசுடையவன், பிணிமூப்பு, சாவு அற்றிடாதவன், குற்றமுடையவன், பெரும்பாவி, பற்றில் மூழ்கிக் கெடுபவன். குணக்கேடன் ஆகிய என்னை அடிமையாகக் கொள்.

**அ.பொ:** கசுமாலன் - குற்றமுள்ளவன், பூடன் - புல்லன். **(ரு)**

413. *திருவாழ்கவெண் டிசைவாழ்கமால் திசைமாமுகன் முதல்வாழ்கவைந்,
தருவாழ்கவிந் திரன்வாழ்கநற் றவமாமுனி வரர்வாழ்கவிண்,
ணுருவாழ்கமற் றவைவாழ்கவெண் ணுருவாழ்கவிச் சதகஞ்சொலக்,
குருவாழ்கநல் லடிவாழ்கநன் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** திரு, எண், திசை, திருமால், பிரமன், ஐந்தரு, இந்திரன், தேவர், முனிவர், மற்றவர், இச்சதகம் பாடும் நான், என் குருவின் திருவடிகள் யாவும் வாழ்க.

பார்க்க: பாடல்: *509.* (சா)

414. மாதாபிதா குருதெய்வநீ மற்றாரெனக் குற்றாருநீ
நாதாபிறப் பறநின்றநீ நானாமிவை தானாகுநீ
வேதாபிதா விண்ணோருநீ வெண்மைப்படி கமுமொத்தநீ
கோதாபுறர்க் குன்பாலுநீ குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மாதா, பிதா, குரு, தெய்வம், மற்ற உற்றார், ஏனைய தேவர் யாவரும், யானும் பிறப்பற்ற வெண்பளிங்கு போன்று தூய நீயே ஆனாய்.

**அ.பொ:** புறர் - அப்பால் பட்டவர். (எ)

415. மலமாயைகன் மமுமாயதின் மருவத்தகுங் குணபேதமு
நிலமாயைபொன் னுடன்மாதரை நினைவாருனை நினையாவணஞ்
சிலமாயையால் வரவிட்டநின் சிவமாயையை யறிவார்களார்
குலமாயையைத் தலை நூறிடுங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** ஆணவம், கன்மம், மாயை, ஆகிய முக்குணங்களில் மூழ்கி மண், பெண், பொன் இவற்றில் ஆசை வைத்து, உன்னை நினையாத வண்ணம் செய்திடும் மாயையைப் போக்கி எங்களை ஆட்கொள்வாயாக.

**அ.பொ:** நூறிடும் - அழித்திடும். (அ)

416. ஆனாலுமென் னறியாமையா லறவாடினே னறியாய்கொலோ,
போனாலுமின் னுடலைச்சதம் போலாய்நினைந் தொழியாதெனை
யூனாலுமென் னுயிராலுமுன் னுணர்வாலுனை யுணரத்தகாக்
கோனாலுமென் மறையோதுமே குருநாதனே! குருநாதனே!

---

* இச்சதகத்தின் *509* -ஆம் பாடல் இப்பாடலை ஒத்து அமைந்துள்ளது. இப்பாடலில் மூன்றாவதடியில் உள்ள 'வெண்ணுரு' என்ற சொல் மட்டுமே *509* -ஆம் பாடலில் 'வெண்ணிசை' எனக் காணப்படுகிறது.

**பொழிப்:** அழியக்கூடிய இவ்வுடலை நிலையானது என்று நம்பாது என் உயிராலும் உணர்வாலும் உன்னை உணர முடியாமல் வாடும் என்னை ஆட்கொள்வாயாக. **(௯)**

417. **மிடியேனைவல் வினையாளனை மிகுமாயையி லழிபேயனை**
**விடியேனைவம் படும்வாயனை வீழுஞ்சடப் பவமாயனைத்**
**துடியேனைவந் தடிசாயனைத் துயரம்படுங் கடலோலனைக்**
**கொடியேனைவங் கணமாயனை குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** வறியன், வல்வினையன், மாயையில் அழி பேயன், வம்பு பேசும் வாயன், உடல் அழியப் பல பிறப்பெடுப்பவன், துயரக் கடலில் மூழ்கும் கொடியோன் ஆகிய என்னை ஏற்றுக் கொள்வாய்.

**அ.பொ:** வங்கணம் - நட்பு. **(௧0)**

418. **ஆணாமனின் னறிவாய்மன மம்போருகத் திலைநீர்நிகர்**
**தோணாமனின் றயர்வெய்திடத் தோலின்றொழி லானாடொறுங்**
**காணாமனின் னருள்வாரியைக் கருதித்திரிந் துறவாடுநாள்**
**கோணாமனின் னருள்தந்தவா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** நீ என்னுள் இருந்தும் நான் உன்னோடு ஒட்டாதபடி தாமரை இலைத் தண்ணீர் போலப் பிரிந்து உடம்பையே பேணும் தொழிலில் நான் ஈடுபடாமல் உன் அருள் வெள்ளத்தில் திளைப்பதற்கு அருள்வாயாக.

**அ.பொ:** அம்போருகம் - தாமரை. **(௧௧)**

419. **நானானெனச் சொலிவீணிலே நடமாடுபாழ்ம் பிணமானநான்,**
**வானானெனப் பொருள்சொல்லியோர் வார்த்தைக்குளே வடிவொப்பிலா,**
**தேனானெனக் கருணாரசந் தேங்கித்தெளிந் திடுதேறலாங்,**
**கோனானெனப் பணிகொண்டவா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** நான், நான் என்ற அகம் பாவத்தில் தடுமாறிய என்னைக் குருநாதனாகிய நீ நானே உன் தலைவன் என்று அறிவித்து உன் கருணைச் சுவையை நுகர்வித்தாய். **(௧௨)**

420. **பொல்லாச்சனி வேட்கைக்குளே பொங்குஞ்சிறு வாழ்க்கைக்குளே,**
**நில்லாப்பனி சோகைக்குளே நிமிடங்கன வாக்கைக்குளே,**
**வில்லாத்தனி வானிற்குளே விளைவாய்வரு மையிற்குளே,**
**கொல்லாயினி மேலாகிலுங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** கொடிய ஆசையில் மூழ்கிய சிறு வாழ்க்கைக்குள்ளே நான் தடுமாறாதபடி என் பிறவிப்பிணியைப் போக்கி என்னை ஆட்கொள்வாயாக.
**(கங)**

421. **சொல்லற்கரி தொருமாயைநின் சொருபத்தினி லுளவாகினால்**
**வெல்லத்தகும் பொருளுண்டரோ விளையாடினாய் வீடேறினாற்,**
**புல்லற்கரி தாகாதெனப் புகலுஞ்சிலர் கதையாதல்போற்**
**கொல்லற்குளூ சிகள்விற்குமோ குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** விளக்க முடியாதது ஒரு மாயை. உன் தனித் தன்மையிலிருந்தும் வெளிப்பட்டால் அது எங்களால் வெல்லத் தகுவதோ? எதனையும் செய்யலாம் என்பர் சிலர். அவர்கள் கொல்லன் தெருவில் ஊசி விற்பவருக்கு நிகர். **(கச)**

422. **வம்பிட்டவாய்ப் பறையோதுவார் வலதாகினே னெனமீறவே**
**கம்பிட்டநாய் கடிகோலல்போற் கடுகுஞ்சிலர் கரையேறிலார்**
**அம்பிட்டநின் னடிசாய்ந்தரோ வரனேயெனப் பலகாலமுங்**
**கும்பிட்டவர் கரையேறுவார் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** வீண்பேச்சுப் பேசுவோருடன் சேர்ந்து நான் வீணாகியபோதும், உன்னை அடைந்து கரையேறுவேன். அடிப்பட்ட நாய் பாதுகாவலான இடத்தைத் தேடி அடைவதுபோலச் சிலர் கரையேறினர். உன்னைப் பலகாலமும் கும்பிட்டவரே பிறவிக்கடலிலிருந்து கரையேறுவார்கள். **(கரு)**

423. **துஞ்சுங்கணப் போதிங்ஙனந் துயிலுந்தனித் துடலான திங்**
**கஞ்சும்பிரித் தறிவானிறைந் தயர்காலம்வின் டறியாமையா**
**னெஞ்சுந்தளர்ந் தலைமோதுமுன் னீநானிறந் தறிவாகநான்**
**கொஞ்சுந்திருத் தாளீகுவாய் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** இவ்வுடல் கணப்போதில் அழியும் என அஞ்சுகிறேன். நான் இறந்தவுடன் என் நெஞ்சு தளர்ந்து அலை மோதாதபடி உன் திருவடியில் அடைக்கலம் தந்து அருள்வாயாக. **(கசா)**

424. **மதிக்காதறஞ் சுடுமூடரை மனக்காமிபின் னுடற்கேட்ரைத்**
**துதிக்காவரந் தருமையனே துணைக்காதர முனையல்லதார்**
**சதிக்காமனைப் படலஞ்செயச் சகிக்காரதிக் கினிநாளுமே**
**கொதிக்காதவன் றனையீந்தவா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன்னை அல்லால் எனக்குத் துணையில்லை. நீ மன்மதனை அழித்தனை. அவன் மனைவி ரதிக்கு அவன் உருவொடு காட்சி வழங்க அருள்

செய்தனை. அத்தகைய நீ அடியேன் அறம் சுடும் மூடரையும், பேராசைக்காரரையும், உடம்பையே வளர்க்கும் கேடு சூழ்ந்தவரையும் போற்றிப் புகழாதிருக்குமாறு அருள் செய்வாயாக. **(கஎ)**

425. **தடுக்கின்றதா ரோர்க்கீவதைத் தானங்கதைப் பறிக்கின்றதார்**
**எடுக்கின்றதா ரெறிகின்றதா ரிவனானவ னென்கின்றதார்**
**படுக்கின்றதா ரெழுகின்றதார் பார்த்தாலுனை யலதொன்றிலை**
**கொடுக்கின்றதார் கொடாரெங்ஙனங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பிறர்க்கு ஈவதைத் தடுக்கின்றவர், அதனைப் பறிக்கின்றவர், எடுக்கின்றவர், எடுத்ததனை எறிகின்றவர், இவன், நான், அவன் என்கின்றவர், படுக்கின்றவர், எழுகின்றவர், கொடுக்கின்றவர், கொடாதவர் என்பவரை ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் எல்லாருள்ளும் அந்தர்யாமியாய் இருக்கும் நீயே அல்லையோ? **(கஅ)**

426. **முனிமாதவர் பலகோடிபேர் முடிராசர்கள் பலகோடிபேர்**
**நனிவானவர் பலகோடிபேர் நரர்காந்தருத் திரர்கோடிபேர்**
**கனிமாலயன் பலகோடிபேர் கமலாசனத் திருபாலினுங்**
**குனிவார்களுன் கழலியாவருங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பல கோடி முனிவர், அரசர், தேவர், நரர், கந்தருவர், உருத்திரர் மால், அயன் என்பவர்கள் உன் திருடிவகளை வணங்குபவர்கள்.

**அ.பொ:** இருபால் - ஆண்பால் பிரம்மா, பெண்பால் - சரசுவதி, இலக்குமி. தாமரையில் இரு வகையான வெண்டாமரை செந்தாமரையில் இருக்கக் கூடிய சரசுவதி, இலக்குமி. **(கக)**

427. **திருமாமணித் தரளங்களிற் றிகழ்பீடிகை யறுகானடு**
**வொருமாமணிச் சுடராய்விரிந் தொருகோடிகோ டிகளொப்பிலா,**
**தருமாமணிக் கதிர்குண்டல மசையாதிருந் தகிலேசனாங்,**
**குருமாமணிக் குலதெய்வமே குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** முத்துக்களாலாகிய ஆசனத்தில் ஆறுகால்களின் நடுவிடத்தில் கோடி சூரியப் பிரகாசனாய், மணிக்குண்டலங்கள் கூட அசையாதபடி உன் நினைப்பினாலேயே எல்லா உலகங்களையும் காக்கும் குலதெய்வம் நீயே.

**அ.பொ:** பீடிகை - ஆசனம். **(உ0)**

428. **சிறுகும்பணி பசுவிந்திரன் சிலதும்பர்நா யகனென்கொலோ**
**மறுகும்பணிக் கொருகாமதேன் மலரைந்தருச் சனையன்றியி**

லிறுகும்பணிக் கெனனீநினை யெண்ணறக்கருந் தருகாமதேன்
குறுகும்பணிக் கின்றேவலாங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** அடியேனுக்குக் காமதேனு முதலிய செல்வங்களை உடைய இந்திரபதவி முதலியன வழங்காமல், உன் திருவடிக்குச் சிறு குற்றேவல் செய்யும் பணியில் அடியேனை ஈடுபடுத்துவாயாக. **(உக)**

429. தூலங்களைந் துணையண்டினோர் தொடரும்பவந் துலைகண்டபேர்,
சீலங்களைந் தலைவாயினிற் சிதறுந்துரும் பினர்சேர்கிலார்,
மூலங்களைந் தயன்மாலகளும் முடியுந்தர மொவ்வாமையாற்,
கோலங்களைந் தாருய்குவார் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உன்னை அண்டினவர் பிறவிப்பிணியைப் போக்குவர், உன்னை வழிபடாதவர் அலையில் தடுமாறும் சிறு துரும்புபோல் பிறவிக்கடலில் துன்புறுவர். பிரமன் திருமால் பதவிகளும் உன் அடியவர் பெறும் இன்பத்துக்கு நிகராகா. **(உஉ)**

430. நீடிக்குனிந் துடலாடினு நிலநீள்வனந் தனிலோடினும்
பாடிக்குனிந் துறவாடினும் பலகா லுனைச் செல்காலமாய்
நாடிக்குனிந் திடுமூடர்க ணம்பார்களுன் செம்பாதமுங்
கூடிக்குனிந் துய்வார்களோ குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உன் அருளை வேண்டாமல் உன்னை அடையப் பல தீர்த்தங்களில் நீராடினாலும், பல காடுகளில் அலைந்தாலும், உன்னைப் பாடிப் பாடி உடல் வாடினாலும் பயன் பெறாதவர்கள் உன் அருளை நினைத்து உன் பாதங்களில் வணங்கினால் உய்வு பெறலாம். **(உங)**

431. மெய்யாதியிற் றொடருந்தொழின் மெய்யென்பவர்க்
குய்வென்கொலோ,
பொய்யாதியிற் குள்ளஞ்சினேன் பொய்யன்றனைப்
பொருளென்றெனை,
வையாதியிற் றொழிலும்படி வானாடரு மற்றோர்களுங்,
குய்யாதியிற் காலந்தளுங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உடம்பினால் செய்யும் செயல்களே மெய் என்பவர் உய்வு பெறார். யான் பொய் முதலியவற்றிற்கு அஞ்சி வந்த அடியேன் என்னைக் காத்தருள். **(உச)**

432. **பையன்றனைப் பவமுங்கிடும் படிறன்றனைப் பலனுய்ந்திடா
தையன்றனைத் தொடரும்படிக் கடர்வாதனைக் கிடலாகுமோ
வெய்யன்றனை யினியாகிலும் வெளிவீடுறச் செய்மாதர்கார்
குய்யந்தனை நினையாமலாள் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** நான் இளையவன். பிறவிப்பிணியில் மூழ்குபவன். மாதர் குய்யத்தையே நினைத்துச் செயற்பட்டுக் காலத்தைப் பாழாக்கினவன். அத்தகைய கொடியவனாகிய என்னை இனியாவது ஆட்கொள்வாய்.

**அ.பொ:** குய்யம் - மர்மஸ்தானம். **(உரு)**

433. **சாடிக்குமோர் தடிகாரனைச் சவமுந்திவந் தெதிராடுமோ
ஆடிக்குமோர் பாதந்தனி லத்தொத்தலாற் சுதிகூடுமோ
சோடிக்குமோர் சகடங்களுஞ் சுள்ளாணியின் றடையென்பரால்
கூடிக்குமோர் குறிகாணுநீ குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** தடியை வைத்திருக்கும் சுடலைக் காலவன் முன் பிணம் எழுந்து ஆடுமோ? ஆடும்போது பாதங்களை முறைப்படி வைத்தாலல்லது சுதிபொருந்துமோ? கடையாணி இல்லாமல் வண்டிச் சக்கரம் தீதின்றி உருளுமோ? உன் அருள் இல்லையேல் அடியேன் உய்தல் கூடுமோ? **(உசா)**

434. **சேடிக்குநின் சொருபத்தினிற் செல்லாவிடி லென்னாசுகந்
தேடிக்குநின் னருளல்லதேற் றேவாதிதே வருமெங்ஙன
மேடிக்குநின் னருள்வாதவூ ரெந்தைக்கும்வந் தனமாகினோர்
கோடிக்குநின் னருடாரகங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன் தனித்தன்மையில் ஈடுபடாவிட்டால் எங்களுக்குச் சுகம் எவ்வாறு கிட்டும்? உன் அருள் இல்லையேல் தேவாதி தேவரும் உய்யார். மாணிக்கவாசகருக்குக் கிட்டியதுபோல் உன் அருள் எங்களுக்குக் கிட்ட வேண்டும்.

**அ.பொ:** சேடிக்கும் - அலங்கரிக்கும், தாரகம் - ஆதாரம். **(உஎ)**

435. **நிமிருந்திசை பகிரண்டமு நிமிர்கின்றநின் சுடர்தங்கின
மமரும்படிக் கிருபைகூரையா வையாமெய்யா வருள்வெள்ளமே
ஞிமிறுந்திரண் டொருகோடிகள் ஞிம்மென்றுபா டொலிநேரிடக்,
குமுறும்பிர ணவரூபனே குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** எல்லா உலகங்களும் உன் ஞான ஒளி தம்மிடம் தங்கியிருப்பதால் நிலையாக உள்ளன. உன் அருள் வெள்ளத்தால் ஒலிக்கப்படும் பிரணவ வடிவினை நீ. **(உஅ)**

436. நிலனன்றனல் வெளியன்றறி நினைவன்றசை விண்ணன்றடர்,
மலனன்றலர் மணனன்றயன் மதனன்றக மயனன்றறச்,
சிலனன்றருஞ் செயலன்றஃகுஞ் சிவமென்றுறுஞ் சிறிதென்றுமோர்,
குலனன்றரு மறைபேசுமென் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** வேதம் உன்னை இன்னான் என்று உறுதியாகக் கூறாமல் பரப்பிரும்மம் நிலன் அன்று, விசும்பு அன்று, நினைவு அன்று, மலர் அன்று, மணம் அன்று, என்றாற் போல அன்மைச் சொற்களால் குறிப்பிட்டே துதிக்கின்றது. **(உகூ)**

437. ஆவென்றயர்ந் துயிர்போகினா லலறிச்சில ரருகாகிநின்,
றோவென்றடித் தழுவாரையொத் தோடித்திரிந் திவன்பங்கினிற்,
சாவென்றதின் னாளில்லையோ சதியாயெமன் கொடுபோகினாற்,
கூவென்றழும் படிசெய்திடாக் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உயிர் போனால் சிலர் அருகிருந்து 'ஓ' என்று கதறி அடித்து அழுவார்கள். எமன் உயிரைக் கொண்டு போகும்போது 'கூ' என்று அழும்படிச் செய்திடாது எனக்குத் திடமான மனத்தை வழங்குவாயாக. **(௩0)**

438. சரவற்குல மசரங்களுஞ் சகலாகம மிதிகாசமு
நாவற்குல முதலாதியாய் நானாவிதப் பலசீவரும்
பரவற்குல மலதில்லையார் பாத்தானிறை பரிபூரணக்
குரவற்குலக் குருராயனே குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** இயங்கியற் பொருள், நிலையியற் பொருள், பலவகைப்பட்ட ஆன்மாக்கள், ஆகமம், இதிகாசம் யாவும் பரிபூரணமான குருமார்களுக்குத் தலைவனான உன்னையே வழிபடுகின்றன.

**அ.பொ:** சரம் - அசையும் பொருள். **(௩க)**

439. மலைப்பாதகங் களின்மூழ்கியான் மனமாயையா லினமாய்வனோ,
புலைப்பாதகங் களின்மூழ்கினாற் புவியாள்கட னுனதல்லவெச்,
சிலைப்பாதகங் களின்வீழ்கினுஞ் சிவசற்குரு வெனினீங்குமே,
கொலைப்பாதகங் களைமாய்த்திடாக் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** தீச்செயல்களில் மூழ்கிய யான் மாயையால் இன்று அழிய வேண்டுமா? பாதகங்களைப் போக்கி என்னை ஆள்வாயாக? **(௩௨)**

440. நிலமாதரும் விண்மாதரும் நிறையண்டுமா முனிமாதரும்
பலமாதரும் பணிமாறியே பலகால்வல மிடமாயினுஞ்

சிலமாதரும் பணிகொள்ளினுஞ் சிவமாயிருந் தசையாதநின்
குலமாதரும் பணிபாதனே குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நிலமாதர், விண்மாதர், முனிமாதர், வேறுபல மாதர் உன்னை வழிபடினும் அசையாது யோகத்திலிருந்து நின் குலமாதராகிய பார்வதியும் கங்கையும் பணியும் திருவடிகளை உடையை நீ. (௩௩)

441. என்போடுநீ ருதிரந்தசை யெழுபத்திரா யிரமார் கசை,
நம்போடுசேர்த் துறநீள்பசை நவவாயில்தோன் மயிர்மேய்ந்தசை,
வம்போடுவா னுலவித்திசை வளியூடுபோய் வருமாமிசை,
கும்போடுலைந் தலையாதுசெய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** இவ்வுடம்பு, எலும்பு, நீர், உதிரம், தசை, நரம்பு, ஒன்பது வாசல், தோல், மயிர் இவற்றால் ஆக்கப்பட்டுக் காற்று உள்ளே போய் மீண்டு வருவதால் உள்ளது. இவ்வுடலில் விருப்பங்கொண்டு நான் வருந்திச் செயற்படாது பாதுகாப்பாயாக.

**அ.பொ:** கசை - நரம்பு. (௩௪)

442. செம்பாகுவன் களிம்பல்லவே திருவெண்கலம் பலதல்லவே
யிம்பாகுமன் றிடைநாடக மெம்போலுருக் கொண்டிங்ஙனந்
தெம்பாகுநின் னடிதொட்டிந்நாட் டேய்ந்தற்றிடாப்
புளியென்னுமோர்,
கொம்பாகும்நின் னருளோங்குநாள் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நான் செம்பாக இருக்க வேண்டுமே ஒழிய அதன் களிம்பாக இருத்தல் கூடாது. நான் புளியங்கொம்பு போன்ற உன்னைப் பற்றியதால் உன் அருள் எனக்குக் கிட்டும். (௩௫)

443. இலைவேல்விழி மடமாதரா ரிளமாமுலை யவைமாய்கையிற்,
கலைவேன்மன நிலையாகிலென் கதிகாணிலேன் கரையேறிலே,
னுலைவேனையாள் வதுமெந்தநா ளுடன்மித்தையே
லெவைசொந்தநாள்,
குலைவேன்றனக் கருள்கூரையா குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மகளிர் முலைகளில் ஈடுபட்டு அலையும் என் மனம் நிலையாகி நிற்க எனக்கு அருள்வாயாக. (௩௬)

444. **அண்டத்தில்வா ழுயிரியாதினு மசைவித்தசித் தலர்பூவினுங்,**
**கண்டத்தில்வா ழொலியாதினுங் கதிராதியா மொளியாதினும்,**
**பிண்டத்தில்வா ழியல்பென்னநீ பிரியாவிதம் பலகோடியாய்**
**கொண்டத்திலங் குரையாடுவாய் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** அண்டத்தில் உள்ள உயிர்கள், கழுத்திலிருந்து வெளிப்படும் பல ஒலிகள், சூரியன் முதலிய பல ஒளிகள் என்ற பலவற்றினும் நீங்காது தங்கியிருக்கும் நீ என்னை ஆட்கொள். **(௯௭)**

445. **நாடானபா ருளநீளமு நரரண்டமே முதலாளினு**
**மேடானவெண் கலைபாஷைசித் தெல்லாமுவந் தெமதூதர்கை**
**யாடானநல் லுயிர்விட்டுமே லாகந்தளர்ந் திடுபோதிலே**
**கோடானகோ டிகள்கற்றுமென் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** எவ்வளவு மொழிகள் கற்றாலும் எவ்வளவு கலைகள் உணர்ந்தாலும் எமதூதர் கையில் உயிர் தடுமாறும்போது அவற்றால் பயன் இல்லை. **(௯௮)**

446. **ஆதாரமார் பொருளாருனை யல்லாதெவ ரெல்லாமுநின்**
**பாதாரவா ழியைநம்பினோர் பரிசாலகத் தொழிலாளர்கள்**
**கேதாரமுங் கயிலாயமுங் கெடிநீள்சிவத் தலமியாதினுங்**
**கோதாரநின் குறியென்பர்காண் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** சிறந்த பிரணவ வடிவினனே! உன்னைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லை. உன் அடியார்கள் பல சிவத்தலங்களிலும், கேதாரத்திலும், கயிலாயத்திலும் உன் அடையாளங்களைக் காண்பர்.

**அ.பொ:** கோதார - சிறந்த பிரணவத்தையுடையவனே. **(௯௯)**

447. **மண்ணாகினாய் நீர்வன்னிகான் மாவானமுந் தானாகினாய்**
**கண்ணாகினாய் மனமாகினாய் கதறும்பல கதையாகினா**
**யெண்ணாகினா யெழுத்தாகினா யேகச்சிதா காசத்தினிற்**
**குண்ணாகினாய் கடலாகினாய் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** நீயே பஞ்ச பூதங்களும், கண்ணும், மனமும், மக்கள் பேசும் பல கதைகளும், எண்ணும், எழுத்தும், வானமும், கடலுமாவாய். **(௫0)**

448. **சீமைச்சிமிண் மயிர்மொய்த்திடுஞ் சலதாரையென் சிறுவாசல்புன்,**
**தூமைச்சல மொழுகித்தினந் துலையாமனா றிடுமல்குலாந்,**

**தீமைக்குழிக் கிரையாய்விடிற் றின்னக்கரை யடையன்கொலோ,**
**கூமைக்கட லிழியாமலாள் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** அழகான சிமிழ் போன்றதாய் மயிர் செறிந்த சாக்கடை என்னும் சிறு வாசலாம் அல்குலாகிய தீமைக்குழிக்கு இரையாகாமல் என்னைக் கரையேற்று.

**(சக)**

449. **நன்றைப்பிளந் தெறிவார்களார் நாடற்கருந் தீமைகுறித்**
**தின்றைக்குநா ளைக்கென்பர்மே லியார்கள்தே னீயொத்தவர்**
**பின்றைப்பிறப் பாளர்க்கிடம் பிறியாமல்வந் தெனையாண்டருள்**
**கொன்றைச்சடை முடிபெற்றனன் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** இன்று நாளை என்று கூறி ஏமாற்றும் உலோபிகளை அண்டி வாழுமாறு என்னைச் செய்யாதே. **(சஉ)**

450. **நன்றைப்பிளந் தெறிசூரனை நாடிப்பிளந் தெறிவேனிகர்**
**ஒன்றைப்பிளந் தெறிவாயதென் னோதப்பெறி னடர்காலனாம்**
**இன்றைப்பிளந் தெறியத்தகா தென்னாலுமிங் கினிதாணவக்**
**குன்றைப்பிளந் தெறிவேலவர்க் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** காலனாம் மலையைப் பிளந்தெறிய முடியாது. என்றாலும் நீ என் ஆணவமாகிய மலையைப் பிளந்து எறிந்து என்னைக் காப்பாயாக.

**அ.பொ:** வேனிகர் - வேல்நிகர். **(சங)**

451. **தூராத பாண் குழிசாண் வயின் துலையாமனான்**
**றுணைகொண்டுமே,**
**தீராதவல் வினையாய்மனந் திகைப்பாகினேன் றிகைப்பூண்டிதோ,**
**ஆராதவஞ் சகமாயையை யறமோதிடக் கிருபைபாரையா,**
**கோராதமா மணிமாலையாங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** வயிற்றுப்பாட்டுக்கு அலையாதபடி உன் துணையால் வஞ்சக மாயையை வென்றிடுமாறு கருணை செய்வாயாக.

**அ.பொ:** பாண் - பாழ், வயின் - வயிறு. **(சச)**

452. **ஊரேதினம் பேரேதின முறவேதினம் பகையேதினஞ்**
**சீரேதினஞ் செயலேதினஞ் சிந்தாகுல மெல்லாமிவை**
**பாரேதினம் விண்ணாதியாய்ப் பகர்போதினி லெல்லாமலங்**
**கூரேதினஞ் சொல்லாயெலாங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** ஊர், பேர், உறவு, பகை, சீர், செயல், ஆகுலம் இவற்றால் நாடோறும் வருந்தாதபடி என்னை ஆட்கொள்வாயாக. **(சரு)**

453. **மெய்யன்பிலா தவர்பாலுநீ மெய்யன்பிலா தவனாகுவாய்**
**பொய்யன்பிலா தவர்பாலுநீ பொய்யன்பிலா தவனாகுவாய்**
**கையன்பிலா தவனாகுநின் கழனம்பினென் கைதாவையா**
**கொய்யன்பிலா மலமாசறக் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** அன்பற்றவரிடம் நீ அன்பு காட்டாய், அன்புடையாரிடம் அன்பு செய்வாய். உன் திருவடிகளை நம்பிய என் மலம் மாசு அற எனக்கு அருள்வாயாக. **(சசா)**

454. **சத்தாதியிந் திரியமைம்பொறிச் சடமாகுமிவ் வையைந்திவை**
**யித்தாதியோ டொத்தாடிநா னிசைதந்தியின் னிசையாகினாற்**
**சித்தாதியா யறியாமலிச் சீவாதியா லலைவென்கொலோ**
**கொத்தாதியாய் வருகாரணக் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பஞ்சபூதம், ஐந்து தன்மாத்திரைகள், அறிவுப்பொறிகள், செயற்பொறிகள், அந்தக்கரணங்கள், இவற்றால் ஆன்மா ஆகிய நான் அலையாமல் என்னைக் காப்பாயாக. **(சஎ)**

455. **கல்லாதமா மடையன்றனைக் கசடன்றனைப் பொருளாகவே**
**சொல்லாதமா வசனஞ்சொலிச் சோராதறி வினிலாரவைத்**
**தில்லாதமா றுலகன்னிய மில்லாமனல் லின்பம்பெறக்**
**கொல்லாதமா விரதந்தருங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** கல்லாத மாமடையனும் கசடனும் ஆகிய என்னைப் பொருட்படுத்து. எனக்கு உபதேசம் செய்து உலகம் எனக்கு அந்நியம் என்பதனை அறிவித்து, நான் இன்புறுமாறு எனக்குக் குருநாதன் கொல்லாத விரதத்தை அறிவித்தான். **(சஅ)**

456. **தீதற்றமா தவமாகுநின் றீவாந்தரக் கரைகாண்பதார்**
**வாதற்றமா விரதங்களாம் வந்துன்னடிக் கன்பாகுமார்**
**ஏதற்றமா வடிவஞ்சொலி லெங்குஞ்சுடர்ப் பொங்காகரங்**
**கோதற்றமா மணிமேகமே! குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** தீது அற்ற மாதவத்தான் உன் வீட்டுலகின் கரையைக் காணலாம். விரதங்களால் உனக்கு அன்பர் ஆகலாம். **(சகூ)**

457. **சித்தாலசைந் திவைகானலார் செகத்தாய்விரிந் திடலாகுமென்**
**றுத்தாலகன் கதைகற்றபே ருன்னாரிவை பொன்னாகினும்**

பெத்தாலவர்க் கிடராகுமிப் பேராசையின் பிணியற்றவர்க்
குத்தாலநா யகதேவனெங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** பேராசையாகிய பெரும்பற்று அற்றவர்க்கு நீ உதவும் நாயகனாக உள்ளாய். **(ருo)**

458. பண்டாய்மறை நான்குங்கலை பலகோடிசாத் திரம்பண்ணற,
விண்டாய்குவா ரறிவாயிரார் வீவைக்குழன் றலைவாரையா,
தொண்டாய்நினக் கடியானெனத் தொண்டாகநா டொறுமுழியங்,
கொண்டாய்குருந் தடிநீழலிற் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நான்மறை, பல கலை, சாத்திரங்கள், இவற்றைக் கற்று அறிதல் இயலாதது என்று அடியவர்க்கு அருளுதற்கு நீ குருந்தமர நிழலில் தங்கியுள்ளாய். **(ருக)**

459. இன்பத்தினிற் றுன்பத்தினி லிசையற்றழுந் துடலத்தினிற்
சம்பத்தினி லென்பற்றினிற் சகப்பற்றினி லகப்பற்றினிற்
கம்பத்தினில் விம்பத்தினிற் கலக்கத்தினின் மயக்கத்தினிற்
கும்பத்தினிற் றம்பித்தியோ குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** இன்பத்தினும் துன்பத்தினும் அழுந்தும் உயிர் உடம்பு, செல்வம், முதலிய பற்றுக்களிலிருந்து விடுபடச் செய்வாயாக. **(ருஉ)**

460. ஆடற்பதிக் கரசாயவ ரருணைப்பதிக் கனலாயருள்
நாடற்பதிச் சந்தாய்த்திரு நாவற்பதிக் கமுதாய்மிளிர்ந்
தேடர்பதிக் காளத்திசூழ்ந் தோங்கும்பதிக் காசிக்குயர்
கூடற்பதிக் கதிபாதெய்வக் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மதுரைக்கு அரசாய், அருணையில் கனல் தம்பமாய், நாவல்பதியில் அமுதமாய், காளத்தி, காசி முதலிய பதிகளுக்குத் தலைவனாய் குருநாதன் வீற்றிருக்கிறான். **(ருங)**

461. ஏழாக்கினா யெட்டாக்கினா யெண்ணிக்கையற் றொன்றாக்கினா
யூழாக்கினாய் வினையாக்கினா யூனாமெனு முணர்வாக்கினாய்
சூழாக்கினா யேகத்திலிச் சூதாகுமோ சொல்லப்பெறிற்
கூழாக்கினா யினியென்செய்வாய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** ஸ்வரங்களை ஏழாக்கி, திசைகளை எட்டாக்கிப் பின் எண்ணிக்கை அற்று ஒன்றாக்கி, ஊனாக்கி, உணர்வாக்கி என்னை வஞ்சனையில் ஆழ்த்தாது ஆட்கொள்வாய். **(ருச)**

குறிப்பு: "ஈறாய் முதல் ஒன்றாய்" (2)
திருவீழி மிழலை, சம்பந்தர் - தேவாரம்.

462. **ஆளாகுநின் னடியாரெலா மருகாகநா னறியாதவன்**
**வாளாகுமிங் குளவாய்மனம் வாடாவெனில் வருகாதெனிற்**
**றாளாகுநின் றேனூறலைத் தாராவிடிற் றாகங்கெடாக்**
**கோளாகுமிவ் வழிமாளுமோ குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன் அடியவர்கள் உன் அருகு இருக்க, நான் அறியாதவனாய் இங்கு வாளா மனம்வாடாமல் உன் அருளாகிய தேன் ஊறலைத் தந்து என் தாகத்தைப் போக்குவாயாக. **(ருரு)**

463. **சென்டாடுவா ரொழியாமனஞ் சேணூடறி வாய்நின்றலார்**
**உண்டாடுவார் சுவைகண்டதி லூடாடுவார் யோனிக்குளே,**
**தொண்டாடுவார் துறைகாண்கிலர் தொழிலோய்விலா**
**துயரத்தையே**
**கொண்டாடுவா ரலதில்லையாற் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உடல் இன்பத்தை உண்டு சுவை கண்டு அதில் ஊடாடி ஓய்விலாத் துன்பத்தைக் கொண்டு தடுமாறுபவருக்கு உய்வு இல்லை. **(ருசா)**

464. **மெய்யாதவன் போனின்னருண் மேலாயவ ரென்சொல்குவார்,**
**பொய்யாதவன் குருடன்கணிற் பொல்லாங்கினா லில்லாததாம்,**
**செய்யாதவன் னுளகாலமுஞ் சேரார்கதி சேராரவர்,**
**கொய்யாதவன் மலர்ப்பாதனே குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** சூரியன் போல ஒளி வீசும் உன்அருளை மேன்மக்கள் புகழ்வர். கீழ் மக்கள் சூரியனைக் காண முடியாத குருடரைப்போல உன் அருள் இல்லை என்று கூறி நற்கதி அடையாது தடுமாறுவர்.

**அ.பொ:** ஆதவன் - சூரியன். **(ருள)**

465. **போட்டான்கணிற் குறியொன்றினாற் போனால்வரா**
**வழிமுத்தியைக்,**
**காட்டான்பணின் றிசைமாற்றினாற் கண்ணாயிருந்**
**தறியாமையான்;**
**மீட்டான்மணிப் பொன்னதியாய் மின்னார்முதற் றிரையூடுறக்**
**கோட்டான்கணில் ரவிகாணுமோ குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** மேன்மக்கள் குருநாதன் பெருமையை அறிந்து மீண்டு வாராத முத்தியை அடைவர். கீழ்மக்கள் திசைமாறித் தடுமாறுவர். கோட்டான் கண்களுக்குச் சூரியன் தோன்றாது. **(ருஅ)**

466. **தீட்டாகிநன் றிவைமாய்கையைத் தின்னத்தினச்**
**சுவைபோலுறுஞ்,**
**சூட்டாகிநின் னருளுக்கிடர் சுட்டாதிருந்திடல் காண்சுகம்,**
**பூட்டாகிமன் றிவையால்வரும் பூதங்களா நேசங்கொளிற்,**
**கூட்டாகிநன் றிவையன்றுகாண் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன் அருளைக் குறை கூறாதவர் சுகம் பெறுவர், மற்றவர் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆன இவ்வுடலால் துன்புறுவர். **(ருகூ)**

467. **பெற்றாய்பிர மாண்டங்களும் பேருனக் கியாதிங்ஙனம்**
**வித்தாய்விரிந் திடலியாதவை வினவிற்றனக் கயலம்படா**
**முத்தாய்விளங் கொளியாய்வளர் மூவாதிதே வர்கள்பூதமுங்,**
**குத்தாய்விளைந் தலர்பூடணக் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பல அண்டங்களையும் படைத்த உனக்குப் பெயர் யாது? ஊர் யாது? நீயே அனைத்திற்கும் வித்தாய்ப் பலவாக விரிந்துள்ளாய். நீயே அனைத்திற்கும் தாய் ஆவாய். **(சுo)**

468. **விண்டார்கணைக் கெண்டைக்கிணை விழியைக்கலந் தறியாமடர்**
**வண்டார்மலர்க் குழலென்பர்காண் வாயானல மயிலென்றிடார்,**
**கண்டார்தசை தோலென்பெனக் காண்பார்கண்மற்**
**றிலையாகையாற்,**
**கொண்டார்வினைக் கீடாமுடற் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** விழிகள் அம்புக்கும் கெண்டைக்கும் இணையாகும், வண்டுகள் சூழும் மலர்க்குழல், மயில் போன்ற சாயல் என்று பெண்களின் தசைகளையும் தோலையும் புகழ்ந்து அவற்றில் ஈடுபட்டு வாழ்பவர் கடைத்தேறார்கள். **(சுக)**

469. **முத்தாய்வள ரொளியாயெழின் மூலாதிகா ரணமாகமுதற்,**
**பூத்தாய்சர மசரங்களாம் புவனங்களிற் பிறனுண்ணிலோ**
**பாத்தாயிருந் தறிவானுமாய்ப் பாத்தாலுநீ வேறாகுமோ**
**கோத்தாய்நிறைந் தெங்குநீயாய்க் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** முத்தாகவும், வளரும் ஒளியாகவும், மூன்று உலகங்களுக்கும் காரணமாகவும், எல்லாவற்றையும் அறிபவனாகவும், எல்லாப் பொருளுள்ளும் கலந்தவனாகவும் அவற்றிற்கு வேறாகவும் குருநாதன் உள்ளான். **(சுஉ)**

470. சூலாசைகொண் மலடிக்குநேர் சுகபோகசொற் பனமா,மகன்,
மேலாசைகொண் டலையப்பெறின் மெய்யாகுமோ வது,போலுடற்,
றோலாசையான் மெலியாமனின் றோதற்றசிற் பொருளுக்கனு,
கூலாசைதந் தருள்செய்குவாய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மலடி கருப்பத்துக்கு ஆசைப்பட்டால் கருத்தோன்றுமா? உடம்பில் ஆசை கொள்பவன் உன் திருவருளுக்கு ஆசைப்பட்டால் அஃது ஈடேறுமா? **(சஎ)**

471. வீணாகவும் மலமாகுறில் வீணாகுநா ளவமாகினாற்
பூணாகவந் தடுபாதிகள் பொன்னோடிரும் பொன்றாமவை,
சேணாகநின் னிருபாதிகச் செயலிற்கலந் தணுகாவிடிற்
கோணாகமுஞ் சதிசெய்குநங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** வீணாக மும்மலத் தொடர்பு கொண்டால் வாழ்நாள் வீணாகும். பொன் போன்ற ஆன்மா இரும்பு போன்று ஆகித் துருப்பிடிக்காமல் பசு போதம், பதிபோதம் ஆகாதவாறு நீயே சூழ்ச்சி செய்கிறாய். **(சஎ)**

472. வேதாந்தசித் தாந்தத்தினில் வெளியாண்டசித் தாந்தத்தினில்
நாதாந்தசித் தாந்தத்தினி னானோய்ந்தசித் தாந்தத்தினில்
ஏகாந்தசித் தாந்தத்தினி லெனையாண்டுவைத் திடுவாய்கொலோ
கோதாந்தசித் தாந்திப்பர குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நாதாந்த சித்தாந்தனான குருபரனே! உன் சித்தாந்தத்தில் என்னை வைத்தருள்வாயாக. **(சஎ)**

473. மெய்வாய்கணிற் செவிநாசியின் மேவிச்சிறந் தறியாயெனி,
லைவாய்வழிக் கிடமெங்ஙன மறிவானெவ னறியார்களார்
செய்வாய்செவிக் கையாதினுஞ் செய்வித்திடுஞ் செயனின்னதாற்
கொய்வாய்சிர மீவாய்பினுங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** ஐம்பொறிகளாலும் செய்யப்படும் என் செயல்கள் உன் கட்டுப்பாட்டுக்கு அடங்கினவே. ஐம்பொறிகளும் உன்னை அண்டிச் சிறப்புறுமாறு செய்வாயாக. **(சஎ)**

474. வர்தாட்டமண் பெண்பொன்னிவை வருமூவகைப் பொருளாகுமிச்,
சூதாட்டநன் றிவைகாட்டிமேற் சுகரூபமாந் தனைமாய்ப்பதென்
ஏதாட்டநின் வினையாட்டெனி லென்னாசைவிஞ் சிடிலங்கெனாங்,
கோதாட்டம்விண் டறிவாகவை குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மண், பெண், பொன் இவற்றில் மண்டும் என் ஆசை இவற்றை விட்டு உன் திருவடிக்கண் விஞ்சுமாறு செய்வாயாக. **(சுஎ)**

475. **காற்றாடிகயிறுபோலவுங் கண்ணாடியி னிழல்போலவுஞ்**
**சேத்தாடியும் ரசம்போலவுஞ் சிறியோர்கள்பம் பரம்போலவும்**
**பாத்தடிலுன் றொழிலொப்பிடிற் பகல்ராவினு மிலையன்றியிற்**
**கூத்தாடியுன் றொழிலார்சொலுங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** காற்றாடியில் கயிறு போலவும், கண்ணாடியில் நிழல்போலவும், சிறுவர் ஆடும் பம்பரம் போலவும் உள்ள உன் கூத்தாட்டுத் தொழிலை உள்ளவாறு அறிவார் யார்? **(சுஅ)**

476. **எட்டாதபே றறிவானவ ரெல்லமுமா யல்லாதபேர்**
**சுட்டாதசிற் சுகமானவர் சுரர்பூசிதர் தவமாதவர்**
**கிட்டாதநின் மலர்க்கானவர் கிடையாமன்மா சடைவேனையாள்**
**கொட்டாதசீர் முதலானவர்க் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பேரறிவானவர், சுரர், மாதவர் ஆகியவருக்கும் கிட்டாத உன் திருவடிகளின் தொடர்பு கிட்டாமையால் களங்கமுறும் என்னை ஆட்கொள்வாயாக. **(சுகூ)**

477. **வாசப்புரந்தரன் மான்முதல் வானாடரு மறியார்கணின்**
**னேசப்புரந்த னிலாருறும் நெட்டூரநெஞ் சறுசிற்சுகத்**
**தேசப்புரங் குடியேறவுந் தேகாதியற் றரசாள்கெனக்**
**கோசப்புரங் களைவென்றருள் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன் இருப்பிடத்தைத் திருமால் முதலிய தேவரும் உள்ளவாறு அறியமாட்டார்கள். இவ்வுடம்பில் நெஞ்சு ஈடுபடும் பற்றை அறுத்து என் அன்னமயகோசம் முதலியவற்றை நீக்கி என்னை அரசாள்க.

**அ.பொ:** கோசம் - செல்வம், அன்னமய கோசம். **(எ0)**

478. **வெறும்பைத்தசை துர்க்கந்தமாம் வெங்கும்பியை**
**வினைக்கந்தையை,**
**யெறும்பைத்தனக் கீயைத்தனக் கென்றிங்கிறு மாந்தூறிடு,**
**நறும்பைத்தக ருடலைச்சதம் நம்பித்திரிந் திடுமென்மனக்**
**குறும்பைத்தவிர்த் திடமோதிடுங் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** தசையானது தீ, நாற்றம், கொடிய கும்பி, கந்தை, எறும்புக்கும் ஈக்கும் இருப்பிடமாகும். உடம்பை நிலை பேறுடையது என்று நம்பித் திரியும் என் மனத்தின் அறியாமையை நீக்குக. **(எக)**

479. ஒன்றேபக னுருவேசொலி னொப்பாருனக் கிப்பார்மிசை
நன்றேசெயின் றீதேசெயி னானோவதற் காளாகுவேன்
நன்றேயெனக் குயிராய்ப்பொரு ணாவிக்குள வாகுந்திருக்
குன்றேபரஞ் சுடரேயருட் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** தலைவன் நீ ஒருவனே உனக்கு ஒப்பார் ஒருவரும் இல்லை. நான் உன் உடைமை. நீயே பரஞ்சுடர். நன்றே செயினும் தீதே செயினும் நான் அதற்கு ஆளாகமாட்டேன். **(எஉ)**

480. துறையற்றநீள் பிறவிக்கடல் துலையாகுமித் துறைமீள,யான்,
உறையற்றகத் தியையொத்தன னொளிமங்கிடா
தருள்பெற்றையா,
பொறையற்றநெஞ் சொடும்வாழ்கிலன் புகழுந் திருவடியாகுநின்,
குறையற்றசெல் வமுமீகுவாய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** கரையேறும் துறையற்ற இப்பிறவிக் கடலில் நான் பொறுமை அற்ற மனத்தோடு உலாவி அழிகின்றேன். உன் திருவடியே எனக்குக் கரையேறும் பற்றுக்கோடு. அந்தக் குறைவற்ற செல்வத்தை அளிப்பாயாக. **(எந)**

481. எறியற்றநீள் கடலொத்திடு மெனையற்றபாழ் வெளியிற்குளே,
வெறியற்றசிற் றொளியிற்குளே வேறற்றவைம் புலனைந்துறும்,
பொறியற்றகண் ணுடையையநின் பொதுவிற்றனித் தினிதாகநான்,
குறியற்றபோ தமுமீகுவாய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** அலையற்ற நீண்ட கடலை ஒத்திடும் என்னைப் பாழ் வெளியிலே சிறிய ஒளிக்குள்ளே ஐம்புலனும் நைய உன் நடனத்தைத் தனித்துக் காண அருள்வாயாக. **(எச)**

482. தேறாதபா ழொருகாலமும் தெளியாதுறுஞ் சிந்தைக்குணான்
மாறாதவாழ் விவையின்னதென் மதிக்காமனின் கதிக்காகிலேன்,
ஆறாதநல் லமுதாய்வரு மானந்தமோ னானந்தமிக்
கூறாதபே ரானந்தமோ குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நான் மாறா வாழ்வு இன்னது என்று அறியாது கீழ்நிலையை அடையா வண்ணம் உன் மோன ஆனந்தமாம் பேரானந்தத்தை எனக்கு அளி. **(எரு)**

483. சிணமுஞ்செய லெனக்கொன்றிலன் சிவமன்றியிங்
கனமொன்றிலை,
கணமும்பிறித் துயிருக்கிலேன் களைநின்களை யிடையொன்றிரா,

மணமுற்றிடு மலர்ப்பாதனே மனமாதியைத் தொழினீதனே,
குணமுங்குறி யறநின்றிடுங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** எனக்கு என்று ஒரு செயலும் இல்லை. உன்னைக் கணமும் பிரிந்து உயிர் வாழேன். என் மனம் முதலியவற்றை நல்வழிப்படுத்தும் தொழிலில் ஈடுபடுத்தும் நீதிமான் நீ அல்லையோ? **(எசா)**

484. சிற்றேவலன் றுலகில்லையால் சீவாதிரு பமுமெங்குறும்
எத்தேசகா லமுநின்கழற் கென்னாசைமற் றுன்னாதுனைப்
பெற்றேன்றனை யறிவாகநான் பேசாதபூ சனைவந்தனங்
குற்றேவல்கொண் டருளையனே குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** என் விருப்பம் உன் திருவடிக்கண் அமையச் செய்து என்னை உனக்குக் குற்றேவல் செய்ய அமைத்துக் கொள். **(எஎ)**

485. தேடத்தகும் பொருளொன்றிலைத் தேவென்றுனைத்
தொழுவேனலா,
னாடத்தகும் பொருளொன்றிலை நாடுந்திரு வடிநீழலை,
யோடத்தகும் பொருளொன்றிலை யோய்வற்றதார முமாம்வழி,
கூடத்தகும் பொருளொன்றிலை குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உன்னையே தெய்வமாகத் தொழும் நான் தேடியும் நாடியும் கொள்ளத் தகும் பொருள் வேறு இல்லை. உன் திருவடியே எனக்கு அடையத்தகும் பொருள். **(எஅ)**

486. ஞாலாகலா! நானாவிதா! நாமாருபா! ஞானாகரா!
தூலாமலா! சூராவீரா! சூட்சாதிசூட் சுமகாரணா!
லீலாவிலா சா!பூரணா! நீதாபர போதாகரா!
கோலாகலா! தேசோமயா! குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நீ பல பெயர்களும் வடிவங்களும் கொள்பவன். அறிவுக்கு இருப்பிடம். களங்கமற்றவன். சூரன். மிக நுண்ணியன். எல்லாப் பொருளுக்கும் காரணன், நிறைவாளன், விளையாட்டை விரும்புபவன், மேம்பட்ட ஒளிமயமானவன் ஆகிய உன்னைக் குருநாதனாகச் சரணடைகிறேன்.

**அ.பொ:** தேசோ மயம் - பேரொளி. **(எகூ)**

487. நெடும்பத்திசெய் திடன்முற்றிலுன் னேசத்தினோர் நினையற்றவர்,
கெடும்பத்திசெய் திடுவேன்றனைக் கேளாயெனி னாளாகிலேன்,

அடும்பத்திகண் டருள்சேரனா னாகாதெலா மாகாவிடுங்,
குடும்பத்தினி லினிமாய்த்திடாக் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** மட்டமான நிலையில் பக்தி செய்யும் நான் உன்னால் ஆட்கொள்ளப்படாவிட்டால் வீணாக அழிந்து விடுவேன். நெடும் பக்தி செய்யும் பெரியோர் நீ ஆட்கொள்ளாவிட்டாலும் அழிந்து போகமாட்டார்கள். நான் அழிந்தே போய்விடுவேன். **(அ0)**

488. உச்சந்தனி லசைவற்றநின் னுதயச்சுட ரருள்வெற்பிடை
யச்சந்தவிர்ந் திடவந்திருந் தனுசூதமற் றிடுமென்றனா
டுச்சந்தனக் கயலற்றெழுந் துகளூற்றபொய்ப் போதத்திருட்
கொச்சந்தவிர்ந் தெரிபரனெனுங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உன் உதயசூரியன் போன்ற அருள்மலையிலே பொய் அறிவான அச்சம் தவிர்ந்து நான் வந்து அடைய அருள்வாயாக. **(அக)**

489. அடுத்தேனுனக் காளாகவே யல்லற்படுந் துயர்போக்கவே,
கெடுத்தேனுனக் கல்லாதபேர் கேள்விக்குமுன் னுள்ளிட்டநேர்,
விடுத்தேனுடல் பொருளாவியை வித்தாகுநின் கொத்தாகவே,
கொடுத்தேனுனக் கெனைமுன்னமே குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உனக்கே அடிமையாக அடுத்தேன். உடல் பொருள் ஆவியைத் தியாகம் செய்தேன். அல்லல் தரும் துயர் போக என்னை ஆட்கொள். **(அ௨)**

490. பாராதியாய் திரைபூதமும் பகிரண்டமாய் வளர்காதமும்
தாராதிபுத் திரமித்திரர் தனமாதிதன் னுயிரேமுதற்
பேராதியாகிய போகமும் பெண்மைப்பட மிகுதாகமுங்
கோராதிருந் தவர்முத்தராங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நிலம், மனைவி, மக்கள், நண்பர், செல்வம் என்ற பற்றற்றவரே உன்னை அடைவர். **(அ௩)**

491. எட்டாதருங் கோடுடுதே னேறத்தகா முடவன்கையிற்
கிட்டாதவன் னிட்டப்படிக் கிடையாதனா னடைவென்கொலோ
கட்டாதருங் காலிக்கிணைக் கடிதாமனத் தலைநோய்படக்
குட்டாதடைத் திலையென்வசங் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** எட்டாத கொம்புத் தேனை ஏறிப் பெறமுடியாத முடவன் வருந்தும் வருத்தத்தை நான் அடையாதபடி ஆட்கொள்வாய். **(அ௪)**

492. பாவிக்கிலிங் குனையல்லதிற் பற்றற்றிடே னின்பத்திலார்
தாவிக்கனின் னடிதாவணந் தம்பித்தது வாய்நிற்பனியான்
ஆவிக்குநல் லுறவிங்ஙன மாரென்பதிங் கருளல்லதார்
கோவிக்கிலிங் கயல்போக்கிலன் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** உன்னை யல்லாத மற்ற பொருள்களில் உள்ள பற்று அறாத என்னை உன் அருளால் என் உயிருக்கு நீயே நல்லுறவு என்று உன் திருவடிகளிலேயே பற்றுக் கொள்ளச் செய்வாயாக. **(அரு)**

493. துடிகொண்டவிப் பகிரண்டமுந் துருவாதியாம் பலபிண்டமுங்
கெடிகொண்டமா லயனண்டருங் கேடாய்விடுந் திசைகாலமும்
வடிகொண்டகா லனுமூழியும் வரவுஞ்செல விலைகண்டுளங்
குடிகொண்டசின் மயரூபனே குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** இவ்வுலகும் திருமால் உலகு முதலிய மற்ற உலகுகளும் அழிந்து விடும். திசை, காலம், காலன், ஊழி, முதலியன யாவும் அழிந்து பின் தோன்றும். எனவே என்றும் அழிவில்லாத உன்னையே என் மனத்துக் கொண்டுள்ளேன். **(அசா)**

494. கணமேனுமியா னினையேனுனைக் கல்லாதபுல் லறிவேனுமெவ்
வணமேறிவந் துனையெய்துவென் வடவானிழல் வருதெய்வமே
மணமேதரும் மலரேமறை வடிவேயடி முடியற்றசற்
குணமேநிறை கடலேயருட் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** கணமேனும் உன்னை நினையாத நான் கல்லாத புல்லறிவினேன். அப்படி இருக்க உன்னை எவ்வாறு வந்து அடைவேன்? ஆல நிழலில் அமர்ந்த தட்சிணாமூர்த்தியே! மணமலரே! வேத வடிவினனே! அடிமுடியற்ற சற்குணனே! என்னை ஆட்கொள். **(அஎ)**

495. ஆட்டுக்குழா முடன்கூடியே யாடாய்மடங் கலும்வாடியே
காட்டுக்குள்வாழ்ந் தினந்தேடிலாக் கதைபோலுமியா னுனைநாடிலா
வீட்டுக்குணீ யடியார்கடன் விளையாடலிங் கதிபாதகக்
கூட்டுக்குள் யானலறத்தகா குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** சிங்கம் ஆட்டுக் கூட்டத்துடன் கூடியே ஆடுகளுடனே வாழ்ந்து தன் இனத்தைத் தேடாத செயல்போல, யான் அதிபாதகக் காட்டுக்குள் கிடந்து, உழன்று நீ உன் அடியார்களுடன் விளையாடும் செயலைத் தேடிக் காணமுடியாமல் உள்ளேன். **(அஅ)**

496. நெஞ்சுக்குத வியகோலமு நெட்டூடுரு வியகாலமும்
பஞ்சுக்குரு வியபொத்துடல் பகைமாறநின் றகைமீறியே
யஞ்சுக்குரு வியசுத்தமா மறிவைப்பெற வலதாசையாய்க்
குஞ்சுக்குரு வியையொத்தனன் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நீ ஆலகால விடத்தை அருந்திய கோலமும், தீப்பிழம்பாக அடிமுடி காண முடியாதபடி எடுத்த கோலமும் காண விரும்பாது ஐம்பொறி வசப்பட்ட உடம்பைப் பேணிக் குருவிக்குஞ்சாய் வாழ்கிறேன். **(அகூ)**

497. ஈனப்பிற வியின்மூழ்கினா லினிதாகுநின் னருளெங்குறும்
மானப்பிற வியவெங்கரா வாயிற்படின் மனமெங்கறுந்
தீனப்பிற ரிடமேவினின் றிருநின்றபே ரருளென்பெறுங்
கூனப்பிறை முடிசூடுவோய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** ஈனமான பிறவியில் மூழ்கினால் உன் அருள் எனக்கு எவ்வாறு கிட்டும்? ஐம்பொறிகளாகிய முதலைகளின் வாயில் அகப்பட்டால் மனம் எவ்வாறு தப்பிக்க முடியும்? மட்டமான பிறரை நாடின் உன் அருள் எவ்வாறு கிட்டும்.

**அ.பொ:** கரா - முதலை. **(கூ0)**

498. தனியாயின்ம் பிரிமானெனத் தமியேன்மிகு தளர்வெய்தினா
லினியாய்நினை யடைவோர்கதி யிதுவோசொலா யிவைஞாயமோ
பனியாமல மகல்பானுவே பரிபூரண மலதோர்தெய்வங்
குனியாமல்வந் தெனையீகுவாய் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** நான் இனத்தைப் பிரிந்த மான் போலே தனியே தளர்ந்து உயிர் வாழ்கிறேன். உன்னைத் தியானிப்பவர் கதி இதுவோ? நான் மற்ற தெய்வத்தை நாடாதபடி வந்து என்னைக் காப்பாயாக. **(கூக)**

499. தேனுண்டுமிழ் வரிவண்டுபோய்த் தேடுஞ்சில மலர்கண்டுணும்,
நானுண்டுமிழ் மறுவிங்கிலை நளினத்திரு மலரெங்குளாய்,
வானுண்டுமி ணாயின்கதை வலதற்றன்யான் நிலமுற்றுநீ,
கோனுண்டுநன், றுனையெண்ணினேன் குருநாதனே! குருநாதனே!

**பொழிப்:** வண்டுகள் போய்ச் சிற்சில மலர்களை அடைந்து அவற்றின் தேனை நுகரும். நான் உன் தாமரை போன்ற திருவடிகளையே சுற்றித் திரியும் வண்டு. உன்னையே தியானிக்கும் எனக்கு அருள். **(கூஉ)**

500. மோசானுபூ திகளானமர் மோகத்தொழில் பசுஞாயமாய்
நேசானுபூ திகளுற்றபேர் நெய்மாண்டதீ பமுமொத்தநின்

**பேசானுபூ திகள்கண்டிலார் பெருமானெநல் லருடாரகங்**
**கூசானுபூ திகடந்தருள் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உலகப் பற்றுடையவர்கள் நெய் தீர்ந்ததும் அவிந்து போகும் விளக்குப் போல இறந்து போவார்கள். அவ்வாறு இறக்காமல் என் பசு போதத்தைப் போக்கி உன் பதி போதத்தை அருள்வாயாக. **(௬௱)**

501. **பாடும்படிக் குன்கீதமே பணிசெய்தவற் குன்பாதமே**
**சூடும்படிக் குன்னீதியே தொழுதற்குநின் னருட்சோதியே**
**நாடும்படிக் குந்நாதமே நவிலும்படிக் குன்போதமே**
**கூடும்படிக் கருள்செய்குவாய் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** உன் புகழே பாடி, உன் திருவடிகளிலேயே பணிசெய்து, உன் நீதியையே மேற்கொண்டு, உன் அருட்சோதியையே தொழுது, உன் நாதத்தையே நாடி, உன் பதிபோதமே அடியேனுக்குக் கூடும்படி அருள். **(௬௪)**

502. **சீமானுனைத் தனிதேடினான் சிந்தித்துநொந் தறவாடினேன்**
**பூமானெனைப் பொருளென்றுமே பூதப்பிரி வுறவோதினாய்,**
**நாமாகுநீ நாமென்றதார் நன்மாமறைப் பொதுவிண்டனன்**
**கோமானெனக் குனையன்றியார் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** செல்வனாகிய உன்னைத் தேடிச் சிந்தித்து நொந்து, பெரிதும் வாடி, வருந்தும் அடியேனுக்கு உன்னைத் தவிர வேறு யார் குருவாக உள்ளனர்? **(௬௫)**

503. **ஏட்டும்படிக் கென்பார்சில ரெழுத்தின்படிக் கென்பார்சிலர்**
**ஊட்டும்படிக் கென்பார்சில ருன்னார்களுன் பொன்னார்கழல்**
**ஆட்டும்படி யசைவன்றியில் லளவிட்டநல் லடியார்நடுக்**
**கூட்டும்படி யருள்கூரையா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** யாவும் நூலில் உள்ளபடியே நடக்கும். தலை எழுத்தின் படியே நடக்கும். இறைவன் செலுத்தும்படியே நடக்கும் என்பார்கள். யாவும் உன் பொன்னான திருவடிகள் ஆட்டும் படியே நடக்கும். அடியவர் நடுவில் அடியேன் சென்று அடையுமாறு அருள் செய்க. **(௬௬)**

504. **வனித்தாதியாய் வருபோகமும் வானாதியாய் வருசோகமும்,**
**செனித்தாதியால் வருதேகமுஞ் செய்விக்குநின் செயல்சித்திரம்,**
**இனித்தாதியாம் பதமேவில னிறைவாவிரண் டறவேண்டுவேன்,**
**குனித்தாதியாம் புரம்வென்றவா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பெண்களால் வரும் இன்பம், தேவர் முதலிய தேகம், இவ்வுலகில் உயிர் எடுக்கும் பல உடல்கள் யாவும் உன் செயலில் நிகழ்வன. அடியேன் வேண்டுவன உன் இரு திருவடிகளே. **(௯௭)**

505. **பழுதுற்றபா தகனன்பிலாப் பதிதன்பொலா தவன்மிஞ்சினோ,**
**னழுதைம்புலா திகள்வென்றுமே யருளைப்புகுஞ்**
**சிகையென்பவன்,**
**தொழுதும்பர்சூழ் திருமுத்தனான் றுணைதந்திட வருவன்கொலோ,**
**கொழுதும்பைசூ டியசுந்தரா குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** பழுதுற்ற பாதகன், அன்பில்லாக் கீழ் மகன், பொல்லாதவன், அடங்காதவன், எனினும் அடியேன் அழுது அழுது ஐம்புலன்களை வென்று உன்னை அடைந்துள்ளேன். ஆதலின் எனக்குத் துணை தர நீ வருவாயாக. **(௯அ)**

506. **நெஞ்சத்தின்வா தனைபற்றறு நேய்பானிக ரெனினின்றிடுங்**
**கஞ்சத்தினன் றூலான்மத கரிகட்டுவார் கதைபோலநின்**
**வஞ்சத்தின னிவனாகுமோ வலியாயதின் வழிகூட்டினாற்**
**கொஞ்சத்தின மெனைக்கைவிடேல் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** தாமரைத் தண்டின் நூலினால் யானையைக் கட்டுபவரைப் போல இவன் நம்மைக் கட்டுப்படுத்த வந்துள்ளான் என்று கருதாது சிறிதளவும் என்னைக் கைவிடாது ஆட்கொள். **(௯௯)**

507. ***அறியப்படும் பொருணீயலா யறியப்படாப் பொருணீயலாய்***
***பிறியப்படும் பொருணீயலாய் பிரியப்படாப் பொருணீயலாய்***
***செறியப்படும் பொருணீயலாய் செறியப்படாப் பொருணீயலாய்***
***குறியப்படும் பொருணீயலாய் குருநாதனே! குருநாதனே!***

**பொழிப்:** பெருமானே நீ அறியப்படும் பொருள், அறியப்படாப் பொருள், பிரியப்படும் பொருள், பிரியப்படாப் பொருள், செறியப்படும் பொருள், செறியப்படாப் பொருள் எல்லாமாக உள்ளாய்.

'பிரியப்படும்' என்பது எதுகை நோக்கிப் 'பிறியப்படும்' என்றாயிற்று.
**(௧00)**

508. **குருவென்றுனைப் பணியாதவர் கூடுங்கதி யவைகண்டிலன்,**
**குருவென்றுனை யருச்சித்திலார் குறுகுஞ்சுக மவையென்கொலோ,**
**குருவென்றுனை யடையப்பெறின் குறையொன்றிலை**
**குணமென்பராற்,**
**குருவென்றுனைத் தொழுமேழைகாண் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** குரு என்று உன்னைப் பணியாதவர் நற்கதி அடையார். உன்னை அர்ச்சிக்காதவர் சுகம் பெறார். உன்னை அடையப் பெறின் குணமே ஒழியக் குறையில்லை. எனவே, குரு என்று உன்னைத் தொழும் ஏழையேனைக் கடைக்கணிப்பாயாக. **(௧0௮)**

## வாழி

509. **திருவாழ்க!வெண் டிசைவாழ்க!மால் திசைமாமுகன்**
**முதல்வாழ்க!வைந்,**
**தருவாழ்க!விந் தரன்வாழ்க!நற் றவமாமுனி வரர்வாழ்க!விண்,**
**ணுருவாழ்க!மற் றவைவாழ்க!வெண் ணிசைவாழ்க!விச்**
**சதகஞ்சொலக்,**
**குருவாழ்க!நல் லடிவாழ்நன் குருநாதனே! குருநாதனே!**

**பொழிப்:** செல்வம், எண்திசை, திருமால், பிரமன், ஐந்தரு, இந்திரன், தவ முனிவரர், விண், மண், யாவும், யாவரும் வாழ்க. இச்சதகம் பாடச் செய்த குரு வாழ்க.

**பார்க்க:** பாடல்: *413.* **(௧0௯)**

## நேரிசை வெண்பா

510. **சற்குருவென் னையன் சதகமொரு நூற்றொன்றுஞ்**
**சற்குருவென் னையற்குச் சாற்றினேன் - சற்குருவென்**
**னையனுனை யல்லா லியாமா ருலகமெங்ஙன்**
**பொய்யன் றதுவாம் பொருள்.**

**பொழிப்:** சற்குருவாம் என் ஐயன் பெயரில் *101* பாடல்களை உடைய இந்தச் சதகத்தைப் பாடினேன். குருவை விடுத்து யாமும் இல்லை இந்த உலகமும் இல்லை என்பதே உண்மை. **(௧௧0)**

குருநாத சதகம் முற்றிற்று.

# செய்யுள் முதல் குறிப்பு அகர வரிசை

(எண் - பாடல் எண்ணைக் குறிக்கும்)


அ

அசவாதவன் 190
அடக்கமுடைய 80
அடியிற் 101
அடுக்குந் 13
அடுத்தோர் 69
அடுத்தேனுனக் 489
அண்டத்தில் 444
அண்டமனைத் காப்பு - அண்ணாமலை சதகம்
அண்டங்க 2
அபராதமா 116
அம்போருகனு 38
அயனாரெழுத் 111
அரசன் கைய 137
அலசத்தகு 107
அறவை 114
அன்றுமை 49

ஆ

ஆட்டுக்குழா 495
ஆடலுண்டாகு 67
ஆடவந்தோடு 58
ஆடற்பதிக்கர 460
ஆடற்பதிக்கு நிகர் 34
ஆடிமாதம் 279
ஆணாமனின் 418
ஆதார தேவதை 147
ஆதாரமார் 446
ஆதிவாரத்திலே 254
ஆபாதவாயுனை 133
ஆயிர நாமத் 59
ஆவர்த்தனை 16
ஆவென்ற 437
ஆளாகி நின் 139
ஆளாகு நின் 462
ஆற்றாமை 126
ஆற்றுமண 252
ஆனந்தமா 145
ஆனாலுமென் 416

இ

இச்சிலா 247
இடிக்கட்டி 90
இடியுங்கரை 323
இடைமார்பு 241
இந்தாவெனா 152
இந்திரன் 208
இந்நாள் 384
இரவிலோ 213
இருப்பானது 335
இளையாலெழுந் 135
இலைதிகழு 245
இவைவேல் 443
இற்கண் 201
இன்பத்தினிற் 459

ஈ

ஈசன்பரன் 132
ஈன்றோனு 173
ஈனந்தரு 346
ஈனப்பிறவி 497

உ

உச்சந்தனி 488
உச்சியிடை 258
உடைச்சேலை 181
உண்டாகிய 22
உணத்தான் 54
உத்தரம் 281
உமையாளரு 349
உமையாளுன் விழி 355
உரலுக்கு 155
உரைகடவாத 66
உலகஞ் 408
உள்ளபுவி 89
உன்றாண் 340
உன்கோயி 200
உன்னன்னிலை 359
உனக்குண் 329
உனக்குள்ளடி 369

ஊ

ஊணருந் 269
ஊரேதினம் 452
ஊழிற் 179
ஊனந்தரு 322

எ

எட்டாத பேரறி 476
எட்டாதருள் 491
எட்டுநா 294
எதிரும் 108
எமக்கென்று 170
எய்தாரிருந் 185
எரிகின்ற 379
எல்லாரு 109
எழுநெட் 175
எள்ளுக்கு 354
எறியற்ற 481
என்போடு நீ 441
என்மாடு 188
எனைக்காக்க 176

ஏ

ஏட்டும் 503
ஏழாக்கினா 461
ஏறுபரி 286

ஒ

ஒப்பான 334
ஒருகரந் 257
ஒருபான் 333
ஒலிபெறு 43
ஒன்றாகினை 331
ஒன்றே 479

ஓ

ஓதரிய தேவா 255
ஓதரிய வக்கினி 215
ஓதுவார் 243
ஓமங்களால் 112
ஓராயிரம் 253

க

கச்சுப்பிதிர் 184
கஞ்சப்பதந் 174
கஞ்சனை 41
கட்டுவாம் 284
கடியார் 2
கண்பொன்று 177
கணமேனு 494
கமலத்தை 187
கரியசெம் 250
கருணா 205
கருத்தரித் 275
கருதுபிர 214
கரையில் 222
கல்லாதமா 455
கல்லானை 344
கலையார் 357
கவலையில்லா 63
கவலைவிட 77
கவிநல்லதோ 165
கற்கோட்டை 229
கற்பமனு 309
கன்னாகுபே 365
கன்னிப் 182

கா

காசிக்கு 158
காசிராசன் 224
காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலின் 338
காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலுக் 377
காணுங்கணே 164
காதாலுணர்ந் 98
காமத்தொடு 368
கார்கொண்ட 204
கார்மேவிய 350
காலாழ் 381
காலையிலெ 242
காவிக்கு 330
காவிரியின் 209
காற்பாலினிற் 134
காற்றாடி 475

கு

குடிநீர் 149
குப்புற்ற 123
குருவாழி 103
குருவென் 508
குருவே காப்பு. 2 குருநாத சதகம்
குலங்காண 172
குழைத்திடு 246

கை

கையாற் 397

கொ

கொடியபத் 277
கொம்பலர் 221
கொம்பாரிடை 406
கொய்புளை 291

கோ

கோட்சொல்லு 138

ச

சங்கத்தை 37
சத்தாதி 454
சந்தகண 256
சந்ததமு 306
சந்தித்துமா 348
சந்துவல 235
சம்புவி 73
சமர்த்தே 195
சமர்தனிற் 26
சமையாதே 156
சரவற்குல 438
சற்குரு 510

சா

சாடிக்கு 433
சாத்திர 84

சி

சிங்கள 225
சிணமுஞ் 483
சித்தால 457
சிவனீதலம் 106
சிற்றப்பனோ 153
சிற்றேவலன் 484
சிறுகும் 428

சீ

சீமானு 502
சீமைச்சி 448
சீர்மேவு காப்பு. கோகுல சதகம்

சு

சுக்கிலஞ் 274
சுத்தசல 206
சுவையோசை 162
சுருக்காம 118
சுற்றிய 19

சூ

சூரியன் 301
சூலாசை 470

செ

செண்டாடு 463
செப்பருந் 226
செப்புமா 233
செம்பாகு 442
செம்பிற் 327
செம்பொனளவின்றி 244
செம்பொனைக் 231
செய்யவிரு 259
செரிக்கின்ற 146
செழும்பாரின் 100

சே

சேடிக்கு 434
சேரன் 228
சேவிந்து 81
சேற்கடற் 296

சொ

சொல்லற் 421

சோ

சோழன் 228

ஞா

ஞாலங்கண் 10
ஞாலாகலா 486
ஞானகமாய 42
ஞானமரு 298

த

தக்கன் 358
தகவாயுனை 119
தடுக்கின்ற 425
தண்டாமரை 30
தணவாத 28
தம்மாலறி 380
தரங்கமெறி 102
தருமல 207
தருமன் 56
தலஞ்சுத்தி 18
தலமெத்தனை 74
தலமேழில் 91
தலமேழையும் 120

தவமுள 53
தளவமொப்பா 47
தன்மைக்கு நீ 127
தன்னுடைய 237
தன்னெட்டெழுத் 154
தனியாயி 498
தனுவுக்குளே 180

**தா**

தாமமாகிய 292
தாய்தந்தை 386
தாய்மார் 375
தாயற்ற 124
தாளுக்கு 159

**தி**

திருநாதன் காப்பு. அருணாசல சதகம்
திருமாமணி 427
திருமாலய 351
திருமாலொரு 342
திருவாகி 410
திருவாசக 362
திருவாழ்கவெண் 413, 509
தினந்தோறும் 263

**தீ**

தீட்டாகி 466
தீதிலா 304

**து**

துஞ்சுங் 423
துடிகொண்ட 493
துடிகோத்திர 48
தும்பிக்கை 142
துளசீதள 161
துறையற்ற 480
துறையூரு 197

**தூ**

தூராத 451
தூலங்களை 429

**தெ**

தெரிதரு 287
தெள்ளித்தெளி 388
தொட்டீரடி 82
தொடுத்தகல் 9
தொடுத்தநற் 33

**தே**

தேடத்தகும் 485
தேவாதிதேவா 364
தேவாலயங் 282
தேவாலய 230
தேவிசெங் 249
தேறப்புவி 6
தேறாத 482
தேறுந்திரு 202
தேன்பட்ட 389
தேன்பாடித் 130
தேனுண்டு 499

**ந**

நஞ்சு பாயிரம். வடவேங்கட நாராயண சதகம்
நட்டுத்தொழா 393
நடுவட்ட 300
நடையாய் 44
நண்ணுதிரை 261
நதிவளந் 236
நம்பிடவே 35
நல்லகீழ் 260
நல்லவட காப்பு. வடவேங்கட நாராயண சதகம்
நலத்தன 92
நலத்தை 93
நலமான 65
நளிர்மலர் 11
நளிவா கனம் 86
நற்றாள் புவியி 87
நற்றுஞ் 14
நறுந்திரை 70
நன்றாக 50
நன்றைப் பிளந்தெறி சூரனை 450
நன்றைப் பிளந்தெறிவார் 449
நனிவாழி 203

**நா**

நாட்டரசு 271
நாடான 445
நாடுமுட 293
நாய்தன்னி 347
நாலாகலை 36

நாவிலனங்கள் 96
நாற்பாலினிற் 134
நானானெனன 419

நி

நித்தலும் 211
நிமிருந்திசை 435
நிலமருவு 251
நிலமாதரும் 440
நிலவிய வண்டம் 4
நிலவிய வெள்ளி 60
நிலனன்றனல் 436
நின்றாப் 411

நீ

நீ காசுதா 110
நீட்டுற்ற 25
நீடிக்குனிந் 430
நீயண்டரா 157
நீர்கொண்டு 104
நீலமா 283

நூ

நூற்றெண் 83

நெ

நெஞ்சத்தின் 506
நெஞ்சிக்கு 496
நெட்டேணி 163
நெடும்பத்தி 487
நெற்றியிடை 239
நெறிபெறு 97
நெறியாற் 99

ப

பசைகொண்ட 166
பகையான 122
பச்சென்னிற 366
பசியாத 115
பசுக்கட்குமா 171
படியாவு 337
படியாளு 407
படைக்குந் 314
படைப்பானு 401
பண்டாடிய 7
பண்டாய் 458
பண்டாந் தவம் 88
பண்டான 23
பண்டிட்ட 121
பணத்தாயிரம் 31
பணிவெள்ளி 219
பதியாகு 390
பந்தியிடை 265
பம்பை 238
பரகாரியம் 105
பரலோகமும் 189
பரிந்திட்டற 315
பரிமளந் 305
பரிவொடுங் 264
பரையுன்னிரு 373
பல்லார் விட 363
பலகூறு 167
பழுதுற்ற 505
பழையானை 3
பறக்குஞ் 385
பறவைக் 378
பன்னருந் 302
பன்னாகணை 367
பன்னிரண் 220
பனையினது 262

பா

பாசக்கிடம் 370
பாசாடவி 399
பாடற்குருகி 57
பாடார்கவி 462
பாடிக்கொள் 24
பாடும்படி 501
பாடேனலோ 113
பாம்பின் 325
பாய்வான 405
பாயும் 289
பாரதியாய் 490
பாராளுமன் 328
பாரின்கணே 320
பாலனஞ் 234
பாலாவதோ 143
பாவிக்கிலிங் 492
பானுவுக் 299

பி

பிணிவிட்டதே 198
பிணைக்கேட 412

பித்தங் 196
பிரதோடஞ் 61
பிரம்புக்கு 150
பிலமா மிராக 32
பிலமா மிலங் 21
பிறவா 339

பு

புட்புள்ளவன் 183
புல்லாகி 313
புலையான 400
புழுங்கிய 20
புற்கொண்டு 136
புன்சொல்லிலே 193

பூ

பூசிக்க 361
பூதாதி 409
பூபாரந் 55
பூபாலனஞ் 52
பூமாந்தினேன் 343
பூரிக்குநின 129
பூவுக்கு 144

பெ

பெருமை 356
பெற்றாய் 467

பை

பையன் 432

பொ

பொய்யான 383
பொருப்பு 392
பொருளீட்டவு 382
பொல்லாச்சனி 420
பொறியின் 336
பொன்பரவு 307
பொன்னுக்குளே 394

போ

போகாது 403
போகேந்தி 178
போசனஞ் செய்த 267
போசனங் செயு 266
போட்டான் 465

ம

மட்டார் 324
மட்டிலாச் 278
மடவார் 374
மண்டலத் தெங்கு 76
மண்டலந்தன்னி 15
மண்ணாகி 447
மணம் கொண்ட 1
மணமுற்ற 45
மதிக்காத 424
மதித்தே 39
மந்தன் 125
மந்திரியர் 217
மரகதமேனி 75
மலமாயை 415
மலமூன்று 398
மலைப்பாதகம் 439
மலையரண் 216
மழவியல் 5
மறையோது 95
மன்றாடிய 151
மன்னியல் 218
மன்னுதிரு நூற்பெயர் அண்ணாமலை சதகம்
மன்னுமச் 280
மனையாண் 376

மா

மாகனசத்துரு 51
மாதனங்கோடி 46
மாதாபிதா 414
மாயோனை 391
மார்த்தண்ட 387
மார்புங் 290
மாரியி 27
மாலாரொடு 404
மாவாயிரம் 40
மாறாப்பரி 79
மாறாவரந் 321
மானேந்தினை 341
மானோயு 131

மி

மிடியேனை 417
மிறுக்கத் 192

மீ

மீறத்தவ 71
மீறியஞான 64
மீன்கூடரு 191

மு

முகிலுக்குளே 186
முடிபட்ட 311
முத்தாய 469
முழுத்தவர் 62
முறையாக 8
முனிமாத 426

மூ

மூலத்திரு 94

மெ

மெய்யன் 453
மெய்யா 431
மெய்யாத 464
மெய்வாய் 473
மெல்லிலை 268
மெலியாமை 194

மே

மேடலக் 297
மேவியதே 78
மேனாளொரு 319

மை

மை நாகமா 169
மையார் விழி 316

மோ

மோசானுபூ 500

யா

யான் செய்த 371

வ

வருடாதி 210
வடியாய் 29
வடிவிலுதித்த 72
வடுநிந்தை 148
வந்துலகில் 227
வம்பிட்ட 422
வரமாமல 353
வருதேசகாலம் 85
வல்லாள 352
வளர்கார்த்திகை 332
வனித்தாதி 504
வனிதை 303

வா

வாசமலர் 270
வாசப்புரந் 477
வாசிப்பது 393
வாசியின் 285
வாஞ்சித் 168
வாட்டேறு 345
வாதாசன 317
வாதாட்ட 474
வாய்க்கின்ற 141
வாய்செய்த 199
வான் சொல்லுமே 117
வானாகினை 312
வானென்ற 12

வி

விக்கிற்கிடம் 160
விஞ்சுமே 276
விண்டார் 468
விண்ணாளு 360
வில்வார் 310
வில்வமலர் 248
விழிதோள் 240
விளையுநன் 274

வீ

வீட்டுக்கொரு 326
வீணாக 471

வெ

வெட்பித்தது 128
வெய்யோனு 372
வெறும்பை 478

வே

வேங்கை 288
வேதம் 232
வேதமது 212
வேதன் காப்பு-1 குருநாத சதகம்
வேதாந்த 472
வேலாயுதம் 17
வேலிக்கு 395

வை

வையகந் 295

# துணைநூல் பட்டியல்


| | |
|---|---|
| 1. அரசு (உரை) | குமரேச சதகம், கழக வெளியீடு, சென்னை, 1965. |
| 2. அரசு (உரை) | பெரியபுராண வசனம் அல்லது திருத் தொண்டர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை - 1, 1963. |
| 3. இரத்தின வேலு முதலியார், (உரை) | திருவிளையாடல் புராணம், சென்னை, 1937. |
| 4. இராசு, செ. (பதிப்) | சோழமண்டல சதகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. |
| 5. இராசேசுவரி, த. (பதிப்) | காசி விசுவநாத சதகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, 1999. |
| 6. இளங்கீரன் | சதகங்களின் சிறப்பு,மணிவாசகர் நூலகம், சென்னை, 1962. |
| 7. கோபாலையர், டி.வி. (பதிப்) | தேவாரம் 1&2. பிரான்காஸ்டி இன்ஸ்டிடியூட், பாண்டிச்சேரி, 1984. |
| 8. சாமிநாதையர், உ.வே., (பதிப்) | செவ்வைச் சூடுவார் பாகவதம், இரண்டாம் பாகம், திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி, 1953. |
| 9. " " | அழகர் கிள்ளை விடு தூது, 6ஆம் பதிப்பு, சென்னை, 1957. |
| 10. " " | ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, குமாரகுருபரன் சங்கம், 4ஆம் பதிப்பு, சென்னை, 1961. |
| 11. " " | பத்துப்பாட்டு, ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, 6-ஆம் பதிப்பு, சென்னை, 1961. |
| 12. " " | புறநானூறு, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 6-ஆம் பதிப்பு, சென்னை, 1963. |

13. " " குறுந்தொகை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1983.

14. சுப்பிரமணியம், கே (பதிப்) பெரியபுராணம், திருப்பனந்தாள் வெளியீடு, திருப்பனந்தாள், 1974.

15. செயராமன், ந.வி., சதக இலக்கியங்கள், மணிவாசகர் நூலகம், 9ஆம் பதிப்பு, 1978.

16. பழனியம்மாள். ப., தமிழில் சதக இலக்கியங்கள், நளினா மங்கை பதிப்பகம், மதுரை, 1992.

17. பாலசுப்பிரமணியம் (பதிப்) பன்னிரு சதகத் திரட்டு, ந. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை - 1, 1969.


## அகராதிகள்


1. தமிழ்ப் பேரகராதிகள், சென்னை, 1928.

# பின்னிணைப்பு

## தமிழில் வெளிவந்துள்ள சதக நூல்கள்*

| எண் | நூல் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | அகத்தீசர் சதகம் | மஸ்தான் சாகிப் | 19 |
| 2. | அடைக்கல சதகம் | வைரவநாதன் கவிராயர் | 18-19 |
| 3. | அண்ணாமலை சதகம் (வசந்தராய சதகம்) | திருச்சிற்றம்பல நாவலர் | 19 |
| 4. | அத்தியூர் எம்பெருமான் சதகம் | - | - |
| 5. | அநுமார் சதகம் | - | - |
| 6. | அப்துறகுமானறபிச் சதகம் | பவானிப்புலவர் (செய்யது புகாரி புலவர்) | 19 |
| 7. | அமலகுரு சதகம் (சுத்த ஜீவியம்) | ஜி.எஸ். வேதநாயகர் | 20 |
| 8. | அர்ச் தேவமாதா பேரிற் சதகம் | அ. பொன்னுசாமி முதலியார் | 19 |
| 9. | அரபிச் சதகம் | அப்துல் ரகுமான் | 19 |
| 10. | அருகுகல சதகம் | சபாபதி முதலியார் | 19 |
| 11. | அருண்மொழி விளக்கம் என்னும் திருநகரையார் சதகம் | எல்.எஸ். ஸ்டீபன்ஸ் | 20 |
| 12. | அருணாசல சதகம் | காஞ்சிபுரம் சபாபதி முதலியார் | 19 |
| 13. | அவிநாசிக் கருணாம்பிகை சதகம் | வாசுதேவ முதலியார் | 19 |
| 14. | அவையாம்பிகை சதகம் | மாயூரம் நல்லதுக்குடி கிருஷ்ணையர் | 19 |
| 15. | அழகிய மணவாள சதகம் | - | - |
| 16. | அறப்பளீசுர சதகம் | அம்பலவாணக் கவிராயர் | 18 |
| 17. | ஆத்மபோத சதகம் | நாராயண..... | - |
| 18. | இயேசுநாதர் திருச்சதகம் | ஆணல், சதாசிவம் பிள்ளை | 19 |
| 19. | இராகவ சதகம் | - | - |

---

* இவ்விவரம் ச. சிவகாமி எழுதிய *தமிழ்ச் சதக இலக்கியம் (பக். 151-168),* ப. பழனியம்மாள் எழுதிய தமிழில் சதக இலக்கியங்கள் *(பக். 302-306)* என்னும் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். நன்றி.

| | | | |
|---|---|---|---|
| 20. | இராமலிங்க சதகம் | சங்கர மூர்த்திப் புலவர் | 19 |
| 21. | இராமாயண சதகம் | பொ.மு. கேசவ சுப்பராய செட்டியார் | 19-20 |
| 22. | இராமாயண சதகம் | சிவசங்கரையர் + வீரமாஹேசர் | 20 |
| 23. | இராமாயண சதகம் | முருகேசச் செட்டியார் | 19 |
| 24. | இலக்குமி காந்த சதகம் | சீனிவாச ஐயர் | - |
| 25. | இறசூழ் சதகம் | ஈழம், அப்துல் காதர் லெப்பை | 20 |
| 26. | ஈழமண்டல சதகம் | கணபதிப் பிள்ளை | 19 |
| 27. | ஈழமண்டல சதகம் (சந்திர மௌலீசர் சதகம்) | க. வேற்பிள்ளை | 19-20 |
| 28. | உசிலைவனம் ஐயனார் சதகம் | - | - |
| 29. | உமாயேசுர சதகம் | க. வேற்பிள்ளை | - |
| 30. | எதார்த்த சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 31. | எதிராஜ சதகம் | புதுவை. இராமாநுஜ நாவலர் | 19 |
| 32. | எம்பிரான் சதகம் | கோபால கிருஷ்ணதாசர் | 18 |
| 33. | ஏகாம்பரநாதர் சதகம் | இரகுநாதையர் | 19-20 |
| 34. | கஞ்சகிரி சித்தேசர் சதகம் | சேலம் அநந்த நாராயணசர்மா | 19 |
| 35. | கந்தபுராண சதகம் | முத்துக்குமார தாசர் | 20 |
| 36. | கபிலர் சதகம் | - | - |
| 37. | கயிலாசநாதர் சதகம் | சேலம் சிதம்பரப்பிள்ளை | 18 |
| 38. | கருணாம்பிகை சதகம் | - | - |
| 39. | கருணையம்மன் சதகம் | - | - |
| 40. | கலிவிடம்பன் சதகம் | கலியாண சுந்தர சாஸ்திரி (தொகு) | - |
| 41. | கழுகாசல சதகம் | - | 19 |
| 42. | கறுப்பணசாமி சதகம் | இராமசாமி கவிராயர் | 19 |
| 43. | காசிவிசுவநாத சதகம் (காசிவிசுவேச சதகம்) | நா. கனகராஜ ஐயர் | 20 |
| 44. | காந்தி சதகம் | கா.மு. சுந்தர முதலியார் | 20 |
| 45. | கார் மண்டல சதகம் | ஆறைக்கிழார் | 11 |

| | | | |
|---|---|---|---|
| 46. | காரண சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 47. | காருண்ய சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 48. | கானாட்டுச் சதகம் | - | - |
| 49. | கிறிஸ்துமத கண்டன சதகம் | - | 19 |
| 50. | கீர்த்தநமாலை (முதல் சதகம்) | பாபநாசம் சிவன் | 20 |
| 51. | குதுபு சதகம் | கிதுறு முகம்மது மரைக்காயர் | 19 |
| 52. | குமரேச சதகம் | குருபாததாசர் | 18 |
| 53. | குருநாத சதகம் | கருணையாநந்த சுவாமி | 18-19 |
| 54. | குருநாத சதகம் | சேலம் சிதம்பரம் பிள்ளை | - |
| 55. | குருவிக்குளம் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சதகம் | புரசை. சபாபதி முதலியார் | 19 |
| 56. | கேசவர் சதகம் | வெங்கு பிள்ளை | 19 |
| 57. | கைலாசநாதர் சதகம் | கைலாசநாதர் | 18 |
| 58. | கைலாசநாதர் சதகம் | சிதம்பரவாணர் | 18 |
| 59. | கொங்குமண்டல சதகம் | கார்மேகக் கவிஞர் | 18 |
| 60. | கொங்குமண்டல சதகம் | வால சுந்தரக் கவிராயர் | 20 |
| 61. | கோகுல சதகம் | - | - |
| 62. | கோகுல சதகம் | பாலூர் அமிர்த கவிராயர் | 19 |
| 63. | கோதண்டராம சதகம் | இராமதாசர் | 19 |
| 64. | கோபிநாத சதகம் | கிருஷ்ணமூர்த்தி | 19 |
| 65. | கோவிந்த சதகம் | நாராயண பாரதி | 18 |
| 66. | கோவிந்த சதகம் | அம்பலவாணக் கவிராயர் | - |
| 67. | சங்கர சதகம் | வா.சி. சுப்ரமண்ய செட்டியார் | 20 |
| 68. | சங்கரநாராயணசாமி கோயில் ஸ்ரீமதிகோமதியம்பிகை சதகம் | திருக்கமலப் புலவர் | 19 |
| 69. | சடகோபர் சதகத்தந்தாதி | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 70. | சத்த சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 71. | சதானந்த சதகம் | பொன்னுசாமி | 19 |
| 72. | சதுர்லிங்க தசகோத்ர சதகம் | ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரியர் | 17-18 |
| 73. | சதுரலிங்க சதகம் | - | - |
| 74. | சயவரதர் சதகம் | வே.கி. நாராயணசாமிப் பிள்ளை | 19 |

| | | | |
|---|---|---|---|
| 75. | சருவவீசுவரன் சதகம் | ஞானப் பிரகாசம் | - |
| 76. | சல்லாசர் சதகம் | சி. கண்ணுசாமி முதலி | 19 |
| 77. | சலவாத்து சதகம் | மீரான் நயினாப் புலவர் | - |
| 78. | சற்குரு சதகம் | ஜி.எஸ். வேதநாயகர் | 20 |
| 79. | சன்மார்க்க சதகம் | வேதகிரி முதலியார் | 19 |
| 80. | சிங்கார வேலர் சதகம் | முத்துசாமி கவிராயர் | 20 |
| 81. | சிதானந்த சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 82. | சிருங்கார சதகம் | ஈசான சுவாமிநாத தேசிகர் | 17 |
| 83. | சிவகங்கை சீமை பூங்கொன்றை வேலங்குடியில் எழுந்தருளியுள்ள கறுப்பண்ண சுவாமி சதகம் | இராமசாமிக் கவிராயர் | 19 |
| 84. | சிவகாமியம்மை சதகம் | மாயூரம் கிருஷ்ணையர் | 19 |
| 85. | சிவகிரி குமர சதகம் | குப்பையன் | 18-19 |
| 86. | சிவகுரு சதகம் | சிவாநந்தசரசுவதி | 20 |
| 87. | சிவசங்கர சதகம் | வீராசாமி உபாத்தியாயர் | 19 |
| 88. | சிவசங்கர சதகம் | எம். துலுக்காண ஆசாரி | - |
| 89. | சிவபெருமான் சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 90. | சிவலிங்க சதகம் | - | - |
| 91. | சிற்சுகவாரிதிச் சதகம் | மாதுரு பூதம் பிள்ளை | 19 |
| 92. | சீரங்க நாராயண சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 93. | சீறாச்சதகம் | முகமத் சுல்தான் இபின் அகமத் உமர் | 19-20 |
| 94. | சீனிவாச சதகம் | அனந்தநாத சுவாமிகள் | 19 |
| 95. | சுப்பிரமணிய சுவாமி பிரபாவ சதகம் | மு. அனந்தபத்மநாபபிள்ளை | 20 |
| 96. | செயவரதர் சதகம் | வெங்குப் பிள்ளை | 19 |
| 97. | செல்லாண்டியம்மன் சதகம் | சக்கரபாணி ஆச்சாரியார் | 19 |
| 98. | சேசுநாதர் சதகம் | ந. சவரிமுத்து உடையார் | 20 |
| 99. | சேரமண்டல சதகம் | ஆறுமுகம் பிள்ளை | 19-20 |
| 100. | சொக்கலிங்கக் கடவுள் தோத்திர சதகம் | சோமசுந்தர சுவாமிகள் | 20 |
| 101. | சோழமண்டல சதகம் | ஆத்மநாத தேசிகர் | 17-18 |

| | | | |
|---|---|---|---|
| 102. | தசரதராம சதகம் | இ. மாவிலிங்கப் பிள்ளை | 19 |
| 103. | தட்சிணாமூர்த்தி நாடி சதகம் | தட்சிணாமூர்த்தி | - |
| 104. | தண்டலையார் சதகம் (பழமொழி விளக்கம்) | படிக்காசுப் புலவர் | 17-18 |
| 105. | தணிகை வேலாயுத சதகம் | தி. கந்தப்ப தேசிகர் | 18 |
| 106. | தயா சதகம் | - | - |
| 107. | தரிசனமாலை சதகம் | மீறான் சாகிபு | - |
| 108. | தவச் சதகம் | - | - |
| 109. | தியாகராச சுவாமி சதகம் | ப. சோமசுந்தர தேசிக. | 19 |
| 110. | திருக்குறுங்குடிநம்பி சதகம் | வரராமயோகி | 12 |
| 111. | திருச்சதகம் | சதாசிவம் பிள்ளை | 19 |
| 112. | திருச்சதகம் | மாணிக்க வாசகர் | 9 |
| 113. | திருச்செங்கோட்டுச் சதகம் | சதாசிவபண்டிதர் | 19 |
| 114. | திருச்செங்கோட்டுச் சதகம் | கிருட்டிணசாமி முதலியார் | 19 |
| 115. | திருங்செங்கோட்டு அர்த்த நாரீஸ்வரர் தண்டாயுத சதகம் | - | - |
| 116. | திருச்செந்தூர் சண்முக சதகம் | வரராமயோகி | 12 |
| 117. | திருச்செந்தூர் செந்தினாயக சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 118. | திருநபியின் சதகம் | அப்துற் றகுமான் | 20 |
| 119. | திருப்புகழி விசயராகவ சதகம் | விசயராகவப் பிள்ளை | 19 |
| 120. | திருப்புல்வயல் குமரேசர் சதகம் | குருபாததாசர் | 18 |
| 121. | திருப்போரூர் சதகம் | புரசை. சபாபதி முதலியார் | 19 |
| 122. | திருப்போரூர் சதகம் | கே.எம். பாலசுப்பிரமணியம் | 20 |
| 123. | திருப்போரூர் பிராண வாசல சதகம் | புரசை. சபாபதி முதலியார் | 19 |
| 124. | திருமாணிக்கமாலை திருத் தொண்டர் சதகம் | மலைக்கொழுந்து நாவலர் | - |
| 125. | திருமுகம்மது நபி சதகம் | பகீர் முகம்மது | 20 |
| 126. | திருவாத்துறை நாதர் சதகம் | அரங்கசாமி ஐயங்கார் | 20 |
| 127. | திருவருள் சதகம் | மெய்யப்பச் செட்டி | 19 |
| 128. | திருவாமாத்தூர் அருள்மிகு அழகிய நாதர் பெருமாள் பதிகச் சதக நூல் | தண்டபாணி சுவாமிகள் | 19 |

| | | | |
|---|---|---|---|
| 129. | திருவாய்மொழி வாசகமாலை எனும் விவரண சதகம் | திருக்கோனேரி தாஸ்யை | - |
| 130. | திருவேங்கட சதகம் (மணவாள நாராயண சதகம்) | நாராயண பாரதியார் | 18 |
| 131. | திருவேங்கட நாத சதகம் | | - |
| 132. | தில்லைக் கற்பக விநாயகர் சதகம் | சிதம்பரம் செட்டியார் | 20 |
| 133. | தில்லைச் சிவகாம சுந்தரி சதகம் | ஐயாத்துரை ஞானியர் | 19 |
| 134. | தில்லை நடராசர் சதகம் | மாயூரம் இராமையர் | 19 |
| 135. | தில்லை நடராய சதகம் | ஐயாத்துரை ஞானியர் | 19 |
| 136. | தொண்டைமண்டல சதகம் | படிக்காசுப் புலவர் | 17-18 |
| 137. | தொண்டை மண்டல சதகம் | வடலூர் இராமலிங்க சுவாமி | - |
| 138. | தேவநாத சதகம் | எஸ். கிருஷ்ணமாச்சாரி | 20 |
| 139. | தேவராஜ சதகம் | இளையவல்லி லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியர் | 20 |
| 140. | தேவீ கிளித்தூது சதகம் | காமாட்சி தாசன் | - |
| 141. | நடராச சதகம் | சிதம்பரநாத முனிவர் | 18 |
| 142. | நந்தமண்டல சதகம் | காஞ்சி. மாத்ருபூதையர் | 19 |
| 143. | நந்தமண்டல சதகம் | தெய்வநாயகப் பெருமாள் | 19 |
| 144. | நந்தீசர் சதகம் | மஸ்தான் சாகிப் | 19 |
| 145. | நாதாந்த சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 146. | நானிலைச் சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 147. | நியாயச் சதகம் | - | - |
| 148. | நீதிச் சதகம் | ஈசான சுவாமிநாத தேசிகர் | 17 |
| 149. | பவானி வேதநாயகி சதகம் | - | - |
| 150. | பழனியாண்டவர் சதகம் | ஐயம் பெருமாள் | - |
| 151. | பழனியாண்டவர் சதகம் | குமாரசுவாமி முதலியார் | - |
| 152. | பாண்டிமண்டல சதகம் | ஐயம் பெருமாள் | - |
| 153. | பார்த்தசாரதி வருக்க சதகம் | - | - |
| 154. | பிரதான சதகம் | வேதாந்த தேசிகர் | - |
| 155. | புவனேசுவரி சதகம் | - | - |
| 156. | பூரண சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |

| | | | |
|---|---|---|---|
| 157. | பூவைச் சிங்கார சதகம் | பூவை. கலியாண சுந்தர முதலியார் | 19-20 |
| 158. | பூவைச் சிங்கார சதகம் | மனோன்மணியம்மாள் | 20 |
| 159. | பேரின்ப சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 160. | பேரூர் பச்சை நாயகி சதகம் | - | - |
| 161. | பொய்யா மொழீசர் சதகம் | - | - |
| 162. | மகாபாரத சதகம் | கிருட்டிண மூர்த்தி ஐயர் | 20 |
| 163. | மங்களாம்பிகை சதகம் | சிவ. மாசிலாமணி தேசிகர் | - |
| 164. | மதலைச் சதகம் (முதற் பாகம்) | பார்த்தசாரதி முதலியார் | 20 |
| 165. | மதினமாநகர் தோத்திரச் சதகம் | சுருணை அகமது நாஸ் | - |
| 166. | மநுநீதி சதகம் | இராசப்ப உபாத்தியாயர் | 19 |
| 167. | மயிலாசல சதகம் | நமசிவாய நாவலர் | 18-19 |
| 168. | மழவைச் சிங்கார சதகம் | மகாலிங்கையர் | 19 |
| 169. | மனுநீதிச் சதகம் | வேதகிரி முதலியார் | 19 |
| 170. | மனுவியாக்கியான சதகம் | வேதகிரி முதலியார் | 19 |
| 171. | மாந்தை நகராதிபதி சதகம் | திருவேங்கடம் பிள்ளை | 18 |
| 172. | மிழலைச் சதகம் | சர்க்கரைப் புலவர் | 19 |
| 173. | மீனாட்சி (யம்மை) சதகம் | மீனாட்சி சுந்தரம்பிள்ளை/ முத்துப்பழனிமால் | 19 |
| 174. | முகியித்தீன் சதகம் | மஸ்தான் சாகிப் | 19 |
| 175. | முகியித்தீன் சதகம் | பேசும்பூர். அப்துல்காதர் | 20 |
| 176. | முத்துக்குமார ஞானியார் சதகம் | எஸ். ஆதிமூலப் பெருமாள் | 20 |
| 177. | முதல்வர் திருச்சதகம் | பாவலர் பேகம் | 20 |
| 178. | முனாசாத்து சதகம் | சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர் | 20 |
| 179. | மூத்த விநாயகர் திருச்சதகம் | கே.பி. அறிவானந்தம் | 18-19 |
| 180. | மெய்கண்ட வேலாயுத சதகம் | அழகு. முத்துப்புலவர் | 10 |
| 181. | மெய்கண்ட வேலாயுத சதகம் | ஜி. சதாசிவம் பிள்ளை | 19 |
| 182. | மெய்ஞ்ஞான சதகம் | தக்கடி ஷெய்குபஸீர் லெப்பை கலீபா | 19 |
| 183. | மெய்ஞ்ஞான சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 184. | மெய்வரோதய சதகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 185. | மோக்ஷ சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 186. | வடவேங்கட நாராயண சதகம் | நாராயண தாசர் | 19 |

| | | | |
|---|---|---|---|
| 187. | வடிவேலர் சதகம் | முத்துசாமி கவிராயர் | 19 |
| 188. | வயித்திய சதகம் | மழுக்குமுதலி புலவர் | - |
| 189. | வரதராசப் பெருமாள் சதகம் | வேங்கடரமண ஐயங்கார் | 19 |
| 190. | வரமுனி சதகம் | - | - |
| 191. | வானமாமலைச் சதகம் | சோ. தெய்வநாயகப் பெருமாள் நாயகர் | 19 |
| 192. | விச்வகுரு சதகம் | ஷண்முகசார்யர் | 18-19 |
| 193. | விநாயகர் சதகம் | சீ. இராமசுவாமி ஐயங்கார் | - |
| 194. | விரிஞ்சேசர் சதகம் | சுப்பராய செட்டியார் | 19 |
| 195. | விரிந்தீஸ்வரர் சதகம் | சுப்பராயப் புலவர் வாணியம்பாடி | 20 |
| 196. | வீரபத்திரர் சதகம் | சின்னத்தம்பி | 19 |
| 197. | வீரராகவ சதகம் (நீதி சதகம்) | நா. வீரராகவதாஸ் | 19 |
| 198. | வேங்கடசுவர சதகம் | - | - |
| 199. | வேணுகோபால சதகம் | - | 19 |
| 200. | வேதாந்த சதகம் | மச்சரேகை சித்தர் | 19-20 |
| 201. | வேலாயுத சதகம் | கந்தப்பையா | 18 |
| 202. | வேளுக்குறிச்சிக் கவுண்டர் சதகம் | - | - |
| 203. | வைகுந்த சதகம் | வரதராச பிள்ளை | - |
| 204. | வைத்திய சதகம் | - | - |
| 205. | வைத்திய சதகம் | செங்கல்வராய சுவாமிகள் | - |
| 206. | வைத்திய சதகம் | ஆர். தட்சிணாமூர்த்தி | - |
| 207. | வைத்தியநாடி சதகம் | - | - |
| 208. | வைராக்கிய சதகம் | ஈசான சுவாமிநாத தேசிகர் | 17 |
| 209. | வைராக்கிய சதகம் | சாந்தலிங்க சுவாமிகள் | 18 |
| 210. | வைராக்கிய சதகம் (தொகுப்பு) | - | - |
| 211. | ஸ்ரீசிவகுரு சதகம் | சிவாநந்த சரஸ்வதி | 20 |
| 212. | ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம் | கருமாரி தாசர் | 20 |
| 213. | ஸ்ரீமந் நடராஜாங்கித மகாபாரத சதகம் | கிருஷ்ணமூர்த்தி | 20 |
| 214. | ஸலவாத்து சதகம் | எஸ்.கே. முகம்மது காதிர் பாவா ராவுத்தர் | - |
| 215. | ஜெயங்கொண்டார் சதகம் | முத்தப்ப செட்டியார் | 19 |

## தமிழில் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்பு சதக நூல்கள்

| எண் | நூல் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | உத்தமநீதி - முதற்சதகம் | வெங்கடசாமி ஐயர் | 20 |
| 2. | காதல் அருவி (சிருங்கார சதகம்) | அரங்க. சீனிவாசன் | 20 |
| 3. | சுமதி சதகம் | சமரபுரி முதலியார் | 20 |
| 4. | சுமதி சதகம் | சாந்தலிங்க கவிராயர் | 19 |
| 5. | நரசிம்ஹ சதகம் | கன்னைய நாயுடு | - |
| 6. | நன்மதி வெண்பா | எம்.ஆர். சீனிவாச ஐயங்கார் | 20 |
| 7. | பர்த்ருஹரி சிருங்கார சதகம் | ம. மாணிக்க வாசகம் பிள்ளை | 20 |
| 8. | பர்த்ருஹரி நீதி சதகம் | ஒ.என். அப்பாசாமி ஐயர் | - |
| 9. | பர்த்ருஹரி நீதி சதகம் | ம. மாணிக்கவாசகம் பிள்ளை | 20 |
| 10. | பர்த்ருஹரி வைராக்கிய சதகம் | வீரசுப்பைய ஞான தேசிகர் | 19-20 |
| 11. | ஸ்ரீ வெங்கடேச தயா சதகம் | கீழாத்தூர் சீனிவாசாச்சாரி | 20 |

********

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| தமிழர் சமூகவியல் | 35.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டி'ப சாஸ்திரம் | 150.00 |
| தமிழ் கற்பித்தலில் உன்னதம் | 20.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |

Pub.No. 408 **சதகத் திரட்டு** தொகுதி- 2 55.00